
முத்துலட்சுமி ராகவன்
காதலென்பது எதுவரை..?

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய

# காதலென்பது எதுவரை..?

லட்சுமி பாலாஜி பதிப்பகம்
68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,
சி.ஐ.டி. நகர், தி.நகர்,
சென்னை - 600 035
அழைக்க : 95669 42486
மின்னஞ்சல் : bchandar24@yahoo.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# காதலென்பது எதுவரை...?

## 1

**"கூ..** குக்கூ.. கூ..." என்ற சப்தத்துடன் எக்மோரில் இருந்து கிளம்பியது 'பொதிகை' எக்ஸ்பிரஸ்.. 'கிச்.. கிச்.. கிச்..' என்ற தாளலயத்துடன் நகரத் தொடங்கியது.. வந்தனா அவளிருந்த கம்பார்ட்மெண்டின் வாசலில் கம்பியைப் பிடித்தபடி நின்று.. அவளை வழியனுப்ப வந்திருந்த பாஸ்கரனுக்கு டாட்டா சொல்லிக் கொண்டிருந்தாள்..

"டாடா.. பை.. பை.. அப்பா.."

அவளின் உற்சாகக் கூவல் ரயிலின் சப்தத்தையும் மீறி எதிரொலித்தது.. ஒரு மாதகால விடுமுறையை சித்தப்பா வீட்டில் கழிக்கப் போகும் நினைவில் அவள் மனதில் உல்லாசம் வந்து எட்டிப் பார்த்தது..

"அம்மாகிட்டச் சொல்லிருங்க.."

கூவியபடி கையசைத்தவள்.. ரயிலுடன் இணைந்து ஓடி வந்த அந்த வாலிபனைக் கண்டதும்.. அப்பாவுக்கு டாட்டா சொல்வதை மறந்துவிட்டு.. அவனை 'ஆ'வென்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது விட்டாள்..

'இந்த வேகத்திலே ரன்னிங்ரேஸில ஓடினான்னா பர்ஸ்ட் பிரைஸ் கப்பு நிச்சயமா இவனுக்குத்தான்..' மனதுக்குள் அவனுடைய ஓட்டத்தை பாராட்ட வேறு செய்தாள்..

அவனோ அவளைப் பார்த்து சைகை செய்தான்.. எவ்வளவு தைரியமிருந்தால் ரயிலுடன் ஓடிவந்து அவளை கிண்டல் செய்வான்..? அதையும் அவளுடைய அப்பா பார்க்கும்படி செய்துவைக்கிறானே.. அவளுடைய அப்பா அவளைப் பற்றி என்ன நினைப்பார்..?

"மிஸ்டர்..."

ஒற்றை விரலாய் ஆள்காட்டி விரலை உயர்த்தி.. அவள் குரலையும் உயர்த்திய அதே நேரத்தில் அவளது பாதத்தை உரசிக் கொண்டு எதுவோ போனது.. வந்தனா கால்விரல்கள் வலித்ததில்..

"ஆ..." என்ற அலறலுடன் பாதத்தைப் பார்த்தாள்..

லேசாக சிராய்ந்திருந்தது.. ரன்னிங் ரேஸ் விட்டவனைப் பார்த்து ஆள்காட்டி விரலை உயர்த்திக் காண்பித்ததிற்காக அவன் எதையோ வீசி அவள் காலை உடைத்திருக்கிறான் என்று முடிவு கட்டினாள் வந்தனா..

ஆத்திரத்துடன் எட்டிப் பார்த்தவள்..

"நேருக்கு நேரா மோதனும்.. அதை விட்டுட்டு எதைக் கொண்டும் அடிக்கக் கூடாது.." என்று கத்த ஆரம்பித்தாள்...

இன்னும் கத்தியிருப்பாள்.. அதற்குள் அவன் கம்பார்ட்மெண்டின் வாசலில் இருந்த கம்பியைப் பிடித்து ஒற்றைக்காலை ரயிலில் வைத்துப் பாய்ந்து ஏறி விட்டான்.. ஏறியதோடும் இல்லாமல் 'நேருக்கு நேரா மோதனும்..' என்று அறை கூவல் விடுத்தவளின் மீது நேருக்கு நேராக மோதியும் வைத்தான்..

அவன் மோதிய வேகத்தில் ரயில் பெட்டியின் உள்ளே சாய.. அந்த இடத்தில் நின்றிருந்த வந்தனா பின்னால் சாய்ந்தாள்..

'தட்' என்ற சப்தத்துடன் அவள் கீழே விழ.. அவன் அவள்மேலே விழுந்து தொலைத்தான்...

வந்தனா இமை கொட்டி விழித்தாள்.. இப்படியொரு மோதல் நிகழக்கூடும் என்று அவள் எதிர்பார்த்திருக்க வில்லை என்பது அவள் இமைகளைக் கொட்டி விழித்ததில் இருந்து தெரிந்தது..

அப்படியொரு புயல் வேகப் பாய்ச்சலுடன் அவன் அவள்மேல் தாவி வைப்பான் என்று அவள் கனவா கண்டாள்..?

'ஏண்டாக் கிண்டல் பண்றன்னு கேட்டது ஒரு குத்தமாடா..?'

அவள் எழுந்து கொள்ள முனைந்தாள்.. அது முடியாமல் அவள் மேல் கனமான போர்வை போல அவன் விழுந்திருந்ததில் அவள் சுள்ளென்று எரிந்து விழுந்தாள்..

"மரியாதையா எழுந்திருச்சுரு.. இல்லைன்னா நடக்கறதே வேற.."

இதைச் சொல்லியவளின் மனதுக்குள் உதைப்பு இருக்கத்தான் செய்தது.. அவன் மரியாதையாக எழுந்து கொண்டால்தான் ஆயிற்று.. இல்லையென்றால் என்ன நடந்து விடும் என்று அவள் மனம் வேறு அவளிடம் கிராஸ் கொஸ்டின் கேட்டு அவள் வயிற்றைக் கலக்கி வைத்தது..

'டேய்.. எழுந்திருச்சுத் தொலைடா..'

அவள் மனதுக்குள் திட்டித் தீர்த்தது அவன் காதுகளில் விழுந்ததைப்போல அவன் எழுந்து நின்றான்..

'அப்பாடி..' அவசரமாக எழுந்து கொண்ட வந்தனா சர்வஜாக்கிரதையாக தள்ளி நின்று கொண்டு அவனிடம் சண்டைக்கு வந்தாள்..

"என்ன மிஸ்டர்.. ஈவ்டீஸிங்ன்னு கம்ப்ளெயிண்ட் கொடுக்கனுமா..?"

இப்படிக் கேட்டவளை அவன் முறைத்துப் பார்த்ததில் அவளுக்கு என்னடா இது என்று ஆகி விட்டது..

அவள் பாட்டுக்கு தேமே என்று ரயிலில் ஏறி.. சமர்த்துப்பெண்ணாக அவளுடைய அப்பாவிற்கு கையாட்டிக் கொண்டிருந்தாள்.. அப்படி நின்ற அறியாப் பெண்ணை ரயிலுடன் இணையாக ஓடி வந்து 'கவர்' பண்ண முயன்றவன் அவன்..

அதற்கு அவள் என்னத்தைப் பெரிதாக கண்டித்து விட்டாள்..? ஒற்றை விரலை உயர்த்தி.. 'மிஸ்டர்..' என்று சொல்லி விட்டாள்.. சைட் அடிக்கப்படும் பருவப்பெண் இதைக் கூடச் சொல்ல மாட்டாளா என்ன..? அவன் செய்த சைகைக்கு அவள் அந்த எச்சரிக்கையை விடுக்கா விட்டால் வழியனுப்ப வந்திருந்த அவளின் அப்பா அவளைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்..?

அதனால்தானே.. அவ்வளவு ஹேண்ட்சம்மான ஒருவன் ரயிலின் ஓட்டத்துக்கு இணையாக ஓடிவந்து அவளை சைட் அடித்ததில் மனம் இனித்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் கோபப்படுவதைப் போல பாவனை செய்து அவனை மிஸ்டர் என்று எச்சரித்தாள்..?

அதற்கு எதையோ எடுத்து வீசி.. அவளது கால் விரல்களைப் பதம் பார்த்தவன் அவன்..

அடிபட்டால் ஆத்திரம் வராதா..? அந்த ஆத்திரத்தில் நேருக்கு நேராய் மோதனும் என்ற வார்த்தைகளை அவள் கொட்டி விட்டால் உடனே அவன் அதை வேதவாக்காய் எடுத்துக் கொண்டு அவளுடன் நேருக்கு நேராய் மோதி விடுவதா..? அந்த மோதலை அவள் தாங்குவாளா..?

அவள் எதனால் அவனிடம் அப்படியொரு அறைகூவலை விடுத்தாள்..? ரயிலோடு ஓடி வந்து கொண்டிருப்பவனால்.. ரயிலுக்குள் நிற்பவளிடம் நேருக்கு நேராய் மோதி விட முடியாது என்ற தைரியத்தில்தானே..?

நிலைமை இவ்வாறிருக்க.. அவள் அறைகூவல் விடுத்தாள் என்ற ஒரேயொரு காரணத்திற்காக பெரிய ஜேம்ஸ்பாண்ட் 007யைப் போல ரயிலுக்குள் பாய்ந்து அவள்மீது நேருக்கு நேராக மோதி அவளை வீழ்த்தி.. அவள் மேல் வீழ்ந்தும் விட்டு.. அவள் என்னவோ தவறு செய்ததைப் போல அவளை அவன் முறைப்பது எந்த வகையில் நியாயமாகும்..?

"ஈவ் டீஸிங்கா..? நானா..? உன்னையா..?"

அவன் அலட்சியமாக உதட்டைச் சுழித்து அவளை ஏற இறங்கப் பார்த்த விதத்தில் அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

'செய்கிறதையெல்லாம் செய்துட்டு.. கேள்வியைப் பாரு..' மனதுக்குள் வெகுண்டாள்..

"ஜோக் அடிக்காம உன் சீட்டைப் பார்த்துப் போய் உட்காரு.." அதே அலட்சியத்துடன் அவன் சொன்னான்..

அத்துடன் நில்லாமல் அவளை முறைத்தபடி வாய்க்குள் முணுமுணுத்தான்.. அவையெல்லாம் அவளைத் திட்டும் வசவு வார்த்தைகள் என்று சர்வ நிச்சயமாக அவளுக்கு உறுதியானது..

'இவன் எதுக்கு என்னைத் திட்டறான்..?' அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது..

அவன் செய்து வைத்திருக்கும் அத்தனை வேலைகளுக்கும் அவள்தான் அவனைத் திட்டவேண்டும்.. அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. அவளும் போனால் போகிறதென்று மன்னித்துத் தொலைக்க வேண்டும்.. இவையெல்லாம் நடக்காமல் வேறுவிதமாக நடந்து கொண்டிருக்கிறதே..

அவன் மோதிய வேகத்தை உணர்ந்தவள் அவன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்க வல்லை.. அவனாவது.. மன்னிப்புக் கேட்பவதாவது.. அவனைப் பார்த்தால் மன்னிப்புக் கேட்கும் ரகமாகவும் தெரியவில்லை..

'திமிர் பிடிச்சவன்...'

அந்தத் திமிர் பிடித்தவன் மன்னிப்புக் கேட்டு.. அவளும் பெருந்தன்மையாக மன்னித்தருள்வது என்பது நடக்கக் கூடிய ஒன்றா..?

அதனால் அவள் அப்பேற்பட்ட பேராசையை எல்லாம் கைவிட்டு விட்டாள்.. அந்த தடிமாட்டுத் தாண்டவராயன் அவள்மீது நேருக்கு நேராக மோதுகிறேன் பேர்வழியென்று அவனது மொத்த கனத்தையும் அவளைச் சுமக்க வைத்ததில் அவளது எழும்புகள் நொறுங்கும் தறுவாய்க்குச் சென்று நூலிழையில் தப்பிப் பிழைத்தன...

கால்விரல்களின் வலியோடு.. எலும்புகளின் வலியும் சேர்ந்து கொண்டதில் பொறுக்க மாட்டாமல்தான் அவனிடம்.. என்னப்பா.. ஈவ்டீஸிங் என்று புகார் பண்ண வேண்டுமா என்று கேட்டுவிட்டாள்..

வலிதாங்கியவள் அதைக்கூடக் கேட்க மாட்டாளா என்ன..?

இத்தனை கொடுமைகளையும் அவன் பண்ணிவிட்டு நியாயம் கேட்டவளை 'கன்' எடுத்துச் சுட்டுப் பொசுக்கவா என்று பார்த்து வைத்தால் என்ன அர்த்தம்..? அதிலும் அவளையெல்லாம் அவன் கிண்டல் செய்ய மாட்டான் என்ற வகையில் பேசி வைக்கிறானே..

'இவன் என்ன எனக்கு கோவில்கட்டி கும்பாபிஷேகமா பண்ணிட்டான்..?' அவளுக்கு மனம் தாளவில்லை..

நகைச்சுவை பேசாமல் வேலையைப் பார்க்கப் போகச் சொல்லி விட்டு அவளை வாய்க்குள் திட்டித் தீர்க்கிறானே.. இந்த உத்தம புத்திரன் மனதுக்குள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று கேள்வி கேட்காமல் அவள் எப்படி அவளுடைய இருக்கையைத் தேடிப் போவாள்..?

"என்ன மிஸ்டர்.. செய்கிறதையெல்லாம் செய்துட்டு.. பெரிய நியாயவாதியப் போல பில்ட் அப் கொடுக்கறிங்க. உங்களுக்கு நான் பேசறது ஜோக்காத் தெரியுதா..?" வந்தனா பொரிந்தாள்..

"பேசாம போயிரு.. நானே கடுப்பில இருக்கேன்.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. ஒரு டிக்கெட்டை வாங்கிட்டா.. இந்த டிரெயின் முழுவதையும் நீ சொந்தமா விலைக்கு வாங்கிட்டதா நினைப்பா..?"

கால்களை லேசாக ஆட்டியவாறு தோரணையாக அவன் கேட்டான்.. அவள் திகைத்தாள்..

'இவன் ஏன் இப்படிக் கேட்டு வைக்கிறான்..?'

அவளுக்குப் புரியாத போதும் அவனுக்குப் பதில் சொல்லாமல் விட்டு விடக்கூடாது என்ற வேகத்துடன்..

"அது உங்க நினைப்பு.. நானாவது டிக்கெட் வாங்கிட்டு ரயிலை சொந்தம் கொண்டாடறேன்.. நீங்க வித்-அவுட்டில நேருக்கு நேரா மோதின மகராசனாச்சே.." என்றாள்..

"வித் அவுட்டா..? நானா..?" அவன் விழிகளை உருட்டினான்..

"பின்னே..? பர்ஸ்ட் கிளாஸ் ஏஸி கோச்சுக்கு டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கீங்களா..? ரயிலோட ஓடி வந்து என்னைக் கிண்டல் பண்ணினதுமில்லாம மிரட்ட வேற செய்கிறிங்களா..?"

"கிண்டல் பண்ணினேனா..? நானா..?"

"பின்னே..? உங்க குளோனிங்தான் வந்து கிண்டல் பண்ணுச்சா..?"

அவன் யோசனையோடு தாடையை தடவியபடி அவளை ஏற இறங்க பார்த்து வைத்தான்.. எதற்காக அப்படிப் பார்த்து வைக்கிறான் என்று தன்னைத்தானே ஒருதரம் பார்த்துக் கொண்டாள் வந்தனா..

"எதை வைத்து உன்னை நான் கிண்டல் பண்ணினேன்னு சொல்ற..?" கண்கள் இடுங்க அவன் கேட்டான்..

“பின்னே..? ரயிலோட ரன்னிங்ரேஸ் விட்டுக்கிட்டே.. எண்ணைப் பார்த்துக் கையைக் கையை ஆட்டினா நீங்க எனக்கு ‘டாட்டா’ சொல்கிறிங்கன்னு நான் நினைத்துக்கனுமாக்கும்.. அதைக் கண்டிச்சதுக்கு கல்லை விட்டெறிஞ்ச மகராசனாச்சே நீங்க..” அவள் கால் விரல்களைக் தடவிக் கொண்டாள்..

“கல்லா..? இதுவா..?”

அவன் குனிந்து தூக்கிக் காட்டியது கல்லையல்ல.. அழகான பெட்டியை..!

# 2

**வ**ந்தனா மீண்டும் இமை கொட்டி விழித்தாள்..

'பெட்டியா..? இதுவா என் கால் விரலைத் பேர்த்தது..?'

"உங்க ஊரில இதைத்தான் கல்லுன்னு சொல்லுவாங்களா..?" அவன் நிதானமாக கேட்டான்..

"என்னமோ.. வாம்மா.. மின்னலுங்கிறதைப் போல விர்ருன்னு ஒன்னு என் கால்விரலைப் பதம் பார்த்துக்கிட்டுப் போனதுதான் தெரியும்.. நீங்க கல்லைக் கொண்டு அடிச்சீங்களா.. இல்ல.. பெட்டியக் கொண்டு அடிச்சீங்களான்னு யாருக்குத் தெரியும்..?" வந்தனா முணுமுணுத்தாள்..

"ஹலோ.. உன்னை அடிக்கன்னு ஒன்னும் பெட்டியை வீசி எறியலை.. பெட்டியை உள்ளே போட்டுட்டு.. நான் கம்பியைப் பிடிச்சு ஏறியாகனும்.. அதனாலதான் வீசினேன்.. நான்தான் வழி விடுன்னு சைகை காட்டிக்கிட்டே ஓடி வரேனில்ல.. உன் மரமண்டைக்கு அது உறைக்கலையா..? என்னவோ நான் சர்க்கஸ் காட்டறதைப் போல 'ஆ'ன்னு என்னையும்.. என் ஓட்டத்தையும் வேடிக்கை பார்த்துக்கிட்டு விலகாம நிற்கிற..? உன்னையெல்லாம் டிரெயினை விட்டு வெளியிலே தூக்கிக் கடாசி இருக்கனும்.."

அவன் பார்த்த பார்வையில் அந்த உத்தேசமிருந்ததில் வந்தனா பதறிப்போய் பின்னால் நகர்ந்து கொண்டாள்..

"என்னது..?"

"பின்னே..? உனக்குத்தான் பின்னே.. பின்னேன்னு பின் பாட்டுப் பாடத் தெரியுமா..? எனக்குத் தெரியாதா..? டயத்துக்கு டிரெயினை மிஸ் பண்ணாம பிடிச்சுட்டல்ல.. உனக்கு அந்தத் திமிர்.. கடைசி செகண்டில ஓடி வருகிறவனைப் பார்த்தா வேடிக்கை பார்க்கத் தோணுது..?"

அவனும் அவளுடன் ரயில் பயணம் செய்ய வந்தவனா..?

'இது ஏன் எனக்குத் தோணாம போச்சு..?'

வந்தனாவுக்கு தன் தலையில் தானே குட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதில் குட்டப்போன கையை இறுக்கிக் கொண்டாள்.. அவன் அதை சுவராஸ்யமாக பார்த்து வைத்ததில் உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

"வாசலிலதான நிற்கிற..? ஓடி வருகிறவன் நீட்டற பெட்டியை வாங்கி உள்ளே போட்டுட்டு.. அவனுக்கு கை கொடுக்கலாம்ன்னு மனசில தோணுச்சா..? அந்த அளவுக்கு ஹெல்ப்பிங் டெண்டன்சி..?"

அவன் சொல்லிக்காட்டியதில் அவளுக்கு முகம் சிவந்து போனது..

"எனக்குத் தோணலை.." முகம் கன்றச் சொன்னாள்..

"தோணாதில்ல.. எப்படித் தோணும்..? அதெல்லாம் மண்டையில் மசாலா இருக்கிறவங்களுக்குத்தான் தோணும்.. உனக்குத் தோணாது.. போகுது போ.. உன்னிடம் நான் அது ரெண்டையும் எதிர்பார்க்கல.. வழியை விட்டுத் தொலைன்னுதானே சைகை செஞ்சேன்..? நீ அதையும் செஞ்சு தொலைக்காம ஒட்டு மொத்த வழியையும் ஒற்றை ஆளா மறைச்சு நின்னுக்கிட்டு சண்டை போட்டா.. நான் டிரெயினைப் பிடிப்பேனா.. இல்லை.. உனக்கு விளக்கம் சொல்லிக்கிட்டு இருப்பேனா..?"

எதனால் அவன் அவளை முறைத்துப் பார்த்து விட்டு வாய்க்குள் திட்டித் தீர்த்தான் என்பது புரிந்து விட.. வந்தனா நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

“இதிலே இவங்க காலைப் போர்க்க கல்லைத் தூக்கிப் போட்டேனாம்.. நேருக்கு நேரா மோதறதுக்காக ரயிலுக்குள்ள ஏறினேனாம்.. என்னம்மா சீன் கிரியேட் பண்ற..! நீ பேசாம சினிமாவுக்கு திரைக்கதை வசனம் எழுதப் போயிரலாம்..” அவன் பரிந்துரை செய்ய..

“யாரு பார்க்கிறது..?” என்று அவள் கேட்டு வைத்தாள்…

“அது புரொடியுசரோட தலைவிதி..” என்றவன் அவளைத் தாண்டி நடந்தான்..

“அப்ப நீங்கதான் படம் எடுக்கனும்…” அவள் அவனைத் தொடர்ந்தாள்..

“பழி தீர்க்கனும்ங்கிற முடிவோடதான் நீ இருக்கிற..” என்றபடி அவன் உட்கார்ந்த சீட்டைப் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது..

“இங்க ஏன் உட்காருகிறிங்க..?” என்று கேட்டாள்..

“ஏன்னா.. இதுதான் என்னோட சீட்..” அவன் பெட்டியை சீட்டுக்கடியில் தள்ளி விட்டு.. வாகாக சாய்ந்து அமர்ந்து காலை நீட்டிக் கொண்டான்..

“இது எப்படி உங்க சீட்டாகும்..?” வந்தனா விடாமல் வழக்கடித்தாள்..

“நீ என்ன என்கூட வம்பு வளர்த்துக்கிட்டே இருக்கிற..?” அவன் எரிந்து விழுந்தான்..

“அப்படியொரு நேர்த்திக் கடன்ங்க எனக்கு.. இது என்னோட சீட்..”

வந்தனா அவனுடைய சீட்டுக்கு எதிர்சீட்டைக் காண்பித்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தினான்..

“வைத்துக்க.. நான் என்ன உன் சீட்டிலயா உட்கார்ந்திருக்கேன்..?”

“அதெப்படி.. கரெக்டா எனக்கு எதிர் சீட்டில நீங்க வந்து உட்காருவீங்க..?”

“இதே கேள்வியை நானும் உன்னைப் பார்த்துக் கேட்கலாமில்லையா..?”

அவன் நிதானமாக கேட்டான்.. அவளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை.. திரைப்படத்தில் நடப்பதைப் போல அந்தச் சூழல் இருப்பதாக அவள் உணர்ந்தாள்.. அவளுக்கு எதிர்சீட்தான் அவனுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நம்ப வஅள் மனம் மறுத்தது..

“வேனும்னா.. வாசலில ஒட்டியிருக்கிற பெயர் பட்டியலில கதிரவன்ங்கிற பெயர் இருக்கான்னு பார்த்துட்டு வா..”

அவன் ஒய்வாக சரிந்து கொண்டான்.. அவளாலும் ஏன் அதைப்போல ஒய்வாக ஒரு இடத்தில் உட்கார முடியவில்லை என்று அவள் மனம் குமைந்தாள்.. எதற்கும் இருக்கட்டுமென்று அவன் பாராத போது வாசல் பக்கமாக நழுவி பெயர் பட்டியலைப் பார்த்து விட்டு வந்தாள்.. கதிரவன் என்ற பெயர் இருந்தது..

“கன்பார்ம் பண்ணியாச்சா..?”

அவளைப் பார்க்காமல் கையிலிருந்த பிஸினெஸ் மேசினைப் பார்த்தபடியே விழியுயர்த்தாமல் அவன் கேட்டான்..

அவன் அவளைப் பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறான் என்பதில் அவளுக்கு வெட்கமாகி விட்டது..

“நான் ஒன்னும் நேம் லிஸ்டைப் பார்க்கப் போகலை.. காத்து வாங்கப் போனேன்..” வந்தனா சமாளிக்க முயன்றாள்.

அவனது உதட்டை வளைத்த கேலிச்சிரிப்பு அவளை இம்சை செய்தது.. அவனை அவள் வேடிக்கை பார்க்கப் போய்.. கடைசியில் அவன் அவளை வேடிக்கை பார்ப்பதைப் போல ஆகிவிட்டதே..

“நம்பிட்டேன்..” அவன் குரலே அவனது நம்பாமையை அறிவித்தது..

'போடா.. நீ நம்பினால் எனக்கென்ன.. நம்பாவிட்டால் எனக்கென்ன..'

வந்தா ரோசத்துடன் அவள் சீட்டில் சரிந்து அமர்ந்தாள்.. கடந்து போன ஊர்களையும் மின் கம்பங்களையும் கண்ணாடி மறைத்த ஜன்னலில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. யதேச்சையாக திரும்பிய போது அவளை அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்..

'இவனுக்கு என்னைப் பார்த்தால் எப்படியிருக்கு..?'

அவளின் மூக்கு நுனியில் கோபம் வந்து அமர்ந்து விட்டது.. அவனிடம் ஆக்ரோசமாக வினவியபோது அவன் மறுக்காமல்.. ஆமாம்.. அப்படித்தான்.. அவன் அவளை வேடிக்கைதான் பார்த்தான் என்று சொன்னான்.. அதற்காக இப்போது 'என்னாங்கிற..?' என்ற வினாவை எழுப்பாமல்..

"உன்னைப் பார்த்தால் ஸ்கூல் கோயிங் சில்ரனைப் போல இருக்கே.." என்று வினவி வைத்தான்..

"சில்ரனா..?" அவள் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகிவிட்டது..

அவளைப் போன்ற அழகான யுவதி ஒருத்தியை.. (அவள் அழகு என்பதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான் என்றாலும் உலகம் ஒப்புக் கொள்ளுமே.. அவளுக்கு அது போதாதா..?) அவனைப் போன்ற மட்டக் கேவலமான தோற்றத்தைக் கொண்ட ஒருவன்.. (இதை நினைக்கும் போதே.. அவளது மனச்சாட்சி 'அடிப்பாவி..' என்று அலறி வைத்தது.. சற்று நேரத்திற்கு முன்புதான் அவள் அவனை மகா ஹேண்ட்சம்மான ஒருவன் என்று விழியகல பார்வையிட்டதை கனகாரியமாக நினைவு படுத்தி வைத்தது.. அவள் சொல்வது 'அபாண்டம்..' என்ற உண்மையை பிட்டுப்பிட்டு வைத்தது.. அவள் 'போ.. மனச்சாட்சி...' என்று அதை புறம் தள்ளி விட்டு தன் நினைவைத் தொடர்ந்தாள்..) குழந்தை என்று வர்ணிப்பதா..? அந்த வர்ணனையையும் வேலை மெனக்கெட்டு அவளிடமே சொல்வதா..?

அவன் அதற்கும்.. ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கிற என்று கேட்டு வைத்தான்.. அது போதாது என்று..

"எந்த ஸ்கூலில்.. என்ன கிளாஸ் படிக்கிற பாப்பா..?" என்றும் துணைக்கேள்வியொன்றை போட்டு வைத்தான்..

'இவன் என்ன இப்படிக் கேட்டு வைக்கிறான்..?'

வந்தனாவுக்கு உண்மையிலேயே அவளைப் பார்த்தால் பள்ளிக்குச் செல்லும் பாப்பாவைப் போல்தான் இருக்கிறதா என்ற கவலை வந்து விட்டது.. அவள் கடந்து போகும் மின் கம்பங்களை மறந்து விட்டு கைப்பையில் இருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை எப்படியாவது எடுத்து முகம் பார்த்து விட வேண்டுமே என்ற கவலையில் ஆழ்ந்தாள்..

அவன் அதை உணர்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும்.. ஒரு விதமான நமட்டுச் சிரிப்புடன் அவளை வேடிக்கை பார்ப்பதைத் தொடர்ந்தான்.. அவள் முகத்தில் வந்து அமர்ந்திருந்த மலையளவு கவலையில் அவனுக்கு சிரிப்பு வந்தது.. அவள் அவனை வசீகரித்தாள்..

'உண்மையிலேயே இவள் குழந்தைதான்...'

அவன் அவளைப் பார்க்கத் தோதா திரும்பி அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டான்.. கண்ணாடி பார்க்கும் கவலையிலிருந்த வந்தனா அதைப் பார்த்து விட்டுப் பல்லைக் கடித்தாள்.. அதை கண்டு கொண்ட கதிரவனோ புருவங்களை உயர்த்தி..

"என்ன ஆச்சு..?" என்று வெகு அக்கறையாக விசாரித்து வைத்தான்..

"ஊம்..? குழந்தை அழுகுது.." அவள் வெடுக்கென்று பதில் சொன்னாள்..

"உட்வர்ட்ஸை உன் வீட்டிலே கொடுத்து அனுப்பலையா..?" அவன் சிரிக்காமல் வினவி வைத்தான்..

அவளுக்கு உட்வர்ட்ஸ் தேவைப்படும் என்பதை அவள் வீட்டில் உணரவில்லையாம்.. பாவம் குழந்தை.. வழியில் அழுது வைக்குமே.. என்று அவர்கள் நினைத்து வைக்கவில்லையாம்.. அவன் எடுத்துச் சொன்ன விதத்தில்..

"உங்களைப் போல ரயிலில் மீட் பண்ற மகானுபவர் யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்கன்னு என் வீட்டிலே விட்டிருப்பாங்க.." என்றாள் வந்தனா..

"அடடா.." கதிரவன் வருத்தப்பட்டான்..

'இது எதுக்கு..?' வந்தனா சந்தேகமாக அவனைப் பார்த்தாள்..

"ரயில் பயணத்திலே இப்படியொரு குழந்தையை மீட் பண்ணுவேன்னு எனக்கு முன்னாடியே தெரிந்திருந்தா உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரை வாங்கிட்டு வந்திருப்பேனே.."

இப்போதும் அவன் சிரிக்கவில்லைதான்.. மாறாக அவன் கண்கள் அவளைப் பார்த்துச் சிரித்தன.. கோபத்தில் நுனிமூக்கு சிவக்க.. அதை உறிஞ்சியபடி அவனை 'வெட்டவா.. குத்தவா..' என்று பார்த்துக் கொண்டிருந்த அந்த அழகான இளம் பெண்ணின் சௌந்தர்யத்தில் அவன் மனம் லேசான மயக்கம் கொள்வதை அவனால் உணர முடிந்தது..

கதிரவன் அவளிடம் விளையாட விரும்பினான்.. சற்று முன்பு ரயிலில் ஏறும்வரை அவனிடம் குடி கொண்டிருந்த அத்தனை களைப்பும்.. நிர்பந்தங்களும்.. உளைச்சல்களும் அவனை விட்டு விலகி ஓடியதைப் போல அவனுக்கு இருந்தது.. ரயிலில் ஏற ஓடி வந்தவனைப் பார்த்து ஒற்றை விரலை உயர்த்தி எச்சரிக்கைச் செய்த அந்த சின்னஞ்சிறு பெண்ணிடம் அவன் மனம் மையம் கொண்டது..

# 3

அவன்.. கதிரவன்..! கதிர் குருப் ஆஃப் கம்பெனிஸின் முதலாளி.. அவனுடைய அம்மா வாணியின் கூற்றுப்படிச் சொல்வதானால்.. நிற்க நேரமில்லாமல்.. கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருப்பவன்.. அவனுடைய அப்பா சாணக்கியனின் வாக்குப்படிச் சொல்வதானால் தகப்பனுக்கே பாடம் சொல்லும் சுப்பிரமணியன்.. அவனுடைய தங்கை கார்த்திகாவின் பார்வையின் வழி சொல்வதானால்.. இளம் பெண்களைப் பித்துப் பிடிக்க வைத்து மயக்கும் பேரழகன்..

“நீ என் காலேஜ் பக்கம் வராதே அண்ணா...”

“ஏண்டி..?”

“போங்கம்மா.. உங்களுக்கு ஒன்னும் தெரியாது.. இவன் என் காலேஜ் பக்கம் வந்தா என் பிரண்ட்ஸெல்லாம் ஜொள்ளு விட ஆரம்பிச்சுடறாளுங்க..”

“பாருடா.. இதை நீ சொல்லவே இல்ல பாத்தியா..? யாராரு எத்தனை பக்கெட் ஜொள்ளு விட்டாங்க..? புள்ளி விவரத்தோட சொல்லு.. நான் கணக்குப் பண்றேன்..”

“அண்ணா..? வேணாம்..”

“நீ தப்பாவே கால்குலேட் பண்ற பாத்தியா..? நான் பக்கெட் கணக்கைச் சொன்னேன் கார்த்திகா..”

“உன் பிரண்ட்ஸ் உன் அண்ணன்கிட்ட கடலை போட நினைச்சா அதில உனக்கென்னம்மா பிரச்னை..?”

“அதை ஏன்டாடி கேட்கறிங்க..? அத்தனை பேரும் போட்டி போட்டுக்கிட்டு அண்ணாவை இன்ட்ரொடியூஸ் பண்ணி வைக்கச் சொல்றாங்க.. எனக்கு வேற வேலையே இல்லையா..? நான்தான் காலேஜ் பர்ஸ்ட்.. இவன் வந்தா என்னோட ஸ்டார் இமேஜ் போயிடுது.. இவனோட தங்கைன்னு இவனோட ஸ்டார் இமேஜ் வந்து என்மேல ஒட்டிக்கப் பார்க்குது..”

“விடு கார்த்திகா..”

இலகுவாக சொன்னான் கதிரவன்.. அவன் முகத்தில் விளையாட்டுத்தனம் மறைந்து தீவிரம் வந்திருக்கும்..

“அவங்களிடம் ஒரேயொரு பொய்யை சொல்லிப்பாரு.. அதுக்கப்புறமா உன்னை யாரும் தொந்தரவு பண்ண மாட்டாங்க..”

“என்ன பொய்யைச் சொல்லச் சொல்ற..?”

“என் அண்ணனுக்கு பிஸினெஸ்ஸில் பெரிய லாஸ்.. இனி அவன் முதலிலே இருந்துதான் எல்லாத்தையும் ஆரம்பிக்கனும்.. பண முதலீட்டுக்கு ஃபைனான்சியரைத் தேடிக்கிட்டு இருக்கான்.. உங்களில யாரு அவனுக்கு ஃபைனான்ஸ் பண்ணத் தயாரா இருக்கீங்களோ அவங்க முன்னால வாங்க.. என் அண்ணனுக்கு இன்ட்ரொடியூஸ் பண்ணி விடறேன்... அவனும் இப்பேற்பட்ட உதவிக்கரத்தைத்தான் ரொம்ப நாளாத் தேடிக்கிட்டிருக்கேன்னு சொல்லு.. அதுக்குப் பின்னாலே யாராவது என்னை நினைச்சு ஜொள்ளு விட்டாங்கன்னா அப்பச் சொல்லு.. நீ இன்ட்ரொடியூஸ் பண்ணலைன்னா என்ன.. நானே நேரில வந்து இன்ட்ரொடியூஸ் அளிக்கறேன்..”

“அந்தக் கஷ்டமே உனக்கு இருக்காது.. ஒரு ஆளுகூட உன்னத் திரும்பிப் பாக்காது.. உன்னோட அட்ராக்ஷனே உன்மேல இருக்கிற அந்த ஹீரோ இமேஜ்தான்.. அது போயிருச்சுன்னா யாரு உன்னைத் திரும்பிப் பாக்கப் போறாங்க..?”

“தெரியுதில்ல..? அப்ப இந்த ஐடியாவை யூஸ் பண்ணி தப்பிச்சுக்கிற வழியைப் பாரு.. ஆனா ஒன்னு கார்த்திகா..”

“என்ன..?”

“அப்படியும் என்னை நினைச்சு ஒரு ஆளு ஜொள்ளு விட்டான்னா..”

“ஜொள்ளு விட்டான்னா..?”

“அவதான் என்னோட ஆளு..”

“அப்ப ஒரு ஆளுகூட உன் ஆளா மாற மாட்டாங்க.. காலம் பூராவும் நீ கட்டை பிரம்மச்சாரிதான்..”

அந்த அண்ணன் தங்கையின் பேச்சை.. அமைதியாக கவனித்துக் கொண்டிருந்த சாணக்யன் தாடையைத் தடவினார்.. அவர் விழிகளில் ஏதோ யோசனை வந்தது..

“இது சரியான மெத்தேடு இல்லை கதிர்..” என்றார்..

“எதைச் சொல்கிறிங்க டாடி..?”

“உன்னை அடையாளமில்லாதவனா ஆக்கிக்கிறது.. அதுக்குப் பதிலா உன் தங்கையிடம் இப்படிச் சொல்லச் சொல்லலாம்...”

“எப்படி...?”

“உன் ஸ்டேட்டஸீக்கு ஈக்குவலாவோ.. அல்லது.. கூடுதலாவோ.. இருக்கிறவங்களை மட்டும் உன்கிட்ட இன்ட்ரொடியூஸ் பண்ணி வைக்கிறேன்னு சொல்லச் சொல்லலாம்.. அதை விட்டுட்டு வேற மாதிரி பேச்சுக்குக் கூட ஏன் பேசனும்..?”

அவரே சாணக்யன்... அவர் பிறக்கும் போதே எப்படித்தான் பொருத்தமான பெயரைப் பார்த்து அவருக்கு வைத்தார்களோ என்று வாணி அடிக்கடி அலுத்துக் கொள்வாள்...

சாணக்யன் தன் சாணக்கியத்தனத்தை வியாபாரத்தில் மட்டுமல்லாது வீட்டிலும் அவ்வபோது பிரயோகிப்பார்.. அதில் அவருக்கும் குடும்பத்தார்க்கும் அடிக்கடி சொற்போர் மூண்டு விடும்.. அன்றும் அதுபோல சொற்போர் மூண்டு விட்டது.. அது முடிய வெகு நேரமாகி விட்டது.. கதிரவன் அதிகமாக வாக்குவாதம் செய்யாமல் தோளைக் குலுக்கி விட்டு போய் விட்டான்..

“அண்ணன் அதோட பிஸினெஸ்ஸிலேயே உங்களோட ஒபினியனை இன்வால்வ் பண்ணிக்கிறது இல்லை.. நீங்க என்னடான்னா அதோட பெர்ஸனல் லைஃபிலேயே ஒபினியன் சொல்லி வைக்கறிங்க.. அது கேட்டுக்கும்ன்னு எனக்குத் தோணலை டாடி..”

கார்த்திகா சொல்லி விட்டுப் போனதையே நினைத்தபடி உட்கார்ந்திருந்தவரை விரோதமாக பார்த்தாள் வாணி..

“ஏண்டி..?” என்றார் சாணக்யன்..

“உங்க சாணக்கியத்தனத்தை மூட்டை கட்டி உங்க கூடவே வைச்சுக்கங்கன்னு எத்தனை தரம்தான் சொல்றது..? இப்பப் பாருங்க அவன் கோவிச்சுக்கிட்டுப் போறான்..”

“அப்படி அவன் உன்கிட்ட வந்து சொன்னானா..?”

“உங்களுக்குத்தான் எதையும் வாயைத் திறந்து சொல்லனும்.. பெத்தவளுக்கு அப்படியில்ல.. பிள்ளை முகம் வாடி சைலண்டா போனாலே.. ஏதோ அவன் மனசில ஒளிஞ்சிருக்குன்னு புரிஞ்சுரும்...”

"ஆமாமாம்.. பூதம் வந்து அவன் மனதில ஒளிஞ்சிருக்கு.. நீ கண்டு பிடிச்சிட்ட.."

"பூதமெல்லாம் உங்க மனசிலதான் வந்து ஒளியும்.. என் மகன் மனசில எல்லா தேவதைதான் வந்து சரிதான்.."

"பணக்கார தேவதையா இருந்தாச் சரிதான்.."

"அதிலயும் பணமா..? ஏங்க.. நீங்க திருந்தவே மாட்டிங்களா..?"

"அது என்ன தேவைக்கு..?"

இப்படித் தான் எடுத்த முடிவில் மாறாமல் இருக்கும் சாணக்யன் பரம்பரைப் பணக்காரன் தனக்கு சமதையில்லாத எவரோடும் நின்று பேச மாட்டார்.. கதிரவனும் அப்படித்தா என்றாலும்.. சில குணங்களில் அவன் சாணக்யனுக்கு எதிர் கோணத்தில் இருந்தான்..

சின்னஞ்சிறு வயதிலேயே அவன் சுயத்தை விரும்பி விட்டவன்.. வளர்ந்த பின்னா சாணக்கியனின் நிழலில் ஒன்றிக் கொள்வதை தவிர்க்க ஆரம்பித்தான்.. அவனுடை நண்பனுடன் வொர்க்கிங் பார்ட்னராக சேர்ந்து ஒரு கம்பெனியை ஆரம்பித்தான்..

"அவன் பணத்தில் நீ பிஸினெஸ் பண்றதா..?" சாணக்யன் ஆட்சேபித்தார்..

"இது என்னை நம்பி அவன் ஆரம்பிச்ச கம்பெனி டாடி.. இந்த ஃபீல்டைப் பத்தி அவனுக் எதுவும் தெரியாது.. பணம் அவனுடையது.. மூளையும்.. உழைப்பும் என்னுடையது.."

"இதை எதுக்காக அடுத்தவனுக்கு நீ செய்து கொடுக்கனும்..? நம்ம கம்பெனியிலேயே செய்யலாமே.."

"அங்கே நான் சாதிக்க முடியாதுப்பா.."

ஒரே வரியில் தன் மறுப்பைச் சொல்லி விட்டான் கதிரவன்.. சாணக்யனின் முகம் இருண் விட்டது.. நெடுநாள்கள் வரை அவரும் கதிரவனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவே இல்லை..

"அவனை அவன் வழியிலேயே விடுங்க.." என்றாள் வாணி..

"எனக்குத் தெரியாததா அவனுக்குத் தெரிந்திருச்சு..?" என்றார் சாணக்யன்..

வாணி எந்தப் பக்கம் பேசுவாள்..? கதிரவனின் பக்கம் மிகத் தெளிவானதாக இருந்தது அவன் தந்தையின் விரல்களைப் பற்றி நடைபயிலும் குழந்தையாக இருக்க விரும்பவில்லை சாதனை படைப்பவனாக இருக்க விரும்பினான்..

"நம்ம கம்பெனிக்கு வந்தா நான் சுயமா எதையும் செய்ய முடியாதும்மா.. டாடி என் சொல்கிறாரோ.. அதைத்தான் செய்தாகனும்.. என்னைக் கதிரவன்னு யாரும் சொல் மாட்டாங்கம்மா.. 'மிஸ்டர் சாணக்யனோட சன்..' அப்படின்னுதான் சொல்லுவாங்க... மற் இடத்தில் அந்த அடையாளம் எனக்குப் பெருமைதான்ம்மா... பிஸினெஸ்ஸின்னு வர்றப் எனக்குன்னு தனி அடையாளம் இருக்கனும்.. அதுதான் எனக்குப் பெருமை.."

சாணக்யனிடம் இந்த விவரம் போனபோது வியாபாரம் என்பது அவ்வளவு எளிதா ஒன்றல்ல என்றார்.. அவரின் கண்காணிப்பு இல்லாமல் அவனால் எதையும் சாதித்து விட முடியா என்றார்.. அவருடைய அப்பா அவரிடம் ஒப்படைத்த தொழிலை எப்படியெல்லாம் அவர் விருத் செய்தார் என்பதை ஆதாரங்களுடன் அவர்களின் முன்னால் வைத்தார்...

கதிரவனிடம் அவனுடைய தொழில் திறமையை நிருபிக்க எந்த ஆதாரங்களும் இல்லை அவன் தன் உழைப்பையும் மூளையையும் மட்டுமே நம்பி களத்தில் இறங்கினான். மிகப்பெரு வெற்றியையும் சந்தித்தான்.. முதலீடு செய்த நண்பன் வேறு ஒரு தொழிலில் இறங் விரும்பியபோது.. அவன் கம்பெனியில் போட்டிருந்த பணத்தை லாபத்துடன் திருப்பி கொடுத்தான்.. கம்பெனி கதிரவனுக்கு மட்டும் சொந்தமானது..

சாணக்யன் தாடையைத் தடவினார்.. அவரிடமிருந்து ஒற்றை ரூபாயைக்கூட எதிர்பார்க்காமல் சுயமாக தன் காலில் நின்று ஒரு கம்பெனிக்கு முதலாளியாகி விட்ட கதிரவனின் பராக்கிரமத்தில் அவர் யோசிக்க ஆரம்பித்தார்.. வலியப் போய் அவனிடம் வாழ்த்துக்களைச் சொல்லி மனத்தாங்கலை சரி செய்து கொண்டார்.. அவன் எதைச் சொன்னாலும் மறுக்காமல் காது கொடுத்துக் கேட்க ஆரம்பித்தார்..

"உங்க டாடி பக்கா அரசியல்வாதிடி.. ஜெயிக்கிற கட்சி கூடத்தான் எப்பவும் கூட்டணி வைச்சுக்குவார்.." வாணி கார்த்திகாவிடம் கிண்டலடித்தாள்..

அது உண்மை என்பதில் கார்த்திகாவும் தாயுடன் கூட்டணி போட்டுக் கொண்டு சிரித்தாள்..

சாணக்யனின் கணிப்பு சரியானதாக இருந்தது.. அவரிடமிருந்து ஒற்றை ரூபாயைக் கூட வாங்காமல் ஒரு கம்பெனிக்கு சொந்தமாகி விட்ட கதிரவன் விஸ்வரூபமெடுத்தான்.. அவனுடைய ஒற்றை கம்பெனி 'கதிர் குரூப் ஆப் கம்பெனிஸ்..' ஆக மாறியது..

# 4

கதிரவன் வளர்ந்தான்.. படு வேகமாக அவன் வளர்ச்சியில் சாணக்யனே அரண்டு போனார்.. சாணக்யா குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டியின் மகன் என்பது மறக்கப்பட்டு.. கதிர் குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டி கதிரவன் என்ற பெயர் எழுந்து நின்றது..

சாணக்யன் கலந்து கொள்ளும் பார்டிகளில்..

"இவர்தான் கதிர் குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டி கதிரவனோட அப்பா.." என்று அறிமுகப் படுத்தப் பட்டார்..

சாணக்யன் அவற்றை ரசிக்கவில்லைதான்... மனதுக்குள் எரிச்சல் பட்டார்தான்.. ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு வெளியில் புன்னகைத்து அந்த அறிமுகத்தை விரும்பி வரவேற்பதைப் போல நடித்தார்..

அவர் மனதில் புழுக்கம் உருவானது.. அவரின் கம்பீரம் சரிவதைப் போல அவர் உணர்ந்தார்..

கதிர்.. கதிர்.. கதிர்.. எங்கும் கதிரவனைப் பற்றிய பேச்சுத்தான்.. கதிரவன் நிற்காமல் சுழலத் துவங்கினான்.. நள்ளிரவுக்கு மேல் வீடு திரும்பி.. விடிவதற்குள் ஓடி விடுகிறவனைப் பார்த்தபோது..

'இந்த உழைப்பு உழைக்கிறானே..' என்று அவருக்குப் பொறாமையாக இருந்தது..

"இவ்வளவு வேகம் வேண்டியதில்லை கதிர்.."

அக்கறைப் படுவதைப் போல சொல்லிப் பார்த்தார்.. கதிரவன் காது கொடுத்துக் கேட்கவில்லை..

"ஐ ஹேவ் நோ டைம் டாடி.." என்றபடி ஓடி விடுகிறவனைப் பார்த்தவருக்கு..

'எனக்கு மட்டும் நேரமிருக்கா..?' என்று தோன்றி வைத்தது..

அந்தக் கோபத்தை அப்படியே மனைவியிடம் காண்பித்தார்..

"ஏண்டி.. உன் மகனுக்குத்தான் வேலையிருக்கு.. எனக்கு இல்லையா..?"

ஈரத்தலையைச் சுற்றித் துவாலையை இறுக்கிக் கொண்டு... நெற்றியில் குங்குமமும்... கையில் பூக்குடலையுமாக பூஜையறைக்குள் நுழையும் வாணி காலை நேரத்தில் கணவர் கேட்கும் அறிவார்ந்த கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஒரு மௌனப் பார்வை பார்த்து விட்டு பூஜையை ஆரம்பித்து விட்டாள்..

'இவகூட என் கேள்வியை மதிச்சுப் பதில் சொல்ல மாட்டேங்கிறா..'

எரிச்சலுடன் டிவியை உயிர்ப்பித்தார்... அது

"என்னடா.. பொல்லாத வாழ்க்கை...?"

என்று பாடி அவரை சோதித்து வைத்தது.. ஜாகிங் டிரெஸ்ஸோடு மாடியிலிருந்து இறங்கி வந்த கார்த்திகா..

"டாடி.. ஜாகிங் வரலை..?" என்று வியப்புடன் கேட்டாள்..

"ஏன்..? உன் அண்ணனைக் கூப்பிட்டுக்கிட்டுப் போக வேண்டியதுதானே..? சாணக்யா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி நான்.."

"காட்..! அம்மா.. டாடிக்கு என்ன ஆச்சு..?"

கார்த்திகா பூஜையறையைப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.. சாம்பிராணிப் புகையின் மத்தியிலிருந்து வெளியே வந்த வாணி கடுப்பாக தந்தையையும் மகளையும் பார்த்து விட்டு..

"சாமியைக் கூட நிம்மதியா கும்பிட முடியுதா இந்த வீட்டில..?" என்று கேட்டு விட்டுப் போனாள்..

அந்தக் கேள்வியை எதற்காக அவள் அவரைப் பார்த்துக் கேட்டு வைக்க வேண்டும் என்று கோபம் கொண்டார் சாணக்யன்..

"ஏன்..? இந்தக் கேள்வியை என்னைப் பார்த்துத்தான் கேட்பியா..? உன் மகனைப் பார்த்துக் கேட்க மாட்டியா..?" என்று சமையலறை இருக்கும் திசையைப் பார்த்து சப்தம் போட்டார்..

"சும்மா இருங்க டாடி.. காலை காபி கட்டாகிர போகுது.. ஜாகிங்தான் வரமாட்டிங்கன்னா.. மார்னிங் காபியையும் கட் பண்ணப் பாக்கறிங்களே.. இட்ஸ் நாட் பேர் டாட்.."

கார்த்திகா கவலைப்பட்டாள்..

"உன் கவலை உனக்கு.." சாணக்யன் மகளை முறைத்தார்..

"வேற என்ன செய்ய டாடி..? நீங்கதான் எனக்காக கவலைப்பட மாட்டேங்கறிங்களே.." சலிப்புடன் சோபாவில் உட்கார்ந்தாள் கார்த்திகா..

அவளுடைய பயம் மெய்யாகி விட்டது.. கையில் காபிக்கோப்பை இல்லாமல் சமையலறையை விட்டு வெளியே வந்த வாணி.. மகளைப் பார்த்து..

"கார் சாவி எங்கேடி..?" என்று கேட்டாள்..

"என் காராம்மா..? அந்தச் சாவி மாடியில என் ரூமில் இருக்குதே.." என்றாள் கார்த்திகா..

"போய் எடுத்துட்டு வா.." வாணி கட்டளையிட்டாள்..

"ஏம்மா..?"

"உன் அண்ணனோட கம்பெனிக்குப் போயி கேள்வி கேட்டுட்டு வரனும்.. இப்பக் கார் சாவியைக் கொடுக்க முடியுமா.. முடியாதா..?"

வாணிக்கு கார் ஓட்டத் தெரியும்.. கார்த்திகா காலைக் காபிக்கு வேட்டு வந்து விட்டதே என்ற கவலையுடன் தந்தையைப் பார்த்தாள்.. அவர் மனைவியை அதட்டினார்..

"அவனைப் போயி என்ன கேள்வியைக் கேட்கப் போகிற..?"

"நீங்கதானே இந்தக் கேள்வியை உன் மகனைப் பார்த்துக் கேளுன்னு சொன்னீங்க..? அவன் இங்கேயா உட்கார்ந்திருக்கிறான்...? என் பிள்ளதான் நிற்க நேரமில்லாம ஓடிக்கிட்டு இருக்கானே.. அதான்.. ஒரு நடை அவன் கம்பெனிக்குப் போயி நீங்க கேட்கச் சொன்னக் கேள்வியைக் கேட்டுட்டு வரேன்.."

வாணி பிடிவாதம் பிடித்தாள்..

"நீங்கதான் வாயை வைத்துக்கிட்டு சும்மா இருந்திருக்கக் கூடாதா டாடி..?" என்று கார்த்திகா தலையைப் பிடித்தாள்...

கடைசியில் அவனைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டியதுதானே என்று சொல்லி விட்ட குற்றத்திற்காக.. மனைவியின் பலத்த கண்டனத்திற்கு ஆளானார் சாணக்யன்.. அந்தக் கண்டனத்தை கார்த்திகாவும் ஆதரித்ததில் அவருக்கு நெஞ்சுவலி வந்தது..

"நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டேன்... எப்பப் பாரு.. என்னவோ.. இவரோட தம்பிகூட போட்டி போடுகிறதைப் போல எதுக்கெடுத்தாலும் கதிர் கூடவே போட்டி போடறிங்க.. பெரிய மனிதனாய்.. லட்சணமாய் உங்களுக்கு இருக்கத் தெரியலை.."

"வாணி..."

"பேசாதீங்க.. சொல்லிட்டேன்.. உங்க வாயிலேயும்.. ஊர்வாயிலேயும் விழுந்து எழுந்திருக்கிற என் மகன் பத்திரமா இருக்கனும்.. கல்லடியைக் கூடத் தாங்கிக்கலாம்.. கண்ணடியைத் தாங்க முடியாது.."

கடைசியில் அவர் தனது மகனைப் பார்த்துக் கண் வைக்கிறவராக ஆகிவிட்டாரா..?

சாணக்யனால் அந்தக் குற்றச்சாட்டைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. எந்த நேரத்தில் வாணி அந்த வார்த்தைகளைச் சொன்னாளோ.. அந்த மாத இறுதியில்.. கம்பெனியிலிருந்து வந்த கதிரவன்.. மாடிப் படிகளில் ஏறிய போது மயக்கம் வந்து நடைபிரண்டு சரிந்தான்..

"கதிர்.." வாணி பறந்தோடி வந்து மகனைத் தாங்கிக் கொண்டாள்..

ஹாஸ்பிடலில் அட்மிட் செய்தார்கள்.. ஏகப்பட்ட பரிசோதனைகளுக்குப் பின்னால்... அவனுக்கு அத்தியாவசியமானது ஓய்வுதான் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்..

"கம்ப்ளீட் ரெஸ்ட்.. அதுதான் இவருக்கு இப்பத் தேவை.. கண்டினியுஸா.. டே.. நைட்டுன்னு உழைச்சிருக்கார்.. மூளைக்கு ரெஸ்ட் கொடுக்கலைன்னா என்ன ஆகுமோ.. அதுதான் இப்ப ஆகியிருக்கு.. இம்மிடியட்டா இவர் ரெஸ்ட் எடுத்தாகனும்.."

டாக்டர்களின் ஆலோசனையில் சாணக்கியனின் முகத்தில் ஒளிர்ந்த ஒளிர்வை வாணியால் மன்னிக்க முடியவில்லை..

"உங்க பார்வை பட்டுத்தான் என் மகனுக்கு இப்படி ஆகிருச்சு.." என்று சொல்லி விட்டாள்..

"ஒரு தகப்பனா அவனிடம் உழைப்பைக் குறைச்சுக்கன்னு சொன்னேன்.. அது தப்பா வாணி..? நான் சொன்னதை அவன் காதிலேயே போட்டுக்கலை.. தன் போக்கில உழைச்சான்.. இப்ப என்ன ஆச்சு..? ஹாஸ்பிடலில் அட்மிட் ஆக வேண்டிய அளவுக்கு போயிருச்சா இல்லையா..?"

"ஆஹாஹா.. இதில உங்களுக்குத்தான் எத்தனை திருப்தி..!"

"வாணி.."

"பேசாதீங்க.. டேய் கதிர்.. இவர் கண்பார்வையில இருந்தா உனக்கு ரெஸ்ட் கிடைக்காதுடா.. உடம்பும் தேறாது.. பேசாம ஊட்டி.. கொடைக்கானல்ன்னு எங்கேயாவது போயிட்டு வா.." வாணி கோபத்தில்தான் சொன்னாள்.. அதற்கும் சாணக்யன்..

"இந்த மழை காலத்தில ஊட்டி.. கொடைக் கானலுக்கா போவாங்க.. அதுக்கு குற்றால மலைப் பக்கம் போனாலாவது கொட்டற அருவியில குளிச்சுட்டு வரலாம்.." என்று சொல்லி விட்டார்..

"அப்ப.. என் மகனுக்கு மூளை சூடேறியிருச்சு.. குற்றால அருவியில எழுமிச்சைபழத்தை தலையில பிழிஞ்சிட்டு.. தலைக்கு குளித்து விட்டு வரட்டும்ன்னு நீங்க சொல்கிறிங்க.." என்று ஆரம்பித்து பிலு.. பிலுவென பிடித்து விட்டாள்..

அவர்களின் சண்டை தீறுகிற சண்டையாக தெரியவில்லை.. கார்த்திகா அந்தச் சூழலில் இருந்து தப்பித்துப் போய் விடும்படி தமையனுக்கு அறிவுரை கூறினாள்..

"உனக்குத் தேவை கம்ப்ளீட் ரெஸ்ட் அண்ணா.. அது இந்த வீட்டில உனக்குக் கிடைக்காது.. இவங்க சண்டை போடன்னு சொன்னாலும் உனக்குத் தோதான யோசனையைத்தான் சொல்லியிருக்காங்க. இப்ப நீ ரெஸ்ட் எடுக்கத் தோதான ஊர் குற்றாலம்தான்.. பேசாம அங்கே போயிரு.. உனக்குப் பிடிச்ச உன் அக்காவும் அங்கேதான இருக்காங்க..?"

கார்த்திகாவின் வார்த்தைகளில் குற்றாலத்துக்கு கிளம்பும் முடிவை எடுத்து விட்டான் கதிரவன்..

“ஏன் கதிர்.. அம்மா உன்னைப் பார்த்துக்க மாட்டேனா..?” வாணிக்கு அழுகையே வந்து விட்டது..

“உங்க அக்காதான் உன்னைப் பார்த்துக்குவாளா..?”

“அம்மா.. எனக்கு இப்ப இடமாறுதல் தேவை.. அது குற்றாலமா இருந்தாத்தான் என்ன..? அக்காவைப் பார்த்தும் நாளாச்சு.. கொஞ்ச நாள்தான்.. நான் தேடற ரிலாக்சேசன் எனக்குக் கிடைச்சதும் அங்கேயிருந்து கிளம்பிருவேன்.. இடமாறுதல் பெட்டர்ம்மா.. சரியானதும் நான் திரும்பி வந்துரப் போறேன்.. அதுவரைக்கும் என் கம்பெனிகளை என் ஜி.எம் பார்த்துக்குவாரு.. கார்த்திகாவையும் வீட்டையும் நீங்க பார்த்துக்கங்க..” தாயை சமாதானப் படுத்தினான் கதிரவன்..

கதிர் குருப் ஆப் கம்னெிஸை பார்த்துக் கொள்ளச் சொல்லி அவரிடம் அவர் மகன் சொல்லவில்லையே என்று மலையளவு மனத்தாங்கல் சாணக்யனுக்கு வந்தது.. அதை அவர் மனைவியிடம் சொன்னார்..

“காலம் போன கடைசியில என்னை டைவர்ஸ் கேட்டு கோர்ட் வாசலை மிதிக்க வைச்சிராதீங்க..” வாணி எச்சரித்தாள்..

இப்படியாகத்தானே.. கதிர் குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டியான திரு.கதிரவன்.. சென்னையிலிருந்து செங்கோட்டையை நோக்கிப் புறப்பட்ட பொதிகை எக்ஸ்பிரஸ்ஸில் குற்றாலம் போவதற்காக ஓடிவந்து கடைசி வினாடியில் தாவி ஏறி வந்தனாவின் மீது மோதி விழுந்தான்..

# 5

அவள்.. வந்தனா..! அழகின் இளவரசி.. ரயில்வேயில் ஆபிசராக இருக்கும் பாஸ்கரனின் செல்வப் புதல்வி.. பள்ளியில் ஆசிரியையாக இருக்கும் மாலதியின் மூத்த மகள்.. அதே பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பில் படிக்கும் அஞ்சனாவின் அருமை அக்கா..

வந்தனா எல்லோரையும் போல இன்ஜினியரிங் படிக்காமல் பி.பி.ஏ. எம்.பி.ஏ என்று மாற்றி களம் இறங்கியவள்.. பி.பி.ஏ வை முடித்து விட்டு.. எம்.பி.ஏ வில் கால் பதித்திருப்பவள்.. கோடை விடுமுறையைக் கழிக்க அவர்களின் குடும்பமே கோவாவுக்குப் போன போது.. இவளுக்கு மட்டும் குற்றால மலைச் சாரலில் இருக்கும் பாஸ்கரனின் தம்பி சுதாகரனின் வீட்டுக்குப் போகத் தோன்றியது..

"இவ எப்பவுமே இப்படித்தான்.. நாம கிழக்குன்னா.. இவ மேற்கும்ப்பா.." எரிச்சல்பட்டாள் மாலதி..

"அப்ப.. நாம இருக்கிறது கிழக்கு.. என் தம்பி இருக்கிறது மேற்குங்கறியா..?" முகம் இறுக கேள்வி கேட்டார் பாஸ்கரன்..

"உங்க தொம்பியை நாங்க ஒன்னும் சொல்லலை.. வேணும்னா அவர் கிழக்குப் பக்கமாகவே இருந்துக்கட்டும்.. நாங்க வேணும்னா மேற்குப் பக்கத்தைப் பட்டாப் போட்டுக்கறோம்.." ஆசிரியையாக இருக்கும் மாலதி அபரிதமாக எதிர் தாக்குதலை விடுத்தாள்..

"இங்கே பாரு.. கிழக்கா இருந்தாலும்.. மேற்கா இருந்தாலும்.. அவன் பாட்டுக்கு அவன் வேலையைப் பார்த்துக்கிட்டு இருக்கான்.. உன்கிட்டேயும்.. என்கிட்டேயும் வந்து நிக்கிறானா..?"

"எப்படி நிப்பார்..? அவரென்ன உங்களையும்.. என்னையும் போல மாதச்சம்பளத்துக்கா வேலை பார்த்துக்கிட்டு இருக்காரு..? சொந்தமா ஸ்டார் ஹோட்டலை நடத்திக்கிட்டு அமோகமா இல்ல இருக்காரு.. அப்புறம் எதுக்காக நம்மத் தேடி வந்து நிற்கப் போகிறாரு..? ம்ஹீம்.. என்னைச் சொல்லனும்.. உடம்புக்கு முடியலைன்னு ரெண்டு மாசம் சேர்ந்தாப்புல லீவு போட்டிர முடியாது... 'லாஸ் ஆப் பே'ன்னு சம்பளத்தில கை வைச்சிருவாங்க.. எதுக்கும் கொடுத்து வைச்சிருக்கனும்.."

மாலதி வேண்டுமென்றே விட்ட பெருமூச்சில் பாஸ்கரனின் தன்மானம் சிலிர்த்துக் கொண்டது.. அவர் மனைவியை ஒருதினுசாக பார்த்து விட்டு..

"கொடுத்து வைச்சது என் தம்பிதாண்டி.." என்றார்..

"ஏனாம்..? டிகிரி முடிச்சிருக்கான்னுதான் பேரு.. வீட்டை விட்டு வெளியே போகாம சௌகரியமா குடும்பம் நடத்தறாளே.. உங்க தொம்பி பொண்டாட்டி.. அவ குடுத்து வைக்கலியா..?"

"இல்லைடி.. அவளைவிட சுதாகரன்தான் கொடுத்து வைத்தவன்.. அவனா ஸ்டார் ஹோட்டலைக் கட்டினான்..? அதைக் கட்டி வைச்சிருந்த மகராசனின் மகள் கழுத்தில் தாலியைக் கட்டினான்.. ஹோட்டலும்.. பங்களாவும் அவனுக்குச் சொந்தமாகிருச்சு.. எனக்கு.. நான் பாத்துக்கிட்டு இருக்கிற வேலை மட்டும்தானே சொந்தமா இருக்கு..?"

பாஸ்கரன் சரியான இடத்தில் அடித்துவிட.. அன்று முழுவதும் மௌன விரதம் காத்தாள் மாலதி..

"உன்னாலதாண்டி..."

வந்தனாவின் மீது குற்றம் சுமத்தினாள் அஞ்சனா..

“நானாடி இவங்க ரெண்டு பேரையும் சண்டை போடச் சொன்னேன்..?” தோளைக் குலுக்கினாள் வந்தனா..

“பிசாசே..! சம்மர் வெகேசனுக்கு ஃபேமிலியோட டூர் போறதை விட்டுட்டு உன்னை யாருடி குற்றாலம் பக்கமா ஓடச் சொன்னது...?”

“யாரும் சொல்லலை.. எனக்காத்தான் அங்கே லீவை ஸ்பெண்ட் பண்ணனும்னு தோணுச்சு.. கோவாவில என்ன இருக்கு.. ஒரே போர்...”

“அடிப்பாவி.. கடல் இருக்கு.. கோட்டை இருக்கு.. சுத்திப்பார்க்க எத்தனையோ இடமிருக்கு... இது அத்தனையையும் விட்டுட்டு குற்றாலத்துக்கு போகனும்ங்கறியே.. அங்கே மட்டும் என்ன இருக்கு..?”

“அருவி இருக்கு.. மலை இருக்கு.. யு நோ அஞ்சனா... சித்திக்கு என்மேல கொள்ளைப் பிரியம் தெரியுமா..? சரத் என்னைக் கண்டுட்டா அக்கா.. அக்கான்னு சுற்றிச் சுற்றி வருவான்.. அவன் பிரண்ட்ஸையெல்லாம் மறந்திருவான்.. நான் குற்றாலத்தில இருக்கிற வரைக்கும் என் பின்னாடியே வால் போல ஒட்டிக்கிட்டு இருப்பான்.. அந்த சொந்தமே தனிடி அஞ்சனா..”

வந்தனாவின் கண்களில் தெரியும் உயிர்ப்பில் அஞ்சானவுக்கும் குற்றாலத்திற்குப் போனால் என்ன என்று தோன்றியதுதான்.. ஆனால் மாலதி அங்கே வரமாட்டாள் என்பதில் தோண்றிய எண்ணம் உடனடியாக விடை பெற்றுக் கொண்டு ஓடி விட்டது..

பாஸ்கரனின் மனைவியான கருணா.. பெயருக்கேற்றார் போல காருண்யமே வடிவானவள்.. அவர்களின் ஒரே மகனான சாய்சரத்தோ பெரியப்பா மகள்களிடம் கூடப் பிறந்த சகோதரனைப் போல வாஞ்சை காட்டுவான்.. அவர்களின் வீட்டுக்குப் போனால் கோடை விடுமுறையை குதூகலமாக கழிக்கலாம்தான்.. அதை மாலதி இல்லாமல் கழிக்க வேண்டும் என்பதில் அஞ்சனா குற்றாலத்தைப் பற்றி நினைக்கவே மாட்டாள்..

வந்தனா அப்படியில்லை.. அவளுக்கு எப்போதுமே பாஸ்கரனின் மீது சித்தப்பா என்ற சொந்தத்தை விட.. பெரிய அண்ணன் என்பதைப் போன்ற பாசம் தான் இருக்கும்.. திருமணம் ஆகும் வரையில் சுதாகரன் பாஸ்கரனின் குடும்பத்தோடுதான் சேர்ந்து இருந்தார்.. தாய்.. தந்தையர் கிராமத்தில் இருந்ததால் அவரின் கல்லூரிப் படிப்பிற்கு அவர் சென்னையில் வசிக்கும் பாஸ்கரனின் குடும்பத்தோடு சேர்ந்து இருக்க வேண்டியதாகி விட்டது.. வந்தனாவும்.. அஞ்சனாவும்.. அவர் தூக்கி வளர்த்த குழந்தைகள்தான்.. குற்றாலத்தில் இருக்கும் பெரிய செல்வந்தரின் ஒரே மகளான கருணாவை அவளுடைய பெற்றோர்கள் அவருக்கு மணம் பேசி முடிக்கும்வரை மாலதியும் கணவரின் தம்பியிடம் சொந்தத் தம்பியைப் போல பாசம் காட்டிக் கவனித்துக் கொண்டவள்தான்..

எப்போது அவள் கருணாவை மணம் முடிக்க ஒப்புக் கொண்டாரோ.. அன்றிலிருந்து மாலதிக்கு சுதாகரன் விரோதியானார்..

“தம்பி...”

“என்ன அண்ணி..?”

“உங்க அம்மா.. அப்பா பாத்து வைச்சிருக்கிற குற்றாலத்துப் பொண்ணக் கல்யாணம் பண்ணிக்க நீங்க சம்மதம் சொல்லிட்டிங்க போல..?”

“ஆமாம் அண்ணி.. அம்மாப்பாவுக்கு பிடிச்சிருக்கு.. பொண்ணும் அழகா.. நல்லகுணமா இருக்கிறா.. அதான்..”

இதற்காக மட்டும்தான் நீ சம்மதம் சொன்னாயா என்று குரோதம் கொண்டாள் மாலதி..

குற்றாலத்திலேயே பெரிய பணக்காரர் பெற்ற ஒரே பெண் என்பதினால் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று சொல்லாமல் சுதாகரன் பூசி மெழுகுவதாக அவள் வெகுண்டாள்..

'குடும்பமே இது ஒன்னை கண்டு வைச்சிருக்கு.. அந்தக் கருணா அழகியாம்.. குணசாலியாம்.. அதனாலதான் இதுக அத்தனை பேருக்கும் அவளைப் புடிச்சுப் போச்சாம்.. அவளோட பணத்தைப் பத்தி மூச்சு விடுதுகளா..? கெட்டிக்காரங்கதான்..'

மனதுக்குள் பொருமினாள் மாலதி.. அது புரியாமல் அண்ணியின் முகத்தையே கன்று.. பசுவின் முகத்தைப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்தார் சுதாகரன்..

"என்ன விசயம் அண்ணி..?"

"அது ஒன்னுமில்ல தம்பி.. என் கூடவேலை பாக்கிற சிநேகிதி ஒருத்தி கேட்டா... ஏண்டி மாலதி.. நீயோ டீச்சரா இருக்கே.. உன் கொழுந்தன் பெண்டாட்டியும் உன்னப் போல படிச்சுட்டு உத்தியோகம் பண்றவளா இருந்தாத்தானே நல்லாயிருக்கும்ன்னு.."

சொல்ல வந்ததை சுற்றி வளைத்து அவள் சொல்ல.. அதைப் புரியாத சுதாகரன் யதார்த்தமாக வாய் விட்டு விட்டார்..

"வேலைக்குப் போகனும்னு கருணாவுக்கு ஒரு அவசியமும் இல்லையே அண்ணி.. அவளோட அப்பாவுக்கு அவ ஒரே பொண்ணு அவர் எக்கச்சக்கமா சம்பாதிச்சு வைத்திருக்கார்.. அது அத்தனைக்கும் ஒரே வாரிசு கருணாதான்.. நூறு பேருக்குச் சம்பளம் கொடுக்கிறவளா இருக்கும் போது.. இவ எதுக்காக வேலைக்குப் போகனும்..?"

'வந்துருச்சா.. பூனைக்குட்டி வெளியே வந்திருச்சா..'

ஆத்திரமானாள் மாலதி.. அவளுக்கும்.. கருணாவுக்கும் இடையினில் உள்ள பொருளாதார ஏற்ற தாழ்வு.. குடும்பத்தில் அவளுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் முதல் மரியாதையை ஆட்டிப் பதம் பார்க்கக் கூடும் என்ற முன்னெச்சரிக்கையில் அவள் மனதில் இருந்ததை மறைக்காமல் சொல்லி விட்டாள்..

"அப்ப.. அந்த அவசியம் எனக்கு மட்டும்தான் இருக்குன்னு சொல்றிங்களா தம்பி..?"

அவளின் கேள்வியில் புயலின் அமைதி ஒளிந்திருக்க.. சுதாகரன் திகைத்துப் போனார்..

"அண்ணி..?"

"உங்கண்ணனும்.. நானும்.. கவர்ண்ட்மெண்டில வேலை பார்க்கிறோம்.. நீங்களும்.. உங்களுக்கு வர்ற உங்க பெண்டாட்டியும் எங்களைப் போலவே இருந்தாத்தானே நம்ம குடும்பம் ஒற்றுமையா.. ஒன்னா இருக்க முடியும்..?"

"ஏன் அண்ணி.. இப்ப ஒற்றுமைக்கு என்ன குறைவு வந்துருச்சு..?"

"இனி வரும் தம்பி.. இதோ.. நீங்களே ஒரு வார்த்தை சொல்லிட்டிங்கள்ல.. உங்க பெண்டாட்டிக்கு வேலை பார்க்கனும்கிற அவசியமில்ல.. அது எனக்குத்தான் இருக்குன்னு..."

"அண்ணி.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை.."

"ஊரும்.. உலகமும்.. அந்த அர்த்தத்தில்தான் சொல்லும்.. இத்தனை நானா நான் குடும்பத்தைப் பார்த்துக்கிட்டேன்.. ஊரில இருக்கிற உங்க அப்பா அம்மாவுக்கு மாதாமாதம் பணம் அனுப்பினேன்.. உங்களை நாங்க பெத்த பிள்ளைபோல கூட தங்க வைத்துக்கிட்டு படிக்க வைச்சேன்.. இது அத்தனையையும் செஞ்ச நான் பின்னாடி போகனும்.. ஒரு பணக்காரப் பொண்ணு முன்னாடி வரனுமா..?"

"அண்ணி.. அதுபோல எல்லாம் நடக்காது.."

“நடக்கும்... நான் உலகத்தைத் தெரிஞ்சு வைச்சிருக்கிறவ.. வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவ.. உங்களைத் தத்துப்பிள்ளை போல வளர்த்த எங்ககிட்ட ஒரு வார்த்தைகூடக் கேட்காம உங்க கல்யாணத்தை உங்க அப்பாம்மா முடிவு பண்ணியிருக்காங்களே.. இதிலிருந்தே இந்த உலகம் நேரத்துக்கு ஏற்றார்போல மாறும்ன்னு என்னால புரிஞ்சுக்க முடியாதா..? இதுதானே குடும்பத்தைத் தாங்கின.. வீட்டுக்கு மூத்தவராய் பிறந்த.. உங்க அண்ணனுக்கும் எனக்கும் கிடைத்த மரியாதை..?”

“அண்ணி...”

சுதாகரன் வாயடைத்துப் போனார்.. கருணாவின் தாய் அவள் சிறு வயதாக இருக்கும்போதே இறந்து விட்டாள்.. கருணாவின் தந்தைக்கு உடல் நலக் குறைவு வந்து விட்டது.. தன் மகளுக்கு சீக்கிரமாக மணம் முடித்துப் பார்த்துவிட வேண்டும் என்று அவர் துடித்த துடிப்பில்.. சுதாகரன் முதற்கொண்டு யாரையும் கேட்காமல்.. அவரைப் பெற்றவர்கள் திருமணத்தை நிச்சயம் செய்து.. தாம்பூலத் தட்டை மாற்றி விட்டார்கள்..

“நானே பெண்ணைப் பார்க்கலையே அண்ணி.. என்னிடம் கூடக் கேட்காமத்தானே அவங்க கல்யாணத்தை நிச்சயம் பண்ணினாங்க..?”

“கரும்பு தின்ன நீங்க கூலி கேட்க மாட்டிங்கங்கிற நம்பிக்கைதான் தம்பி..”

பணத்துக்காகத்தான் அவர் கருணாவை மணந்து கொள்கிறார் என்று குத்திக்காட்டினாள் மாலதி...

# 6

சுதாகரனின் எந்த விளக்கமும் மாலதியிடம் எடுபடவில்லை.. அவள் கொழுந்தனிடம் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

சுதாகரனுக்கு மனம் தாங்கவில்லை.. மாலதியே சொன்னதைப் போல அவரை வேற்று மனிதராக பாவிக்காமல்.. பிள்ளைக்கு பிள்ளையாக வளர்த்த அண்ணியின் மனம் நோக அவர் கருணாவை மணம் முடிக்க விரும்பவில்லை..

இந்த அளவுக்கு அண்ணியின் மனம் பாதிக்குமானால்.. அப்படியொரு ஏற்றதாழ்வை குடும்பத்தில் உண்டு பண்ணும் பெரிய இடத்து சம்பந்தம் வேண்டாம் என்ற முடிவுக்கு அவர் வந்தார்.. அந்த முடிவைச் சொல்ல குற்றாலத்துக்கும் போனார்.. அவர் போன சமயத்தில் கருணாவின் அப்பா வீட்டில் இல்லை.. திருமண அழைப்பிதழ்களை விநியோகிக்கப் போய் விட்டாரென்று கருணா முகம் சிவக்கச் சொன்னாள்.. தான் வந்த விவரத்தை எப்படிச் சொல்வது என்று அவர் தடுமாறிய போது அவள் அவரை சாப்பிட அழைத்தாள்..

"உங்க அப்பா வந்து விடட்டும்.." அவள் முகம் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்தபடி அவர் சொன்னார்..

கருணா மெலிதான கொழுசொலியுடன் அவரருகே வந்தாள்.. அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் வாசனையில் அவர் கவரப்பட்டார்.. அந்த ஹாலே ரம்யமயமானதாக அவருக்குத் தோன்றியது... இது நிலைக்கப் போவதில்லை என்பதில் அவருக்குள் பெருமூச்சு எழுந்தது.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்..

"ஃபார்மாலிட்டியெல்லாம் எதுக்குங்க.. எனக்கு அம்மா இல்லை.. அவங்க இருந்திருந்தா.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவரை நானே உபசரிக்கனும்கிற அவசியம் எனக்கு வந்திருக்காது.."

அவளின் குரல் தழதழத்தது.. தாயில்லாப் பெண்ணாக அவள் படும் துயரத்தைக் காண அவருக்கு விசனமாக இருந்தது.. அவளின் மன உணர்வுகளை அவரிடம் வெளிப்படுத்தும் அவளின் உரிமையுணர்வில்.. இதைக் கலைக்க வேண்டுமே என்று அவர் மனம் பதைத்தார்..

"அப்பாவும் வீட்டில் இல்லை.. இப்பன்னு இல்லை.. எப்பவுமே அவருக்கு வீட்டிலிருக்க நேரமிருக்காது.. வேலை.. வேலைன்னு அலைஞ்சுதான் படுத்த படுக்கையா ஆனாரு.. இப்பக் கல்யாணவேலை வந்ததும் யார் சொல்லியும் கேட்காம தானே இன்விடேசன் கொடுக்கனும்னு போயிருக்காரு.."

கவலையுடன் அவள் சொன்னபோது.. அந்தக் கவலையை பகிர்ந்து கொள்ளும் உரிமையுடன் அவரில்லையே என்று அவர்மனம் குற்ற உணர்வைக் கொண்டது.. துன்பம் தீர்க்க தோள் தேடும் தவிப்பு அவள் வார்த்தைகளில் தொனித்தது.. அவளைத் தோள் தாங்க முடியாத தவிப்பு அவர் மனதில் மையம் கொண்டது..

"வேற வழியில்லங்க.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவரை நான்தான் உபசரிச்சாகனும்.. வேலையாள்களை விட்டுக் கவனிக்கச் சொன்னா அது மரியாதையாய் இருக்காது.. ப்ளீஸ்.. நீங்க எப்ப சாப்பிட்டிங்களோ.. சாப்பிட வாங்களேன்.."

அவள் குரல் இறைஞ்சலுடன் ஒலித்தது.. சுதாகரன் முள்ளின் மீது அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தார்.. இப்படி நேரும் என்றும் அவர் நினைத்துப் பார்த்திருக்க வில்லை.. நினைத்துப் பார்க்காததெல்லாம் நடப்பதுதானே வாழ்க்கை..? அவளை மறுக்க வந்திருப்பவருக்கு அவள் விருந்து வைக்க அழைக்கிறாள்..

“ப்ளீஸ்.. என்னை ஃபோர்ஸ் பண்ணாதீங்க.. உங்க அப்பாவந்திரட்டும்.. அதுக்குப் பின்னாலே பார்த்துக்கலாம்..”

தர்மசங்கடம் அதிகரித்ததில் அவர் சுள்ளென்று பேசிவிட.. அவள் முகம் வாடினாள்.. அதில் அவர் மனம் ரணமானது.. மென்மையான அந்தப் பெண்ணின் முகவாட்டத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.. இதில் அவர் சொல்லப் போகும் விவரத்தில் துடித்துப் போகப்போகும் அவள் முக வாட்டத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியுமா..?

‘இப்படியும் ஒரு விதி எனக்கு வந்திருச்சே..’ அவர் நொந்து போனார்..

கருணா.. படபடக்கும் இமைகளோடு அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவள் இதழ்கள் துடித்தன..

“யாரோ போல பேசறிங்களே..” மனத்தாங்கலுடன் சொன்னாள்..

“கல்யாணம் ஆகிற வரைக்கும் நான் யாரோதாங்க..” என்றார் அவர்..

“நான் அப்படி நினைக்கலைங்க..” மெல்லிய குரலில் அவள் பேசினாள்..

“என்னைக்கு உங்க போட்டோவை அப்பா என் கையில கொடுத்து இவர்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவர்ன்னு சொன்னாரோ.. அன்னையில இருந்து உங்களைத்தான் என் ஹஸ்பெண்டா நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்... தாலி கட்டினாத்தான் உறவுன்னு நீங்க சொல்கிறிங்க... அப்படியில்லைங்க.. தாலி கட்டாமலே நீங்க எனக்கு உறவுதான்..”

“கருணா..”

சுதாகரன் மலைத்து விட்டார்.. அவரைக் கணவனாக மனதில் வரித்து விட்டவளிடம் கல்யாணம் நடக்காது என்று எப்படி அவர் கூறுவார்..?

“இது தப்பு கருணா.. ஒருவேளை நமக்குக் கல்யாணம் நடக்காதுன்னு ஆகிவிட்டா..?”

அவர் சொல்லி முடிக்கு முன்னால் அவர் வாயை அவளின் தளிர்கரம் மூடிவிட்டது.. அதில் உணர்ந்த நடுக்கத்தை அவர் இன்றளவும் மறக்கவில்லை..

“அப்படி ஆகிட்டா.. அதுக்குப் பின்னாலே நான் உயிரோடு இருக்க மாட்டேன்...”

திடமான அவளின் குரலில் அவரின் திடம் கரைந்தோடி விட்டது.. சொல்லப் போனதை.. சொல்லாமலே அவர் சென்னைக்குத் திரும்பி விட்டார்.. மாலதியைச் சமாதானப் படுத்த ஆன மட்டும் முயன்று பார்த்தார்.. அவள் பிடித்த பிடி.. உடும்புப்பிடியாய்.. தன் பிடிவாதத்தைக் கைவிட மறுத்து விட்டாள்.. தமையனிடம் தன் மனதில் உள்ளதைக் கொட்டிக் கவிழ்த்து விட்டார் சுதாகரன்..

“என்னண்ணா செய்யட்டும்..? என்னை நேரில பார்க்காமலே.. நான்தான் புருசன்னு அவ வாழ்ந்துக்கிட்டு இருக்கா.. அண்ணி அதைப் புரிஞ்சுக்காம அவ பணத்துக்காகத்தான் அவளை நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு எதிரியைப் பார்க்கிறதைப் போல என்னைப் பார்க்கிறாங்க.. இல்லைண்ணா.. அவ பணத்துக்கு மத்தியிலே பாசத்தைத் தேடி தனிமையிலே நிற்கிறா.. எப்படிண்ணா அவளை விடறது..?”

“விடாதே.. இறுக்கிப் பிடிச்சுக்க...”

மருகிய தம்பியைக் கட்டியணைத்து உற்சாக மூட்டினார் பாஸ்கரன்..

“அண்ணிக்கென்னடா... கொஞ்ச நாளானா சரியாகிருவா.. கருணா குணமான பொண்ணு.. உன் அண்ணியின் மனசை மாத்திருவா.. பாரேன்..”

மாறவில்லை.. மாலதியின் மனம் மாறவேயில்லை.. அவள் சுதாகரனின் திருமணத்தில் மூன்றாம் மனுசி போல கலந்து கொண்டாள்.. அவ்வளவுதான்.. மற்றபடி அந்தத் திருமணத்தில் முன்னால் நிற்க மறுத்து விட்டாள்.. அக்கா.. அக்கா.. என்று அவளையே சுற்றி வந்த கருணாவுடன் முகம் கொடுத்தும் அவள் பேசவில்லை..

"இன்னைக்கு புதுப்பொண்ணு.. புருசன் வீட்டுச் சொந்தமெல்லாம் அவளுக்குப் பெரிசாத் தோணும்.. நாளைக்கு பழைய பொண்ணா மாறுவாள்ல.. அப்ப அவளோட பணமும்.. பவிசும் ஞாபகத்துக்கு வரும்.. இன்னைக்கு அவ உயரத்திலே வைக்கிறான்னு உச்சாணிக் கொம்பிலே போய் உட்கார்ந்துட்டா.. நாளைக்கே அவ தொபுகடீர்ன்னு போடறப்ப அடி வாங்கியாகனும்.. அதுக்கு நான் தயாரில்ல.. உங்க தம்பி பெண்டாட்டி எனக்கு பகையுமில்ல.. அதே சமயம் உறவுமில்ல.."

தாயினும் சாலப் பரிந்து கொழுந்தனை வளர்த்தவள்.. தாமரை இலைத் தண்ணீராய் விலகி விட்டாள்.. அந்தக் காயம் சுதாகரனின் மனதில் ஆறாமல் இருந்தது.. அதன் வலியைப் பற்றி யோசிக்க முடியாமல் கல்யாணம் முடிந்த சில தினங்களிலேயே கருணாவின் தந்தை காலமாகி விட்டார்.. எதைப் பற்றியும் யோசிக்க முடியாமல் கருணா துக்கத்துடன் சரிந்துவிட.. அவளையும்.. மற்ற அனைத்துப் பொறுப்புக்களையும் பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார் சுதாகரன்..

காலப் போக்கில் சாய் சரத் பிறந்தான்.. அவர் அப்பாவாக ஆனார்.. வருடத்துக்கு ஒருமுறையாவது குடும்பத்துடன் சென்னைக்கு வருவார்.. கருணா வந்தனாவிடமும்.. அஞ்சனாவிடமும் அன்பைப் பொழிவாள்.. சாய்சரத் அவர்களிடம் அக்கா.. அக்கா என்று ஒட்டிக் கொள்வான்.. மாலதியின் பாராமுகத்தை பொருட் படுத்தாமல் அவர்கள் இருந்து விட்டுப் போவார்கள்..

வந்தனாவுக்கும்.. அஞ்சனாவுக்கும் இடையில் நான்கு வயது வித்தியாசம் இருந்தது.. எப்போதுமே சுதாகரனிடம் அதிகமாக ஒட்டிக் கொள்பவள் வந்தனாதான்.. அஞ்சனா மாலதியின் நிழலாக இருப்பவள்.. குடும்பத்தின் மூத்த குழந்தை என்பதால் சுதாகரன் வந்தனாவை கீழே விட்டதில்லை.. அவருக்குத் திருமணம் ஆனபோது.. வந்தனாவுக்கு பதினொரு வயது.. அஞ்சனாவுக்கு ஏழு வயது.. சுதாகரனின் திருமணத்தில் அங்கும் இங்கும் ஓடி அந்தத் திருமணத்தையே களை கட்டவைத்தவள் வந்தனாதான்.. கருணாவுக்கு இன்றும் அந்த நினைவு உண்டு.. அதற்குப் பின்னால் வந்த அத்தனை கோடை விடுமுறைகளையும் வந்தனா சுதாகரனின் குடும்பத்தோடு குற்றாலத்தில்தான் கழித்திருக்கிறாள்.. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மாலதி எத்தனையோ முனைப்பாக இருப்பாள்.. கடைசி நிமிடத்தில் காலை வாரிவிட்டு வந்தனா குற்றாலத்திற்கு பயணமாகி விடுவாள்..

"உங்க அப்பா ரயில்வேயில ஆபிசரா இருக்கார்.. ஆல்இன்டியாவிலே எங்கே வேணும்னாலும் டூர் போயிட்டு வரலாம்.. பர்ஸ்ட் கிளாஸ் ஏஸி கோச்.. இதை யூஸ் பண்ணிக்கிட்டு.. வருசத்துக்கு ஒரு ஊரைப் பார்க்கிறதை விட்டுட்டுத் திரும்பத்திரும்ப அந்த மலைக்காட்டுக்கே போறேங்கறியே..."

"அந்த மலைக்காட்டிலதானேம்மா.. சித்தப்பா இருக்காரு.. கூடவே சித்தியும் சரத்தும் இருக்காங்க..?"

இப்படிச் சொல்கிறவளை என்ன செய்வது என்று வெறியாகிப் போவாள் மாலதி.. அவளை எதுவும் செய்ய விடாமல் பாஸ்கரன் மகளுக்குத் துணையாக நிற்பார்.. அவரை எதிர்க்க முடியாமல் வீட்டில் உள்ள பாத்திரங்களை உடைத்து விட்டு மகளை குற்றாலத்துக்கு அனுப்பி வைப்பாள் மாலதி...

இப்படியாகத்தானே வந்தனா குற்றாலம் போக ரயிலில் கிளம்பி.. கதிரவன் மோதி விழுந்து வைத்தான்...

# 7

**வ**ந்தனா நகத்தைக் கடித்துத் துப்ப விரும்பினாள்.. அதிகமாக டென்சன் வரும் போதெல்லாம் அவள் அதைத்தான் செய்வாள்.. அப்போதும் அதைச் செய்ய விரும்பித்தான் கைவிரல் நகத்தைக் கடிக்கப் போனாள்.. போனவள் அவர் வேலையைப் பார்த்துத் தொலைக்க வேண்டியதுதானே..? அவனை யார் பார்க்கச் சொன்னது..?

கனகாரியமாக இவள் அவனைப் பார்த்து வைக்க.. அவன் முறைத்த முறைப்பில் சட்டென்று கையை இறுக்கிக் கொண்டாள்..

“நகம் கடிப்பியா..?” அவன் முகத்தைச் சுளித்தான்..

‘என் நகம்.. அப்படித்தான் நான் கடிப்பேன்.. போடா.. டேய்..’ என்று சொல்லத்தான் அவள் நினைத்தாள்..

ஆனால் அடுத்து அவன் சொன்ன வார்த்தைகள் அந்த நினைவிற்கு டாட்டா.. பை.. பை.. சொல்லி அனுப்பி வைத்து விட்டன..

“வாட் எ பேடு ஹேபிட்..!”

அருவெறுப்பாய் அவன் தோள்களைக் குலுக்கிய குலுப்பில்.. அவருக்கு நகம் கடிக்கும் ஆசை அற்றுப் போய் விட்டது.. மாறாக அப்படியொரு பழக்கம் அவருக்கு இல்லவே இல்லையென்று அவனிடம் உறுதிப் படுத்த அவள் முனைந்தாள்..

“நகமா..? நானா..? ஹ...! எப்படி நீங்க என்னைப் பார்த்து இப்படிக் கேட்கலாம்..? நான் நகம் கடிக்கிறதை நீங்க பார்த்தீங்களா..?”

அவன் அவளை ஒரு மார்க்கமாக பார்த்த விதத்தில் அவளின் படபடப்பைப் புரிந்து கொண்ட கேலி இருந்தது..

‘என்ன சொன்னாலும் அசர மாட்டேங்கிறானே..’

அவள் அவன் முகத்தைப் பார்க்கக்கூடாது என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டு கண்ணாடி ஜன்னலில் முகம் பதித்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

ஆனாலும் அவளின் ஓரவிழிப்பார்வை அவன் என்ன செய்கிறான் என்று கண்காணித்ததில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.. மலையளவு கனம் இருந்த மனது எவ்வாறு இறகைவிட லேசானதாக மாறிப் போனது என்று அவனுக்கு வியப்பாக இருந்தது..

அதற்குக் காரணம் அவனுக்கு எதிர் சீட்டில் அமர்ந்திருக்கும் அந்தச் சிறிய பெண்தான் என்பதில் அவன் வியப்பு அதிகரித்தது.. அவளின் குழந்தைத்தனமான நடவடிக்கைகள் அவனை ஈர்ப்பதை அவன் உணர்ந்தான்.. நிதானமாக அவன் பார்வை அவள்மீது படிந்து உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அவள் நுனி மூக்கில் வாகாக அமர்ந்து கொள்ள அவள் உக்கிரமானாள்..

‘இவன் என்ன என்னைப் பொண்ணுப் பாக்க வந்திருக்கிற மாப்பிள்ளைன்னு நினைச்சுக்கிட்டானா..?’

அவள் கடந்து போன ஊர்களையும்.. மின் கம்பங்களையும் அம்போ என விட்டு விட்டு அவன் பக்கமாக திரும்பி உட்கார்ந்தாள்..

வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வருவதைப் போல அவள் திரும்பி அமர்ந்த தோரணையில் அவன் அலட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்து புருவங்களை உயர்த்தி வைத்தான்.. அவளது கோபம் அபரிதமான வேகத்தில் அதிகரித்தது..

"என்ன..?"

இன்னும் பல 'என்ன..?'க்களை அவள் கேட்க விரும்பினாள்தான்.. கோபாவேசத்தில் அந்த தொடர் 'என்ன?'க்கள் அவள் வாயை பதுங்கு குழியாய் பாவித்து பதுங்கிக் கொண்டன.. அதனால் ஒரேயொரு ஒற்றை 'என்ன..?' தான் அவளது தொண்டைக் குழியில் இருந்து வெளியே வந்தது..

அவனுக்கு அவளது கோபத்தைப் பார்க்கப் பிடித்திருந்தது.. அவளின் செய்லகளில் பிரதிபலித்த குழந்தைத்தனம் அவன் மனதின் உல்லாசத்தை அதிகரித்து வைத்தது.. அவன் கண்களில் சுவராஸ்யம் குடி கொண்டது.. ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தபடி..

"ம்ம்ம்..?" என்று புருவங்களை உயர்த்தினான்..

"என்னன்னா என்னன்னு தெரியாதா..? என்ன..?"

இருந்தாலும் இவள் இவ்வளவு தெளிவாகப் பேசக் கூடாது என்று அவனுக்கு தோன்றி வைத்தது.. அவளைப் போன்ற அழகான யுவதியிடம் இதுபோன்ற குழந்தைத்தனம் ஒளிந்திருந்ததில் அவளின் வசீகரம் அதிகரிப்பதை அவன் உணர்ந்தான்..

"என்னன்னா எனக்குத் தெரியும்..? உனக்குத் தெரியுமா..?"

"தெரியாமத்தான் உங்ககிட்டக் கேட்டேனா..?"

"தெரிஞ்சா கேட்ட...?"

வியப்பாக அவன் கேட்டு வைத்ததில் அவளுக்கு கொலைவெறி உண்டானது..

"ஹலோ.. உங்க மனசில என்னதான் நினைச்சுக் கிட்டு இருக்கீங்க..? நானும் அப்போப் பிடிச்சுப் பாக்கறேன்.. ரயிலோட ஓடி வந்தப்பவே என்னைப் பாத்து ஒரு மார்க்கமா முழிச்சு வைச்சீங்க.."

"ஈஸிட்..?"

அவன் ஆச்சரியமாக கேட்டு வைத்து அவளது கோபத்தின் வேகத்தைக் கூட்டி வைத்தான்..

"என்ன ஈஸிட்..? நீங்க குற்றாலத்துக்கு போக வந்தீங்களா.. இல்லை.. கூட ஜர்ன் பண்ற அழகான பெண்ணை சைட் அடிக்க வந்தீங்களா..?"

"அழகான பெண்ணா..?"

அவன் தேடுவதைப் போல பாவனை செய்ய ஆரம்பிப்பதற்குள்..

"போதும்.." என்று கையமர்த்தினாள் வந்தனா..

"உங்க ஸோலோ டிராமாவைப் பார்க்க நான் ரெடியாயில்ல... அழகான பொண்ணு எங்கேன்னு சார் உத்து.. உத்துப் பாத்துத் தேடறிங்களாக்கும்..? இதைப் போல சீனை எத்தனை கதைகளில படிச்சிருப்பேன்.. என்கிட்டேயேவா..?"

"ஓ...."

அவன் அதற்கும் உதடுகளைக் குவித்து அவளை சுவராஸ்யமாக பார்த்து அவளின் எரிச்சலைக் கூட்டி வைத்தான்..

"என்ன 'ஓ..'? எதுக்கெடுத்தாலும் சினிமா ஹீரோ போல பிலிம் காட்டியாகிறது.." பொரிந்தவளிடம்.. அவன்..

"நான் ஹீரோவைப் போலவா இருக்கேன்..?" என்று கேட்டு கோப அனலை விசிறி வைத்தான்..

"அப்படியெல்லாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துராதீங்க.. நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்குமாம்.."

"யார் பிழைப்பை..?"

“என் பிழைப்பை உங்க நினைப்பு ஏன் சார் டிஸ்டர்ப் பண்ணி வைக்கப் போகுது..? உங்க நினைப்பு உங்க பிழைப்பைத்தான் பதம் பார்க்கும்..”

“ஐ.. ஸீ…”

அவன் தாடையைத் தடவியபடி அவளைக் குறுகுறுவென பார்க்க ஆரம்பித்ததில் ‘இதுதான் இவனோட ‘ஐ..ஸீ…’யா..?’ என்ற வெகுண்டாள் வந்தனா..

“எனக்கென்னவோ உங்களைப் பார்த்தா ரேட்டோர ரோமியோவைப் போலவே தோணுது..”

அவனை வெறுப்பேற்ற வேண்டுமென்று அவள் சொல்லி வைத்த விமரிசனத்திற்கு அவன் அலட்டிக் கொள்ளவே இல்லை.. முகத்தில் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல்..

“அப்புறம்..?” என்று கேட்டு வைத்தான்..

‘இவனென்ன ஜடமா..?’

அவனின் குறுகுறுத்த பார்வை அப்படியில்லை யென்பதை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது.. ரேஸர் போல அவளைத் துளைத்து உள்ளிறங்கத் துடித்த அவன் பார்வையில் ‘இவனா ஜடம்..?’ என்று தன்னைத் தானே அவள் கேட்டுக் கொண்டாள்..

இவன் பார்க்கும் பார்வைக்கு ஜடத்துக்குக் கூட லஜ்ஜை வந்து விடுமே..

“இங்கேயென்ன கதையா சொல்லிக்கிட்டு இருக்கேன்..?” வந்தனா எரிந்து விழுந்தாள்..

“இல்லையா..?” அவன் ஏமாற்றம்போல கேட்டு வைத்தான்..

“என்னவோ பொண்ணுப் பாக்க வந்திருக்கிற மாப்பிள்ளைப் போல கால் மேலே கால் போட்டுக்கிட்டு ‘ஷோ’ காண்பிச்சுக்கிட்டு எதிர்சீட்டில இருக்கிற பெண்ணை சைட் அடிக்கறிங்களே.. ஆனாலும் உங்களுக்கு இத்தனை தைரியம் ஆகாது சார்..”

“அப்படி தைரியம் வந்து உன்கிட்டக் ‘கோள்’ சொல்லிச்சா..?”

“வாயிருந்தா சொல்லியிருக்கும்..”

“அதுக்கு இல்லைன்னா.. உன் வாயைக் கொஞ்சம் கடன் கொடுக்க வேண்டியதுதானே..”

“சார் சொல்லட்டும்ன்னுதான் காத்திருந்தேன்.. சொல்லிட்டிங்கல்ல.. இனி தைரியத்துக்கு தைரியம் கொடுத்து உங்களை விட்டு விளாசச் சொல்லி அனுப்பி வைக்கறேன்..”

“யாரு..? நீ..? தைரியத்துக்கே தைரியம் கொடுப்ப..?”

நம்பாத கேலியுடன் அவன் கேட்டு வைக்க.. இவன் என்ன தைரியத்தை ஒட்டு மொத்தமா பட்டாப் போட்டு விலைக்கு வாங்கி வைத்திருக்கிறானா.. என்று அவள் சிலிர்த்தாள்..

“ஏனாம்..? என்னைப் பார்த்தா பயந்தாக்குளியப் போலவா இருக்கு..?”

“இல்லைன்னா சொல்றே..? உன் தைரியத்தைத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே நான் பார்த்தேனே…”

அவனுடன் சண்டை போட ஆரம்பித்தவள் சர்வ ஜாக்கிரதையாய் தள்ளி நின்று கொண்டதை நினைத்து அவன் சிரிக்க ஆரம்பித்ததில் அவள் முகம் சிவந்து போனது..

“என்ன சார் செய்கிறது..? உங்களைப் போல ரௌடியைப் பார்த்தா என்னோட தைரியம் சொல்லாம கொள்ளாம ஓடிப் போயிடறதே..” அவள் அலுத்துக் கொள்ள.. அவன்..

“யார்கூட ஓடிப் போச்சாம்..?” என்று வம்பு கேட்க ஆரம்பித்தான்..

‘தேவைதான் எனக்கு..’

வந்தனாவுக்கு ரயிலின் கம்பார்ட்மெண்டில் தலையை முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

இப்படியா ஒருவன் வாயைத் திறக்க விடாமல் வளைத்துக்கட்டி அடிப்பான்..?

அவன் அவளை ஒரு மார்க்கமாக பார்த்துக் கொண்டிருந்ததைப் போல இப்போது அவள் அவனை ஒரு மார்க்கமாக பார்க்க ஆரம்பித்தாள்.. அந்தப் பார்வையில் அவனது உல்லாசம் கூடியதில் அவள் மனதுக்குள் எச்சரிக்கை மணியொலித்தது.. அவள் அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டு..

"உங்க தைரியத்தை இழுத்துக்கிட்டு ஓடிப் போகலையாம் சார்.." என்று சொன்னாள்..

"ஓ.." அவன் கண்களின் மின்னலில் அவளது கண்கள் கூசின.. இவன் இப்படிப் பார்க்காமலிருந்தால் தேவலை என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

அதை யார் அவனிடம் சொல்வது..? என்னவோ மன்மதனின் மறு அவதாரத்தைப் போலத் தன்னை நினைத்துக் கொண்டு எதிரில் அமர்ந்திருக்கும் பருவப் பெண்ணை உற்று உற்றுப் பார்த்துக் கடலை போட்டுக் கொண்டிருப்பவனிடம் 'இப்படி என்னைப் பார்க்காதே..' என்று சொல்லி வைத்தால் அவன் உடனே 'எப்படி உன்னைப் பார்த்தேன்..' என்று கேட்டு வைத்துத் தொலைப்பானே...

'என்னவோ போடி வந்தனா.. உனக்குன்னு எங்கேயிருந்துதான் கிளம்பி வந்து சேருகிறானுகளோ.. குற்றாலத்துக்குப் போகிறதுக்குள்ள இவன் உன்னை பைத்தியம் பிடிக்க வைச்சுட்டுத்தான் மறுவேலை பார்ப்பான் போல..'

அவளை பார்வையிட்டால் பார்வையிட்டுப் போகிறான் என்று விட்டுத் தொலைத்திருக்க வேண்டுமோ என்ற காலங்கடந்த ஞானோதயம் அவளுக்கு ஏற்பட்டது..

என்னவோ செய்து தொலை என்ற எரிச்சலுடன் அவள் ஜன்னல் பக்கம் திரும்ப முனைந்த போது அதற்கு விடாமல் அவன் தடுப்புச் சுவரைப் போட்டு வைத்தான்..

"உன் தைரியம் எப்படியோ எனக்குத் தெரியாது.. ஆனா என் தைரியம் இழுத்துக்கிட்டு ஓடுகிறதா இருந்தா உன் தைரியத்தை இழுத்துக்கிட்டு என்னிடம்தான் ஓடி வரும்..."

"என்னது..?"

"எதுக்கு இத்தனை அதிர்ச்சி..? தோணிச்சு சொன்னேன்.. அதைவிடு.."

அவன் சொல்கிறதையெல்லாம் உணக்கையாகச் சொல்லிவிட்டு வேறு எதையோ பேச ஆயத்தமாக அவள் கோபத்தில் பேச்சு வராமல் தவித்துப் போனாள்..

விட்டு விடுவதா..? எப்படி..? விட்டு விடுவதைப் போன்ற வார்த்தைகளையா அவன் சொன்னான்..?

"எப்படி இப்படி நீங்க சொல்லலாம்..?"

மூச்சிரைக்க அவள் கேட்டதில் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

"எதுக்கு இத்தனெ நெர்வர்ஸ ஆகிற..? நானென்ன.. நானா உன்னை இழுத்துக்கிட்டு ஓடி வருவேன்னு சொன்னேன்..? என் தைரியம்தான் உன் தைரியத்தை இழுத்துக்கிட்டு வரும்ன்னு சொன்னேன்.. அதில ஏதும் குற்றமிருக்கா நீயே சொல்லு..."

பெரிய நியாயவாதியைப் போல அவன் நியாயத்தைப் பிளந்து கட்டியதில் இவனைப் பேச்சில் வெல்ல முடியாதா என்ற வெறி அவளுள் கிளர்ந்தது.. அவனது தோணையையும் தைரியத்தையும் பார்த்தால் வேறு எதிலும் வெல்ல முடியாதவனாக அவன் அவளுக்குத் தோன்றினான்..

அதுவரையில் சொல்போரில் வந்தனாவை எவரும் வென்றதாக சரித்திரம் இல்லை.. அவன் அந்தச் சரித்திரத்தை முறியடித்து விட்டு உட்கார்ந்திருந்ததில் எதையாவது தூக்கிப் போட்டு அவன் மண்டையை உடைத்தால் என்ன என்ற வேகம் அவளுக்குள் வந்தது..

அவள் அவன் மண்டையை உடைக்க நினைத்து முடிப்பதற்குள் அவன் அவள் மூக்கை உடைத்து வைத்தான்..

"அதோட.. நீயே பாப்பா..! உன்னை இழுத்துக்கிட்டு ஓடனும்னு எந்த மடையனாவது நினைப்பானா..? ஸோ.. அந்த பயமே உனக்கு வேணாம்..."

அவன் கண்கள் அந்த பயத்தை உறுதிபடுத்தின.. விட்டால் அவளை அவன் ஸ்வாஹா செய்து விடுபவனைப் போல பார்த்து வைத்ததில் அவள் அவனைப் பார்க்கப் பயந்து ஜன்னல் பக்கமாக திரும்பிக் கொண்டாள்..

அவளுடைய கோபத்தையும்.. பயத்தையும் அவன் ரசித்தான்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் உணர்வில் அவள் அவன் பக்கமாக திரும்பியே பார்க்காமல் பதுமை போல உட்கார்ந்திருந்தாள்.. ஓரக் கண்ணால் அவனைப் பார்ப்பதும்.. அவனது விலகாத பார்வையில் சட்டென்று முகம் சிவந்து பார்வையைத் திருப்பிக் கொள்வதுமாக அவனுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்..

அவனுக்கு அந்த விளையாட்டைப் பிடித்திருந்தது... கதிரவன் அவனுடைய அனைத்து அடையாளங்களையும் மறந்து விட்டு ஒரு உல்லாசியாக ஆகிவிட்டான்..

அவளையே பார்ப்பதும்.. அவன் அவளைப் பார்க்கிறானா என்று வேவு பார்க்கத் திருட்டுத்தனமாக திரும்பும் அவளது பார்வையைச் சந்திக்கும் அந்த நொடியில் கண்களில் மின்வெட்டலுடன் புருவங்களை உயர்த்துவதுமாக இருந்தான்.. அவள் அரண்டு போய் ஜன்னல் வழியாக வெளியே பார்க்க ஆரம்பித்ததில் அவனுக்கு உற்சாகம் கிளம்பிவிட்டது..

"எங்கே போகிற..?" என்று கேட்டான்..

"எங்கேயோ.." வெடுக்கென்ற பதில் வந்தது..

"கால் போன போக்கில போகிறயோ..?"

"அது நீங்களா இருக்கும்.. உங்களைப் பாத்தாத்தான் மனம் போன போக்கில போகிறவரைப் போலத் தோணுது.."

"இன்னும் என்ன என்ன தோணுது..?"

அவன் குறும்பாக கேட்டதில் அவள் அவனை முறைக்கிறேன் பேர்வழியென்று பார்த்து வைத்து விட்டாள்.. அவன் கண்களின் குறும் சிரிப்பில் அவளின் முறைப்பு ஓடிவிட.. அவசரமாக முகத்தை திருப்பிக் கொண்டாள்..

"நான் குற்றாலத்துக்குப் போறேன்.."

"ஓஹோ.. மறக்காம எழுமிச்சை பழத்தை கையில பிடிச்சுக்கிட்டிங்களா..? உங்களைப் பாத்தா அது ரொம்பத் தேவையா இருக்கும் போலத் தெரியுது.."

"அடடா..! மறந்துட்டேனே.. அதனால் என்ன கெட்டுப் போச்சு..? நீ தேய்க்க கொண்டு போகிற கூடைப் பழத்திலே ஒரு பழத்தைக் கடனாக் கேட்டாக் கொடுக்க மாட்டியா..?"

"ஸ்ஸ்ஸ்..."

எந்தப் பக்கம் போனாலும்.. அந்தப் பக்கம் வந்து வாயை அடைக்கும் அவனை ஜெயிக்கவே முடியாதா என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது.. ஒருதடவையாவது அவனைத் தோற்கடித்து விட வேண்டுமென்று அவள் விரும்பினாள்.. அதுநாள்வரை எவரிடமும் தோற்காத அவளைத்தான் அவன் தோற்கடித்துக் கொண்டிருந்தானே யொழிய.. அவன் அவளிடம் தோற்பதாக இல்லை...

இப்படியொருவனைக் கூட வைத்துக் கொண்டு குற்றாலத்திற்குப் பயணிப்பதற்குப் பதிலாக ரயிலின் சங்கிலியை இழுத்துப் பிடித்து நிறுத்திவிட்டு கீழே இறங்கி விடுவது சாலச்சிறந்தது என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ரயில் நின்று விட்டது..

# 8

'இது எந்த யட்சிணியின் வேலை..'

சந்தேகத்தோடு ரயிலின் சங்கிலியை வந்தனா உற்று உற்றுப் பார்த்தாள்.. அது இருக்க வேண்டிய இடத்திலே ஹாயாக இருந்தது.. எந்த ஸ்டேசனில் நிற்கிறது என்று ஜன்னல் வழி வெளியே பார்த்தால் அடர்ந்த வனப்பகுதிதான் தெரிந்தது..

"இங்கே எந்த ஊர் இருக்கு..?"

வந்தனாவுக்குப் புரியவில்லை.. அவளும் பலமுறை குற்றாலத்திற்குப் போய் திரும்பியிருக்கிறாள்.. ஒருதரம் கூட இதுபோன்ற அடர்ந்த வனப்பகுதியில் ரயில் நின்று கிளம்பியதில்லை..

அவள் ஜன்னல் கண்ணாடியில் முகம் பதிய வெளியே உற்றுப் பார்த்தாள்.. ஆள் நடமாட்டமே தெரியவில்லை..

"ஸ்டேசனையே காணோமே.."

அவளின் கவலையில் அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது..

"இருந்தாத்தானே வரும்..?" என்றான்..

"அப்படின்னா..?"

"என்ன ரீசன்னு தெரியலை.. டிரெயின் இங்கே நின்னிருக்கு.. இருபோய் விசாரிச்சுட்டு வர்றேன்.."

என்னவோ அவனும் அவளும் ஒரு குடும்பம் போல அவன் பேசிய விதத்தில் அவள் அவனை முறைத்தாள்..

"எனக்கென்ன வாய் இல்லையா..?"

"இல்லைன்னு இப்பப் பிறந்த குழந்தைகூடச் சொல்லாது.. அதுதான் ஊருபட்ட வாய் இருக்கே.."

"தெரியுதில்ல..? எனக்குத் தேவைன்னா நான் போய் விசாரிச்சுக்குவேன்.."

"எங்கே போய் விசாரிப்ப..? காட்டுக்குள்ளேயா..?"

அவன் காட்டிய அடர்ந்த வனப்பகுதி அவளுக்கு அச்சத்தைத் தந்தது.. அவனுடனான மோதலை வேறொரு நாளுக்கு தள்ளி வைப்பதுதான் புத்திசாலித்தனம் என்று அவளுடைய புத்தி அவளுக்கு அறிவுறுத்தியதில் அவள் மறுத்துப் பேசாமல் வாய் மூடிக் கொண்டாள்..

கதிரவன் எழுந்திருக்கப் போனான்.. அதற்குள் அங்கே டி.டி.ஆர் வந்துவிட.. அவரிடம் டிக்கெட்டைக் காட்டியபடியே விசாரித்தான்..

"தண்டவாளம் உடைஞ்சிருக்காம்.. சரி பண்ண டிரெயினை நிறுத்தியிருக்காங்க.."

அவர் வெகு சாதாரணமாக சொல்லியபடி டிக்கெட்டை பார்வையிட ஆரம்பித்தாள்.. வந்தனாவுக்கு குலை நடுங்கியது..

"எப்படித் தெரிஞ்சதாம்..?" என்று கேட்டாள்..

"டிரைவருக்கு இன்பர்ம் பண்ணியிருக்காங்கம்மா.." என்றார் டி.டி.ஆர்..

"ஒருவேளை இன்பர்மேசன் வராம இருந்திருந்தா..?" வந்தனாவின் குரல் கிணற்றுக்குள் இருந்து வந்தது..

"நடக்காததைப் பத்தி ஏன் பேசறிங்க..? நீங்க மட்டுமா இந்த டிரெயினில் டிராவல் பண்றிங்க..? நான் இருக்கேன்.. இன்னும் நிறைய பேசன்சர்ஸ் இருக்காங்க.. அவங்களுக்கு ஆகிறதுதானே உங்களுக்கும் ஆகப் போகுது..?"

இலகுவாக வினவிவிட்டு அவர் நகர்ந்துவிட.. அவளை அடிக்கண்ணில் வேடிக்கை பார்த்தான் கதிரவன்.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளைப் பார்த்து அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது.. முகம் சிவக்க ஜன்னல் பக்கம் பார்த்தாள்.. அந்த அடர்ந்த வனப்பகுதி அவளை அச்சுறுத்தியதில் வேறுவழியின்றி அவன் முகம் பார்த்தாள்..

அவளது பயத்தை உணர்ந்தவன் போல அவன் இமை மூடித் திறந்து அவளை அமைதிப் படுத்தினான்.. அந்தச் சூழலில் அவனின் அந்தச் செய்கை அவளுக்குத் தைரிய மூட்டியது..

ஜன்னலில் வழியே பயணிகள் டிரெயினை விட்டு இறங்கி நடமாடுவது தெரிந்தது.. அவர்கள் குழு.. குழுவாய் பிரிந்து நின்று பேச ஆரம்பித்ததில் கதிரவன்..

"இரு.. இதோ வந்திடறேன்.." என்று அவளிடம் சொல்லிவிட்டுப் போனான்..

ஏனோ.. அவனில்லாமல் அங்கே உட்கார்ந்திருக்க வந்தனாவுக்கு பயமாக இருந்தது.. அவன் பின்னாடியே போகலாமென்றால்.. அடர்ந்த காட்டுப்பகுதி அதைவிட அதிகமாக அவளை பயமுறுத்தியது..

பேசாமல் செல்போனில் பாட்டுக் கேட்கலாம் என்று அவள் ஹெட்போனை காதில் மாட்டிக் கொண்டாள்.. பாட்டைக் கேட்டபடியே கண்களையும் மூடிக் கொண்டாள்.. அந்தச் சூழல் மறந்துவிட.. பாட்டில் லயித்துப்போனவளின் நாசி அதை உணர்ந்தது..

'டிரிங்க்ஸ் ஸ்மெல்...'

அவள் மட்டும் தனியாக இருக்கும் பெட்டியில் மதுவின் வாசனை எங்கிருந்து வந்தது..?

அவசரமாக விழிகளைத் திறந்தவளின் முகத்திற்கு வெகு அருகாமையில் விகாரமாக இளித்துக் கொண்டிருந்தது யாரோ ஒருவனின் முகம்..

"வீல்.." அவள் அலறிவிட்டாள்..

"அவ வாயைப் பொத்துடா.." என்ற குரல் கேட்டதில் மருட்சியுடன் சுற்றிலும் பார்த்தாள்..

அந்தக் குடிகாரனைப் போலவே இன்னும் நான்கு குடிகாரர்கள் அங்கே நின்றிருந்தார்கள்..

"மரியாதையா வெளியே போயிருங்கடா.." அவள் பயத்துடன் கத்தினாள்..

"நீயும் வா.. வெளியே போகலாம்.. பாரு.. ஒரே காடு.. யாரும் வர மாட்டாங்க... என்னடா சொல்ற..?"

எதிரே இருந்தவன் பக்கத்தில் இருந்தவனிடம் கேட்க.. அவன்

"ஆமாமாம்..." என்று தள்ளாடினான்...

வந்தனாவின் உடல் நடுங்கியது.. இதற்கு முன்னால் அவள் பயணித்த ரயில் பயணங்களில் இது போன்ற அனுபவத்தை அவள் சந்தித்ததே இல்லை.. பெரும்பாலும் பாஸ்கரன் அவளுடன் வருவார்.. தனியே வர நேர்ந்த ஒன்றிரண்டு பயணங்களில் அவள் பாதுகாப்பாகத்தான் போய் வந்திருக்கிறாள்..

அவளருகில் நின்றிருந்தவனின் மீதிருந்து வந்த மதுவின் நெடியில் அவள் மூக்கைப் பொத்தியபடி நகர்ந்தாள்..

"எங்கே கண்ணு ஓடற..?"

அவன் அவள் கையைப் பற்ற முயன்றான்..

"ச்சீ.." என்றபடி அவள் பக்கத்திலிருந்த அவளது டிராவல் பேகைத் தூக்கி அவனை அடித்தாள்..

"டேய்.. பட்சி.. துள்ளுதுடா.." மற்றொருவன் குரல் கொடுத்தான்..

"துள்ளுவதுதான் இளமைடா.. சின்னப்பட்சி.. துள்ளத்தான் செய்யும்.."

அடிவாங்கியவனுக்கு அது எறும்புக்கடி போல இருந்திருக்க வேண்டும்.. ரசித்துச் சிரித்தபடி திரும்பவும் வந்தனாவின் கை தொட வந்தான்.. என்ன செய்வதென்று தெரியாமல் வந்தனாவுக்கு மயக்கமே வந்து விட்டது.. அதற்குள் அவளை ரட்சிக்க வந்ததைப் போல கதிரவனின் குரல் கேட்டது..

"யாரு நீங்க..? இங்கே என்ன செய்கிறிங்க..?"

கடுமையாக கேட்டபடி அவன் உள்ளே வந்தான்.. வந்தனாவை இழுத்து அவன் பக்கத்தில் நிறுத்திக் கொண்டான்.. வந்தனாவோ பயந்து போனவளாக அவன் முதுகில் மறைந்து நின்று அவன் தோளைப்பற்றி முகம் புதைத்துக் கொண்டாள்..

"நீ யாரு..?" அவர்களில் ஒருவன் உறுமினான்..

"இவளோட ஹஸ்பெண்ட்.. உங்களுக்கு இங்கே என்ன வேலை..? ஒழுங்கா இடத்தக் காலி பண்றிங்களா.. இல்லை.. கையைக் காலை முறிக்கவா..?" கதிரவன் சொல்லிக்கொண்டே போக..

'இவன் என் ஹஸ்பெண்டா..?' என்று திகைத்துப் போனாள் வந்தனா..

அந்தச் சூழலில் அவளால் அதை மறுக்கவும் முடியவில்லை.. அவளைக் காக்கவந்தவன் சொல்லும் பொய்க்கு காரணம் ஏதாவது இருக்கக்கூடும் என்று அவளின் அறிவு அவள் காதுக்குள் சொல்லியது..

"தோடா... சாரு நம்ம காலைக் கையை முறிச்சுடுவாராம்டா.. எங்கே முறி.. பாக்கலாம்.."

வந்தனாவிடம் வம்பு பண்ணிக் கொண்டிருந்தவன் கிட்டே வந்தான்.. கதிரவன் விட்டான் ஒரு குத்து.. அது அவன் முகரையைப் பெயர்த்ததில் மூக்கிலிருந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்தது.. போதை கலைந்தவனாய் அவன் பின்வாங்க.. அவனுக்கு முன்னாடியே அவன் மூக்கில் ரத்தத்தைக் கண்டதும் அவனுடைய கூட்டாளிகள் பின் வாங்கி விட்டார்கள்..

அவர்களைத் துரத்தி விட்டுக் கதவை அடைத்தவன் வந்தனாவிடம் சீறினான்..

"கதவை லாக் பண்ணிக்கிட்டு உட்காருகிறதுக்கு என்ன..?"

"லாக் பண்ணினா மட்டும் கதவைத்தட்டி உள்ளே வர மாட்டானுகளா..?" அவள் ரோசத்துடன் கேட்டாள்..

"வருவானுங்கதான்... அதுக்கு நீ வழி விடனும்.. கதவை லேசாத் திறந்து பார்த்து நானில்லைன்னு தெரிஞ்சவுடனே நீ கதவை ஓங்கி மூடியிருக்கலாம்.. இன்னொன்னும் இருக்கு.. கதவு திறந்திருந்திலதான் உள்ளே டீன்-ஏஜ் வயசில ஒரு பொண்ணு உக்காந்திருக்கிறது அவனுக கண்ணில பட்டிருக்கு.. மூடியிருந்தா.. உள்ளே யாரிருக்கிறதுன்னு அவனுகளுக்குத் தெரிஞ்சிருக்காது.."

அவன் சொல்லச் சொல்ல வந்தனாவுக்கு அவளின் தவறு புரிந்தது..

"நான் பாட்டைக் கேட்டுக்கிட்டு இருந்தேன்.. அவனுக உள்ளே வந்ததைக் கவனிக்கலை.." குற்ற உணர்வுடன் சொன்னாள்..

"காட்..! ஹெட்போனை காதில மாட்டி பாட்டுக் கேட்டியா..?"

"ம்ம்ம்.. சும்மாவும் கேட்கலை.. கண்களை மூடிக்கிட்டுக் கேட்டேன்.."

"உனக்கு அறிவிருக்கா.. இல்லையா..? நாம எங்கே இருக்கோம்ன்னு பார்த்தியில்ல..? இந்தக் காட்டுக்குள்ளே டேன்ஜரஸ் ஃபெல்லோஸ் இருக்கலாம்.. இப்ப வந்தவங்க கூட டிரெயினில் டிராவல் பண்றவனுகளா இருக்க மாட்டானுகன்ன எனக்குத் தோணுது.."

"ஏன் அப்படிச் சொல்றிங்க..?"

"அவனுக மூஞ்சியப் பாத்தா வழிப்பறிக் கொள்ளைக் காரங்க மாதிரியே இருக்கானுக.. ம்ப்ச்.. இந்த இடத்தில தான் டிரெயின் நின்னு தொலைக்கனுமா..?"

"சரியாகிரும்ல்ல.."

"சரியாகிரும்.. ஆனா.. அதுக்கு நேரமாகுமாம்.. இதில வேற டிரெயினில சாப்பாடு காலிங்கிறாங்க.. ஏஸி கோச்சில் மட்டும் கிடைக்கிற சாப்பாட்டை மத்த கம்பார்ட்மெண்டில இருக்கிறவங்களும் வந்து வாங்கி சாப்பிட்டுட்டாங்க.. பசிக்குது.. பக்கத்திலே எந்த ஊருமில்லை.."

கதிரவனின் முகத்தில் பசிதெரிந்தது.. அவன் பிஸ்கெட் பாக்கெட் ஏதாவது கிடைக்குமா என்று தேடிப் பார்க்க ஆரம்பித்தான்.. ஊடே அவளை நிமிர்ந்து பார்த்து..

"நானாவது பசி தாங்குவேன்.. நீதான் பாவம்.. பசி தாங்க மாட்ட.." என்றான்..

அவள் மீதான அவனது அக்கறையில் அவள் மனம் நெகிழ்ந்தது.. குனிந்து அவளின் பேகில் இருந்து சின்னஞ்சிறு பையை வெளியே எடுத்தாள்.. இரண்டு சீட்டுகளுக்கும் மத்தியில் இருந்த உணவு வைத்துச் சாப்பிட உபயோகமாகும் தடுப்பின் மேல் அதை வைத்தாள்..

"என்ன இது..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

"நீங்க தேடும் சாப்பாடு.." என்றாள் அவள் பெருமையாக..

"ஈஸிட்..?" அவன் ஆச்சரியத்துடன் தேடுதலை விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்..

வந்தனா கொண்டு வந்திருந்த உணவு டப்பாக்களை பிரித்தாள்.. சப்பாத்தியும் கூட்டும் இருந்தன.. கூடவே தயிர்சாதம்.. உருளைக் கிழங்கு வறுவல்..

"போதுமா..?" என்றவளிடம்..

"போதும்.." என்றான் கதிரவன்..

கண்களில் பிரகாசத்துடன் அவன் மொத்த டப்பாவையும் எடுத்துக் கொள்ளப் பார்க்க.. வந்தனா குறுக்கே விழுந்து அதை கைப்பற்றினாள்..

"நினைச்சேன்..."

"என்னத்தை நினைச்ச..?"

"நீங்க படைச்சவருக்கே அல்வா கொடுக்கிற ஆள்ன்னு.. உங்களுக்குத்தான் பசிக்குமா..? எனக்குப் பசிக்காதா..?"

அவளின் கோபத்தை அவன் ரசித்தான்.. வந்தனா கையிலிருந்த உணவை இருபங்காக பிரித்து ஒரு பங்கை அவனிடம் நீட்டினாள்..

"இப்பச் சாப்பிடலாமா..?"

குறும்புச்சிரிப்புடன் அவன் கேட்டான்.. சம்மதமாக அவள் தலையசைத்தாள்.. அவர்கள் சாப்பிட ஆரம்பித்தார்கள்..

"எங்கே போற..?"

பழைய கேள்வியையே திரும்பவும் கேட்டவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள்.. அவள் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவன் புருவங்களை உயர்த்தினான்..

"செங்கோட்டைக்கு.." என்றாள்..

"டி.டி.ஆர் நீ குற்றாலம் போகிறதாச் சொன்னாரே.." சப்பாத்தியை விண்ட வண்ணம் நிதானமாக அவன் சொன்னான்..

"தெரிஞ்சுக்கிட்டே ஏன் கேள்வி கேட்கனும்..?" என்றாள் அவள்..

"எனக்குத் தெரியும்ன்னு உனக்கு எப்படித் தெரியும்..?"

"உங்க முன்னாலேதானே அவர் என் டிக்கெட்டை செக் பண்ணினாரு.."

"கெட்டிக்காரிதான்.." அவன் புன்னகைத்தான்..

சிரிக்கும் போது அவனது கவர்ச்சி கூடுவதாக அவள் நினைத்துக் கொண்டாள்.. தயிர் சாதத்தை சாப்பிடுவது போல அவனை ஜாடையாக அளவிட்டாள்.. ஆறடி உயரத்தில்.. கம்பீரமாக இருந்தான்.. அவனின் தோற்றத்தில்..

'ஹீரோ போலத்தான் இருக்கான்..' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.. அதையே அவனும் கேட்டு வைத்ததில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

"என்ன..? ஹீரோ போல இருக்கேனா..?"

அவனை அவள் பார்ப்பதை அவன் பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறான் என்பதில் அவளுக்கு வெட்கமாகி விட்டது..

"நான் ஒன்னும் உங்களைப் பார்க்கலை.."

"வேற யாரை இவ்வளவு நேரமா உத்துப் பார்த்த..?"

"உத்துப் பார்த்தேனா..?"

"நீ பார்த்த பார்வைக்கு எங்க ஊரில் உத்துப் பார்க்கிறதுன்னுதான் அர்த்தம்.. மனசிலாயி.."

"மலையாள பாசையெல்லாம் தூள் பரக்குது... அப்படியே கேரளாப் பக்கம் போய் உலாத்திட்டு வர வேண்டியதுதானே.."

"அப்படியும் ஒரு ஐடியா இருந்துச்சு.. இப்ப குற்றாலத்தைத் தவிர வேற எங்கேயும் நடக்கிறதா உத்தேசமில்லை..."

அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்தபடி அவன் சொன்னதில்...

'ஏனாம்..?' என்று அவள் மனம் கேள்வி கேட்டது..

"குற்றாலத்தில இருக்கிற குரங்குகளை விட்டுட்டுப் போக மனசில்லை போல.." என்றாள்..

"ஊஹீம்.. குற்றாலத்துக்குப் போகிற குரங்கை விட்டுட்டுப் போக மனசில்லை.." அவன் கள்ளச்சிரிப்புடன் சொன்னான்..

அவளைத்தான் அவன் சொல்கிறான் என்பது அவளுக்கும் புரிந்தது.. உதட்டைக் கடித்தபடி ஓரக் கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டாள்.. அவன் ஓரவிழிப் பார்வையெல்லாம் பார்க்கவில்லை.. நேருக்கு நேரான பார்வைதான்.. விழுங்குவதைப் போல பார்க்க இவனிடம்தான் பயிற்சி எடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்டாள் வந்தனா..

ரயில் கிளம்பிய பாடாக இல்லை.. வெளிச்சம் மறைந்து இருள் பரவத் தொடங்கியது.. அவள் பயத்துடன் சுருண்டு உட்கார்ந்து விட்டாள்.. அவன் யோசனையுடன் அவளைக் கதவைத் தாழ் போட்டுக் கொள்ளச் சொல்லி விட்டு டி.டி. ஆரைத் தேடிப் போய் வந்தான்..

"டிரெயின் கிளம்பறது சந்தேகம்தான்.. தண்டவாளம் நல்லாப் பேர்ந்து கிடக்கு.. எப்படிப் பார்க்காமல் விட்டாங்கன்னு தெரியலை.. சரிபண்றதுக்குள்ள விடிந்து விடும் போல.." என்றான்..

"இப்ப என்ன செய்கிறது..?" பயத்துடன் காட்டைப் பார்த்தாள் வந்தனா..

"அதுதான் எனக்கும் தெரியலை.. பக்கத்திலே ஊர் இருந்தாலாவது அங்கே பஸ் வருமான்னு பார்க்கலாம்.. அதுக்கும் வழியில்லாம நடுக்காட்டுக்குள்ளே டிரெயின் நின்னுருச்சே.. ஊம்..."

வந்தனா செல்போனை எடுத்தாள்.. கலவரத்துடன் நம்பர்களை அழுத்தினாள்.. யாருக்கு என்ற பாவனையில் புருவங்களை உயர்த்தினான் கதிரவன்..

"எங்க சித்தப்பாவுக்கு.." என்றவள் மறுமுனையில் பாஸ்கரனின் குரலைக் கேட்டதும்..

"சித்தப்பா.." என்று அழ ஆரம்பித்து விட்டாள்..

எதிரே அமர்ந்திருந்த கதிரவனின் முகம் இறுகி விட்டது.. அவள் பேசி முடிக்கும் வரை பொறுமையாக இருந்தவன்.. அவள் மூக்கை உறிஞ்சி.. கண்ணீரைத் துடைத்தபடி செல்போனை அணைத்து வைத்ததும்..

"ஏன் அழுத..?" என்று கேட்டான்..

"இந்த சிச்சுவேசன்ல அழுகை வராம எப்படி இருக்கும்..?" வந்தனா முகத்தைத் துடைத்துக் கொண்டாள்..

"என்மேல நம்பிக்கை இருந்திருந்தா உனக்கு அழுகை வந்திருக்காது.." என்றான் கதிரவன்..

அவன் குரலில் தொனித்த கோபத்தில் அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்..

# 9

நடுக்காட்டில் ரயில் நின்று விட்டது.. இரவு வந்து விட்டது.. விடியும் வரை வேலை நடக்கும் என்கிறார்கள்.. இந்த நிலைமையில் அவள் எந்த ஊருக்கு.. யாரிடம் போய் கொண்டிருக்கிறாளோ.. அந்த நபரிடம் தகவல் சொல்ல வேண்டியது அத்தியாவசியமல்லவா..?

பாஸ்கரனிடம் அவள் சொல்ல முடியாது.. அவளை குற்றாலத்துக்கு அனுப்பி வைத்து விட்டு அவளுடைய குடும்பம் கோவாவிற்கு கிளம்பி விட்டது என்பது ஒரு புறமிருக்க.. மாலதிக்கு விவரம் தெரிந்தால்.. அவள் ஆயுளுக்கும் வந்தனாவை சுதாகரனின் வீட்டிற்கு அனுப்பி வைக்க மாட்டாள் என்பது இன்னொரு புறமிருந்து அச்சுறுத்தியது..

அதனால்தான் அவள் சுதாகரனுக்குப் போன் செய்து நிலைமையைச் சொல்லி அழுதாள்.. அதற்கு கதிரவன் எதற்காக கோபம் கொள்கிறான்..?

அவனுக்கே அது தெரியவில்லை.. அதுவரை அவனுடன் வால் பிடித்தபடி தஞ்சம் புகுந்தவளாக ஆட்டுக் குட்டியைப் போல ஒன்றிக் கொண்டிருந்தவள் திடிரென்று அவனை விட்டு விலகிப் போவதில் அவனுக்குள் ஏன் அதிர்வு வர வேண்டும்..?

ரயில் பயணங்களில் ஏற்படும் சிநேகிதங்களுக்கு அர்த்தம் என்று எதுவும் இருக்கிறதா என்ன..? அப்படியிருக்கையில் அவன் எந்த நம்பிக்கையில் அவள் அவனுடனே இருப்பாள் என்று நினைத்தான்..?

"என்ன..?" வந்தனாவுக்கு புரியவில்லை..

"ஒன்றுமில்லை.." கதிரவனுடன் தனது செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்..

"யாருக்குப் போன் பண்றீங்க.." என்று கேட்ட வந்தனாவிற்குப் பதில் சொல்லாமல் பேசி முடித்து விட்டு போனை அணைத்தான்..

"நீங்க கேட்டா மட்டும் நான் பதில் சொல்லனும்.. நான் கேட்டா நீங்க பதில் சொல்ல மாட்டிங்களா..?" மனத்தாங்கலுடன் அவள் கேட்டாள்..

"எதுக்காக பதில் சொல்லனும்.. டிரெயின் நின்னப்பவே காரை வரச் சொல்லி நான் கிளம்பிப் போயிருக்கனும்.. அதை விட்டுட்டு உன்மேல பாவம் பார்த்து இருந்தேன் பாரு.. என்னைச் சொல்லனும்.."

அதற்கு மேல் பேசாமல் அவன் கண்களை மூடி நீண்ட இருக்கையில் சாய்ந்து படுத்து விட்டான்.. வந்தனா மூடப்பட்டத் தாழ்ப்பாளைப் பார்ப்பதும்.. ஜன்னல் வழி தெரியும் கும்மிருட்டைப் பார்ப்பதுமாக பொழுதைக் கழித்தாள்.. தண்ணீர் தாகமெடுத்ததில் அவன் எழுந்து அமர்ந்த போது அவள் சீட்டில் கால்களை முழங்காலிட்டு அதில் முகத்தைப் புதைத்தபடி அமர்ந்திருந்தாள்.. அவனுடைய கோபம் கொஞ்சம் குறைந்தது..

"ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிற..?"

தண்ணீர் பாட்டிலை தொண்டையில் சரிக்கும் முன்னால் கேட்டான்.. அவள் மருண்ட விழிகளுடன் ஒன்றுமில்லை என்பதைப் போல தலையை ஆட்டினாள்..

"தண்ணி குடி.." அவளிடம் தண்ணீர் பாட்டிலை நீட்டினான்..

மறுக்காமல் அவள் வாங்கிக் குடித்ததைக் கனிவுடன் பார்த்தான்..

தண்ணீர் பாட்டிலை வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தவனை அவள் வியப்பாக பார்த்தாள்.. அவன் ஏனென்ற பாவனையில் புருவங்களைச் சுருக்கினான்..

"என்ன..?"

"ஒன்னுமில்லை.."

அவன் நம்பாமல் ஓர் பார்வை பார்த்து விட்டு அவன் பைக்குள் இருந்த லேப்டாப்பை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான்.. அதில் ஆழ்ந்து போனவன் தூங்கவில்லை என்பதில் அவளுக்கு நிம்மதியாக இருந்தது..

'இப்பத் தூங்கலை.. கொஞ்ச நேரம் கழிச்சுத் தூங்கிட்டான்னா..?' அவளுக்குள் சந்தேகம் எழுந்தது.. அதை நிவர்த்தி செய்து கொள்ள விரும்பியவளாக...

"நீங்க தூங்கலையா..?" என்று கேட்டாள்..

"இல்லை.." அவன் லேப்டாப்பிலிருந்து பார்வையை உயர்த்தாமல் சொன்னான்..

"ஒருவேளை தூக்கம் சொக்குச்சுன்னா..?"

அவள் கேள்வியில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.. அவன் தூங்கவில்லை என்பதில் கால்களைத் தொங்க விட்டு தளர்வாக அமர்ந்திருந்தவளின் ஆசுவாசத் தோற்றம் அவனைக் கவர்ந்தது..

"எனக்குத் தூக்கம் சொக்கலை.. வேற மாதிரி சொக்குது.." என்றான்..

"அப்படின்னா..?"

அவளின் அறியாமையில் அவன் மௌனித்தான்.. எதிரே அமர்ந்திருந்த சுடிதார் பெண்ணின் முகத்தில் தென்பட்ட யௌவனத்தில் அவன் மனம் மயங்கியது.. அவளின் இளமை அவனை ஈர்த்தது..

*"இளமையெனும் பூங்காற்று..*
*பாடியது ஓர் பாட்டு...*
*ஒரு பொழுதில் ஓர் மயக்கம்..*
*சுகம்.. சுகம்.. ஒரே சுகம்..*
*ஒரே வீணை... ஒரே ராகம்.."*

மெதுவான குரலில் அவன் பாடியதைக் கேட்க அவளுக்குப் பிடித்திருந்தது.. கால்களை ஆட்டியபடி அவள் ரசித்த விதத்தை அவனுக்குப் பிடித்திருந்தது.. பாட்டை நிறுத்தியவனிடம்..

"இது பழைய பாட்டில்ல.." என்றாள் வந்தனா..

"ம்ம்ம்.. இளையராஜா மியுஸிக்.." என்றான் அவன்..

"நல்லா இருக்கு.." அவளின் குரலில் அவன் பாட்டைத் தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது..

"அளவோடு இருந்தால்தான் எதுவும் நல்லா இருக்கும்.."

அவன் வார்த்தைகளில் இருந்து அவன் பாடலைத் தொடரப் போவதில்லை என்பது புரிந்து போனதில் அவள் முகத்தில் ஏமாற்றம் கவிந்தது.. அவன் லேப்டாப்பை மூடி பைக்குள் வைத்து விட்டு நிமிர்ந்து அமர்ந்து அவளைப் பார்த்தான்.. அவனிடம் பேசும் ஆவல் அவளிடம் தெரிந்ததில் அவன் முகத்தில் லேசான மென்மை படர்ந்தது..

"நீ பாடேன்.." என்றான்..

"நானா..?" அவளுக்கு வெட்கம் வந்து விட்டது..

அந்த வெட்கத்தை அவன் ரசித்தான்.. பகல் பொழுதில் அவள் காட்டிய துறுதுறுப்பும்.. மாலையில் அவள் கொண்ட பயமும்.. பாட்டுப்பாடச் சொன்னதில் அவள் முகத்தில் வந்த வெட்கமும்.. பல்வேறு பரிணாமங்களில் பிரதிபலித்த அவளின் நுட்பமான மன உணர்வுகளை வெகு துல்லியமாக அவனுக்கு எடுத்துக் காட்டியது..

பெண் பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளையின் முன்னால் அவளைப் பாடச் சொல்லி விட்டதைப் போல வெட்கப்பட்டவளை கூர்ந்து பார்த்தான் கதிரவன்.. அவளது கன்னங்கள் இளரோஜா வண்ணத்திற்கு மாறியிருந்தன..

“நீதான் பாடனும்.. இப்ப நான் பாடலை..?” அவன் ஊக்கப்படுத்தினான்..

“உங்களுக்குப் பாட்டு வருது.. எனக்கு வராது..” அவள் மறுத்தாள்..

“இப்பப் பாட்டை ரசிச்சயே..?”

“வெறும் ரசிப்புத்தான்..”

“பாட்டுப்பாட இசை ஞானம்தான் வேணும்னில்ல.. கேள்வி ஞானம் இருந்தாப் போதும்..”

அவன் என்னதான் சொன்னாலும அவள் பூம்.. பூம்.. மாட்டைப் போலத் தலையை ஆட்டி மறுத்தாள்..

“இங்கே பாரு.. நல்லா இருட்டிருச்சு.. டிரெயின் கிளம்ப லேட்டாகும்..”

“எனக்காக சித்தப்பா காரை எடுத்துக்கிட்டு கிளம்பி வந்துக்கிட்டு இருக்கார்..”

“ஓ...”

அவனது ஒற்றைச் சொல்லான ‘ஓ’வில் தொனித்தது என்னவென்ற ஆராய்ச்சியில் அவள் ஈடுபட்டாள்.. அது இல்யாக வந்து ‘ஓ’வைப் போல அவளுக்குத் தோன்ற வில்லை..

“உன் சித்தப்பா வருகிற வரைக்கும் டைம்-பாஸ் ஆக வேணாமா..? அதுக்காகவாவது பாடு..”

அப்போதும் அவள் அநியாயத்துக்கும் வெட்கப் பட்டுக் கொண்டு பாட மறுத்ததில் அவனுக்கு இம்சையாக இருந்தது..

“உன் பாட்டைக் கேட்கிற கொடுமைக்கு நானே தயாரா இருக்கேன்ங்கிறப்ப உனக்கு என்ன வந்தது..? இப்பப் பாடறியா.. இல்ல.. நான் தூங்கவா..” என்று கொட்டாவி விட்டான்..

“வேணாம்.. வேணாம்..” அவள் அலறினாள்..

இருக்கும் ஒரே பேச்சுத் துணையான அவனும் தூங்கி விட்டால் அந்த வனாந்திர இருட்டில் தனியாக அவள் மட்டும் எப்படிக் கொட்டக் கொட்ட விழித்திருப்பது..

“பாடறேன்..” அவள் கால்களை மடித்துச் சம்மனம் கம்டி அமர்ந்து கச்சேரி செய்வதைப் போலத் தயாரானாள்..

“பில்ட்-அப்பெல்லாம் பலமாயிருக்கு..?” அவனுக்கு வேடிக்கையாக இருந்தது..

“கேட்பீங்கதானே..?” எதற்கும் இருக்கட்டுமென்று முன்கூட்டியே அவள் உறுதிப் படுத்திக் கொள்ள முனைய..

“ஓடி விட மாட்டேன்..” என்று உத்திரவாதம் அளித்தான் கதிரவன்..

“அப்பச் சரி..” அவள் நிம்மதியானதில்.. அவள் எப்படிப் பாடப் போகிறாளோ என்று அவனுக்கே சுவராஸ்யம் வந்து விட்டது..

“நானா..? பாடுவது நானா..?”

அவள் பாட்டால் அவனிடம் கேள்வி கேட்க.. அவன் தலையில் கைவைத்து.. “போட்சுடா..” என்றான்..

அவள் பாட்டை நிறுத்தி விட்டு அவனை முறைத்தாள்..

“இதுக்குத்தான் நான் பாடமாட்டேன்னு சொன்னேன்..”

“பாடற பாட்டை உருப்படியா பாடனும்.. இப்படியா சந்தேகப்பட்டுக்கிட்டே பாடறது..?”

“எனக்கு இப்படித்தான் பாட வரும்..”

“முன்னே.. பின்னே.. எங்கேயாவது பாடியிருக்கயா..?”

“ஸ்கூலில் ஓர் தரம் மியுஸிக் காம்பெடிசனில் பாடினேன்..”

“என்ன ஆச்சு..? ஜட்ஜ்களெல்லாம் உன் பாட்டைக் கேட்டதும் எழுந்திருச்சு வீட்டைப் பார்த்து ஓடிட்டாங்களா..?”

“அதெல்லாம் இல்ல...”

“வேற என்ன ஆச்சு..? உன் ஸ்கூல் பசங்க அழுகின தக்காளியை கூடை.. கூடையா வீசிட்டாங்களா..?”

“உங்களுக்கு நல்லதாவே நினைக்க வராதா..?”

“உன் பாட்டைக் கேட்டா வர மாட்டேங்குதே..”

“நானா பாடறேன்.. பாடறேன்னு.. தவ்வினேன்..?”

அவள் முகத்தைத் தூக்கிக் கொண்டு உம்மென்று உட்கார்ந்து விட்டாள்.. கதிரவன் தலையை அசைத்து ரசித்துச் சிரித்து விட்டு..

“ஓகே.. நாம சண்டையை விட்டுட்டு சமாதானம் ஆகிக்கலாம்..” என்று கை நீட்டினான்..

நீட்டிய அவன் கையைப் பற்றிக் குலுக்கியவளின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற நூதன உணர்வு ஏற்பட்டது.. கை கொடுப்பது இயல்பான ஒன்று.. ஆணோ.. பெண்ணோ.. கை நீட்டினால் பற்றிக் குலுக்குவது மரபு.. அதற்கு முன்பும் பலமுறை பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னிய ஆண்களின் கைபிடித்துக் குலுக்க வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது.. அப்போதெல்லாம் அதை சகஜமாக எடுத்துக் கொண்டவளுக்கு.. இந்தத் தீண்டலை சகஜமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை..

கதகதப்பான அவன் கை வலிமையின் ஸ்பரிசம் உணர்த்திய ஆண்மையில் அவளுக்குள் லேசான நடுக்கம் பரவியது.. அவளது கையை இறுக்கியிருந்த அவனது கை விலகாமல் அங்கேயே தாமதித்ததில் அவளுக்குள் உருவான இன்ப ஆசைகள் ஓர்விதமான பரவசம் கலந்த பரபரப்பை உற்பத்தி செய்தன..

‘இதென்னடா வம்பாப் போச்சு..’

வந்தனா அவசரமாக கையை உறுவிக் கொண்டாள்.. அவன் முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தில்.. ‘உனக்கென்னடா.. நீ ஆண்பிள்ளை..’ என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

அந்த ஆண்பிள்ளை அவள் கையைப் பற்றியிருந்த அவனது கையை உற்றுப் பார்த்து விட்டு... அந்த உள்ளங்கையில் முத்தம் கொடுத்துக் கொண்டதில் அவளுக்கு பயம் பீடித்தது..

‘என்னடா இது... இவன் ரொமான்ஸ் பண்ண ஆரம்பிக்கிறான்..’

இந்த கண்ணாமூச்சி விளையாட்டுக்கு பேசாமல் பாட்டுப் பாடி விடுவதே சாலச் சிறந்தது என்று அவளுக்குத் தோன்றிவிட்டது..

*“கண்ணன் என்னும் மன்னன்..*
*பெயரைச் சொல்லச் சொல்ல..*
*கல்லும்.. முள்ளும்.. பூவாய்..*
*மாறும் மெல்ல.. மெல்ல..”*

திடிரென்று எழுந்த அந்தப் பாடல் ஒலியில் அவன் அவளை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான்.. இனிமையான குரலில் சாதாரணமாக அவள் பாடினாலும்.. அந்த நொடியில்.. அந்தப் பாடல்.. ரயில் பெட்டிக்குள் அழகான இசையலைகளை உருவாக்குவதை அவனால் உணர முடிந்தது..

*“எண்ணம் என்னும் ஆசைப்படகு..*
*செல்லச் செல்ல..*
*வெள்ளம் பெருகும் பெண்மை உள்ளம்..*
*துள்ளத் துள்ள..”*

அவள் ஒன்றும் பாடலில் அமிழ்ந்து விடவில்லை.. அவனே சொன்னதைப்போல நேரத்தை ஓட்டுவதற்காக.. 'கடனே..' என்றுதான் பாடினாள்.. ஆனாலும் அவள் பாடலில் ஒளிர்ந்திருந்த இசை நுணுக்கத்தில் அவன் வியப்பில் ஆழ்ந்து போனான்..

*"தென்றல் இன்று பாடும்..*
*பாடல் என்ன..? என்ன..?*
*சின்னக்கிளிகள் சொல்லும் மொழிகள்..*
*என்ன..? என்ன..?*
*கண்ணும்.. நெஞ்சம்.. ஒன்றுக்கொன்று*
*பின்னப் பின்ன..*
*என்னைத் துன்பம் செய்யும் எண்ணம்..*
*என்ன..? என்ன..?"*

அவனுக்கு அவளிடம் வம்பிழுக்க வேண்டும் போல இருந்தது.. அவன் முன்னால் அலையலையாய் இசையலைகளை பரவ விட்டுக் கொண்டிருக்கும் அவள் சற்று நேரத்தில் அவனை விட்டுப் பிரிந்து போய் விடுவாள் என்பதில்.. மனதுக்குள் கவிந்த சொல்லத் தெரியாத வேதனையின் சுமையை மறக்க.. அவன் விளையாட்டுப் பேச்சில் இறங்கினான்..

"அப்படியே கே.பி. சுந்தராம்பாதான்.."

இதைச் சொல்லும் போது அவன் அவளை பாதாதிகேசம் முதல் பார்த்து வைத்ததில் அவள் உண்மையிலேயே கிழவியைப் போல இருக்கிறோமோ என்று கவலைப்பட்டுப் போனாள்..

"என்னைப் பார்த்தா பாட்டி போல இருக்கா..?"

அவன் எதிர்பார்த்ததைப் போலவே அவனுடன் சண்டைக்குப் போனாள்..

'வாஹ்ரே.. வா..' அவனுக்கு உற்சாகமாக இருந்தது..

"அப்படி யார் சொன்னது..? காட்டு.. இன்னைக்கு இரண்டில ஒன்றைப் பார்த்து விடறேன்.."

விட்டால் கையில் கத்தியை எடுத்துச் சுழற்றி சிலம்பாட்டம் ஆடி விடுவதைப் போல பாவனை செய்தபடி கேட்டான் கதிரவன்..

"பூட்டின ரயில் பெட்டிக்குள்ள இருக்கிறது நீங்க.. நானுன்னு ரெண்டே பேர்தான்.. இதில என்னைக் கேலி பண்ண வேறொருத்தர் புதுசா வந்திருக்காங்களாக்கும்..?"

"அப்படின்னா.. நீ என்னைத்தான் மீன் பண்ணினயா..?"

"வேற யார் இங்கேயிருக்காங்க..?"

"நான் உன்ன பாட்டின்னு சொல்லலை.. நீ பாடின பாட்டைத்தான் பாட்டி பாடின பாட்டுன்னேன்.."

"இந்தப் பாட்டை கே.பி. சுந்தராம்பா பாடலை.. பி.சுசிலா மேடம் பாடியிருக்காங்க.."

"அப்படியா..?"

"என்ன நொப்புடியா..? இனி.. என் பாட்ட கிண்டல் பண்ணீங்க.."

"என்ன செய்வ..? பாட்டாலேயே கொடுமை பண்ணி என்னை துரத்தியடிச்சுருவாயா..?"

"உங்களை.."

"ஓகே.. ஓகே.. இனி குறுக்கே பேசலை.. நீ பாட்டை பினிஷ் பண்ணு.."

உனக்காகவெல்லாம் நான் பாட்டை முடித்துக் கொடுக்க முடியாது என்று முதுகு காட்டி உட்கார்ந்து விட்டாள் வந்தனா.. பலத்த பேச்சு வார்த்தைக்குப் பின்னால் அவன் பக்கமாக போனால் போகிறது என்று திரும்பி அமர்ந்தாள்..

*"அக்கம் பக்கம் யாரும்..*
*பார்த்தால் வெட்கம்.. வெட்கம்..*
*அன்பே.. உன்னை நேரில்..*

*கண்டால் நாணம்.. நாணம்..*
*ஆசை நெஞ்சை சொல்லப்*
*போனால் அச்சம்.. அச்சம்..*
*அன்றும்.. இன்றும்.. அதுதான்*
*நெஞ்சில் மிச்சம்.. மிச்சம்..”*

அவள் விழிகளைச் சுழற்றிப் பாடிய நாணத்தில் அவனிடமிருந்த வேடிக்கை குணம் ஓடியே போனது.. படபடத்த அவளது இமைகளைப் பார்ப்பதில் ஓர் சுகானுபவம் ஏற்படுவதை அவன் உணர்ந்தான்..

அவள் நீண்ட பின்னலை எடுத்து முன்னால் போட்டுக் கொண்டாள்.. அதைத் திருக.. நீவ.. என்று அவள் மன உணர்வுகளை மறைப்பதற்கு திண்டாடினாள்..

அவனை அவள் பார்க்க.. அவனை அவள் பார்க்க என்று இருவரும் உலகை மறந்து உறைந்து உட்கார்ந்திருந்த போது அந்தப் பெட்டியின் கதவு தட்டப்பட்டது..

“டொக்.. டொக்.. டொக்..”

சீரான அந்த தட்டுதல் ஒலியில் கதிரவனும்.. வந்தனாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

# 10

'யாரா இருக்கும்..?'

இந்தக் கேள்விதான் அந்த இருவரின் மனதிலும் ஓடியது.. கதவைத் தட்டும் ஒலி சீராக.. ஒருவிதமான தாள லயத்துடன் வந்து கொண்டிருந்தது..

"டி.டி. ஆரோ..?"

"அவர் அங்கே நிற்கிறார் பாரு.."

கதிரவன் கை காட்டிய திசையில் கையில் பெரிதான டார்ச் லைட்டை பிடித்தபடி அதன் ஒளி வெள்ளத்தில் தண்டவாளத்தை சீரமைக்கும் பணியை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தார் டி.டி.ஆர்..

'அப்படின்னா..'

நெற்றியை ஒற்றை விரலால் தட்டியபடி யோசனையாய் கதவைப் பார்த்த வந்தனா அந்த நினைவில் அரண்டு போனாள்..

"ஈவினிங்கில வம்பு பண்ணினவனுங்க வந்திட்டானுகளோ.. என்னவோ.. ஈஸ்வரா..!"

"அவரை எதுக்குக் கூப்பிடற..?"

"காப்பாத்தத்தான்.."

"அவர் கைலாயத்தில இருக்கார்.. நான் உன் பக்கத்திலேயே இருக்கேன்.. அவர் எழுந்திருச்சு.. கங்கைகிட்ட ரகசியமா பர்மிசன் வாங்கி.. பார்வதிகிட்ட வெளிப்படையா பர்மிசன் வாங்கி.. பிள்ளையாரையும்.. முருகனையும் கைலாயத்தைப் பார்த்துக்கங்க.. போன சுருக்கில் திரும்பி வந்திடறேன்னு சொல்லி.. கிளம்பி வரதுக்குள்ள.. நான் மின்னல் வேக வீரனா அவங்கள பந்தாடிற மாட்டேனா..?"

அவனின் கேள்வியில் அவள் உதட்டைச் சுழித்து வளைத்தாள்.. அவனின் அட்டூழியமான அந்த வித்தாரப் பேச்சு அவளை ரசிக்க வைத்தது..

'என்னமா வாய்பந்தல் போடறான் பாரு..'

அவள் பார்வையில் தெரிந்த ரசணையில் அவன் கண்சிமிட்ட.. அவள் 'ஆ'வென்று அப்படியே நின்று விட்டாள்..

"ஏன்..? என்ன ஆச்சு..?"

ஒன்றும் தெரியாத சின்னக் கண்ணனைப் போல அவன் வினவி வைத்தில் அவன் காதைப் பிடித்துத் திருகும் அவா அவளுக்குள் ஏற்பட்டது.. அவனின் கள்ளத்தனத்தில் அவளுக்கு ஈர்ப்பு ஏற்பட்டது..

"இது அவனுகளா இருக்காது.."

அவன் ஆளுடம் சொன்னான்.. அவள் எப்படியென்று கேட்டாள்..

"அவனுகளுக்கு கதவைத் தட்டற மேனர்ஸ்பத்தி என்னத்தத் தெரியும்ன்னு நினைக்கிற..?"

அவனின் கேள்வியில் அவள் திருதிருத்தாள்.. டேபிள் மேனர்ஸ் பற்றிக் கேட்டிருக்கிறாள்.. கதவைத் தட்டும் மேனர்ஸ் பற்றி அவன் சொல்ல.. இப்போதுதான் முதன் முறையாக கேட்கிறாள்..

"நல்லாக் கேளு.. இந்த கதவு தட்டல்.. நாகரிகமான கதவு தட்டல்.." அவன் அவளுக்கு பாடம் எடுத்தான்..

ஆள் அகப்பட்டு விட்டால் இவன் பெரிய ஆசிரியனைப் போல நினைத்துக் கொண்டு பாடம் எடுக்கக் கிளம்பி விடுவானா..?

சும்மாவே அவளுக்குப் பாடம் கேட்கப் பிடிக்காது.. பள்ளிக்கும் கல்லூரிக்கும் கடனே என்று போய் வருபவள்.. அவள் எடுக்கும் மதிப்பெண்களை எப்படி எடுக்கிறாள் என்பது பிரம்ம ரகசியம்.. எப்போது பார்த்தாலும் வகுப்பில் பாடத்தைக் கவனிக்கவில்லையென்று ஆசிரியர் குலத்திடம் திட்டு வாங்குபவள் முதல் வகுப்பில் மதிப்பெண் எடுத்து பாஸ் பண்ணி விடுவாள்.. அந்த ஒன்றினால்தான்.. அன்றிலிருந்து இன்றுவரை.. ஆசிரியர்களின் கோபத்திலிருந்து அவள் தப்பித்துக் கொண்டிருக்கிறாள்..

அவளுடைய இத்யாதி.. இத்யாதி.. கல்வி வரலாறுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் கருமமே கண்ணாக சிரத்தையாக அவன் கதவு தட்டும் முறையைப் பற்றிய வகுப்பை எடுக்க.. அதைக் கொஞ்சம்கூடச் சிரத்தையில்லாமல் கேட்டுக் கொண்டாள் வந்தனா..

"கேளு.. டொக்.. டொக்குன்னு சீரா சத்தம் வருது.. பலமாவும் இல்ல.. குறைவாவும் இல்ல.. உள்ளே இருக்கிறவங்க காதிலயும் விழுகனும்.. அதே சமயத்தில கதவை உடைக்கிறதைப் போலவும் இருக்கக் கூடாது.. இப்படித் தட்டறவங்க நிச்சயமா டீசன்ட் பீபுளாத்தான் இருப்பாங்க.."

"அப்படியா சொல்றீங்க.. ஆனா.. டி.டி.ஆர் தான் அங்கே நின்னுக்கிட்டு இருக்காரே.."

"இந்த உலகத்திலேயே டி.டி.ஆர் ஒருத்தர்தான் டீசன்ட் மேனா..?"

அவனின் கேள்வியில் அசடு வழிந்தாலும் அதை மறைத்துக் கொண்டு..

"வேற டீசன்ட் மேனை இந்த டிரெயினில் நான் இன்னும் பார்க்கலையே.." என்று அவன் மூக்கை உடைத்தாள் வந்தனா..

என்னைப் பார்த்தால் உனக்கு டீசன்ட் மேனைப் போலத் தெரியவில்லையா என்று அவன் கேட்பானென்று பார்த்தால்.. அவனோ.. அவளை ஒருமார்க்கமாக பார்த்தபடி..

"ஆக.. அம்மணி என்னை டீசன்ட் மேன் இல்லைன்னு மறைமுகமாக சொல்கிறீங்களாக்கும்..?" என்று புருவங்களை உயர்த்தி இறக்கினான்..

அவனது வசீகரமான அந்தச் செய்கையில் அவள் மனம் மயங்கித் தொலைத்தது.. கண்ணடிப்பதை விட்டு விட்டானே என்று மனதில் தோன்றியது ஏக்கமா.. அல்லது விருப்பமா என்று அறுதியிட்டுக் கூற அவளால் முடியவில்லை..

"ஆமாம்னா என்ன செய்வீங்க..?"

"எதை வைச்சு என்னை டீசன்ட் மேன் இல்லைன்னு அம்மணி நினைச்சாங்கன்னு நின்னு கேட்பேன்.."

"ஓடற ரயிலில நிக்கிறவ மேலே பெட்டியைத் தூக்கிப் போட்டு அட்டாக் பண்ணின ஆண்தானே நீங்க..?"

"எப்.ஐ.ஆரோ.. போட்டுட்டியா..? அப்புறம்..?"

"நேருக்கு நேரா மோதனும்னு நான் சொல்லி வாய் மூடறதுக்குள்ள என்மேல மோதி விழ வைச்ச ஆளாச்சே நீங்க.."

"அடுத்த குத்தப் பத்திரிக்கை..! விளங்கிரும்.. உன்னைக் காவல் காத்துக்கிட்டு இருக்கேன் பாரு.. நீ இதுவும் சொல்வ.. இன்னமும் சொல்லுவ.. நீ ஒருத்தி போதும்.. என்மேல குத்தம் சொல்லி பேர் கட்டி விட.."

அலுத்துக் கொண்டே கதவைத் திறக்கப் போனான் கதிரவன்.. அவள் அவசரமாக அவன் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்.. லேசாக தலையைத் திருப்பி அவளைப் பார்த்தவனுக்கு சிரிப்பு வந்தது..

"டீசன்ட்மேன் பட்டம் எனக்கில்லையாம்.. ஆனா இவங்க ஒளியறதுக்கு மட்டும் என் முதுகு வேணுமாம்.. பிழைச்சுக்குவே.."

"தேங்க்ஸ்.. என்னைப் பாக்காம கதவைப் பாருங்க.."

"எனக்கென்னவோ வந்திருக்கிறவங்க உன் பாட்டைக் கேட்டுட்டு இனிமே வாயைத் திறப்பியான்னு வீடு கட்டி அடிக்கத்தான் வந்திருக்காங்கன்னு தோணுது.."

"அது உங்க பாட்டைக் கேட்டதால இருக்கும்.."

"பாருடா.. பிளேட்டை எண்டக்கம் திருப்பி விடறியா..?"

கதிரவன் கதவைத் திறந்தான்.. உள்ளே வந்தவரைக் கண்டதும் வந்தனா கதிரவனின் முதுகை மறந்து..

"சித்தப்பா.." என்று பாய்ந்து கட்டிக் கொண்டாள்..

"கடவுளுக்கு நன்றி வந்தனா.. நீ பத்திரமா இருக்க.."

அவளின் முதுகைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தினார் சுதாகரன்.. வந்தனாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்ததில் அவருக்குள் குற்றஉணர்வு மேலிட்டது..

அவர் மீதிருந்த பாசத்தினால்தானே.. அவளுடைய அண்ணன் மகள்.. குடும்பத்துடன் கோவாவுக்குப் போகாமல் அவரைப் பார்க்க குற்றாலத்துக்கு அடம் பிடித்து தனியாக கிளம்பி வந்திருக்கிறாள்..? அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால்..?

நினைத்துப் பார்க்கவே அவருக்கு நெஞ்சம் நடுங்கியது..

காலத்துக்கும் மாலதி அவரை மன்னிக்க மாட்டாள் என்பது ஒருபுறமிருக்க.. அவராலேயே அவரை மன்னிக்க முடிந்திருக்காது..

"நினைச்சுப் பார்க்கவே இல்லை சித்தப்பா.. திடிர்ன்னு ரயில் நின்னுருச்சு.. என்னன்னு பார்த்தா தண்டவாளத்தில ரிப்பேராம்.."

"கடவுள் காப்பாத்தினார் வந்தனாக்குட்டி.. அவர் கருணையோட ரயிலை நிறுத்தினதாலே நாம தப்பிச்சோம்.. இல்லேன்னா நம்மகதி என்னவாகியிருக்கும்..?"

"நாமன்னு ஏன் சொல்கிறிங்க சித்தப்பா.. ரயிலில் நான்தானே மாட்டியிருக்கேன்..?"

"ஏண்டாம்மா.. உனக்கு ஒன்னுன்னா அது இந்த சித்தப்பாவை ஆயிரம் மடங்கு அதிகமா தாக்குமேடா செல்லம்.."

"சித்தப்பா.."

"வந்தனா.."

விட்டால் அங்கே ஒரு கருப்பு வெள்ளைப் பாடல் காட்சி உணர்ச்சி மயமாக ஒலிக்க ஆரம்பித்து விடும் சூழல் உருவானதில் கதிரவன் தொண்டையைச் செருமி அந்தச் சூழலைக் கலைத்தான்..

சித்தப்பாவும்.. அண்ணன் மகளும்.. கண்ணைத் துடைத்துக் கொண்டு இயல்பு நிலைக்குத் திரும்பினார்கள்.. கதிரவனின் பக்கம் திரும்பிய வந்தனா..

"சித்தப்பா.. இவர் பேரு கதிரவனாம்.." என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்..

அவளை ஒருதினுசாக பார்த்து வைத்த கதிரவன்..

"கதிரவனாம்.. இல்லைங்க.. கதிரவனேதான்.. கன்பர்ம் பண்ணிக்கங்க.." என்று சுதாகரனிடம் சொன்னான்.

வாய்விட்டுச் சிரித்தார் சுதாகரன்...

"உன் பேக் எது.. எதும்மா..?"

வந்தனா தூக்க முடியாமல் தூக்க முயன்ற இரண்டு டிராவல் பேக்குகளையும் வாங்கி தோளில் போட்டுக் கொண்டு சுதாகரனுடன் கிளம்ப முனைந்த வந்தனா.. எதையோ நினைத்துக் கொண்டவளாக நின்று.. கதிவரனைப் பார்த்தாள்..

"தேங்க்ஸ்.." என்றாள்..

"அட.. உனக்கு தேங்க்ஸ் சொல்லக் கூடத் தெரியுமா..?" அவன் ஆச்சரியப் பட்டான்..

"சொல்லியிருக்கக் கூடாதுதான்.. உங்களிடமெல்லாம் இதுபோல தேங்க் பண்றதே வேஸ்ட்.. இருந்தும் சொல்ல வேண்டியதாகி விட்டது.."

"அடப்பாவமே..! அந்த சிரமம் எதுக்காகவாம்..?"

"இப்பக் கிளம்பினா திரும்பவும் உங்களைப் பார்க்க முடியாமல் கூடப் போகலாம்.. ஏன்னா.. இது ரயில் சிநேகிதம் பாருங்க.."

"பார்த்துட்டாப் போச்சு.."

"நீங்களும் ரயில் சிநேகிதர்.."

"ஓ..."

"ஸோ.. குட்பை.. அண்ட் தேங்க்ஸ் ஃபார் ஆல்.. ஆமாம் உங்களைப் பிக்அப் பண்ணிக்க கார் வரும்ன்னு சொன்னீங்க.. யாரும் வரலை போல.. த்ச்சு.. த்ச்சு.."

அவள் துக்கம் விசாரித்ததில் அவன் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டான்..

"என்ன செய்கிறது..? உனக்கு ஒன்னுன்னா ஓடிவர உன் சித்தப்பா இருக்கிறார்.. என் அக்காவுக்கு அது தெரியலையே.."

"யார் உங்க அக்கா..?"

"குற்றாலத்தில இருக்காங்க.. அவங்களைப் பார்க்கத்தான் போய்க்கிட்டு இருந்தேன்.. நீ கிளம்பு.. உனக்குத்தான் உன் சித்தப்பா வந்தாச்சே.."

"நீங்க..?" அவள் தயங்கி நின்றாள்..

"எப்படியும் டிரெயின் கிளம்பித்தானே ஆகனும்..? இதே இடத்தில ஸ்டே பண்ண முடியுமா..? இது கிளம்பறப்ப நானும் கிளம்பிக்கறேன்.."

"அதுவரைக்கும் வெயிட் பண்ணவா போறிங்க..?"

"நான் மட்டுமா வெயிட் பண்றேன்..? என்னைப் போல எத்தனை பேஸன்சர்ஸ் இங்கே இருக்காங்கன்னு பார்த்தியா.. அவங்களுக்கு ஆனது எனக்கும் ஆகிட்டுப் போகுது.. ஏஸி கோச் இருக்கு.. போர்த்திக்க கம்பளி இருக்கு.. இழுத்துப் போர்த்திக்கிட்டுத் தூங்கினா விடிஞ்சுரும்.. அதுக்கும் மேலேயுமா இங்கே டிரெயின் நிற்கும்..?"

"தனியாவா இருப்பீங்க..?"

"இருந்தா என்ன..? என் கையை எவனும் பிடிச்சு இழுக்க மாட்டான்.. நீ பயப்படாம கிளம்பிப் போ.."

அவனது கேலியில் வந்தனாவின் முகம் சிவந்து விட்டது.. அது போன்ற நெருக்கடியான நிலையிலும் அவன் காட்டிய அலட்சியமான அந்த திமிர் அவளை வசீகரித்தது.. அவன் செய்யும் எதுதான் அவளை வசீகரிக்கவில்லை..? அனைத்தும் அவளை வசீகரித்துத் தொலைக்கிறதே..

என்னதான் அவன் திமிரும்.. தெனாவெட்டுமாக பேசினாலும் அவனை அந்தச் சூழலில் விட்டுவிட்டு அவள் மட்டும் கிளம்பிப் போவதில் அவள் மனதில் குற்ற உணர்வு வந்தது..

"சித்தப்பா.."

அவள் குரலில் வேண்டுதல் இருந்தது.. சுதாகரன் கதிரவனை ஏற இறங்க பார்த்து வைத்தார்.. அவர் முகத்தில் பெண்ணின் தகப்பனுக்கேயுரிய கறார்த்தனம் வந்து விட்டிருந்தது..

"என்னம்மா..?"

"இவர் எனக்கு நிறைய ஹெல்ப் பண்ணினார் சித்தப்பா.."

"அதுக்குத்தான் தேங்க்ஸ் சொல்லிட்டியேம்மா.."

"இவருக்கு கார் வரலை சித்தப்பா.."

"அதுக்கு நாம என்னம்மா பண்ண முடியும்..? சார் தான் மார்னிங் வரைக்கும் வெயிட் பண்ணிக்கிளம்பி வந்திடறேன்னு சொன்னாரே.."

சுதாகரன் அண்ணன் மகளை மட்டும் அழைத்துக் கொண்டு போவதில் குறியாக இருக்க.. வந்தனாவுக்கு நகர முடியாமல் காலில் இரும்புக்குண்டை கட்டி விட்டதைப் போல இருந்தது.. அவள் தவித்தாள்..

"ப்ளீஸ் சித்தப்பா.."

"என்னாடாம்மா நீ.. எதுக்காக ப்ளீஸ் போடற.. நீ கேட்டு இந்த சித்தப்பா எதைச் செய்ய மாட்டேன்னு சொல்லியிருக்கேன்..?"

அவர்களின் பாசப் பிணைப்பைக் கவனித்துக் கொண்டிருந்த கதிவரன்..

"ஊ..ப்..ப்.." என்று வாயைக் குவித்து காற்றை வெளிவிட்டான்.. தோளைக் குலுக்கியபடி..

"முடியலை.." என்று சொன்னான்..

எது முடியவில்லை என்று அவனிடம் அவள் கேட்கவில்லை.. அவன் குணமே அதுதானே என்ற நினைவோடு பேசாமல் இருந்து விட்டாள்.. ஆனால் சுதாகரன் கேட்டு வைத்தார்..

"எது முடியலை மிஸ்டர் கதிரவன்..? ஏம்மா வந்தனா.. இவருக்காகவா நீ கவலைப்பட்ட..? எப்படிம்மா இவர்கூட இந்த டிரெயினில ஒன்னா டிராவல் பண்ணின..?"

சுதாகரனின் கடுமையில் வந்தனா கையைப் பிசைந்தாள்.. இவன் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருக்கக் கூடாதா என்று அவள் மனம் கொதித்தது..

"அதை நான் சொல்லனும்.." என்றான் கதிரவன்..

"ஆரம்பித்தில இருந்தே உங்க அண்ணன் மக என்னை டிஸ்டர்ப் பண்றதிலேயே குறியா இருந்தாங்க.. டிரெயினுக்கு லேட்டா வந்திட்டு ஓடி வந்து டிரெயினுக்குள்ள ஏற வந்தா.. இவங்க வழியை மறிச்சுக்கிட்டு ஒத்தை விரலைக் காட்டிக் கபர்தார்ன்னு மிரட்டறாங்க.."

"ஹொ நைஸ்..!" சுதாகரன் அண்ணன் மகளின் அந்தத் தீரத்தை வெகுவாக சிலாகித்தார்..

"அப்படியாம்மா சொன்ன..?" என்று வந்தனாவிடம் கேட்டு மகிழ்ந்தும் போனார்..

"நல்ல சித்தப்பா.. நல்ல அண்ணன் மகள்.. செமத்தியான கூட்டணிதான்.." போலியாக பாராட்டினான் கதிரவன்..

"சித்தப்பா.. சித்தப்பா.. இவரும் குற்றால்தான் வருகிறாராம் சித்தப்பா.. நம்ம காரிலேயே இவருக்கும் லிப்ட் கொடுக்கலாம் சித்தப்பா.."

சுதாகரன் கதிரவனைப் பார்த்த பார்வையில் துளிக்கூட நட்பில்லை..

"போனால் போகிறது.." என்று வேண்டா வெறுப்பாக சொன்னவர்..

"உனக்காகத்தான் இது போன்ற திமிர் பிடிச்ச.. கர்வமான ஆளுக்கெல்லாம் என் காரில் லிப்ட் கொடுக்கிறேன்.." என்று வந்தனாவிடம் அறிவித்தார்..

"நானும் உனக்காகத்தான் போனால் போகிறதுன்னு உங்க சித்தப்பா காரில் வர்றேன்.. இல்லைன்னா எனக்கிருக்கு ஆயிரம் பஸ்.."

கதிரவனும் வந்தனாவிடம் அறிவித்தான்.. சுதாகரனும்.. கதிரவனும் சண்டைக் சேவல்களைப் போல முறைத்தபடி கிளம்ப.. வந்தனா சுதாகரனைத் தொடர்ந்தாள்..

# 11

இருளைக் கிழித்துக் கொண்டு கார் விரைந்து கொண்டிருந்தது... காரின் ஒளி வெள்ளத்தில் தெரிந்த மரங்களடர்ந்த சாலையைப் பயமின்றி வேடிக்கை பார்த்தபடி வந்தாள் வந்தனா.. இதுபோலதானே ரயிலிலும் வந்தாள் என்ற நினைவு அவளுக்குள் வந்தது.. அது நின்றவுடன்தான் அவளுக்குள் பயம் வந்தது..

'இப்போதும் அதுபோல கார் நின்னுட்டா..?'

அவள் மிரட்சியுடன் சுதாகரனின் பக்கத்தில் ஒன்றிக் கொண்டாள்.. மகளின் பயத்தை உணர்ந்த சுதாகரன்..

"என்னம்மா..?" என்று பாசத்துடன் அவள் தலை கோதினார்..

"பயமா இருக்கு சித்தப்பா.."

அடர்ந்த வனப்பகுதியில் ரயில் நின்று விட்டதில் அவள் கொண்டிருந்த பயத்தை உணர்ந்து கொண்டவராக மகளை சமாதானப் படுத்தினார்..

"எதுக்கு பயம்..? நானிருக்கேன்.. டிரைவர் இருக்காப்புல.."

"ஏன்..? என்னைப் பார்த்தால் ஆளாத் தெரியலையா..?"

முன்சீட்டில் டிரைவரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கதிரவன் திரும்பிப் பார்த்துக் குரல் கொடுத்தான்..

"நான் மறந்தாலும் நினைவு படுத்தத்தான் நீங்க இருக்கீங்களே.." எரிச்சலுடன் சொன்ன சுதாகரன்.. வந்தனாவிடம்..

"எங்கேயிருந்தும்மா இவரைப் பிடிச்ச..?" என்று விசாரித்தார்..

"இதைப் பாருடா.. இவங்க ஆள் பிடிக்கிறவங்களா..?" கதிரவன் இடக்குப் பண்ணியதில் அவனை முறைத்தாள் வந்தனா..

"நான் பிடிக்கலை சித்தப்பா.. ரயில்தான் பிடிச்சுக் கொண்டு வந்து எனக்கு எதிர் சீட்டில உட்கார வைச்சிருச்சு.." என்று ரயிலையும் குறை சொன்னாள்..

"விதி வலியது.." என்றார் சுதாகரன்..

"இதை எதுக்குச் சொல்கிறார்ன்னு உன் சித்தப்பாவிடம் கேட்டுச் சொல்லு வந்தனா.." என்றான் கதிவரன்..

"எதுக்கோ.." என்று சொல்லி விட்டார் சுதாகரன்..

வந்தனா வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.. பக்கவாட்டில் திரும்பி அவளை இருளிலும் துளைக்கும் பார்வையை ஒரு மார்க்கமாக பார்த்துவிட்டு..

"பொருத்தமான சித்தப்பா.. அவருக்குத் தோதான அண்ணன் மகள்.." என்று பாராட்டுதல் போல சொல்லி வைத்தான் கதிரவன்..

"ஏம்மா.. இவரு இப்படித்தான் ஓட்டைப் பானையில நண்டை விட்டதைப் போல ரயிலில் லொடலொடன்ன பேசிக்கிட்டே வந்தாரா..? எப்படிம்மா காது கொடுத்துக் கேட்டுக்கிட்டு வந்த..?" மகளின் மீது பரிதாபப்பட்டார் சுதாகரன்..

"அடுத்த வீட்டு மனுசன் மேலே எத்தனை உசத்தியான அபிப்ராயம்..! ஹலோ சார்.. அதை நான் பேசலை.. உங்க அண்ணன் மகள்தான் திறந்த வாயை மூடாம லொடலொடன்னு பேசித் தள்ளிக்கிட்டே வந்தாங்க.." என்றான் கதிரவன்..

"என் அண்ணன் மகளைப் பற்றி உங்களுக்கு என்னங்க தெரியும்..?"

"உங்களுக்கு மட்டும் தெரிஞ்சிருச்சா..?"

"இவ அமைதியின் சிகரமாக்கும்.."

"சத்தமாச் சொல்லிராதீங்க.. சிகரம் கோவிச்சுக்கிட்டு நாலைஞ்சு ஆட்டோவோட வந்து மறியல் பண்ணிறப் போகுது.. பார்த்தாக் கெட்டிக்காரரைப் போல இருக்கறிங்க.."

"நீங்க பார்க்கலைன்னாலும் நான் கெட்டிக்காரன்தான்.."

"நம்ப முடியலை.. இப்படித்தான் உங்க அண்ணன் மகளை நம்பி ஏமாந்துக்கிட்டு இருக்கீங்களா..? இவங்க பேச ஆரம்பிச்சா கனமழை கொட்டறதைப் போல இருக்கும்.. காதைப்பிடிச்சுத் தோப்புக்கரணம் போட்டுத்தான் நிறுத்தியாகனும்..."

"நீங்க கண்டிங்க.."

"காணாமலா சொல்றேன்..? அப்பப்பா.. இவங்கள பேசா மடந்தையாய் இருக்க வைக்க நான் பட்ட பாடிருக்கே.."

"ஏம்மா வந்தனா.. உன்னை இந்த வாரு வாரறாரு.. இவருக்கா நீ ஐயோ பாவம் பார்த்தா..?"

"வேண்டாம் சார்.. உங்க அண்ணன் மக என்ன நான் போகிற ஊருக்கு இலவசமா பர்ஸ்ட் கிளாஸ் ஏஸி கோச்சில டிரெயின் டிக்கெட் வாங்கித் தந்துட்டாங்களா..?"

"இப்ப நீங்க வந்துக்கிட்டிருக்கிற கார் டிராவலிங்கே வந்தனா சொன்னதினால கொடுத்த இலவச லிப்ட்தான்.."

"அடேங்கப்பா.. இல்லைன்னா என்னால குற்றால மலைமேலே கால் வைச்சிருக்கவே முடியாது பாருங்க.."

சுதாகரனும்.. கதிரவனும் மோதிக் கொண்டதில் என்னடா இது.. என்று தலைமீது கை வைத்துக் கவலைப் பட்டுப் போனாள் வந்தனா..

'இப்படி ரெண்டு பேரும் அடிச்சுக்குவாங்கன்னு தெரிஞ்சிருந்தா.. இவனையும் காரில் கூப்பிட்டுக்கிட்டு வரலாம்ன்னு சித்தப்பாவிடம் ரெகமெண்ட் பண்ணியிருக்கவே மாட்டேனே..' நொந்து போனாள்..

அவளுக்கு அவனை அந்த இருள் சூழ்ந்த இரவில் ரயில் கிளம்பிய பின் வா என்று விட்டு விட்டு வர இயல வில்லை.. எதனால் அந்தத் தடுமாற்றம் அவளுக்குள் ஏற்பட்டது என்று அவளுக்கே தெரியவில்லை..

'இவன்தான் சித்தப்பாவுடன் சரிக்குச் சரியாக மல்லுக்கட்டாமல் வரக் கூடாதா..?'

அவன்மீது அவளுக்கு கோபம்.. கோபமாக வந்தது..

அவன் பேசாமல் வந்தால்தானே.. அவனை இறக்கி விடும் போது இயல்பாக கேட்பதைப் போல அவனுடைய முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்..?

அந்த மறக்க முடியாத ரயில் பயணத்தில் சந்தித்த அவனை மறப்பது அவளுக்கு கடினமான ஒன்றாக இருக்கக் கூடும் என்று அவளுக்குத் தோன்றியது..

அவன் மீதான அவளது அந்த ஈர்ப்பிற்கு வேண்டுமானால் எதிர்காலம் இல்லாமல் இருக்கலாம்.. ஆனால்.. அவள் மனதில் முதன் முதலாக ஒரு ஆணின் மீதான ஈர்ப்புத் தோன்றியது என்றால்.. அது அவன் மீது மட்டும்தானே..

அத்தகைய ஈர்ப்பை அவள் மனதில் உண்டாக்கியவனின் வேர் எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்ள அவள் மனம் விழைந்தது இயற்கைதானே..

அவன் இன்னார் என்று தெரிந்தால்.. என்றாவது ஒருநாள் அவனைப் பற்றி எண்ணமிடும்போது எங்கிருந்தோ வந்த ஒருவனை ரயில் பயணத்தில் சந்தித்துப் பிரிந்தோம் என்று நினைக்காமல்..

இன்னாரை.. இன்ன தேதியில்.. இன்ன இடத்திற்குப் போகும் போது ரயில் பயணத்தில் சந்தித்தோம் என்று நினைத்துக் கொள்ளலாமே..

அதற்கும் வழியில்லாமல் போய் விடுமோ என்று அவள் மனம் அடித்துக் கொண்டது..

இப்படியா ஒருவன்.. முன்னே.. பின்னே தெரியாத பெரிய மனிதரோடு மோதிக் கொண்டே வருவான்..?

"ம்ஹீம்.. லிப்ட் கொடுக்கிறதுக்கு முன்னாலேயே நான் ஒருதடவைக்கு.. ரெண்டு தடவை யோசிச்சிருக்கனும்.." பெருமூச்சு விட்டார் சுதாகரன்..

"எங்கே..? நீங்கதான் உங்க அண்ணன் மகள் என்ன சொன்னாலும் வேதவாக்குன்னு கேட்டுக்கறிங்களே.. இப்ப அனுபவிங்க.." என்றான் கதிரவன்..

அவர்கள் குற்றாலத்தில் கார் நுழையும் வரை இதே ரீதியில் பேசி சண்டை போட்டுக் கொண்டார்கள்.. சில தருணங்களில்..

"காரை நிறுத்துப்பா.. இவரை இறக்கி விடு.. பொடி நடையாய் நடந்து குற்றால மலையில் ஏறி வரட்டும்.." என்று கொதித்தார் சுதாகரன்..

சில தருணங்களில் கதிரவன் அதைச் செய்தான்..

"டிரைவர்.. காரை நிறுத்து.. இவரைப் போல ஆளுகிட்ட ஆர்கியு பண்ணிக்கிட்டு வாரதை விட வேற ஏதாவது காரில் லிப்ட் கேட்டு வந்து விடலாம்.. ஹப்பா.. தான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்ன்னு சொல்கிற ஆள்களைப் பார்த்திருக்கேன்.. இப்படி காலே இல்லைன்னு சொல்கிற ஆளை இப்பத்தான் பார்க்கிறேன்.." என்று சொன்னான்..

இதைச் சொன்னவன் சும்மாவும் இருக்காமல் வந்தனாவைப் பார்த்து..

"இவர் காத்துத்தான் உன்பக்கம் அடிச்சிருக்கா..?" என்று விசாரிக்கவும் செய்தான்..

'இனியாவது... இவன் முகவரியை அறிந்து கொள்வதாவது.. என்று நிராசையுடன் தலையைப் பிடித்துக் கொண்டாள் வந்தனா.. கார் சுதாகரனின் வீட்டை நோக்கி ஓடியது..'

"சித்தப்பா.. இவரை இறக்கி விட்டுப் போகலாமே.." என்றாள்..

"அது எதுக்கு தேவையில்லாம..? குற்றாலத்துக்கு நாம போகிறோம்.. கூட வந்தவருக்கு லிப்ட் கொடுத்தோம்.. அதுக்காக அவர் வீட்டு வாசப்படியிலே இறக்கி விடனும்னு ஒன்னும் அக்கிமெண்ட் போட்டுக்கலை.. வழியில் எங்கேயாவது இறங்கிக்கச் சொல்லு.." என்று சொல்லி விட்டார் சுதாகரன்..

அநியாயத்துக்கு நல்லவரான அவளுடைய சித்தப்பாவிற்கே கோபம் வரச் செய்தவனாக இருந்தால்.. இவன் எந்த அளவுக்கு இடக்குப் பிடித்தவனாக இருப்பான் என்று பல்லைக் கடித்தாள் வந்தனா..

அவளுக்கு அவன் முகவரியை அறியும் ஆவல் இருப்பதைப் போல அவனுக்கும் இருந்திருந்தால் இப்படி நடந்து கொண்டிருப்பானா..?

வெறுத்துப் போனாள் வந்தனா.. வழியில் இறங்கப் போகிறவனின் முகத்தைப் பார்த்து என்ன ஆகப் போகிறது என்று கார் ஜன்னலின் வழியாக வெளியே வேடிக்கை பார்த்தபடி வந்தாள்.. அவன் இறங்குகிற வழியாகக் காணோம்.. சுதாகரன் வந்தனாவின் முகத்தைப் பார்த்தார்.. அவள் விடிந்து கொண்டிருந்த புலர்காலை வெளிச்சத்தைப் பார்த்தாள்..

"கார் நிக்கிற இடத்தில இறங்கிக்கறேன்னு சொல்லுங்க.. நான் கார் சவாரியை இப்பத்தானே புதுசா பார்க்கறேன்..? இறங்க மனசு வரலை.. உங்க சித்தப்பா வீட்டு வாசலிலேயே இறங்கி பொடி நடையா நான் போக வேண்டிய இடத்துக்குப் போய்க்கறேன்.." என்றான் அவன்..

"ஐயோ பாவம்.. ஆட்டோவுக்கு செலவாளிக்க பணமில்லை போல.." சுதாகரன் சொன்னார்..

“ஆமாங்க.. பர்ஸ்ட் கிளாஸ் ஏஸி கோச்சில வந்தவனுக்கு ஆட்டோவுக்குச் செலவளிக்க பணமில்லை தான்..” கதிரவன் பதில் சொன்னான்..

இப்படியாகப்பட்ட பகைமைகூட சிறிது நேரத்திற்குள் இரண்டு ஆண்களுக்கு இடையில் உருவாகக்கூடும் என்பதில் வந்தனாவின் மனம் கனத்துப் போனது..

# 12

'இவனும்தான் வாயை விட்டு வனவாசம் போகாமல் அடங்கி.. ஒடுங்கி இருந்து தொலைந்திருந்தால்தான் என்ன..? குற்றாலத்துக்கு போக முடியாம நட்ட நடுக்காட்டில.. நடுராத்திரியில.. நின்னு போன ரயிலில நின்னுக்கிட்டு இருந்தவனைக் குற்றாலத்துக்கு கூப்பிட்டுக்கிட்டு வர சித்தப்பா ஒப்புக்கிட்டதே பெரிய விசயம்.. ஆஹா..! குற்றாலமலையில ஏற.. கார் சவாரி கிடைச்சிருச்சுன்னு மகிழ்ந்து போய் சித்தப்பாவுக்கு நன்றி சொல்ல வேணாம்.. என்னவோ.. இந்த மனுசனை காரில ஏத்திக்கிட்டு வர சித்தப்பா கொடுத்து வைச்சிருக்கனும்ங்கிறதப் போல பேசிக்கிட்டு வராம இருந்திருக்கலாமில்ல..'

வந்தனாவுக்கு ஆயாசமாக இருந்தது.. இப்படிப்பட்ட திமிரும்.. தெனாவெட்டுமாக ஒருவன் இருந்து தொலைப்பானா என்று அவள் ஆற்றாற்றுப் போனாள்..

அவள் ஆற்றாற்றுப் போவதை கண்டு கொள்ளாமல் சுதாகரனை ஜென்ம விரோதியைப் போல கதிரவன் முறைத்துப் பார்த்தான்.. வந்தனா வெறுத்துப் போய் விட்டாள்..

'ம்ஹூம்.. இந்த லட்சணத்தில் இவனோட அட்ரஸை நான் எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறது..?'

அவள் கேட்டுத் தெரிந்து கொள்வது ஒருபுறமிருக்க.. அவனாகச் சொன்னாலும் அதைக் கேட்டுக் கொள்ள முடியாது போல அவளுக்கு ஆகிவிட்டது..

'என் சித்தப்பாவுக்கு விரோதி... எனக்கும் விரோதிதான்..'

அந்த விரோதியைப் பார்க்கக் கூடாது என்று மனதுக்குள் சங்கல்பம் எடுத்துக் கொண்டவளாக அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

அவளிடம் எதையோ கேட்க நினைத்து முகம் பார்த்த கதிரவன்.. அவளின் முகம் திருப்புதலில் புருவங்களை கேலியாக உயர்த்தி இறக்கினான்..

நீ என்னவோ செய்து தொலை என்று நகம் கடிக்க முனைந்த வந்தனா.. அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் பல்லைக் கடித்துக் கொண்டு சாலையை பார்த்தாள்.. சுதாகரனின் வீட்டுக் காம்பவுண்டுக்குக் கார் நுழைந்தது..

நீண்ட சிமிண்டு கற்கள் பதிக்கப்பட்ட சாலையில் ஓடி அகன்று விரிந்து பரந்து காணப்பட்ட போர்டிகோவின் அரண்மனை வாசல் போன்ற நான்கு பெரிய தூண்களுக் கிடையில் நின்ற காரிலிருந்து அவள் இறங்கினாள்..

"அக்கா..."

காத்திருந்த சாய்சரத் ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டான்..

"சரத் கண்ணா.." பதிலுக்கு தம்பியை அணைத்துக் கொண்ட வந்தனாவைப் பார்த்து இரு கைகளையும் விரித்தாள் கருணா..

"வந்தனாம்மா.."

"சித்தி.."

சரத்தை அணைத்தபடி கருணாவின் கைகளுக்குள் புகுந்தாள் வந்தனா.. கணவரின் அண்ணன் மகளை தான் பெற்ற மகளைப் போல அரவணைத்த கருணாவின் பாசத்தில் அவள் உள்ளம் நெகிழ்ந்தது..

"என்னடாம்மா.. இப்படி டிரெயின் சோதனை பண்ணிருச்சே.."

"சோதனை மட்டுமா சித்தி.. பெரிய வேதனையயே பண்ணிருச்சு.."

பேசியபடி திரும்பிய வந்தனா.. காரை விட்டு இறங்கியவுடன் வழியைப் பார்த்துக் கொண்டு போகாமல் அங்கேயே நின்றிருந்த கதிரவனைக் கண்டதும் கேள்வியாக பார்த்தாள்..

‘சித்தப்பாகிட்ட இத்தனை மோதியும் இன்னும் வழியைப் பார்த்துக்கிட்டுப் போகாம இங்கேயே நிக்கிறானே..’

அவளின் பார்வையில் திரும்பிய சாய்சரத் கதிரவனைக் கண்டதும்.. வந்தனாவின் கையை விட்டுவிட்டு..

“ஹை.. மாமா..” என்று கதிரவனிடம் ஓடினான்..

‘மாமாவா..? யாருக்கு யார் மாமா..?’

வந்தனா ‘ஆ’ வென்று வாய் பிளந்து நின்று விட்டாள்.. நிச்சயமாக அவளுக்கு அவன் ‘மாமா’ இல்லை.. அவ்வாறிருக்க சாய் சரத்துக்கு மட்டும் எப்படி அவன் மாமாவாக ஆனான்..?

“என்ன சித்தி.. சாய் யாரையோ மாமான்னு சொல்றான்..?”

விளக்கம் கேட்டபடி கருணாவை திரும்பிப் பார்த்தாள்.. கருணாவோ அகலமான புன்னகையுடன்...

“போக்கிரி..! இருந்திருந்து டிரெயினில் கிளம்பி வந்தியே.. இதுக்காகத்தான் வந்தியா..? நீ ஏறினவுடன் டிரெயின் நடுக்காட்டிலே நகரமாட்டேன்னு அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டு நின்னுருச்சேடா..” என்று கதிரவனிடம் கேட்டு வைத்தாள்..

‘இவனை சித்திக்கும் தெரியுமா..? இவன் சித்தப்பாகிட்ட என்னமா மோதினான்.. அது இவங்களுக்குத் தெரியுமா..?’

விவரம் கேட்க வினயமாக சுதாகரனைப் பார்த்து வைத்தாள் வந்தனா.. சுதாகரனோ கதிரவனின் தோள்மீது கைபோட்டு கிளை கொண்டாடினார்..

“அதையேன் கேட்கிற கருணா.. உன் தம்பி டிரெயினை நிறுத்தினதுமில்லாம வந்தனாவை கதிகலங்க வைச்சுக்கிட்டு இருந்தாரு.. ரெண்டு பேரும் ஒரே கம்பார்ட்மெண்டில எதிரெதிர் சீட்டில உக்காந்திருக்காங்க.. வந்தனா கம்பார்ட்மெண்ட் அடையாளத்தைச் சொல்லி யிருந்தா.. உன் தம்பி சொல்லலை.. இவளைக் கூப்பிட்டுக்கிட்டு.. அப்புறமா போனில் காண்டாக்ட் பண்ணி இவர் எங்கேயிருக்கார்ன்னு தெரிஞ்சு கூப்பிட்டுக்கலாம்ன்னு போனா.. இவரும் வந்தனா பக்கத்திலேயே நின்னுக்கிட்டு இருக்காரு.. எனக்குத் தேடற வேலையையே வைக்கலை..”

ரயிலை விட நீளமாக.. நடுக்காட்டில் நின்றிருந்த ரயிலில் கதிரவனைச் சந்தித்த கதையை சுதாகரன் சொல்லிக் கொண்டே போக...

“சித்தப்பா..” என்று அதிர்ச்சியுடன் அழைத்தாள் வந்தனா..

“என்னம்மா..?” என்று பாசத்துடன் கேட்டார் அந்தச் சித்தப்பா..

“இவரை உங்களுக்குத் தெரியும்ன்னு ஏன் சித்தப்பா சொல்லலை..?” வந்தனாவின் மனத்தாங்கலுக்கு..

“ஹா.. ஹா..” என்று சிரித்து வைத்தார் சுதாகரன்..

கூடவே கதிரவனும் சிரித்து வைத்ததில் உக்கிரமானாள் வந்தனா.. சாய் சரத்தும் அந்தச் சிரிப்பில் ஐக்கியமானான்..

“சிரிக்காதேடா..”

மற்ற இருவரின் மீதிருந்த ஒட்டுமொத்த கோபத்தையும் தம்பியிடம் காட்டி அவனை அதட்டினாள் வந்தனா..

“என் செல்லத்துக்கு என்ன கோபம்..?” அவளின் கன்னம் தட்டி வினவினாள் கருணா..

“அதை அவங்களிடமே கேளுங்க சித்தி..” முகத்தை தூக்கி வைத்தபடி சொன்னாள் வந்தனா..

“கேட்டுட்டாப் போச்சு.. டேய்..! எதுக்காகடா என் பொண்ணு கோபப்படறா..?” கதிரவனை அதட்டினாள் கருணா..

“எனக்கும் தெரியலைக்கா.. அப்படியொரு வேண்டுதல் இருக்கும்ன்னுல்ல இதுவரைக்கும் நான் நினைச்சிருந்தேன்.. உன்கிட்டக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்ன்னு வந்தா நீ என்னைக் காரணம் கேட்கிற..”

“கிண்டலா பண்ற..? படவா..”

“போக்கா நீ வேற.. உன் மகளை கிண்டல் பண்ணிட்டாலும்.. ம்ஹீம்.. டிரெயினில் ஏற ஓடி வந்தவனைப் பார்த்து ஒற்றை விரலைக் காட்டி கபர்தார்ன்னு சண்டை போட்ட பெண்ணாச்சே உன் மகள்..”

“அப்படியா.. ஹா.. ஹா..”

கருணா சிரித்தபடி வந்தனாவை திரும்பிப் பார்க்க.. அவள் பதிலுக்கு சிரிக்காமல் உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள்.. அவளை சிறு பெண்ணைப் போல பாவித்து சுதாகரனை யாரென்று தெரியாததைப் போல பாவனை செய்து அவன் ஏமாற்றி விட்டிருந்ததில் அவள் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.. அதற்கு அவளுடைய சித்தப்பாவும் அல்லவா உடந்தையாக இருந்தார்..?

“ஏன் சித்தப்பா என்னிடம் சொல்லலை..?” அவள் கதிரவனை விட்டுவிட்டு சுதாகரனிடம் சண்டைக்குப் போனாள்..

“எதைடா..?” அவள் கருணாவின் மணாளன் என்பதை தன் காருண்ய வார்த்தைகளால் நிருபிப்பதைப் போல வெகு கருணையாக கேட்டு வைத்தார்..

“இந்த மனிதரைத்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கே..” வந்தனா சொல்லிக் கொண்டே போக..

“எந்த மனிதர்..?” என்று சுற்று முற்றும் பார்த்து தேடி வைத்தார் சுதாகரன்..

அவருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு கருணாவும் சாய்சரத்தும் தேடி வைத்ததில் கடுப்பாகிப் போனாள் வந்தனா.. அதிலும் சாய்சரத் ஓட்டமாக ஓடி.. கேட்டை விட்டு வெளியே எட்டிப் பார்த்து சாலையிலும் யாரும் தென்படவில்லையென்று சொல்லி வைத்ததில் அவளுடைய உக்கிரம் உச்சத்துக்கு ஏறியது..

கதிரவன் நமட்டுச் சிரிப்போடு அவளுடைய உக்கிரத்தை வேடிக்கை பார்த்து வைத்ததில் அவள் விழிகளில் நீர் அரும்பு கட்டிவிட.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

“டேய்.. வாடா இங்கே..” கதிரவன் சாய்சரத்தை கூப்பிட்டான்..

“பொறுங்க மாமா.. அக்கா சொன்ன மனிதர் யாருன்னு தேடிக்கிட்டு இருக்கேனில்ல..” சிறுவன் கத்தினான்..

“உன் அக்கா என்னைத்தான் சொல்றாங்கடா.. சரத்.. வெளியே தேடாதே..” என்ற கதிரவன் வந்தனாவை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்..

“உன்னைச் சொன்னாளா..?” கருணா வியந்ததில்..

“ஏன்க்கா என்னைப் பார்த்தா உனக்கு மனுசனாத் தெரியலையா..?” என்று கேட்டு வைத்தான் கதிரவன்..

“ஹா.. ஹா..” சுதாகரன் அதை ரசித்துச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்..

“போடா போக்கிரி..” கருணா சிரிப்பை அடக்கியபடி தம்பியின் முதுகில் ஒரு போடு போட்டாள்..

சாய்சரத் திரும்பி வந்தான்.. வந்தவன் கதிரவனிடம் போகாமல் எட்ட நின்றபடி அவனை ஏற இறங்க பார்த்தான்..

“இந்த வாண்டு என்னக்கா புதுசா என்னை அடையாளம் பார்க்கிறான்..? இப்படின்னு தெரிஞ்சிருந்தா ஐடெண்டி கார்டை என் கழுத்தில கட்டிக்கிட்டு வந்திருப்பேனே..” கதிரவன் சாய்சரத்தை தொடப் போனான்..

“டோன்ட்.. டச்..” சிறுவன் விலகி நின்று கொண்டான்..

“என் அக்காவை என்ன பண்ணினீங்க..” என்று ஒற்றைவிரலை உயர்த்தி கறாராய் கேட்டான்..

“இங்கே பாருடா கதிர்.. என்மகன் அவனோட அக்காவுக்கு வக்காலத்து வாங்கறதை..” கருணா பூரித்துப் போனாள்..

“யாரு இவன்.. சிங்கக் குட்டியில்ல..” சுதாகரன் மகனை சிலாகித்தார்..

“குடும்பமே கூட்டணி போட்டாச்சு..” என்றான் கதிரவன்..

“அப்படித்தாண்டா.. அதுக்கு இப்ப என்னங்கிற..?” என்றாள் கருணா.. ஆகமொத்தம் அவர்கள்தான் திரும்பவும் கூட்டணி போட்டு கிளை கொண்டாடியபடி வந்தனாவை மறந்து போனார்கள்..

வந்தனாவுக்கு எரிச்சல் வந்தது.. அந்த எரிச்சல் எதனால் வந்தது என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை.. அவள் மட்டும் முதன்மையான விருந்தாளியாக இருக்க வேண்டிய அவளுடைய சித்தப்பா வீட்டில் கதிரவன் முதன்மையான விருந்தாளியாக நின்று கொண்டிருப்பதால் அந்த எரிச்சல் அவளுக்கு வந்ததா.. இல்லை அவளுடைய சித்தப்பாவே அவனுடன் கூட்டணி போட்டுக் கொண்டு குற்றாலம் வரும் வரைக்கும் அவன் யார் என்று அவளுக்குத் தெரியவே தெரியாததைப் போல வந்தனாவிடம் நடித்துக் கொண்டு வந்தாரே.. அதனால் ஏற்பட்டதா.. இல்லை.. அக்கா என்று அவளைக் கட்டிப் பாசம் கொண்டாடிக் கொண்டிருந்த சாய்சரத்.. அவனைக் கண்டதும் அவளை மறந்து விட்டு மாமா என்று ஓடினானே.. அதனால் ஏற்பட்டதா..?

எது.. அது.. என்று தெளிவாக அனுமானிக்க முடியாமல் தடுமாறிப் போனாள் வந்தனா..

இதுபோன்ற தடுமாற்றங்கள் அவனைக் கண்ட பின்புதான் அவளிடம் ஏற்படுகின்றன என்று நினைவு கூர்ந்ததில் அவளுடைய எரிச்சல் அதிகரித்தது..

அவனைச் சந்திக்கும் வரை வந்தனா இதுபோல தடுமாறி நின்றதில்லை.. வெகு புத்திசாலி என்று அனைவராலும் பாராட்டப்படுகிறவளை.. வெகு எளிதாக அவன் முட்டாளாக்கி சிரித்துக் கொண்டிருக்கிறான்..

‘பேசாம சென்னைக்கே திரும்பிப் போய் விடலாமா..?’ என்று கூட வந்தனாவுக்குத் தோன்றி விட்டது..

மகளின் உணர்வை அவள் முகத்தில் படித்தாரோ என்னவோ.. சுதாகரன் சிரிப்பை நிறுத்தி விட்டு வந்தனாவைப் பார்த்தார்..

“சும்மா விளையாட்டுக்கு இவரைத் தெரியாததைப் போல ஆக்ட் பண்ணினேன்டா வந்தனா..” என்று இதமாக சொன்னார்..

‘விளையாட்டா..?’ கொலைவெறியுடன் கதிரவனை முறைத்தாள் வந்தனா.. அவள் பார்வையில் அவன் விழிகள் பளபளத்ததில் அந்தக் கொலைவெறி இருக்கவா.. போகவா.. என்று ஆட்டம் கண்டது..

‘இவன் ஆள் மயக்கி..!’ வந்தனா பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அதற்கும் அவன் இதழ்களில் புன்னகை அரும்பியது..

அவனுடைய காந்தமாக இருக்கும் கம்பீரமான கவர்ச்சியைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் வந்தனா.. அதனால்தான் இந்த அதீத தன்னம்பிக்கையும் திமிரும் அவனிடம் இருக்கின்றன..

ரயிலிலும் இதே தன்னம்பிக்கையையும்.. திமிரையும் அவன் அவளிடம் காட்டினான் என்ற நினைவில் வந்தனாவுக்குள் தோல்வி உணர்வு எழுந்தது..

அவளுடைய உணர்வுகளுடன் அவன் விளையாடிப் பார்க்கிறானா..?

"என்னதான் நடந்துச்சு..?" கருணா புருவங்களை உயர்த்தினாள்..

"அதுவா.. அக்கா.."

கதிரவன் ஆரம்பித்து சொல்லச் சொல்ல.. கருணா அவனையும்.. சுதாகரனையும் கோபித்துக் கொள்ளாமல் திரும்பவும் சிரிக்க ஆரம்பித்தாள்.. சும்மாவும் சிரிக்காமல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அவள் சிரித்து வைக்க.. சாய் சரத்தோ அவளை மிஞ்சியவனாக உருண்டு புரண்டு சிரித்து வைத்து வந்தனாவின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தான்..

"இவர் வந்தனாகிட்ட என்ன சொன்னாருன்னு தெரியுமா கருணா..?"

"என்னங்க..?"

"உனக்கு ஒன்னுன்னா ஓடிவர உன் சித்தப்பா இருக்கிறார்.. என் அக்காவுக்கு அது தெரியலையேன்னு சொல்கிறார் கருணா.."

"ஹா.. ஹா.. நிஜம்தாண்டா கதிர்.. அக்காவாய் லட்சணமாய் நானும் வந்திருக்கனும்தான்.. இவர் அண்ணன் மகள் உயர்த்தின்னு உன்னை விட்டுட்டுக் கிளம்பப் பார்த்தாரா..?"

"ஆமாம்க்கா.. கடைசியில உன் மகள்தான் எனக்காக மாமாகிட்ட ரெகமெண்ட் பண்ணினா.. பாவம் சித்தப்பா.. இவரையும் உப்பிட்டுக்கிட்டுப் போகலாம் சித்தப்பான்னு இவங்க சொல்ல.. மாமாவும் உடனே.. நீ கேட்டு இந்தச் சித்தப்பா எதைச் செய்ய மாட்டேன்னு சொல்லியிருக்கேன்னு பாசத்தைப் பிழிய.. அட.. அட.. அடா..! நடிகர்திலகம் இருந்திருக்கனும்.. மாமாவைக் கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்திருப்பார்.."

"கதிர்...!"

சுதாகரன் சிரித்தபடி கருணாவைப் பார்க்க.. அவளுக்கு அந்த முத்தத்தை அவருக்கு பரிசளிக்க வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது..

"வழியெல்லாம் இவங்க ரெண்டு பேரும் தெரியாதவங்களைப் போல சண்டை போட்டுக்கிட்டே வந்தாங்க சித்தி.." தாளமாட்டாதவளாய் புகார் சொன்னாள் வந்தனா..

"விடுடா செல்லம்.. அவங்க உன்கிட்ட விளையாட்டுக் காட்டியிருக்காங்க.." கருணா வந்தனாவை சமாதானப் படுத்த முனைந்தாள்..

"வாம்மா.. வாசலிலேயே நின்னுக்கிட்டு வழக்கடிச்சா எப்படி.. வீட்டுக்குள்ள போகலாம்.." சுதாகரன் வந்தனாவின் கையைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துப் போனார்..

'பார்த்தாயா.. உனக்கொன்னும் முதல் மரியாதை இல்லை.. எனக்குத்தான் முதல் மரியாதையாக்கும்.. இது என் சித்தப்பாவின் வீடு' என்ற செய்தியை கண்ணில் தேக்கியபடி திரும்பிப் பார்த்தாள் வந்தனா..

அதை உணர்ந்தவனைப் போல அவன் இதழ்களில் உதித்த ரகசியப் புன்னகையில் மீண்டும் அவன் வென்று விட்டதைப் போல உணர்ந்தாள் வந்தனா..

"பாலையாவது குடித்து விட்டு படுக்கப் போங்க.."

கருணாவின் கட்டளைக்கு கீழ்படிந்து பாலை அருந்திய வேளையிலும் நடந்தவைகளை நினைத்துப் பார்த்துப் பேசிச் சிரித்துத்தான் அந்தக் குடும்பம் மகிழ்ந்தது.. அவளை அவன் கேலிப் பொருளாய் ஆக்கிவிட்டான் என்று மனதுக்குள் வெகுண்டாள் வந்தனா..

# 13

**கா**லையில் கண் விழித்த போது உடல் சொடுக்கப் போட்டதைப் போல அயர்வின்றி புத்துணர்வுடன் இருந்ததை வியப்புடன் உணர்ந்தான் கதிரவன்.. செய்வதற்கு எதுவும் வேலைகள் இல்லையென்பதில் மனது தளைகாற்ற உற்சாகத்துடன் இருந்தது..

'இது போலத் தூங்கி ரொம்ப நாளாச்சு..'

எழுந்து ஜன்னலை விலக்கிப் பார்த்தான்.. சற்றுத் தொலைவில் தெரிந்த மலை முகட்டில் பால் போல கொட்டிக் கொண்டிருந்த அருவி தெரிந்தது.. அடர்ந்த காட்டின் பசுமை அவன் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தது.. தோட்டத்தைப் பார்த்தான்.. அடர்ந்த காட்டின் பசுமை அங்கேயும் தெரிந்தது..

சுதாகரனின் வீட்டின் தோட்டம் ஒரு பூங்காவைப் போல அழகாக பரந்து விரிந்திருக்கும்.. அதன் மையத்தில் நீச்சல்குளம்..

"அருவி இருக்கிற ஊரில ஸ்விம்மிங் பூல் எதுக்கு..?"

அங்கே வரும்போதெல்லாம் கருணாவிடம் வம்பிழுப்பான் கதிரவன்..

"அருவியில குளிக்கத்தான் முடியும்.. நீச்சலடிக்க முடியுமான்னு உன் தம்பியிடம் கேளு கருணா.." என்பார் சுதாகரன்..

அவருக்கும் கதிரவனுக்கும் மத்தியில் விளையாட்டுக் கலந்த நட்புறவு உண்டு.. பொதுவாக இந்தியக் குடும்பங்களில் இந்த மாமன் மைத்துனன் உறவு எப்போதும் கேலியும்.. கிண்டலும் நிறைந்ததாகவே இருக்கும்.. தமிழ் குடும்பங்களில் அது இன்னமும் அதிகமாக.. ஆழமாக.. வேர் விட்டிருக்கும்..

அந்த விளையாட்டைத்தான் முந்தைய இரவின் ரயில் சந்திப்பில் அவர்கள் விளையாடிப் பார்த்தார்கள்..

'அது தெரியாம அவ முழிச்ச முழி இருக்கே..'

வந்தனாவின் நினைவில் சிரித்துக் கொண்டான் கதிரவன்.. அவளை நினைக்கும் போதே அவன் மனதில் உற்சாகம் குமிழியிட்டது.. அவளுக்கும்.. அவனுடைய உற்சாகத்துக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருப்பதைப் போல அவனுக்கு தோன்றி வைத்தது.. நினைத்துப் பார்த்த போது.. அவளை முதன் முதலாய் ரயிலில் சந்தித்த நொடியிலேயே அந்த உற்சாகத்தை அவனுக்குள் அவள் ஏற்படுத்தி விட்டதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஏதோ ஒருவகையில் அவள் அவனை ஈர்த்தாள்.. அவளுடன் விளையாடிப் பார்ப்பதில் கிடைத்த உற்சாகம் அதீதமானதாக அவனுக்கு இருந்தது..

***"ஒரு மாலை இளவெயில் நேரம்..***
***அழகான இலையுதிர் காலம்..***
***சற்றுத் தொலைவினில்..***
***அவள் முகம் பார்த்தேன்..***
***அங்கே தொலைந்தவன் நானே..."***

வாய்விட்டுப் பாடியவனுக்கு.. பாடுவது அவன் தானா என்ற சந்தேகம் ஏற்பட்டது.. அதே நேரத்தில் ரயிலில் வந்தனா பாடுவதாக நினைத்துக் கொண்டு கேட்ட..

'நானா..? பாடுவது நானா..?' என்ற கேள்வி மனதுக்குள் எழுந்தது..

ஒரு திரைப்படத்தில் கவுண்டமணி.. ஏங்க.. இது எந்தப் படத்தில வர்ற வசனங்க.. என்று கேட்ட நினைவில் அவன் சிரித்துக் கொண்டான்..

அதுபோல அவளை அவன் கேட்டு வைக்கவில்லை என்ற ஒன்றைத் தவிர.. அந்தப் பாட்டுக்காக அவளை ஓட்டு.. ஓட்டு என்று ஓட்டினான் என்ற நினைவில் அவனது சிரிப்பு அதிகரித்தது..

சித்தபடி அவன் தோட்டத்தைப் பார்த்த போது சாய்சரத்துடன் பேசியபடி அங்கே வந்த வந்தனா அவன் பார்வையில் பட்டாள்.. குளித்து.. வேறு உடைக்கு மாறியிருந்தவளின் அழகான தோற்றத்தில் அவன் வசீகரிக்கப் பட்டான்.. இளம் பச்சை வண்ண சுரிதாரில்.. வெண்மை நிறத் துப்பட்டாவை வெகு இயல்பாக போட்டபடி கையைக் கையை ஆட்டி தம்பியிடம் கதை பேசிக் கொண்டிருந்தவளை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தான்..

வந்தனா குனிந்து சாய்சரத்திடம் எதையோ கேட்டாள்.. நெற்றிப் பொட்டில் ஒற்றைவிரலால் தட்டியபடி எதையோ யோசித்து பதில் சொன்னான்.. ஊடே அவனுடன் போட்டி போட்டபடி வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக் கொண்டு ஓடினாள்..

கதிரவனுக்கு ஜன்னலை விட்டு அகல மனமில்லாமல் போய் விட்டது.. வந்தனாவின் உற்சாகமான நடையுடை பாவனைகளில் தெறித்து விழுந்த இயல்பான அழகில் அவன் வசீகரிக்கப் பட்டான்.. அந்த அழகான வசீகரியின் அற்புதமான நடமாட்டத்தை அவளுக்குத் தெரியாமல் மறைந்திருந்து ரசிக்கும் வாய்ப்பை நழுவவிட அவன் தயாராக இல்லை..

சாய்சரத் எதிலோ கைவிரலை மோதிக் கொண்டு அவளிடம் விரல் நீட்டி மூக்கை உறிஞ்சினான்.. வந்தனா அவன் முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்து அந்த விரலை உற்றுப் பார்த்தாள்..

‘என்னமோ.. டாக்டரைப் போல இல்ல பில்ட்-அப் கொடுக்கிறா..’ அவனுக்கு சிரிப்பு வந்தது..

வந்தனா சாய்சரத்தின் விரலைப் பிடித்துக் கோணம் பார்த்ததில் அவள் என்னதான் செய்யப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பு இவனுக்கு வந்து விட்டது..

‘அவளோட துப்பட்டாவைக் கிழிச்சு தம்பியோட விரலுக்கு கட்டைப் போட்டு விட்டு பாசப்பயிரை வளர்க்கப் போகிறாளோ..’

அவள் செய்தாலும் செய்வாள் என்ற நினைவில் அவன் சிரிப்பு வலுத்தது.. வந்தனா சாய்சரத்தின் விரலைப் பிடித்துக் கோணம் பார்த்து விட்டு உதட்டைக் குவித்து ஊதினாள்..

‘இதுக்குத்தான் இத்தனை பில்ட்-அப்பா..?’

அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.. அவன் சிரித்த சிரிப்பு அவள் காதுகளில் விழுந்திருக்காதுதான்.. என்றாலும்.. எப்படி அவன் சிரிக்க ஆரம்பித்த அந்த நொடியில் அவள் விழிகளை உயர்த்தி அவன் நின்ற மாடி ஜன்னலைப் பார்த்தாள் என்று அவனுக்குப் புதிராக இருந்தது..

அண்ணாந்து பார்த்த வந்தனாவின் கண்களில் ஜன்னலில் தெரிந்த அவனுடைய சிரித்த முகம் பட்டு விட்டது.. அவள் ஊதுவதை நிறுத்தி விட்டு சட்டென்று எழுந்து நின்று விட்டாள்.. சாய் சரத்திடம் எதையோ சொன்னாள்.. அவனும் அண்ணாந்து பார்த்து வைத்தான்.. கதிரவன்..

“ஹாய்..” என்று அவனைப் பார்த்து கையாட்டினான்..

பதிலுக்கு கையாட்டப் போனவனை வந்தனா முறைத்து வைத்தாள்.. அவன் கையாட்டுவதை நிறுத்திக் கொண்டான்.. வந்தனாவின் முதுகுக்குப் பின்னால் நகர்ந்து அங்கே நின்றபடி கதிரவனைப் பார்த்துக் கையாட்டினான்.. அது தெரியாமல் அவள் கதிரவனை கித்தாய்ப்பாக ஒரு பார்வை பார்த்து விட்டு வீட்டைப் பார்த்து நடந்தாள்..

‘இவ தம்பி இவ சொன்னதைக் கேட்டு என்கூட டூ விட்டுட்டானாம்..’ கதிரவன் உதட்டைச் சுழித்து அவளை ரசித்துச் சிரித்தான்..

அவள் 'டூ' விட்டு விட்டதாக நம்பிக் கொண்டிருந்த அவளின் தம்பி.. தங்கக்கம்பி.. நின்று நிதானித்து.. அவள் வீட்டுக்குள்சென்று விட்டாள் என்பதை உறுதிபடுத்திக் கொண்டு கதிரவனைப் பார்த்து..

"ஹாய் மாமா.." என்று கையை ஆட்டினான்..

அவளுக்கு அது தெரிந்தால் என்னவாகும் என்று நினைத்துப் பார்த்தவனுக்கு அவளை சீண்டி விளையாடும் ஆசை பிறந்தது..

கீழே இறங்கி வந்தான்.. ஹாலில் கருணாவின் தோள்மீது சாய்ந்து ஏதோ கதை பேசிக் கொண்டிருந்த வந்தனா இவனைக் கண்டதும் விரோதப் பார்வையுடன் விலகி அமர்ந்தாள்..

சித்தப்பா மனைவியுடன் அவளுக்கிருந்த பாசப் பிணைப்பைக் கண்டவனுக்குள் வாஞ்சை வந்தது..

"எழுந்திருச்சியாடா..?" என்றபடி எழுந்தாள் கருணா..

"வேற வழி..? எழுப்பி விட ஆளில்லைன்னா தானாத்தானே எழுந்திருச்சாகனும்..?" என்று கருணாவிடம் கேட்டபடி வந்தனாவை அவன் பார்த்தான்..

'கேள்வி இங்கே.. பதில் அங்கேயா..?' நாக்கைத் துருத்தினாள் வந்தனா..

குவிந்த அவளின் இதழ்களைக் கிள்ளி விட்டால் எப்படி அவள் முகம் சுளிப்பாள் என்று நினைத்துப் பார்த்தான் கதிரவன்..

அவன் மனக்கண்ணில் தோன்றிய அந்தத் தோற்றத்தில் அவளைப் பார்க்க அவன் பார்வையில் மாற்றம் ஏற்பட்டது..

அந்தப் பார்வையைச் சந்தித்த வந்தனா திகைத்துப் போனாள்.. கதை பேசும் அவன் கண்கள் சொல்வது என்ன..?

குழம்பிப் போனவள் மிரட்சியுடன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அவள் மனம் படபடத்தது.. அவன் மீதான அவளது ஈர்ப்பு முந்தைய நாளின் இரவில் அவன் விளையாடிய கண்ணாமூச்சி விளையாட்டில் ஆட்டம் கண்டு போயிருந்தது.. அவளை மிக எளிதாக ஒரு குழந்தையை ஏமாற்றுவதைப் போல அவன் ஏமாற்றி விட்டதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை..

'அந்த விளையாட்டில சித்தப்பாவையும் கூட்டுச் சேர்த்துக்கிட்டானே..' நினைக்க நினைக்க அவளுக்கு மனம் தாங்கவில்லை..

"உன்னைப் பார்த்த உன் சித்தப்பா.. உன் கூட அதே கம்பார்ட்மெண்டில கதிரவனும் டிராவல் பண்ணியிருக் கான்ங்கிறதில ஆச்சரியப்பட்டுட்டாராம்.. பேச வாய் திறந்தா.. கதிரவன் உன் பின்னாலே நின்னுக்கிட்டு உதட்டு மேல விரலை வைச்சு பேச வேணாம்ன்னு சைகை பண்ணிட்டானாம்.. யாரோ போல அவன் பேச.. உன் சித்தப்பாவுக்கு அந்த விளையாட்டைப் பிடிச்சுப் போச்சு.. சும்மாவே அவனும் இவரும் ஒருத்தருக்கொருத்தர் கிண்டலும்.. கேலியுமா விளையாடிக்குவாங்க.. இப்பச் சொல்லவே வேணாம்.."

கருணா விவரித்துச் சிரித்தபோது வந்தனாவுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

"ரெண்டு பேரும் சண்டைச்சேவல்களைப் போல முறைச்சுக்கிட்டே வந்தாங்க சித்தி.."

ஆற்றாமையுடன் வந்தனா சொன்னதை ஆமோதித்து தலையை ஆட்டிச் சிரித்தாள் கருணா..

"அது அப்படித்தான்.. இங்கே வீட்டிலேயும் அந்தக் கதைதான்.. விளையாட்டாய் நிஜச் சண்டையைப் போலவே சட்டைக் கையை மடிச்சு விட்டுக்கிட்டு சண்டை போட்டுக்குவாங்க.."

‘இது எனக்குத் தெரியாம போச்சே...’

அது தெரியாமல் அவள் தவித்துப் போனதை அவன் எத்தனை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தான் என்பதில் வந்தனாவுக்கு முகத்தை எங்கே வைத்துக் கொள்வது என்றே தெரியவில்லை..

‘இப்படியாப்பட்ட தம்பி ஒருத்தன் சித்திக்கு இருக்கிறானா..? இத்தனை வருசமாய் இது எனக்குத் தெரியலையே..’

“எப்படித் தெரியும்..?” வருத்தத்துடன் கேட்டாள் கருணா..

அவளிடமிருந்து விலகியே இருந்த மாலதியுடன் ஒட்ட முயன்று தோற்றுக் கொண்டிருக்கும் வருத்தம் அவள் குரலில் ஒலித்தது..

“வருசத்துக்கு ஒரு தடவ பார்த்துக்கிறோம்.. இதில எங்க பக்க சொந்தத்தைப் பத்திச் சொல்ல நேரமும்.. சமயமும் எனக்குக் கிடைக்கவே இல்லியே..”

“நீங்க சென்னைக்கு வந்திருக்கிறப்ப இவங்க வீட்டுக்குப் போனதில்லையே சித்தி..”

“இல்லையே.. போவோம் வந்தனா.. போனா அங்கே தங்க மாட்டேன்.. உடனே திரும்பி வந்திருவேன்..”

“ஏன் சித்தி..?”

“அங்கே தங்க ஆரம்பிச்சா அதையே காரணம் காட்டி அக்கா எங்களை நம்ம வீட்டில தங்கவிட மாட்டாங்கங்கிற பயம்.. எனக்கு நம்ம வீட்டிலே தங்கனும்.. அக்கா என்னிடம் முகம் கொடுத்துப் பேசினாலும்.. பேசாட்டியும் நான் அவங்ககூடப் பேசனும்.. நம்ம சாய் சரத்துக்கு இது நம்ம பெரியப்பா வீடு.. இவங்க நம்ம பெரியம்மா.. இவங்க நம்ம அக்காக்கள் என்கிற பாசமும்.. சொந்தமும் வரனும்.. எனக்கு அது மட்டும்தான் முக்கியமா இருந்துச்சு..”

தழதழத்த கருணாவின் குரலில் இருந்த பாசத் தேடுதலில்..

“சித்தி..” என்று நெகிழ்ந்து போனாள் வந்தனா..

“எனக்கென்ன வந்தனா.. என்னை வளர்த்தது அம்மாவும் அவங்களுக்குப் பின்னாலே அப்பாவும்தான்.. அடுத்து என்னைத் தாய்க்குத் தாயா.. தகப்பனுக்குத் தகப்பனா இருந்து பார்த்துக்கிட்டது உன்னோட சித்தப்பாதான்.. அவரை வளர்த்தது உங்க அம்மா அப்படிங்கிறப்ப.. அவங்க பாசம் எனக்கும் கிடைக்கனும்னு தானே என்னால நினைக்க முடியும்..?”

வந்தனா பேசவில்லை.. சில நேரங்களில் பேச முடியாது.. எதைப் பேசி கருணாவின் மனவருத்தத்தை அவளால் போக்க முடியும்..?

மாலதியின் மனச் சுணக்கம் அவளுக்கும் கருணாவுக்கும் இடையிலிருக்கும் பொருளாதார ஏற்ற தாழ்வினால் ஏற்பட்டது.. சுதாகரன் நினைத்திருந்தால் பணத்தில் உயர்ந்த நிலையிலிருக்கும் கருணாவைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்திருக்கலாம் என்ற எண்ணமே அவளை பெற்ற பிள்ளைபோல வளர்த்த மைத்துனனிடம் விரோதம் பாராட்டி விலகி நிற்கச் செய்தது..

எதைச் சொல்லி ஓரகத்திகள் இருவரையும் ஒன்று சேர்க்க முடியும்..?

“கதிர் என்னோட ஒன்றுவிட்ட சித்தப்பாவோட மகன்.. என்னோட அப்பாவத் தாத்தாவும் அவனோட அப்பாவழித்தாத்தாவும் கூடப் பிறந்தவங்க..”

“சித்தி..” கையெடுத்துக் கும்பிட்டாள் வந்தனா..

“கோபம் வந்தா நாலு அடி வேண்டும்னாலும் அடிச்சுக்கங்க.. ஆனா.. இப்படி உறவு வழி ‘மேப்’ போட்டு என்னை அரட்டாதீங்க..”

"பிழைச்சுப் போ.. அதை விட்டுடறேன்.. ஆனாப் பாரு வந்தனா.. என்னோட அப்பாவும்.. கதிரோட அப்பாவும் குடும்பத்துக்கு ஒற்றைப் பிள்ளையா பிறந்து வளர்ந்தவங்க.."

"அதுக்கென்ன சித்தி..?"

"அதுக்கொன்ன..? ஒன்னுமேயில்ல.. கூடப் பிறந்தவங்கன்னு யாரும் இல்லாததினால இவங்க ரெண்டு பேரும் கூடப் பிறந்தவங்களை விட ஒத்துமையா இருப்பாங்க.."

"ஓஹோ.."

"நானும்.. கதிரும் கூட அப்படித்தான்.."

கருணா முறுவலித்தாள்.. சித்தியுடன் இந்த அளவுக்கு சொந்தம் கொண்டிருக்கும் ஒருவனைத் தன்னால் அடையாளம் காண முடியவில்லையே என்று குமைந்து போனாள் வந்தனா..

"திடிர்ன்னு வருவான்.. வீட்டையே கலக்குவான்.. ஒருவாரம் இருந்திட்டு ஓடிப் போயிருவான்.. இப்பக் கிளம்பி வர்றான்னு சொன்னதும்.. வந்தனா வருகிறப்ப இவனும் வர்றான்.. ரெண்டு பக்க சொந்தங்களும் இத்தனை வருசம் கழிச்சு இப்பத்தான் முதன் முதலா பார்த்துக்கிறப் போறாங்கன்னு நாங்க பேசிக்கிட்டோம்.."

"ஏன் சித்தி.. உங்க கல்யாணத்துக்கு உங்க சித்தப்பா வீட்டில இருந்து வந்திருப்பாங்கதானே..?"

"அவங்கதானே தாரை வார்த்துக் கொடுத்தாங்க..? ஆனா.. அக்காதான் அவங்க முகத்தைக் கூடப் பார்க்கலையே.. மூனாம் மனுசிபோல விலகி நின்னவங்க கிட்ட தானாப் பேச முடியாதுன்னு சித்தியும் விலகிப் போயிட்டாங்க.."

"என்னைப் பார்த்திருப்பாங்கதானே..?"

வந்தனாவுக்கு கதிரவன் அவளை பார்த்திருந்தானா என்பதை அறியும் ஆர்வம் வந்தது..

"பாத்திருக்கலாம்.. என் கல்யாணத்தப்ப உனக்கு பதினொரு வயசு.. சின்னப் பொண்ணு.. ஒருநாள் கல்யாணத்தில உன் முகத்தை அவங்க மறந்து போயிருக்கலாம்.. இவ்வளவு பேசறயே.. கல்யாணத்துக்கு கதிரவனும் வந்திருந்தான்.. என் கூடவே இருந்தான்.. உனக்கு அவன் முகத்தை ஞாபகம் இருக்கா..?"

இல்லை.. அவனைப் பார்த்த நினைவின் சுவடு வந்தனாவிடம் இல்லை.. அவளுக்கே இப்படியென்றால்.. திமிர் பிடித்த.. தெனாவெட்டு நிரம்பிய அவன் எப்படியிருப்பான்..?

"என்னவோ போ வந்தனா.. இப்படிப்பட்ட டிரெயின் டிராவலிலதான் நீயும்.. அவனும் ஒருத்தரையொருத்தர் மீட் பண்ணனும்னு இருந்திருக்கு போல.."

கருணா சொல்லிக் கொண்டிருந்த போதுதான் கதிரவன் மாடியிலிருந்து இறங்கி ஹாலுக்கு வந்து சேர்ந்தான்..

# 14

**வ**ந்தனா வேறுபக்கம் பார்ப்பதைப் போல ஜாடையாக அவனைப் பார்த்தாள்.. அவள் பார்வையை சந்தித்தவுடன் அவன் புருவங்களை உயர்த்தி இறக்கினான்.. அவள் அரண்டு போனவளாக வேறு திக்கில் பார்த்தாள்.. அவனுக்கு ஏனோ.. அவனை எழுப்பி விட காபியும் கையுமாக அவள் வந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்று தோன்றி வைத்தது..

"ஏண்டா.. நீயே ரெஸ்ட் எடுக்கனும்னு குற்றாலத்துக்கு வந்திருக்கிற.. இதில உன்னை எழுப்பி விட்டா அது பாவம்டா.."

கருணா சொன்னதற்கு இவனா பாவம் என்பதைப் போல அவனை ஏற இறங்க பார்த்து வைத்த வந்தனா வாய் பொத்திச் சிரித்தாள்.. கருணாவும் கூடச் சேர்ந்து சிரித்ததில்..

"துரோகி.." என்றான் கதிரவன்..

"எதுக்குடா சண்டைக்கு வருகிற..?" என்றாள் கருணா..

"பின்னே.. உன் தம்பியைக் கிண்டல் பண்றவங்க சிரிக்கிற சிரிப்பில நீயும் கூட்டணி போட்டா.. நான் கோபப் படமாட்டேனா..?" கோபப்படாமல் கேட்டான் கதிரவன்..

"பாருடா.. இவரு மட்டும் என் மகளைக் கிண்டல் பண்ண அவளோட சித்தப்பாகூடக் கூட்டணி போடுவாராம்.. அதையே நான் செய்தா மட்டும் அது துரோகமாம்.. போடா டேய்.."

கருணா கதிரவனின் தலையைக் கலைத்தாள்.. கலைந்து விட்ட முடி அவன் நெற்றியில் படிந்ததில் வந்தனாவுக்கு பார்வையை விலக்கிக் கொள்ள முடியாமல் போய் விட்டது.. அவனது கவர்ச்சி அதிகமாகி விட்டதைப் போல தோன்றியதில் அவள் மனம் சிக்கித் தவித்தது..

கன்னிமனதின் சலனம் மிகு ஆசைப் பார்வையை கொத்திக் கொண்டு போனது அவனது பார்வை..

என்ன என்பதைப் போல அவன் பார்வை வினவி வைத்ததில் என்னடா இது என்று நெற்றியை ஒற்றைக் கையால் தாங்கி தலைகுனிந்தாள் வந்தனா..

"தலைமுடியை பிய்ச்சது போதும்.. தம்பிக்கு காபி.. டீபி.. கொடுக்கிற உத்தேசம் உனக்கிருக்கா.. இல்லையா..?" கதிரவன் கருணாவிடம் கேட்டபடி வந்தனாவை பார்த்து வைத்தான்..

'இவன் என்ன இப்படியே பண்ணி வைக்கிறான்..?' வந்தனாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது..

"பல்லுத் தேய்ச்சியா..?" கருணா அதட்டினாள்..

வந்தனா சிரித்தாள்.. கதிரவன் தாடையைத் தடவியபடி அவளை ஒரு மௌனபார்வை பார்த்து வைத்தான்..

"நகத்தைக் கடிக்கிறது மட்டும் மோசமான பழக்கமில்ல சித்தி.. பல்லுத் தேய்க்காம காபியைக் குடிக்கிறதும் மோசமான பழக்கம்தான்.." என்றாள் வந்தனா..

கதிரவனின் கண்களில் மின்னல் வந்தது.. அதற்குள் கருணா அவனிடம் காபிக் கப்பை நீட்டி விட.. அதை வாங்கிக் குடித்தபடி வந்தனாவை தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான்..

'என்னை என்ன பிரேக் பாஸ்ட் டிபன்னு நினைச்சிட்டானா..?'

வந்தனா வேறுபக்கமாக பார்க்கச் சொல்லி அவனுக்கு சைகை செய்தாள்.. அவன் கண்கள் பளிச்சிட்டன.. கொஞ்சமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன்.. அவளுடைய சைகையை கண்டபின்னால் அதிகமாக பார்க்கத் தொடங்கினான்..

'சும்மாவாவது இருந்து தொலைச்சிருக்கலாம்..' தன்னைத் தானே நொந்து கொண்டாள் வந்தனா..

'முதலேயாவது கொஞ்சமா பார்த்தான்.. இப்ப என்னடான்னா பறக்காவெட்டியப் போலப் பார்த்து வைக்கிறானே..'

தலையைக் குனிந்து கொண்டு அடிப் பார்வையில் அவனைப் பார்த்தாள்.. அவன் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான்.. இவளது பார்வையைக் கண்டதும் 'உன்னை நானறிவேன்..' என்ற ரீதியில் அவன் கள்ளச்சிரிப்புச் சிரிக்க.. வந்தனாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை..

இப்படியா ஒரு மனிதன் அவள் உணர்வுகளோடு விளையாடுவான்..?

இதிலிருந்து தப்பித்தே ஆகவேண்டும் போலத் தோன்ற.. அவள் கருணாவிடம்..

"காலை டிபனை நான் பண்ணவா சித்தி..?" என்று கேட்டாள்..

"எதுக்கு..?" என்றான் அவன்..

"சாப்பிடத்தான்.." முறைத்தாள் வந்தனா..

"அதுக்கு ஆளை வைச்சு அடிச்சுரு.. அது பெட்டர்.."

"என்னது..?"

"பின்னே..? சமைச்சுப் போடறன்னு என்னை பழிவாங்கப் பாக்கறியா..? குற்றாலத்தை விட்டு என்னை ஓட வைக்கத்தானே பிளான் போடற..?"

"சித்தி.."

"ஏண்டா அவகிட்ட வம்புக்கு போகிற..?"

"ஏன்க்கா.. உனக்கே இது நியாயமாய் இருக்கா..? உனக்கு இவ செல்லம்ன்னா நீ சீராட்டு.. பாராட்டு.. நான் ஏன்னு கேட்க மாட்டேன்.."

"கேட்டுத்தான் பாக்கச் சொல்லுங்களேன் சித்தி.."

"அது என்ன தேவைக்கு..? நீயாச்சு.. உன் சித்தியாச்சு.. நான் குறுக்கே வர மாட்டேன்.."

"வந்துதான் பாருங்களேன்.."

"அது என்ன தேவைக்குன்னு நான் கேட்டுட்டேன்.. உங்க பாசப்பிணைப்பை உங்க கூடவே வைத்துக்கங்க.. என் வயிற்று வரைக்கும் கொண்டு வராதீங்க.. நீ சமைச்சுப் போடறதை யார் சாப்பிடறது..?"

"சித்தி.."

"கதிர்.."

"சும்மா இருக்கா.. உன் வீட்டில சமையல் வேலை செய்யற சௌம்யாக்காவோட கைப்பக்குவத்தில மயங்கிப் போன என்னோட அம்மா.. அதான்.. உன் சித்தி.. எத்தனை தடவை அந்தக்காவை நாடு கடத்தப் பார்த்திருக்காங்கன்னு உனக்குத் தெரியாதா..? நீதான் எதை வேணும்னாலும் விட்டுக் கொடுக்கிறேன் சித்தி.. ஆனா என் வீட்டில சமையல் வேலை செய்யற சௌம்யாக்காவை மட்டும் விட்டுக் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்ட.. சரி.. போனாப் போகுதுன்னு மனசைத் தேத்திக்கிட்டு குற்றாலத்துக்கு வந்து போகிறப்ப மட்டும் அவங்க கைப்பக்குவத்தில சமைச்சதை நொட்டை விட்டுக்கிட்டு சாப்பிட்டுட்டுப் போறேன்.. இப்ப அதுக்கும் வேட்டு வைக்கப் பார்க்கறியா..?"

"அட.. இதுதான் உன் கோபமா..?"

"என்னக்கா இவ்வளவு ஈஸியாக் கேட்டுட்ட.. நான் குற்றாலத்துக்கு வர்றதே செளம்யாக்காவோட சாப்பாட்டை டேஸ்ட் பண்ணத்தானே..? ஸோ.. உன் மகள்கிட்டச் சொல்லி வை.. இவ எதிலே வேணும்னாலும் வீடு கட்டி விளையாடட்டும்.. செளம்யாக்காவோட சாப்பாட்டில விளையாடக் கூடாது.. ஆமாம்.. சொல்லிட்டேன்.."

தீர்மானமாக சொன்னவனை தீர்க்கமாக பார்த்து வைத்தாள் வந்தனா.. அவன் செளம்யாக்காவின் சாப்பாட்டுக்கு மட்டும்தான் அடிமையா என்ற சந்தேகம் அவள் மனதில் எழுந்தது..

அந்த செளம்யா அப்படியாகப்பட்ட குணநலன்களை உடையவள்.. வாளிப்பான தேகமும்.. அதை உணர்ந்தும் உணராதவளைப் போல அவள் சிரிக்கும் சிரிப்பும் வந்தனாவை எரிச்சல் பட வைக்கும்..

சுதாகரனைப் போன்ற கண்ணியமான கணவர் வாய்த்திருக்கும் தைரியத்தில்தான் கருணா செளம்யாவை நீண்ட நெடுங்காலமாக வேலைக்கு வைத்திருக்கிறாள் என்று அவள் நினைத்துக் கொள்வாள்..

அந்த செளம்யாவின் கைப்பக்குவத்திற்காகத்தான் கதிரவன் குற்றாலத்திற்கு ஓடோடி வருகிறானா..?

'இருக்குடா மாமா உனக்கு...'

வந்தனா முறைப்புடன் எழுந்து கொண்டாள்..

"எங்கே போற வந்தனா..?" என்றாள் கருணா..

"எங்கேயோ போறேன்.." கதிரவனை முறைத்தபடி பதில் சொன்னாள் வந்தனா..

"கிளிக்கு ரெக்கை முளைச்சிருச்சு.. பறந்துருச்சு.." கதிரவன் நடிகர் திலகத்தை போல தோளைக் குலுக்கி கைகளை விரித்தான்..

"சித்தி.." வந்தனா சிணுங்கினாள்..

"சும்மாயிருடா கதிர்.." வந்தனாவை அணைத்துக் கொண்டாள் கருணா..

"போட் ஹவுஸ் போகலாம்.. வர்றியாக்கா.." சாய்சரத் அழைத்தான்..

"குட் ஐடியா.. வா போகலாம்.." வந்தனா எழுந்து கொண்டாள்..

"இப்பவே..? அக்காவும் தம்பியும் பிரேக் பாஸ்ட்ன்னு ஒன்னு இருக்கிறதை மறந்துட்டிங்களா..?" கருணா அதட்டினாள்..

"ஊர் சுத்தறதில அத்தனை ஆர்வம்.."

கதிரவனின் வார்த்தைகளில் அவனை முறைத்த வந்தனாவிற்கு.. ஏண்டா அவனைப் பார்த்தோம் என்று ஆகிவிட்டது.. ஊடுறுவும் அவனது துளைக்கும் பார்வையில் இவளுக்குத்தான் உள்ளுக்குள் குளிரெடுத்து வைத்தது..

'முறைக்கிறதுக்குக்கூட இவனைப் பார்த்துத் தொலைத்திருக்கக் கூடாது..' அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"ரெண்டு பேரும் வயித்தில எதையாவது போட்டுட்டு ஊர் சுத்தப் போங்க.."

கருணா அவர்களை டைனிங் டேபிளுக்கு பற்றிக் கொண்டு போனாள்.. கதிரவன் தாடையைத் தடவியபடியே வந்தனாவை பார்த்துக் கொண்டிருந்தான்..

"டேய்.. நீ குளிக்கப் போடா.."

டைனிங் ஹாலில் இருந்து கருணாவின் சப்தம் வந்தது.. மாடியேறினான்.. குளித்து உடைமாற்றி வந்தவன்.. டைனிங் ஹாலில் தட்டில் தாளம் போட்டுக் கொண்டிருந்த வந்தனாவையும்.. சாய் சரத்தையும் பார்த்ததும..

“இன்னுமா இதுக ஊர் சுத்தப் போகலை..?” என்று புருவங்களை உயர்த்தினான்..

“இன்னும் உங்க அருமை செளம்யாக்கா டிபனை செஞ்சு முடிக்கலையே..” அவனை வெட்டுவதைப் போல பார்த்தாள் வந்தனா..

“வருகிறவங்க வந்தனாத்தான்.. கிடைக்கிறது கிடைக்கும்..”

அமர்த்தலாக சொல்லி விட்டு அவன் அமர்ந்த அடுத்த நொடியில் டைனிங் டேபிளில் டிபன் அயிட்டங்கள்.. ‘டிஷ்..’ ‘டிஷ்..’ என்று மாயாஜாலம் போல தோன்றின..

‘இவ்வளவு நேரமா இந்த ஸ்பீடு எங்கே பிரேக் போட்டு ஒளிஞ்சிருந்தது..?’ பல்லைக் கடித்தாள் வந்தனா..

சும்மாவும் இல்லாமல் அந்த ‘ஸ்வீடு’ கதிரவனை நாணத்துடன் ஓரக்கண்ணால் பார்த்தும் வைத்தது..

“சூப்பர் செளம்யாக்கா..”

கதிரவன் பாராட்டியது செளம்யாவின் வெண் பொங்கலுக்காகவா.. இல்லை அவளின் வெள்ளை நிறச் சருமத்திற்காகவா என்று புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடினாள் வந்தனா..

செளம்யா கேரளத்தைச் சேர்ந்தவள்.. அந்த மண்ணுக்கேயுரிய நீண்ட தலைமுடி அவளின் அழகுக்கு அழகு சேர்த்தது.. தலைக்கு குளித்து.. விரித்து விடப்பட்ட கூந்தலின் முனையில் லேசாக முடிச்சிட்டு.. நெற்றியில் சந்தனக் கீற்றுடன் கேரள மாநிலத்துக்குரிய அனைத்து அடையாளங்களுடன் அவள் இருந்தாள்..

வந்தனா செளம்யாவின் நீண்ட கரும் கூந்தலை பொறாமையுடன் பார்த்தாள்.. அவளுக்கும் அழகான கூந்தல்தான் என்றாலும் அது அடர்த்தியாக கருமையுடன் இடுப்பு வரைதான் நீண்டிருக்கும்..

‘இவளுக்கு மட்டும் எப்படி இந்த அளவுக்கு நீண்ட முடி வந்திருக்கு..?’

அவளுக்கு வெண்பொங்கல் கசந்தது.. செளம்யாவின் நோட்டப் பார்வையை நோட்டமிட்டபடி அவள் வாய்க்குள் முணுமுணுப்பாக செளம்யாவை திட்டிக் கொண்டிருந்தாள்..

*“மலையாளக் கடலோரம்..*
*கவிபாடும் குருவி..”*

கதிரவன் சத்தமாக பாடி வைத்து செளம்யாவின் கவனத்தை ஈர்த்தான்.. மந்தகாசப் புன்னகை ஒன்றை பதிலாக தந்தாள் செளம்யா..

“எந்தா பறஞ்சு..?” அவள் இமைகளைக் கொட்டியபடி கதிரவனிடம் கொஞ்சிப் பேச முனைய..

“அவர் ஒன்னையும் பறயலை.. நான்தான் வெண் பொங்கல் சகிக்கலைன்னு பறயறதுக்காக உன்னை விளிச்சேன்..” என்று கடுப்படித்தாள் வந்தனா..

“எண்ட மலையாள பகவதி.. யான் செஞ்ச வெண் பொங்கல் சகிக்கலையோ..?” செளம்யா கவலையாக கதிரவனிடம் கேட்க.. அவன்..

“நோ.. நோ..” என்று மறுத்தான்..

“அம்மணி பறஞ்சதே..” என்றாள் செளம்யா..

"உன் வெண் பொங்களோட டேஸ்டைப் பத்தி இதுக்கு என்ன தெரியும்..? இதுவே அறியாப் பொண்ணு.. ரிலேடிவ் யாரு.. டிரெயின் பிரண்டு யாருன்னு தெரியாத பச்சைக் குழந்தை.. இது சொல்லிச்சுன்னு நீ கவலைப் படுவியா..? விடுக்கா.. உனக்கு நான் இருக்கேன்.." என்று சொல்லி வந்தனாவை கடுப்படைய வைத்தான் கதிரவன்..

'அவளுக்கு நீ இருக்கியா..?' கதிரவனை சுட்டெரிப்பதைப் போல பார்த்தபடி எழுந்து போனாள் வந்தனா..

"வாடா சரத்.. நாம போட் ஹவுஸ் பக்கம் போகலாம்.."

கிளம்பிய வந்தனாவை தடுத்து நிறுத்தினாள் கருணா..

"டிரைவர் இன்னைக்கு லீவ்.. சித்தப்பா வந்தவுடன் போயேன்.." என்று சொன்னாள்..

"எனக்கு கார் ஓட்டத் தெரியும் சித்தி.." என்றாள் வந்தனா..

"எனக்கும்தான்.." கை உயர்த்தினான் சாய்சரத்..

"ரெண்டுமே கத்துக்குட்டிக.. இதுகளை நம்பி காரை ஓட்ட விடறதாவது.." கதிரவனிடம் சொன்னாள் கருணா..

"கத்துக்குட்டி..!" ரசித்துச் சொன்ன கதிரவனை கொலை வெறியுடன் பார்த்தாள் வந்தனா..

'இவனுக்கு என்னைப் பேச லட்டு போல ஏதாவது ஒரு சான்ஸ் கிடைச்சுக்கிட்டே இருக்கு பாரேன்..'

திரும்பத் திரும்ப கதிரவனிடம் தோற்றுக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள் வந்தனா..

அப்போதுதான் சௌம்யாவிடம் வந்தனாவை 'அறியாப் பெண்..' என்று விமரித்தான் அவன்.. ரயில் சிநேகிதத்திற்கும்.. உறவினர்க்கும் வித்தியாசம் தெரியாத 'பச்சிளம் குழந்தை..' என்றான்.. அதைச் சொல்லி வாய் மூடிய சில நொடிகளிலேயே அவன் வாயால் அவளை 'கத்துக்குட்டி' என்று சொல்ல வைத்து விட்டாளே வந்தனாவின் சித்தி..

"சித்தி..."

"ஊஹீம்.. இந்த விசயத்தில் நீ என்ன சவுண்டு விட்டாலும் நான் கேட்டுக்க மாட்டேன்.. இது குற்றாலம்.. ஹில் ஸ்டேசன்.. ஒழுங்கா வண்டியோட்டறவங்களே இங்கேயிருக்கிற பாதைகளில காரை ஓட்டத் திணறுவாங்க.. இதில நீ கார் ஓட்டறதா..?"

"யெஸ் அக்கா.. கத்துக்குட்டி காரை ஓட்டக் கூடாதுதான்.."

"சித்தி.. என்னை நம்பி உங்க காரைக் கொடுக்கலைன்னாலும் பரவாயில்ல.. உங்க அழகுத் தம்பியின் திருவாயை கொஞ்சம் மூட வையுங்களேன்.. ப்ளீஸ்.."

அவள் கரம் குவித்து கருணாவிடம் வேண்டியதில்.. அக்காவும் தம்பியும் விழுந்து.. விழுந்து சிரித்தார்கள்..

# 15

கூப்பிடு தூரத்தில் தெரிந்த ஐந்தருவியின் அழகில் வந்தனாவின் மனம் குதூகலித்து விடவில்லை.. வளைந்து.. நெளிந்து ஓடிய மலைப்பாதையில் வெகு லாவகமாக காரை ஓட்டிக் கொண்டிருந்த கதிரவனிடமே அவள் மனம் சிக்கியிருந்தது..

'கடைசியில் நான் ஊர் சுத்த இவன் காரோட்ட வேண்டியதாகிருச்சே..' அவள் மனம் குமைந்தது..

சௌம்யாவிடம் உனக்கு நானிருக்கிறேன் என்று வாக்குறுதி அளித்த மகானுபவனிடம் பேசக்கூட அவளுக்குப் பிரியமில்லை.. நீ அவளுக்காகவே இரு.. என்று அவன் கண் முன்னால் காரை ஓட்டிக் கித்தாய்ப்பாய் வெளியேறியிருந்தால் அது எப்படியிருந்திருக்கும்..? அதை விட்டுவிட்டு.. அவளைக் கத்துக்குட்டி என்று சொன்னவனே காரை ஓட்ட.. செய்து வைத்த சிலை போல அவன் ஓட்டும் காருக்குள் உட்கார்ந்திருப்பது என்பது கொடுமையிலும் கொடுமை.. அதற்குப் பதிலாக குற்றாலத்தை விட்டு கோவாவுக்கு ஓடி விடலாம்..

அப்படி ஓட முடியாமல் சுதாகரனின் மீதான சித்தப்பா பாசமும்.. கருணாவின் மீதான சித்தி பாசமும்.. சாய் சரத்தின் மீதான தம்பி பாசமும்.. அவளை முக்கோணச் சிறையிலடைத்ததில்.. அவள் வாயை மூடிக் கொண்டு கருணாவின் கட்டளைக்கு கீழ்படிந்தாள்..

வந்தனாவுக்கு தான் வாயை மூட வேண்டி வந்து விட்டதே என்பது கூட வருத்தமில்லை.. கதிரவனின் வாயை மூட வைக்காமல் அவள் வாயை மூடவேண்டியதாகி விட்டதே என்றுதான் வருத்தத்திற்கு மேல் வருத்தமாக இருந்தது..

"டிரைவர் வந்தாக்கூட வயசுப் பெண்ணை அவனை நம்பி அனுப்பி வைக்க முடியாதுடா கதிர்.."

"ஏன்க்கா..?"

"அவனும் கொஞ்ச வயசு.."

"அதாவது.. வயசும்.. வயசும் பக்கத்திலிருந்தா பத்திக்கும்ங்கிற..?"

கதிரவனின் மறைமுகப் பேச்சு எதை உள்ளடக்கியிருக்கிறது என்று வந்தனாவுக்கு உள்ளங்கை நெல்லிக் கனியைப் போல தெள்ளத் தெளிவாக விளங்கியது.. கருணாவுக்குத்தான் அது விளங்கவில்லை.. அவள் தம்பி சொன்னதற்கு 'ஆமாம் சாமி..' போட்டாள்..

"ஆமாண்டா கதிர்.. அவன் வந்தனாவைப் பார்க்கிற பார்வையே சரியில்லை.. சீக்கிரமா வேற டிரைவரை மாத்தனும்.."

'இவன் மட்டும் ஒழுங்காப் பாக்கிறானா..?'

கருணாவிற்குத் தெரியாமல் வந்தனாவைப் பார்த்துக் கண்சிமிட்டிய கதிரவனின் செய்கையில் காண்டாகி தலையைப் பிடித்துக் கொண்டாள் வந்தனா..

'ம்ஹீம்.. கன்னிப் பொண்ணைப் பாத்துக் கண்ணடிக்கிற தம்பியை வைச்சுக்கிட்டு இந்தச் சித்தி டிரைவரோட பார்வையைப் பத்திப் பேசக்கூடாது..'

"சரியாச் சொன்னேக்கா.. பாக்கிற பார்வையிலே ஒரு கண்ணியம் இருக்கனும்.."

இதைச் சொல்லியபடியே அவன் வந்தனாவைப் பார்த்த பார்வை மேய்ச்சல் நிலத்தைப் பார்க்கும் மேயும் பார்வையாக இருக்க.. அவள் பல்லைக் கடித்தாள்..

"அதனாலதான் சொல்றேன்.. இவ இங்கே இருக்கிற வரைக்கும் ஊரைச் சுத்திப் பார்க்க நீ காரை ஓட்டிக்கிட்டுப் போ.."

"என்னது..??..!..!"

வந்தனா அதிர்ந்தாள்.. அவளுக்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

'இந்தச் சித்திக்கு கொஞ்சமாவது 'இது..' இருக்கா.. வயசும்.. வயசும்.. பக்கத்திலிருந்தா பத்திக்கும்ன்னா.. இவன் வயசும்.. என் வயசும் பத்திக்காதா..?'

இதை நினைக்கும் போதே அப்படிப் பற்றிக் கொண்டால்தான் என்ன என்ற எண்ணம் மனதில் ஓட.. வந்தனாவின் அதிர்வு அதிகமானது..

அவனே அவளை மட்டம் தட்டுவதிலேயே குறியாக இருக்கிறான்.. அவளைத் தோற்கடிக்க எந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு தேடிக்கொண்டிருக்கிறான்.. கிடைக்கும் வாய்ப்பை கபாலென்று பாய்ந்து கேட்ச் பிடித்துக் கொண்டு அவளது மூக்கை உடைத்து விடுகிறான்.. அவனை எந்த நொடியில் பார்த்துத் தொலைத்தாளோ.. அந்த நொடியிலிருந்து அவளது நுனி மூக்கின் கோபம் போன இடம் தெரியாமல் ஓடோடி விட்டது..

இப்பேற்பட்ட வரலாறை உடைய வீராதி வீரன்.. மன்மத தேசத்தின் மாமன்னன்... கன்னிப் பெண்ணுக்கு 'கண்ணி' வைக்கும் அசகாய சூரன்.. அவனிடம் போயா அவள் மனம் மயங்க வேண்டும்..?

'ஏய்ய்..! மனமே..! கபர்தார்..!'

அவள் ஒற்றை விரலை உயர்த்தி மனதை அடக்கி வைத்தாள்.. அதை அவன் பார்த்து விட்டு புருவங்களை உயர்த்தி..

"பாருக்கா.. உன் மகள் என்னைப் பார்த்துக் கொன்னுடுவேன்னு மிரட்டறா.." என்று போட்டுக் கொடுத்தான்..

'அடப்பாவி...!'

அடுத்த வாய்ப்பை அவனுக்கு கண்ணா லட்டு திங்க ஆசையா என்று அள்ளி வழங்கி விட்டதை உணர்ந்த வந்தனா கருணா திரும்பிப் பார்ப்பதற்குள் கைவிரலை மடக்கிக் கொண்டு சமர்த்துப் பெண்ணாய் நின்று விட்டாள்..

"இவ சாதுடா கதிர்.." கருணா சான்றிதழ் வழங்கினாள்..

"இவளா சாது..?" கதிரவன் கேலியாக கேள்வி கேட்டான்..

'ஏண்டா உனக்கு அந்த சந்தேகம்..? நீ பண்ற அழிச்சாட்டியத்தில உன் மண்டையை.. கிண்டையை உடைச்சுட்டேனா..' வந்தனா கை முஷ்டியை இறுக்கி மடக்கினாள்..

"உனக்கு இவளைப் பத்தி எதுவும் தெரியலைடா கதிர்.."

"தெரிஞ்சுக்கலாம்ன்னுதான் நானும் டிரை பண்றேன்.. எங்கே..? அது முடியலையே.."

கதிரவன் வந்தனாவை ஒரு மார்க்கமாக பார்த்தபடி சொன்னான்.. அவனின் அந்த ஒரு மார்க்கப் பார்வையில். அவன் எதைத் தெரிந்து கொள்ள நினைத்தான் என்று குழம்பிப் போனாள் வந்தனா..

"இவ வெளுத்ததெல்லாம் பால்ன்னு நினைக்கிறவடா கதிர்.."

"இது ஒரு கிரெடிட்டா..? பால் என்ன கருப்பாவா இருக்கும்..? வெள்ளையா இருந்தா அது பால்தான்னு இப்பப் பிறந்த கைப்புள்ளகூடச் சொல்லிரும்.. உன் மக சொல்ல மாட்டாளா..?"

"டேய்.. இவளுக்கு வெள்ளை மனசுடா.."

"எனக்கு மட்டும் கருப்பு மனசா..?"

"எதுக்கெடுத்தாலும் விதண்டாவாதம் பேசாதே கதிர்.. இப்ப நீ காரை ஓட்டப் போறியா இல்லையா..?"

கருணாவின் அதட்டலுக்கு உடனடியாக மறுமொழி சொல்லாமல் வந்தனாவை ஓர் பார்வை பார்த்தான் கதிரவன்..

'மாட்டேன்னு சொல்லிரனும் கடவுளே..' மனதார வேண்டிக்கொண்டாள் வந்தனா..

சௌம்யாவின் சமையலை நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிட்டவனெல்லாம் காரை ஓட்ட அவள் அந்தக் காரில் ஏறுவதா..?

'நெவர்...' மனதுக்குள் கூவினாள்..

அதைக் கேட்டுக் கொண்டவனைப் போல அவளுக்கு கடாட்சம் செய்ய முனைந்தான் கதிரவன்..

"என்னைப் பார்த்தா உனக்கு எப்படியிருக்குக்கா..?" என்று கருணாவிடம் கேட்டு வைத்தான்..

அவளோ தம்பியை ஏற இறங்கப் பார்த்து விட்டு..

"மாப்பிள்ளை போல ஜம்முன்னு இருக்கேடா கதிர்.." என்று கட்டை விரலையும்.. நடுவிரலையும் கோர்த்துக் காட்டினாள்..

"ம்ஹீம்.." வந்தனா விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தைக் கோணினாள்..

"என்னடா செல்லம்..?" கருணா அவளைக் கொஞ்சினாள்..

"நான் மாப்பிள்ளை போல இல்லையாம்.. அதைத்தான் அம்மணி இப்படிச் செப்பிக் காண்பிக்கிறாங்க.." வந்தனாவைக் கித்தாய்ப்பாய் பார்த்தபடி தமக்கைக்கு விளக்கம் சொன்னான் கதிரவன்..

அவன் பார்வையின் வீச்சை வந்தனாவினால் எதிர் கொள்ள முடியவில்லை.. அதுபோன்ற உல்லாசமும்.. கிண்டலும் கலந்த ரகசியப் பார்வையை அதற்கு முன்னால் அவள் சந்தித்தது இல்லை.. அவனிடம் தென்பட்ட ஆண்மை நிரம்பிய தெனாவெட்டும்.. திமிரும்.. அவளை அளவிடும் கூர்மையான பார்வையும் அவளை வாதுக்கு அழைத்தன..

அவள் என்னவோ கைக்குழந்தைபோலவும்.. அவன் என்னவோ மாமனிதனைப் போலவும் 'ஷோ' காண்பித்து 'போஸ்' கொடுத்த அவனின் அந்தக் கித்தாய்ப்பில் அவள் ரோசம் கொண்டாள்..

"உங்களுக்கு வேணும்னா உங்க தம்பி உயர்த்தியா இருக்கலாம் சித்தி... மத்தவங்களுக்கும் அப்படி இருக்கனும்ங்கிற அவசியமில்லை.. சொல்லி வையுங்க.." படபடவென்று பொரிந்தாள் வந்தனா..

"இல்லையே.. இவன் ஆறடிக்கு மேலே வளர்ந்து நிக்கிறானே.. எனக்கு மட்டும் இல்லைடா செல்லம்.. மத்தவங்க கண்ணுக்கும் இவன் உயர்த்தியாகத்தான் தெரிவான்.." தம்பியின் உயரத்தைப் பற்றி எடுத்துச் சொன்னாள் கருணா..

"வேணாம் சித்தி.. விட்டிருங்க.. அழுதுருவேன்.. தாங்கலை.." என்றாள் வந்தனா..

"தோடா.. ரெஸ்ட் எடுக்க வந்தவனைப் பார்த்து இவங்களுக்கு கார் டிரைவராக்கப் பார்க்கிறாங்க என் அக்கா.. அது எனக்குத் தாங்குமாம்.. அம்மணிக்குத்தான் எதுவும் தாங்காதாம்.." கதிரவன் தோள்களைக் குலுக்கினான்..

“ஹலோ.. இங்கே யாரும் உங்களை டிரைவரா இருங்கன்னு வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கலை..”

“ஹலோ.. நாங்களும் உனக்கு கார் டிரைவராத்தான் இருப்போம்ன்னு தாவிக் குதித்துக்கிட்டு ஓடி வரலை...”

“தாவிக் குதிக்கிறதா..? ஹ..! பாத்தீங்களா சித்தி.. குற்றாலத்துக்கு வந்ததும் உங்க தம்பியோட ஒர்ஜினாலிட்டி வெளியே வருது.. மரத்தில தாவறதை வீட்டுப் பக்கமா தாவச் சொன்னால் இப்படித்தான்..”

“அம்மணி என்னைக் குரங்குன்னு கலாய்ச்சிட்டாங் களாம்.. முடியலைடா சாமி.. ஏன்க்கா.. இதெல்லாம் ஒரு ஜோக்குன்னு சொல்லி வைக்குதே.. உனக்குச் சிரிப்பு வருது..?”

“உங்களோட ஒன்னுக்குமத்த ஜோக்குக்கே விழுந்து விழுந்து சிரிக்கிறவங்க எங்க சித்தி.. இந்த ஜோக்குக்கு சிரிக்க மாட்டாங்களா என்ன..? அதனால.. அவங்க சிரிப்பை ஓட்டி விடறதை விட்டுட்டு.. எங்களுக்கு வழியை விடுங்க..”

“பாருடா.. நானென்ன உன் வழியை அடைச்சுக்கிட்டா நிற்கிறேன்.. எனக்கு ஒன்னுமே இல்லைம்மா.. நீயாச்சு.. உன் சித்தியாச்சு.. நானொன்னும் உன் கையைப் பிடிச்சு இழுத்து நிறுத்தி வைக்கலை..”

“கையைப் பிடிப்பிங்களோ..? நான் யாரு தெரியுமா..?”

“யார் நீ..? ஏன்க்கா.. இவங்கள நம்ம மாமாவோட அண்ணன் மகள்ன்னுதானே நீ சொன்ன..? இந்தப் பொண்ணு என்னடானான்னா நான் யாரு தெரியுமாங்குதே..”

“இப்படிப் பேசினா.. நாங்க சும்மா விட்டிருவோமா..?”

“என்ன செய்யப் போற..?”

“நான் கராத்தேயில பிரௌன் பெல்ட் வாங்கியிருக்கேன்.. தெரியுமா..?”

“தெரியாதே.. அந்த பெல்ட்டை எங்கே வைச்சிருக்க..? டிரெயினில உன் கையைப் பிடிச்சு இழுக்க வந்தானுகள்ல..? அப்ப அந்த பெல்ட்டால நாலு விளாசு விளாசியிருக்க வேண்டியதுதான..?”

வந்தனா கதிரவனுடன் மோதிய மோதலில் வெளிப்பட்ட கதிரவனின் வார்த்தைகளில் அரண்டு போனாள் கருணா.. ரயிலில் என்ன நடந்தது என்று அவள் விசாரிக்க.. அதற்காகவே அந்த வார்த்தைகளை உதிர்த்த கதிரவன் நடந்த சம்பவத்திற்கு கண்.. காது.. மூக்கு வைத்துப் பிட்டுப் பிட்டு வைக்க.. கருணாவின் முகத்தில் தீர்மானம் வந்து விட்டது..

“இவ்வளவு நடந்திருக்கு.. நீ என்கிட்ட எதையுமே சொல்லலையே வந்தனா..”

“எங்கே சித்தி..? என்னைச் சொல்ல விட்டாத்தானே.. நேத்து நைட்டுத்தானே வந்தேன்.. விடியறப்போ சொல்லலாம்ன்னு பார்த்தா உங்க தம்பி குறுக்கே விழுநது ஆட்டத்தைக் கலைச்சுட்டாரே..”

“ஊஹீம்.. இதுக்கு மேலேயும் உன்னைத் தனியா வெளியே அனுப்ப முடியாது..”

“அதுக்கு..? என்னை வீட்டுக்குள்ள வைச்சு பூட்டி வைக்கப் போறிங்களா..? அதுக்குத்தான் குற்றாலத்துக்கு வந்தேனா..?”

“அப்படிச் சொல்லலைம்மா.. எங்கே போகிறதா இருந்தாலும் கதிரைத் துணைக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போ..”

கருணாவின் தீர்ப்பைக் கேட்ட வந்தனா பல்லைக் கடித்தபடி..

‘இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா..?’ என்ற பார்வையை கதிரவனின் பக்கம் வீசினாள்..

அவனோ.. இதற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்ற ரீதியில் முகத்தை வைத்துக் கொண்டு அறியாப்பிள்ளை போல நின்றான்..

“துணைக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போன்னு சொல்லுங்க சித்தி.. கேட்டுக்கறேன்.. அது என்ன உங்க தம்பியைத் துணைக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகச் சொல்கிறிங்க..? சித்தப்பாவைக் கூப்பிட்டால் அவர் துணைக்கு வர மாட்டாரா..?”

“அவர் வந்திட்டாலும்..! நீ வேற வந்தனா.. எனக்கே அவர் துணைக்கு வரமாட்டார்.. பிஸினெஸ்.. பிஸினெஸ்.. பிஸினெஸ்தான்.. காலையில போனா அர்த்த ராத்திரியில வீட்டுக்கு வர்ற மகராஜன்.. அவரைத் துணைக்கு கூப்பிட்டுக்கிட்டுத்தான் நீ குற்றாலத்தைச் சுற்றி வரப் போகனுமுன்னா.. நீ வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்க வேண்டியதுதான்.. எப்படி வசதி..?”

இவனுடன் போவதற்கு பேசாமல் வீட்டிலேயே இருந்து விடலாம் என்றுதான் வந்தனாவுக்குத் தோன்றியது.. அதற்குள் அந்தப் பக்கமாக வேலையிருக்கும் பாவனையில் சௌம்யா நடை பழக.. அவளை வாத்சல்யத்துடன் பார்த்து புன்னகைத்து வைத்தான் கதிரவன்..

‘இந்தக் கொடுமையைப் பாக்கிறதுக்கு இவனைக் காரை ஓட்ட வைத்து வெளியே போய் வருகிறது மேல்..’ என்று தோன்றி விட்டது வந்தனாவிற்கு..

அப்போதும் அவனை அவள் வம்புக்கு இழுக்கத்தான் செய்தாள்..

“எனக்கொன்னும் அப்ஜெக்சன் இல்லை சித்தி.. எனக்கு டிரைவரா வர உங்க தம்பிக்கு எதுவும் அப்ஜெக்சன் இருக்கான்னு கேட்டுக்கங்க..” என்று உதட்டை வளைத்தாள்..

கதிரவனின் கண்கள் மின்னின..

“எனக்கென்னக்கா..? என்னை நம்பி என் பின்னால் வர.. உன் மகள் தயாரா இருக்கும் போது நான் என்ன பின்வாங்கவா போறேன்..? வரச் சொல்லுக்கா..” என்றான் அவன்..

‘கொழுப்பைப் பாரேன்.. இவன் பின்னாலே நான் போறேனாம்..’

என்ன சொன்னாலும்.. இறுதிச் சொல் அவனுடையதாகவே இருக்கிறதே என்று தலைமுடியை பிய்த்துக் கொண்டாள் வந்தனா.. எதைச் சொல்லி அவனை வெல்வது என்ற ஆழ்ந்த யோசனையில் அவளிருக்க.. கார் சாவியை கையில் எடுத்துக் கொண்டே கதிரவன்.. கட்டின பெண்டாட்டியை அழைப்பதைப் போல அவளிடம் வந்து..

“போகலாமா..?” என்று கேட்டு வைத்தான்..

“எங்கே..?” அவள் பல்லைக் கடித்தாள்...

“எங்கே வேண்டும்ன்னாலும்.. நீ கூப்பிடுகிற இடத்துக்கு நான் வருகிறேன்..” அவன் ரகசியமாக கண் சிமிட்டினான்..

‘இதுவேறயா..?’ அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அதற்குள் சௌம்யா இன்னொரு சுற்றாக அந்தப் பக்கம் நடைபயின்றாள்.. அவளைப் பார்த்த வந்தனா..

“இப்பத்தான் யாரோ சௌம்யாக்காவைப் பார்த்து உனக்கு நானிருக்கேன் சொன்னாங்க.. இப்ப என்னடான்னா அதைக் காத்தில பறக்க விட்டுட்டு.. காரோட்டியாக் கிளம்பறேன்னு பறக்கிறாங்க.. ம்ஹீம்.. மோகம் முப்பது நாள்ன்னு சொல்லுவாங்க.. இங்கே என்னடான்னா.. முப்பது நிமிசத்தைக் கூடத் தாண்டலையே..” என்று கதிரவனை ஜாடை பேசினாள்..

“யாருக்கா அப்படிச் சொன்னது..?” புரியாமல் சரத் கேட்டான்..

# 16

"என்னது..??"

கோபத்தில் மூச்சிரைக்க நின்றிருந்தவளை வீட்டுக்குள் போய்விட்டு வந்த கருணா வினோதமாக பார்த்தாள்..

"ஏன் வந்தனா இப்படி நிற்கிற..?"

"அது ஒன்னுமில்லைக்கா.."

கதிரவன் விளக்கம் சொல்ல ஆரம்பித்த போதே வில்லங்கமாக எதையாவது சொல்லி வைக்கப் போகிறான் என்று வந்தனாவின் மனதுக்குள் அலாரம் அடித்தது.. அவனும்..

"காரில முன் சீட்டில என் பக்கத்தில்தான் உட்கார்ந்துக்கிட்டு வரனும்னு உன் மகள் அடம் பிடிக்குது.. சரத் என்னடான்னா.. அவன்தான் உட்காருவேன்னு வழக்கடிக்கிறான்.. அதான்.. எப்படிப் பஞ்சாயத்து பண்றதுன்னு யோசித்துக்கிட்டு இருக்கேன்.. அதுக்குள்ள நீயே வந்துட்ட.." என்று சொல்லி.. அதை மெய்ப்பித்தான்..

"இதுக்கா வழக்கடிப்பீங்க.. போகிறப்ப வந்தனா உன் பக்கத்தில உட்கார்ந்துக்கட்டும்.. திரும்பி வர்றப்ப சரத் உட்கார்ந்துக்குவான்.. என்னடா சரத்.. ஓகேவா..?"

ஷீவைத் தேடிக் கொண்டிருந்த சாய்சரத்திடம் கருணா வினவ.. அவன் ஷீவைக் கைப்பற்றியபடி..

"என்ன ஓகே..?" என்று கேட்டு வைத்தான்..

அதற்கு மேலும் அதைக் கேட்டு ரத்த அழுத்தத்தைக் கூட்டிக் கொள்ளாமல் சட்டென்று காரின் பின்பக்கக் கதவைத்திறந்து ஏறி அமர்ந்து விட்டாள் வந்தனா..

"என்ன.. நீ இங்க உட்கார்ந்துட்ட..? திரும்பி வர்றப்ப முன்சீட்டில உட்கார்ந்துக்கறியா..?" கருணா விசாரித்தாள்..

வந்தனா கையெடுத்துக் கும்பிட்டாள்..

"வேணாம் சித்தி.. உங்க தம்பி பண்ற ளொள்ளைத் தாங்க முடியல.. நீங்களும் சேர்த்துப் படுத்தாதீங்க.. அவரைக் காரை எடுக்கச் சொல்லுங்க.. டேய் சரத்.. ஓடி வாடா.."

அவள் கத்தின கத்தலில் கைக்கொரு ஷீவாக.. ஓடிவந்து காரில் தொற்றிக் கொண்டான் சாய்சரத்..

"டேய்.. ஷீவை மாட்டிக்கிட்டுப் போடா.." என்றாள் கருணா..

"போங்கம்மா.. அதுக்குள்ள அக்காவுக்கு டென்சன் ஏறிடும்.. நான் காருக்குள்ளேயே ஷீவை போட்டுக்கறேன்.." கையாட்டினான் சரத்..

"நல்ல புள்ளைக.."

தலையை ஆட்டிவிட்டு கருணா வீட்டுக்குள் போய் விட்டாள்.. கார் சாலையில் இறங்கி ஓடியது..

காரை ஓட்டிக் கொண்டிருந்த கதிரவன் முன் பக்க கண்ணாடியில் வந்தனாவை பார்வையிட ஏதுவாக சரி செய்து கொண்டான்..

உர்ரென்ற முகத்துடன் இருந்த வந்தனா.. அதைக் கவனித்துவிட்டு கண்ணாடியின் வழியாக அவனை முறைத்தாள்.. பதிலுக்கு அவன் புருவங்களை உயர்த்தினான்..

ஐந்தருவியின் அருகே இருந்தது அந்த போட் ஹவுஸ்.. கூட்டம் அதிகமில்லை.. தனியான படகு ஒன்றில் சாய்சரத்துடன் அமர்ந்த கதிரவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள் வந்தனா.. லேசாக விசிலடித்தபடி துடுப்பைப் போட ஆரம்பித்தான் கதிரவன்.. படகு நகர்ந்தது..

"ஏண்டா சரத்.. காரையும் நானே ஓட்டனும்.. படகிலயும் நானே துடுப்புப் போடனும்னா இது அநியாயமில்ல.."

வந்தனாவைப் பார்த்தபடி கேட்டான் கதிரவன்.. அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டி விட்டு.. தண்ணீருக்குள் கைவிட்டு அளைந்தாள்.. நீர்த்திவலைகள் அவள் முகத்தில் தெறித்து விழுந்ததில் அவள் முகம் காட்டிய சிலிர்ப்பில் புதிதாகப் பூத்த பூவை உணர்ந்தான் கதிரவன்..

"வேணும்னா நான் துடுப்புப் போடவா மாமா..?" சரத் கை நீட்டினான்..

"சின்னவனா இருந்தாலும்.. நீ பாவம் பார்க்கறியேடா.. என்ன இருந்தாலும்.. ஒரு ஆணோட கஷ்டத்தை இன்னொரு ஆண்மகனாலதான் புரிஞ்சுக்க முடியும்.."

ஏற்ற இறக்கத்துடன் கதிரவன் பேசிய விதத்தில்.. இவனை என்ன செய்தால் தேவலாம் என்று வந்தனாவுக்கு சிரிப்பு வந்தது.. அதைப் பார்த்தபடி சாய் சரத்திடம் பேச்சைத் தொடர்ந்தான் கதிரவன்..

"சும்மாவா சொன்னாங்க.. ஒரு ஆணோட மனசை.. இன்னொரு ஆணாலேதான் புரிஞ்சுக்க முடியும்ன்னு.."

'போடா டேய்..'

வந்தனா கையில் அள்ளிய நீரை அவனை நோக்கி வீசினாள்.. அவன் முகத்தில் விழுந்த நீர்த் திவலைகளில் நனைந்தவன் வாய் விட்டுச் சிரித்தான்.. அந்தச் சிரிப்பு வந்தனாவையும் தொற்றிக் கொண்டது..

"ஆனாலும்டா சரத்.. உன் மாமாவுக்கு இத்தனை வாய் ஆகாது.." கதிரவனைப் பார்த்து அழகு காட்டியபடியே சாய்சரத்திடம் சொன்னாள் வந்தனா..

"ஆமாமாம்.. எல்லாரோட வாயையும் உன் அக்கா அளந்து பாத்திருககாங்க பாரு.. என் வாயை சொல்ல வந்திட்டாங்க.." என்றான் கதிரவன்..

அது முற்பகலைத் தொட்டுக் கொண்டிருந்த காலை நேரம்.. ஏரியில் இருந்த தண்ணீரில் சூரியனின் கதிர்கள் பட்டு பிரதிபலித்தன.. இங்கொன்றும்.. அங்கொன்றுமாக மிதந்த படகுகளில்... இருந்த ஜோடிகளில் சிலர் அன்யோன்யமாக நெருங்கி அமர்ந்திருந்தார்கள்..

வந்தனா கவலையுடன் சரத்தைப் பார்க்க.. கதிரவன் உல்லாசமாக வந்தனாவை பார்த்தான்.. இருவரின் பார்வைகளும் சந்தித்துக் கொண்ட அந்த மின்வெட்டும் நேரத்தில் வந்தனாவின் உடலில் மின்சாரம் பாய்ந்து விலகியது..

அவள் அவசரமாக பார்வையை விலக்கிக் கொண்டாள்..

*"எங்கேயோ பார்த்த மயக்கம்.."*

கதிரவன் பாட ஆரம்பித்த போது.. அவள் உடலில் விலகிப் போன மின்சாரம் மீண்டும் வந்து அமர்ந்தது..

அந்த ஏரியின் அழகான சூழல்.. நீர்ப்பரப்பில் மிதந்த படகு.. சளக்.. சளக்கென்று நீரில் பதிந்து மீண்ட துடுப்புகளின் தாளலயம்.. கதிரவனின் காந்தப் பார்வை.. ஆளை அடித்துப் போட்டு மயக்கும் அவனின் ஆண்மை கலந்த கம்பீரம்.. அவன் விழிகளில் வந்து போன ரகசிய

பரிபாஷைகள்.. இமையோரம் குடிகொண்ட சிறு கண் சிமிட்டல்கள்.. அவன் குரலில் குழைந்து வந்த வசிய மருந்து..

வந்தனா.. வந்தனாவாக இல்லை.. அதுபோன்ற தொரு அனுபவம் அதற்கு முன்னால் அவள் வாழ்வில் வந்ததில்லை.. அவளின் உயிரில் நுழைந்து அசைத்துப் பார்த்த அற்புதமானதொரு ராகமாக அவன் பாடல் இருந்தது..

*"எங்கேயோ பார்த்த மயக்கம்..*
*எப்போதோ வாழ்ந்த நெருக்கம்..*
*தேவதை இந்த சாலை ஓரம்..*
*வருவது என்ன மாயம்.. மாயம்.."*

அவளையே பார்த்தபடி அவன் பாடிய பாடலில் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள் வந்தனா.. அவளைச் சுற்றி அடித்துப் போன அந்தப் பாடலின் அற்புத அலையில் அவள் மனம் அடித்துச் செல்லப்படுவதை அவளால் உணர முடிந்தது.. அவளறியாத அந்த புது அனுபவத்தில் அவள் மூச்சுத் திணறிப் போனாள்.. அவள் மனதை மயிலிறகாய் அவன்பாடல் வருடியது..

*"இன்னும் கண்கள் திறக்காத சிற்பம்..*
*ஒருகோடி பூப்பூக்கும் வெட்கம்..*
*ஆண்மனதை அழிக்க வந்த சாபம்..*
*அறிவை மயக்கும் மாயதாகம்..*
*இவளைப் பார்த்த இன்பம் போதும்..*
*வாழ்ந்து பார்க்க நெஞ்சம் ஏங்கும்.."*

ஊசியிலைக் காடுகளின் மத்தியில் ஊடுறிவ வந்த ஊதக்காற்றால் அவள் மனதை குளிர் நிரப்பி ஊடுறிவயது அந்தப் பாடல்..

பாடலின் ஒவ்வொரு வார்த்தையிலும் உள் நுழைந்து பாடினான் கதிரவன்.. அவனது பார்வையும்.. பாடலும் அவளை ஏதோவொரு மாய உலகத்துக்கு அழைத்துச் சென்றன.. மீண்டு வர முடியாமல் திணறியவளின் கரம் பற்ற அவன் கை நீட்டிய போதுதான் படகு கரைக்குத் திரும்பி விட்டதை உணர்ந்தாள் வந்தனா..

"என்னடா சரத்.. உன் அக்காவுக்கு படகை விட்டு கரைக்கு வர மனசில்லையா..?"

கதிரவனின் குரலில் பழைய குறும்பு திரும்பியிருந்தது.. இவனா சற்று நேரத்திற்கு முன்னால்.. கண்களில் கனவுடன் அவளைப் பார்த்து மயக்கும் பாடலைப் பாடியவன் என்ற ஆச்சரியம் அவளுக்குள் அழுந்தது..

அவள் படகை விட்டு கரைக்கு வர நீட்டிய அவனின் கையை இறுகப் பிடித்தாள்.. அவனது வலிமையான கரத்தின் ஸ்பரிசத்தில் அவளின் தளிர்விரல்கள் நடுங்கின.. அதை உணர்ந்தவனைப் போல அவனின் விரல்கள் அவள் விரல்களை இறுக்கிப் பிடித்து அமைதிப் படுத்தின..

வந்தனா கரையில் கால் பதித்தாள்.. அவள் விரல்களைப் பிடித்திருக்கும் நினைவை மறந்தவனைப் போல சாய்சரத்துடன் பேசியபடியே நடந்தான் கதிரவன்..

அவனுடன் கை கோர்ந்து நடந்து கொண்டிருக்கும் உணர்வில் கை விரல்களை உறுவ முயன்றாள் வந்தனா.. இறுக்கிப் பிடித்த அவனின் விரல்களின் வலிமை உன்னை விட்டேனா பார் என்றது..

போட் ஹவுசின் பக்கத்திலிருந்த சில்ரன் பார்க்கிற்குப் போனார்கள்.. அப்போதும் கதிரவன் வந்தனாவின் கையை விடவில்லை.. எதிரே வந்த யாரோ ஒருவர் கதிரவனிடம் பேச ஆரம்பித்தார்.. அவரிடம் சரளமாக பேசிய கதிரவனின் கையோடு கை பிணைந்திருந்த வந்தனாவின் மீது அவர் பார்வை படிந்து.. படிந்து.. மீண்டது.. சங்கடத்துடன் வந்தனா கையை விலக்க முனைய விடாமல் இறுக்கிப் பிடித்தது கதிரவனின் கரம்.. அவர் போன பின்பு.. கையை உதறி விடுவித்தவள்..

"அவர் என்ன நினைப்பார்..?" என்று கதிரவனிடம் சீறினாள்..

"அந்த நினைப்பு உனக்கிருந்திருக்கனும்.." பதிலுக்கு சீறினான் அவன்..

"செய்கிறதையும் செய்துட்டு என்மேல குற்றம்ங்கிறதைப் போலப் பேசறிங்களா..?"

"இல்லையா..? அவர் முன்னாலே கையை உறுவப் பார்த்தியே.. உன் விருப்பமில்லாம உன் கையை பிடிச்சுக்கிட்டு வந்தேன்னு அவர் என்னைத் தப்பா நினைச்சிருக்க மாட்டாரா..?"

"ஓஹோ.. அப்ப.. விருப்பத்தோட உங்க கையை பிடிச்சுக்கிட்டு வந்தேன்னு அவர் என்னைத் தப்பா நினைச்சா அது உங்களுக்குப் பரவாயில்லையா..?"

"முட்டாள் போல பேசாதே.. அதிலென்ன தப்பிருக்கு..? நாம ரிலேடிவ்ஸ்.. ஒருத்தர் கையை ஒருத்தர் பிடிச்சுக்கிட்டு வந்தா தப்பில்லை.. அது தப்புங்கறதைப் போல நீ பிஹேவ் பண்ணினதுதான் தப்பு..."

சுள்ளென்று கதிரவன் பேசியதில் இருந்த உண்மை உறைத்தாலும்.. இதிலும் அவனிடம் தோற்றுப் போய் விட்டதைப் போல உணர்ந்தாள் வந்தனா..

எதைச் சொன்னாலும்.. அது அவனின் சொல்லாகத் தான் இருக்க வேண்டுமா..? அந்த வேகத்தில்..

"உங்களுக்கு எதுவும் தப்பில்லை.." என்று சொல்லி விட்டாள்..

"எதுவும்ன்னா..?" அவன் கண்கள் இடுங்கின..

அவன் பார்வை அவளை ஆராய்ந்ததில் வந்தனாவின் உடல் கூசியது.. அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு தடுமாறினாள்..

"உன் கை விரலைத்தானே நான் பிடிச்சேன்..? வேற என்ன பண்ணினேன்..? எதுவும்ன்னு நீ எதைச் சொல்ற..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

'மாட்டிக்கிட்டேனே..' என்றிருந்தது வந்தனாவிற்கு..

"நான் பொதுவாகத்தான் சொன்னேன்.." பூங்காவிலிருந்த பூச்செடிகளைப் பார்த்தபடி அவள் சொன்னாள்..

"பொதுவாச் சொல்றதா நினைச்சுக்கிட்டு நீ எதை வேண்டும்னாலும் சொல்லிருவியா..?" அவன் விடவில்லை..

"இங்கே பாருங்க.. உங்க பேச்சுக்கே நான் வரலை.. நான் பாட்டுக்கு லீவை என்ஜாய் பண்ண என்சித்தப்பா வீட்டுக்கு வந்தேன்.. இப்படி ஒரு இம்சை இங்கே காத்திருக்கும்ன்னு தெரிஞ்சிருந்தா இந்தப் பக்கமே தலை வைத்துப் படுத்திருக்க மாட்டேன்.." தலையைப் பிடித்துக் கொண்டாள் வந்தனா..

"ஓ.." அவன் ஒரு மாதிரியான குரலில் சொன்னான்..

"நான் உனக்கு இம்சையா..?" ஒட்டாத குரலில் கேட்டவனின் கடுமையில் வந்தனா வாயடைத்துப் போனாள்..

சற்றுப் பொழுதிற்கு முன்னால்.. நீர் மேல் மிதந்த ஓடத்தில் அவளை எங்கேயோ பார்த்த மயக்கத்துடன் அவன் பாடிய பாடல் அவள் காதுகளில் ஒலித்தது..

'இல்லை..' அவள் மனம் விம்மியது..

"இது எனக்குத் தெரியாம போச்சே.."

சட்டென்று அவளிடமிருந்து விலகி பூங்காவின் வாசலை நோக்கி நடந்தான் கதிரவன்..

அங்கேயே ஆணியடித்ததைப் போல நின்று விட்ட வந்தனாவின் முகத்தைப் பார்த்த சாய்சரத்திற்கு கதிரவனுடன் போவதா.. இல்லை.. வந்தனாவுடன் நிற்பதா என்ற மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டது..

சகோதரியின் பக்கத்தில்தான் நிற்க வேண்டும் என்ற பொறுப்புணர்வுடன் அவன் வந்தனாவின் பக்கத்திலேயே நின்றான்..

வந்தனா அங்கேயிருந்த சிமிண்ட் பெஞ்சில் உட்கார்ந்தாள்.. முழங்கைகளை மடியில் ஊன்றி.. உள்ளங்கையில் முகத்தை பார்த்துக் கொண்டாள்..

சாய்சரத் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கவலையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. நிமிடங்கள் நகர்ந்தன.. வந்தனா அசையவில்லை.. வெயில் ஏறிக் கொண்டிருந்தது.. சாய்சரத்திற்கு பசித்தது.. வந்ததில் இருந்து அவர்கள் எதையும் சாப்பிடவில்லை என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான்..

பசிக்கிறது என்று சொல்லி வந்தனாவின் மோன நிலையைக் கலைக்க அவனுக்கு விருப்பமில்லை.. அவனுடைய பிரியமான தமக்கை மனவருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறாள்.. அவளைவிட அவனின் பசி பெரிதில்லை என்று அந்த எட்டு வயதுச் சிறுவன் நினைத்தான்..

அவர்களின் மீது நிழல் படிந்தது.. நிமிர்ந்து பார்த்த சரத் குதூகலமாக..

"மாமா.." என்று கூவினான்..

வந்தனாவிடம் அசைவு தென்பட்டது.. உள்ளங்கையில் பதித்திருந்த முகத்தை நிமிர்த்தி எதிரே நின்றிருந்த கதிரவனின் முகத்தைப் பார்த்தாள்..

கலங்கியிருந்த அவளின் இருவிழிகளையும் கவனித்த கதிரவனின் முகத்தில் ஏதோவந்து போனது.. இருவரின் பார்வைகளும் கலந்தன.. பேச்சில்லாத மௌனத்தில் அவர்களின் பிணைந்த பார்வைகளும் பேசிக் கொள்ள வில்லை..

"போகலாம்.. வா.." என்றான் கதிரவன்..

கலங்கிய விழிகளுடன் பார்வையைத் திருப்பிக் கொண்ட வந்தனா எழுந்து கொள்ளவில்லை..

"உனக்கும்.. எனக்கும் ஒன்னுமில்லை.. இன்னைக்குப் பூராவும் இங்கேயே உட்கார்ந்திருக்கலாம்.. ஆனா சரத்தை நினைச்சுப் பாரு.. எட்டு வயசுப் பையன்.. பசி தாங்குவானா..?"

கதிரவனின் கேள்வியில் எழுந்து கொண்டாள் வந்தனா.. முகமலர்ச்சியுடன் துள்ளி எழுந்த சாய்சரத்தை அணைத்துக் கொண்டவளின் நெஞ்சம் சகோதர பாசத்தில் நெகிழ்ந்தது..

"என்னைவிட இவனுக்கு நீ பெரிசுன்னு உன் கூடவே உட்கார்ந்திருக்கான்... ஊம்..?"

கதிரவன் பொறாமை போல வினவியதில் வந்தனாவுக்கு பெருமையாக இருந்தது.. அன்றைய சண்டை அத்துடன் முடிந்தது..

# 17

தீபாதரனையின் ஒளியில் தெரிந்த குற்றாலீஸ்வரரை வணங்கி கன்னத்தில் போட்டுக் கொண்டாள் வந்தனா..

"உனக்கு இத்தனை பக்திப் பரவசமா சாமி கும்பிடத் கூடத் தெரியுமா..?"

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கதிரவன் கேட்டான்.. அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்.. அவன் கண்களில் மின்னல் வந்தது.. இது போன்ற உதட்டுச் சுழிப்புக்களை அவனது வட்டாரப் பெண்களிடம் அவன் பார்த்ததில்லை..

அவளின் கடைக்கண் பார்வைகளும்.. கள்ளச் சிரிப்புக்களும்.. ரகசிய கண்காணிப்புகளும்.. வம்பிழுக்கும் வார்த்தைகளும் அதுவரை அவன் அறியாதது..

"எனக்குத் தெரிகிறது இருக்கட்டும்.. சாருக்குக் கோவிலுக்கு வந்தா சாமியை மட்டும் பார்க்கனும்.. கையெடுத்துக் கும்பிடனும்ங்கிற வளமையெல்லாம் தெரியாதாடா சரத்..?"

அவளின் இடக்குப் பேச்சில் கருணா சிரித்தாள்.. பெருமையுடன் வந்தனாவை அணைத்தபடி..

"உனக்கு இவதாண்டா லாயக்கு.." என்று கதிரவனிடம் சொன்னாள்..

அதில் கதிரவனின் கண்களில் மின்னல் வந்தது.. அது உணர்த்திய ரகசிய செய்தியில் வந்தனாவின் முகம் சிவந்து போனதை ரசனையுடன் அவன் பார்த்தான்..

"உன் மகளை நீதான் மெச்சிக்கனும்க்கா.. எந்த சாரையோ பார்த்துக் கேள்வி கேட்டுக்கிட்டு இருக்காங்க.. அந்த சார் யாருன்னு தேடறதை விட்டுட்டு நீ பெருமை பீற்றல் களஞ்சியமா பீற்றிக்கற.." முகவாயை தடவியபடி வந்தனாவை ஒரு மார்க்கமாக பார்த்தபடி சொன்னான் கதிரவன்..

அவன் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை.. அவள் கண்களில் மின்னலும்.. உதட்டில் சுழிப்பும் வந்தன.. அவள் மீண்டும் அவனுக்கு அழகுகாட்டினாள்.. கருணாவோ..

"எந்த சாரைச் சொல்கிறடா..?" என்று கோவிலைச் சுற்றி பார்வையை ஓடவிட்டாள்..

"நீங்க வேற சித்தி.. உங்க தம்பியை சார்ன்னு சொல்லிட்டேனாம். அதைத்தான் சொல்லிக் காட்டறாரு.." என்றாள் வந்தனா..

"டேய்.. நீ இருக்கியே.."

கதிரவனின் காதைப் பிடித்துத் திருகினாள் கருணா.. அவன் போலியாக வலிப்பதைப் போல பாவனை செய்து அலறினான்.. அம்பாளையும் தரிசனம் செய்து விட்டு அவர்கள் பிரகாரத்தை வலம் வந்து கோவிலின் முன் மண்டபத்தில் உட்கார்ந்தார்கள்..

கோவிலின் சுற்றுச் சுவரில் வந்து நின்ற குரங்கு ஒன்று வந்தனாவின் கையிலிருந்த வாழைப்பழத்தைப் பார்த்துவிட்டு பற்களைக் காட்டி உர்ரென்றது.. கதிரவன் அதைப் பார்த்து விட்டு.

"உன் பிரண்டு உன்னைக் கூப்பிடுது பாரு.." என்று வந்தனாவிடம் சொன்னான்..

"அது என் பிரண்டில்ல சாரே.. உங்க தோஸ்துத்தான்.." என்றாள் வந்தனா..

"திரும்பவும் சாரா..?" ஒரு மாதிரியான குரலில் வினவினான் கதிரவன்..

அவனைப் பிரித்து வைத்து நிறுத்தி வைக்கும் 'சார்' என்ற விளிப்பில் அவனுக்கு உடன்பாடில்லை என்பதை வந்தனாவால் புரிந்து கொள்ள முடிந்தது..

'இவனை வேற எப்படித்தான் கூப்பிடறது..?' அவள் மனதில் சிந்தனை ஓடியது..

'டேய்.. கதிரவான்னு கூப்பிடலாமா..?' நினைவு தந்த சிரிப்பு அவள் முகத்தில் தவழ.. அதை..

'உன்னை நானறிவேன்..' என்ற பொருள் பொதிந்த பார்வையுடன் ரசித்துப் பார்த்தான் கதிரவன்..

"அதானே.. நீ என்ன என் தம்பியை சார்.. மோர்ன்னு கூப்பிடற..?" கருணா ஆட்சேபித்தாள்..

"சார்ன்னுதான் கூப்பிட்டேன் சித்தி.. மோர்ன்னு கூப்பிடலை.." வந்தனா தன் தரப்பு வாதத்தை எடுத்து வைத்தாள்.. கூடவே..

"இவரைக் சாப்பிடற பதார்த்தத்தில கூப்பிடனும்னா மோருன்னு சொல்லியா கூப்பிடுவேன்..? அப்புறம் 'சாம்பார்' என்கிட்டச் சண்டைக்கு வந்திராதா..?" என்றும் நியாயம் கேட்டாள்..

"கேட்டியா கதிர்.." கருணா ரசித்துச் சிரித்தாள்..

கதிரவனுக்கு குடும்பத்துடன் அமர்ந்திருந்த அந்தச் சூழலைப் பிடித்திருந்தது.. அதுவரை கதிரவனும்.. வந்தனாவும்.. குற்றாலத்துக்குத் தனித்தனியாகத்தான் வந்து போவார்கள்.. ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து கொண்டதில்லை..

கதிரவன் பெரிம்பாலும் ஓய்வெடுக்கத்தான் அங்கே வருவான்... நேரத்துக்குச் சாப்பாடு.. நிம்மதியான உறக்கம்.. தினமும் அருவிக்குளியல்..

இவை மட்டுமே அவன் வாடிக்கையாக செய்யும் செயல்கள்.. மற்றபடி அதிகமா வெளியே சுற்ற மாட்டான்..

"உலகத்தைச் சுற்றி தலை காய்ந்துதான் உன் வீட்டுக்கு ரெஸ்ட் எடுக்க வந்திருக்கேன்.. இங்கேயும் வந்து வெளியே சுத்தச் சொல்றியா.." என்று கருணாவிடம் சொல்லி விடுவான்..

வந்தனா அப்படியில்லை.. சென்னையில் வீடு.. வீடுவிட்டால் காலேஜ் என்று இருப்பவளுக்கு.. குற்றால மலையின் பசுமையான இயற்கைச் சூழலை மிகவும் பிடிக்கும்.. அதன் ஒவ்வொரு அங்குலத்தையும் சுற்றிப் பார்க்க விரும்புவாள்.. வீடு தங்க மாட்டாள்..

இதையறியாத கதிரவன்.. அன்று காலையில் குற்றாலீஸ்வரர் கோவிலுக்கு குடும்பமாக போய் வர வேண்டும் என்று அவர்கள் கிளம்பியபோது.. வந்தனாவைப் பார்த்து..

"நேற்றுத்தானே போட் ஹவுஸ் போனோம்.. அப்புறம் சில்ட்ரன் பார்க் வேற.. இன்னைக்கும் வெளியே போகனுமா..?" என்று கேட்டு விட்டான்..

அவள் அவனை வேற்று கிரக வாசியைப் போல விசித்திரமாக ஓர்பார்வை பார்த்து விட்டு.. கருணாவிடம் திரும்பி..

"என்ன சித்தி இது.. உங்க தம்பி இப்படியிருக்கார்..?" என்று கேட்டு வைத்தாள்..

"எப்படியிருக்கேன்..?" கதிரவன் புருவங்களை படு ஸ்டைலாக உயர்த்தி போஸ் கொடுத்தான்..

"பேசாம மாடலிங் பக்கம் போய் விடலாம்.." வந்தனா அவனுக்கு ஆலோசனை வழங்கினாள்..

"இவன் மாடலிங் பண்றதா..?" கருணா சிரிக்க..

"யார் பார்க்கிறதுன்னு கவலைப்படறிங்க போல.." என்றாள் வந்தனா...

கருணா எதையோ சொல்ல வாயெடுத்தபோது சுதாரகன் நேமாகிறது என்று அவசரப் படுத்தினான்..

"கோவிலுக்குப் போயிட்டு வந்து ஹோட்டலுக்குப் போயாகனும் கருணா.. சிக்கிரமா கிளம்புங்க.."

அவர் முடுக்கிய முடுக்கில் குடும்பம் மொத்தமும் வினாடிப் பொழுதிற்குள் காரில் அடைந்தது..

"மாமாவுக்கு அவசரம்ன்னா அவர் ஹோட்டலுக்குப் போகட்டுமே.. நீ ஏன்க்கா கோவிலுக்கு அவரும் கூட வரனும்னு டிஸ்டர்ப் பண்ற..?" என்றான் கதிரவன்..

வந்தனா அவனை மீண்டும் ஒரு விசித்திரப் பார்வையை பார்த்து வைக்கவும்.. அவனுக்கு என்னடா இது என்று ஆகிவிட்டது..

"மாமா.. உங்க அண்ணன் பொண்ணு எதுக்காக இப்படிப் பார்த்து வைக்கிறாங்கன்னு எனக்குத் தெரிஞ்சாகனும்.." என்று சுதாகரனிடம் சொன்னான்..

"அதை நான் சொன்னா நல்லாயிருக்காது மாப்பிள்ளை..? உங்க அக்கா சொல்லனும்.." என்றார் சுதாகரன்..

"இதென்னக்கா.. மாமா உன் பக்கம் சுத்தி விடறாரு..?"

"வேற என்ன செல்வாரு..? ஏண்டா.. கோவிலுக்குப் போனா குடும்பமா போயிட்டு வரனும்.. இதுகூடத் தெரியாம எப்படித்தான் நீ கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்தப் போறியோ.."

கருணாவின் சலிப்பில் 'களுக்' கென்று வாய் பொத்தி சிரித்தாள் வந்தனா.. அவன் அவளை ஒரு மார்க்கமாக பார்த்து விட்டு.. கருணாவின் பக்கம் திரும்பினான்..

"இதுக்கும்.. குடும்பம் நடத்தறதுக்கும் யாதொரு கனெக்சனும் இல்லை.. இப்ப மாமா இல்லைன்னா என்ன..? மத்தவங்கள்ளாம் ஒன்னாச் சேர்ந்து கோவிலுக்குப் போனா அது குடும்பத்தோட கோவிலுக்குப் போகிறதா இருக்காதா..?"

இப்போதும் வந்தனா சிரிக்க.. கருணா..

"ஏண்டா இப்படி இருக்க..?" என்று அலுத்துக் கொண்டாள்..

வந்தனா கேட்ட அதே கேள்வியை கருணா கேட்டதில் வந்தனாவின் சிரிப்பு வலுத்தது.. கதிரவன் அவளைப் பார்த்த துளைக்கும் பார்வையில் சிரிப்பை அடக்கிக் கொண்டு வெளியே பார்த்தாள்..

"குடும்பம்ன்னா என்னன்னு தெரியுமாடா கதிர்..? புருசனும் பெண்டாட்டியும் சேர்ந்து போகிறதைத்தான் குடும்பத்தோட போகிறதா சொல்லுவாங்க.. குழந்தைகள் அடுத்துத்தான் வருவாங்க.."

"அது உண்மைதான்.." வந்தனாவை பார்த்தபடியே ஆமோதித்தான் கதிரவன்..

எதற்கு இந்த ஆமோதிப்பு என்று இமைகளை உயர்த்தி விழிகளால் வினவினாள் வந்தனா.. அவன் முகத்தில் தெரிந்த ரகசிய சிரிப்பில் அவன் எதையோ சொல்லப் போகிறான் என்று அவளது அறிவு உணர்த்தியது.. அவளுக்கும் 'ஜிவ்'வென்ற ஓர் உணர்வு ஏற்பட்டது..

"ஆணும்.. பெண்ணும் கல்யாணம் பண்ணிக்கிட்டு புருசன் பெண்டாட்டியா முதலில் ஆவாங்க.. அதுக்கடுத்துத்தானே அவங்களுக்கு குழந்தைகள் பிறக்கும்.. நீ சொல்றது சரிதான் அக்கா.."

"டேய்ய்..."

கருணா முகம் சிவக்க தம்பியின் முதுகில் மொத்தினாள்.. சுதாகரன் சிரித்தார்.. வந்தனாவின் முகம் சிவந்து விட்டது.. அவள் ஜன்னலின் பக்கமாக பார்ப்பதைப் போல பாவனை செய்தாள்..

"நாளைக்கே உனக்கும் கல்யாணமாகும் கதிர்.. அப்ப நீயும்.. உன் பெண்டாட்டியோட கோவிலுக்குப் போய் விட்டு வரக்கத்துக்.."

"இப்ப அதுக்குத்தான் டிரையல் கொடுக்கறியா..?"

கதிரவனின் கேள்வியில் இருந்த உள்பொருளில் வந்தனாவின் மனதில் பூக்கள் பூத்தன.. ஏதோவொரு
இனம் புரியாத சுகமான ஓர் உணர்வு அவள் மனதை ஆக்ரமித்தது..

"இத்தனை நாளில இன்னைக்குத்தான் நான் கூப்பிட்டதும் கோவிலுக்கு கிளம்பி வந்திருக்கான்.." என்றாள் கருணா..

கதிரவனின் பார்வை அவன் யாருக்காக கோவிலுக்குக் கிளம்பி வந்தான் என்பதை
உணர்த்தியதில் வந்தனாவின் மனம் சிறகைவிரித்தது..

# 18

சுதாகரன் மண்டபத்தின் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்தார்.. அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கருணா அவர் தோளின் அருகே முகத்தைக் கொண்டு போய் சன்னமான குரலில் எதையோ கேட்டாள்.. உடனே சுதாகரன் தலையை சரித்து மனைவி சொல்வதை உன்னிப்பாக கவனித்தார்.. இருவர் தலைகளும் முட்டிக் கொண்ட அந்த தோற்றம் பார்ப்பதற்கு வெகு பாந்தமாக இருந்தது..

சரத்திடம் களகளத்துக் கொண்டிருந்த வந்தனா கருணாவிடம் எதையோ கேட்பதற்காக திரும்பி விட்டு.. அந்தத் தோற்றத்தில் கவரப்பட்டவளாய் கணவன்.. மனைவியின் தனிப்பட்ட பேச்சை தடை செய்ய வேண்டாமென்று சரத்திடம் பேச்சைத் தொடர்ந்தாள்..

இதுபோன்ற ஆழ்ந்த பிணைப்புடன் அவளைத் திருமணம் செய்து கொள்பவனுடன் அவள் பேசுவாளா..?

மனதில் எழுந்த கேள்வியுடன் தன்னிச்சையாக கதிரவனை அவள் பார்த்து வைத்தாள்.. அவனும் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் நினைத்ததைப் போலவே அவனும் நினைத்திருப்பானோ என்று அவள் மனம் குறுகுறுத்தது..

அரண்டு போனவளாக பார்வையைத் தழைத்துக் கொண்டவளைப் பார்த்தவனுக்கு சிரிப்பு வந்தது.. அவளை ஆழ்ந்து பார்த்தான்..

கோவிலுக்கு வந்திருந்ததால் புடவையில் இருந்தாள்.. சுரிதாரைவிட புடவையில் அவளின் பெண்மையின் நளினம் வெகு அழகாக மிளிர்ந்தது.. தலையைப் பின்னலிட்டு முல்லைச் சரத்தை சூடியிருந்தாள்.. தோள் வழியே வழிந்த பூச்சரம் உணர்த்திய மங்களகரமான அழகில் அவன் மையல் கொண்டான்.. நெற்றிப் பொட்டின் மேல் புறமாக அவள் தீற்றியிருந்த விபூதியும் குங்குமமும் புனிதமானதொரு சோபையை அவளுக்கு அள்ளி வழங்கிக் கொண்டிருந்ததை உணராத குழந்தைப் பெண்ணாக அவள் சாய்சரத்துடன் சிரித்து விளையாட்டிக் கொண்டிருந்தாள்..

ஊடேயூடே அவனை நிமிர்ந்து பார்ப்பதும்.. அவனின் ஆழ்ந்த பார்வையில் அரண்டு போனவளாக அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டு சரத்துடன் தீவிரமாக பேசுவதைப் போல பாவனை செய்வதுமாக அவள் காட்டிய விளையாட்டில் அவனுக்கு சுவராஸ்யம் உண்டாகி விட்டது.. அவளை விட்டுப் பார்வையை அவன் விலக்கவேயில்லை.. அவன் பார்வையை அவள் சந்தித்துத் திரும்பும் போதெல்லாம் அவன் விழிகளில் தோன்றும் மின்னலில் உற்சாகம் தெறித்து விழுந்தது..

“போகலாமா..?” சுதாகரன் எழுந்து மணிபார்த்தார்..

“நேரா வீட்டுக்குத்தானே..?” கதிரவன் சோம்பல் முறித்தான்..

“சோம்பேறி..” கருணா சொன்னாள்..

“வெல் செட் சித்தி..” மனதாரப் பாராட்டினாள் வந்தனா..

“நீ என்னைக் கமெண்ட் பண்ணினா உன் மகளுக்கு அல்வா சாப்பிட்டதைப் போல இருக்கே.. அது ஏன் அக்கா..?” ஒருமார்க்கமாக வந்தனாவை நோட்டம் விட்டபடி கேட்டான் கதிரவன்..

அவன் எதிர்பார்த்தது நடந்தது.. வந்தனா அவனைப் பார்த்து உதட்டை வளைத்து அழகு காட்டினாள்.. அவன் முகத்தில் மந்தஹாசம் படர்ந்தது..

“நீ இப்படி இருந்தா அவ கேலி பண்ணாம என்ன செய்வா..?” தம்பியை கடிந்து கொண்டாள் கருணா..

“எப்படி இருக்கேன்..?”

கதிரவன் மண்டபத்திலிருந்து குதித்து இறங்கி.. படு ஸ்டைலாக நின்று முடிகோதியபடி கேட்டான்..

‘ஹீரோவைப் போல இருந்து தொலைக்கிறான்..’ வந்தனாவுக்குத் தோன்றித் தொலைத்தது..

அவனது ஊடுருவும் பார்வை அவளை அளந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டவளாக.. முகத்தைக் கோணியபடி.. கோவில் மதில் சுவரிலிருந்த குரங்குகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டி..

“டேய் சரத்.. உன் மாமா.. அது போலவே இருக்காரில்ல..?” என்று தம்பியிடம் கேட்டு வைத்தாள்..

கருணாவும் சுதாகரனும் சிரித்தார்கள்.. கதிரவன் தாடையைத் தடவியபடி வந்தனாவை குறுகுறுவென பார்த்து வைத்தான்.. சரத்தோ..

“இல்லையே.. நம்ம மாமா வெரி ஹேண்ட்சம் மேன்க்கா..” என்று சொல்லி வைத்தான்..

இதற்கும் கருணாவும் சுதாகரனும் சிரிக்க.. வந்தனா உதட்டைக் கடித்தபடி அடிப்பார்வையில் கதிரவனைப் பார்த்தாள்.. அதை எதிர்கொண்ட கதிரவனின் பார்வையில் வெற்றிப் பெருமிதம் இருந்தது.. வந்தனாவுக்கு ரோசமாக இருந்தது..

‘இதிலயும் இவன்தான் ஜெயிப்பானா..?’ வேகத்துடன் சரத்தை முறைத்தபடி..

“போடா.. டேய்..” என்றாள்...

“யாரைச் சொல்ற..?” கதிரவன் விசாரித்தான்..

“உங்களையில்ல..” முகம் திருப்பிக் கொண்டாள் வந்தனா..

“அதானே.. குற்றாலத்துக் குரங்கோட இணை கூட்டறவங்க போட டேய்ன்னு நிச்சயமா சொல்ல மாட்டாங்கதான்.. குரங்கைப் போய் டேய்ன்னா சொல்லுவாங்க..?” கதிரவன் புருவங்களை உயர்த்தி இறக்கினான்..

அந்த செய்கையில் வசீகரிக்கப்பட்ட வந்தனா..

‘ஆள் மயக்கி..!’ என்று மனதுக்குள் கதிரவனைத் திட்டித் தீர்த்தாள்..

பேசியபடி அவர்கள் நகர்ந்தார்கள்.. வந்தனா சரத்தை சாடிக் கொண்டிருந்தாள்..

“உன் மாமா உன் கண்ணுக்குத்தாண்டா ஹேண்ட்சம் மேன்..” என்றாள்..

“அதென்ன ‘உன் மாமா’..?” கதிவரன் ஆட்சேபித்தான்..

“அவனுக்கு நான் மாமான்னா உனக்கு என்ன வேணும்..? அண்ணனா..?” விளக்கமும் கேட்டான்..

வந்தனா முகம் சிவந்தாள்.. நீ என்ன கேட்பது.. நானென்ன பதில் சொல்வது என்ற பாவனையில் முகம் திருப்பித் தப்பித்தாள்..

"இந்த வருசத் திருவிழாவுக்கு வந்தனாவுக்கு பட்டுப் புடவை எடுக்கனும்.." என்றாள் கருணா..

"சித்தி.." வந்தனா சிணுங்கினாள்..

"எனக்குச் சுடிதான் வேணும்.." அடம் பிடித்தாள்..

"ஊஹீம்.. இந்தமுறை உனக்குச் சேலைதான்.. வேணும்னா ஒன்னு செய்யலாம்.." கருணா முகத்தை தீவிரமாக வைத்துக் கொள்ள..

"என்ன செய்யலாம் சித்தி..?" கலவரமாக கேட்டாள் வந்தனா..

"உனக்கு பட்டுச் சேலைகூட சுடிதாரையும் எடுத்துத் தந்திரலாம்.." கருணா சிரித்தாள்..

"சித்தி.." வந்தனா ஆனந்தத்துடன் கருணாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்..

கருணா வந்தனாவின் கன்னத்தைத் தட்டிய போது.. அவள் காட்டும் பாசத்திற்குத் வந்தனா தகுதியானவள்தான் என்று கதிரவனுக்குத் தோன்றியது..

"அது என்ன திருவிழா..?" கருணாவிடம் கேட்டான்..

"இவருக்குத் தெரியாதா..? உங்க தம்பின்னு சொன்னீங்க..?" வந்தனா அவனை மேலும் கீழுமாக பார்த்து வைத்தாள்..

'கலாய்க்கிறாளாம்..' கதிரவனுக்குச் சிரிப்பு வந்தது..

"நான் உன் சித்திக்குத் தம்பியேதான்.. சந்தேகமிருந்தா உறவுக்காரங்களை ஒன்னாக் கூட்டிப் பஞ்சாயத்து வைச்சுக் கேட்கலாம்.." கதிரவன் யோசனை சொன்னான்..

"நீ இப்படிக் கேட்டா.. அவ அப்படிச் சொல்ல மாட்டாளா..?" கருணா மகளுக்காக பரிந்து பேசினாள்..

"முதல்ல இந்த இப்படி என்ன.. அந்த அப்படி என்னன்னு எனக்கு விளக்கம் சொல்லு.." என்றான் கதிரவன்..

"குற்றாலீஸ்வரன் கோவிலில் சித்திரைத் திருவிழா பத்து நாளைக்கு நடக்கும்.. இது தெரியாம நீ கேள்வி கேட்டா.. நீ என் தம்பிதானான்னு இவ கேட்க மாட்டாளா..?"

"ஓஹோ.. எனக்குத் தெரியாதது.. உன் மகளுக்கு மட்டும் எப்படித் தெரிஞ்சுச்சு.."

என்னவோ.. என்னிடம் இல்லாத எது.. அவளிடம் இருக்கிறது.. என்ற ரீதியில் அவன் கேட்டுவைக்க.. வந்தனா மீண்டும் வாய் பொத்திச் சிரித்தாள்..

"நீ நினைச்சா வருவ.. ரெஸ்ட் எடுத்திட்டு ஓடிருவ.. வந்தனா அப்படியில்ல.. ஒவ்வொரு சம்மர் வெகேசனுக்கும் அவ இங்கேதான் வருவா.. சித்திரைத் திருவிழாவை எங்க கூடக் கொண்டாடுவா.. ஸோ.. திருவிழாவுக்கு டிரெஸ் எடுக்கிறப்ப அவளுக்கும் சேர்த்துத்தான் நாங்க டிரெஸ் பர்சேஸ் பண்ணுவோம்.." கருணா அன்புடன் வந்தனாவை அணைத்துக் கொண்டாள்..

"என்னவோ போக்கா.. கிராமத்தில கொண்டாடற பெஸ்டிவலை குற்றாலத்தில கொண்டாடுவாங்கன்னு நான் கனவா கண்டேன்..?" தோளைக் குலுக்கினான் கதிரவன்..

"ஹலோ.. மதுரையில சித்திரை திருவிழா பேமஸ்.. மதுரை என்ன கிராமமா..?" வந்தனா சண்டைக்கு வந்தாள்..

"பாருடா.. குற்றாலத்துக்கு எங்க அக்கா மக கொடி பிடிக்கிறதை.." கதிரவன் ரசித்துச் சிரித்தான்..

அவனுடைய 'அக்காமக..' என்ற விளிப்பில் வந்தனாவின் முகம் குங்குமமானது.. அவர்கள் வாய் வளர்த்தபடி காரில் ஏறினார்கள்.. வீட்டுக்குப் போனதும் சுதாகரன் ஹோட்டலுக்கு கிளம்பி ஓடிவிட்டார்.. கருணா மதிய சமையலுக்கான மெனுவைச் சொல்ல சௌம்யாவை தேடிப் போனாள்.. அவள் இந்தப் பக்கம் போக.. சௌம்யா அந்தப் பக்கம் சுற்றி வளைத்து வந்து கதிரவனிடம் நின்று மதிய சமையலுக்கான மெனுவை அவனிடம் கேட்டாள்.. அதில் வந்தனா செமத்தியாக கடுப்பானாள்.. அதை ஓரவிழப் பார்வையிலே அளந்த கதிரவனுக்கு உற்சாகம் பெருகியது..

"எனக்கு என்னென்ன பிடிக்கும்ன்னு என்னைவிட உனக்குத்தானே நல்லா தெரியும் சௌம்யாக்கா..?"

வந்தனாவை ஜாடையாக பார்த்தபடி அவன் சொன்னான்.. சௌம்யா பூரித்து விட்டாள்..

"எண்ட சாப்பாடுன்னா அய்யனுக்கு வளர இஷ்டம்.." என்றபடி சிட்டாக உள்ளே பறந்து போனாள்..

அவளைத் தேடி அங்கே வந்த கருணா..

"இந்த சௌம்யா எங்கே போனான்னு தெரியலையே.." என்றாள்..

"அதை எதுக்கு சித்தி தேடறிங்க..?"

"மதிய சமையலுக்கு மெனு சொல்லத்தான்.."

"அதை உங்க தம்பி சொல்லிட்டாரு சித்தி.. இவரோட மலையாள பகவதி இப்பத்தான் வந்து சாருக்கு என்ன பிடிக்கும்ன்னு மெனு கேட்டுட்டுப் போகுது.. அதுக்குத்தான் சாரை விட்டா வேற யாரையும் கண்ணுக்குத் தெரியாதே.."

"அப்படியா..?"

கருணா சிரித்தபடி கதிரவனின் முதுகில் ஒரு மொத்து மொத்திவிட்டுப் போனாள்... கதிரவன் வந்தனாவையே இமைக்காமல் பார்த்தான்.. வந்தனா போடா.. நீயுமாச்சு.. உன் பார்வையுமாச்சு என்று முகத்தை திருப்பிக் கொண்டாள்.. கதிரவன் சாய் சரத்தின் பக்கமாக குனிந்தான்.. அவன் பார்வையில் அவளுக்கு ஏதோ சேதியிருப்பதைப் போலத் தோன்ற.. அவள் அவன் பேச்சில் அக்கறையில்லாததைப் போல அதை செவி மடுத்தாள்..

"ஏண்டா சரத்.. உனக்கு மட்டும் நான் மாமா.. உன் அக்காவுக்கு சாரா..?" என்று கேட்டான்..

"இல்லைதான்.. இதை அக்காகிட்ட யார் கேட்கிறது.." என்றபடி சரத் எழுந்து தோட்டத்துப் பக்கமாக போனான்..

ஹாலில் கதிரவனுடன் தனித்து விடப்பட்ட வந்தனாவுக்கு.. அவன் பார்வையை எதிர் கொள்ள சங்கடமாக இருந்தது.. அவள் மாடிக்குப் போகலாம் என்று படியேறியபடி திரும்பிப் பார்த்தாள்.. கதிரவன் ஹாலில் இல்லை..

'எங்கே போயிட்டான்..?'

அவள் விழிகள் அவனைத் தேடித் துழாவின.. அவன் தோட்டத்துப் பக்கமாக போய் கொண்டிருப்பதைக் கண்டவள் மொட்டைமாடிக்கு விரைந்தாள்.. அங்கே போய் மறைவாக நின்றபடி தோட்டத்தைப் பார்த்தாள்.. கதிரவன் சாய்சரத்துடன் பேசிக் கொண்டிருந்தான்.. பேசியபடி அவன் நகர.. வந்தனா எக்கிப் பார்த்தாள்.. சரத் மட்டுமே இருந்தான்.. கதிரவனைக் காணவில்லை..

'இப்ப எங்கே போய் தொலைஞ்சான்..?' அவள் எரிச்சல் பட்டபோது..

"என்னைத்தானே தேடற..?" என்ற கதிரவனின் குரல் அவள் காதுகளில் விழுந்தது..

# 19

திரும்பிப் பார்த்த வந்தனா திகைத்து நின்றாள்.. அங்கே கதிரவன் நின்றிருந்தான்.. கால்கள் அசைய முடியாமல் ஏதோவொரு தளை பிணைக்கப் பட்டு விட்டதைப் போன்ற உணர்வை திகைப்புடன் உணர்ந்தாள் வந்தனா..

எவ்வாறு அந்த மாற்றம் அவளுக்குள் நிகழ்ந்தது என்று அவளால் கண்டு கொள்ள முடியவில்லை.. எந்த நொடியில் அது ஆரம்பித்திருக்கும்..? எந்த நொடியில் அது அவளுக்குள் மையம் கொண்டிருக்கும்..? எந்த நொடியில் அது வளர்ந்து ஆலமரமாக கிளை விட்டிருக்கும்..? எதனால் அவள் அவனைத் தேடினாள்..? எதனால் அவன் குரல் கேட்டதும் ஆனந்தத்துடன் திரும்பிப் பார்த்தாள்..? ஏதும் அறியாத பேதையாக அவள் மலங்க.. மலங்க விழித்தாள்..

அவளை நெருங்கி விட்ட கதிரவன் அவளது அந்தப் பார்வையில் எதை உணர்ந்தானோ.. அப்படியே நின்று விட்டான்.. அருகில் வந்து விடப் போகிறான் என்ற துடிப்புடன் நின்றிருந்தவளின் முகத்தில் அவனது நடை தேங்கியதும் தோன்றிய மின்வெட்டலைப் போன்ற ஏமாற்றத்தின் இழை தோன்றி மறைந்ததை கண் சிமிட்டும் நேரத்துக்குள் அவன் கண்டு விட்டான்..

அவன் கண்கள் மின்னின.. தேங்கின நடை தொடர்ந்ததில் அவள் முகத்தில் மிரட்சியுடன் கூடிய எதிர்பார்ப்பு வந்து நின்றது.. அவன் இதழ்களில் குறுஞ்சிரிப்பு தவழ்ந்தது..

மெதுவாக.. மிக மெதுவாக.. அவளை அவன் அணுகினான்.. அவன் முன்னேறிய ஒவ்வொரு அடியிலும் அவள் பின்னேறினாள்.. நகர்ந்து.. நகர்ந்து.. அவள் தண்ணீர் டேங்க் இருந்த நீண்ட சுவரின் மீது சாய்ந்து நின்றுவிட.. அவன் அவளுடைய இருபக்கமும் கை நீட்டி.. உள்ளங்கைகளை சுவரில் பதித்து அவளை சிறைபிடித்தான்..

மிக அருகாமையில் உணர்ந்த அவனின் வாசனையில் அவள் மனம் மயங்கியது.. எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து பேசும் போது.. வெளியில் சென்று வரும்போது.. டென்னிஸ் விளையாடும் போது.. அருகில் வரும் அவனிடமிருந்து வெளிப்படும் பிரத்யேக அந்த வாசனையை அவள் நுகர்ந்திருக்கிறாள்.. அப்போதெல்லாம் அவள் மனம் வேகமாக அடித்துக் கொள்ளும்.. அது எதனால் என்று அவளுக்கு அந்த நொடியில் விளங்கியது..

கதிரவன் அவள் மீது சாய்ந்தாற் போல நின்றிருந்ததில்.. ஏற்பட்ட உராய்ந்தும்.. உராயாத நிலையில் அவள் மூச்சுத் திணறினாள்.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பக்காற்று அவள் முடிமீது தீண்டியதில் ஏற்பட்ட இதமான இம்சை அவளை கொன்று தின்றது.. அவள் முகத்தோடு மோதியிருந்த அவனது வலிமையான முழங்கைகளின் ரோமம் அவள் கன்னத்தில் குத்தியதில் அவள் இன்பமானதொரு துன்ப உணர்வை அனுபவித்தாள்..

"சொல்லு.. என்னைத்தானே தேடற..?"

அவன் குரல் கிசுகிசுப்பாக வெளிப்பட்டது.. ஆமென்று சொல்ல முடியாத பெண்மை இல்லையென்று தலையை அசைத்தது..

"பொய்.." அவன் உறுதியுடன் நகைத்தான்..

அந்த உறுதியில் அவள் வெட்கிப் போனாள்..

"நீ பொய் கூடச் சொல்லுவியா..? ஊம்..?" அவன் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை..

"ஆக.. என் அக்கா மகள் ரத்தினத்துக்கு.. மாமன் மேல மையல் வந்திருச்சு.."

நிச்சயத்துடன் அவன் சொன்னதில் அவள் அவன் மார்பில் கைவைத்துத் தள்ளி விட்டாள்.. அவன் பின்னே நகர்ந்து சிரித்தான்.. அவள் ரோசத்துடன்..

"சும்மா கனவு காண வேணாம் சாரே.." என்றாள்..

"கனவா..? ஏன் சொல்ல மாட்ட.." அவன் மீண்டும் சிரித்து விட்டு அவளை உற்றுப் பார்த்தான்..

அவள் மனதின் துடிப்பு அதிகமானது.. தலையை குனிந்து கொண்டவளைப் பார்த்தவனின் சிரிப்பு அதிகமானது..

"பொண்ணுக ஆமாம்ன்னு சொன்னா இல்லைன்னு அர்த்தமாம்.. இல்லைன்னு சொன்னா ஆமாம்ன்னு அர்த்தமாம்.." உல்லாசமாக சொன்னாள்..

"சார்.. பெண்களோட பேச்சு வழக்கைப் பத்தி பி.எச்.டி யே பண்ணியிருக்கார் போல.." வந்தனாவின் கிண்டல் திரும்பி விட்டது..

அவன் "ஹா.. ஹா.." என்று பலமாக சிரித்தான்..

"மெதுவா சிரிங்க சாரே.. குற்றாலத்தில இருக்கிற குரங்கெல்லாம் உங்க கூட கூட்டணி போட்டுச் சிரிக்க ஓடி வந்திரப் போகுதுக.." அவள் எச்சரித்தாள்..

"ஏனாம்..? எப்படிடா கதிரவா.. எங்க கூட்டத்தச் சேர்ந்த பொண்ணுகிட்ட நீ வம்பு வளர்க்கலாம்ன்னு
கேட்க கிளம்பி வந்திரும்களோ..?" கேலியாக அவன் வினவினான்..

"ஊஹீம்.. நம்ம கூட்டத்தச் சேர்ந்த மகராசன் தனியாச் சிரிச்சுக்கிட்டு இருந்தா பார்க்கிறவங்க வேற மாதிரி நினைச்சுருவாங்களோன்னு ஓடி வரும்ங்க.." அவள் விளக்கம் சொன்னாள்...

"குரங்கை விடு.. அதுபாட்டுக்கு மரத்தில இருந்துட்டுப் போகட்டும்.. அது என்ன.. என்னைப் பார்த்து சாரே.. மோரேங்கிற.. நீ என்ன என் கம்பெனியில் வேலை பார்க்கறியா..? நானும் இதை மாத்தி யோசின்னு ஆயிரம் தடவை சொல்லிட்டேன்.. ஊம்..?" கதிரவன் முறைத்தான்..

"அது என்ன தேவைக்கு..? தெரிந்தே தண்டவாளத்தில தலையைக் கொடுக்க நான் வருவேனா..? எனக்கிருக்கு ஆயிரம் கம்பெனி.. ஆதலினால் மாத்தி யோசிக்க முடியாது சாரே.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க.." அவள் அலட்சியமாக தோளைக் குலுக்கினாள்..

"ஓஹோ.. என் கம்பெனியில வேலை செய்கிறதும்.. தண்டவாளத்தில தலையைக் குடுக்கிறதும் ஒன்னுன்னு அம்மணி நினைக்கிறாங்க போல.." முகம் மாறாமல் அவன் சொன்னான்..

"புரிஞ்சுக்கிட்டாச் சரி..." அவளும் விட்டுக் கொடுக்கவில்லை...

"இதுக்கே இப்படிச் சொல்றவங்க... எனக்குக் கழுத்தை நீட்டினா என்ன சொல்வீங்களோ.." என்று அவன் சொன்னதும் அவளுக்குப்பேச வாய் வரவில்லை...

"என்ன.. பதிலைக் காணோம்..?" அவன் சீண்டினான்..

அவளால் மற்றதுக்குப் பதில் சொன்னதைப் போல இதற்குப்பதில் சொல்ல முடியவில்லை..

"சித்தி கூப்பிடுகிறதைப் போல இருக்கு.." அவள் நழுவப் பார்த்தாள்..

“எனக்குக் கேட்கலையே..” அவன் அவளை நகர விடவில்லை..

“சித்தப்பா.. தேடுவார்..” அவள் சம்பந்தமில்லாமல் சொன்னாள்..

“அவர் அப்பவே ஹோட்டலுக்கு கிளம்பி போயிட்டார்..” துளைக்கும் பார்வையுடன் அவன் சொன்னான்..

“சரத் ஏதோ கேட்டான்..”

வந்தனா ஓடப் போனாள்.. கதிரவன் அவள் கையை இறுக்கிப் பிடித்து அவளை நிறுத்தினான்.. அவள் விழிகளில் மிரட்சி வந்தது.. அதைப் பார்த்தும் அவன் அவள் கையை விடவில்லை.. மாறாக அவன்பிடி இறுகியது.. அதில் உணர்ந்த அவனின் முதல்ஸ்பரிசத்தில் அவள் விரல்கள் நடுங்கின..

“ப்ளீஸ்.. என்னை விடுங்க..” அவள் இறைஞ்சினாள்..

“எனக்கொரு பதிலைச் சொல்லிட்டுப் போ..” அவன் பிடி இறுகியது..

“பதிலா..? என்ன பதிலைச் சொல்ல..?”

“எனக்குக் கழுத்தை நீட்டினால் என்ன சொல்லுவ..?”

அவன் வற்புறுத்தினான்.. வந்தனா திணறிப் போனாள்.. அதற்கான பதிலாக அவள் எதைச் சொல்லுவாள்..? முதலில் அது நடக்குமா..?

“எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடக் கூடாது..”

அவளுடைய பாட்டி அடிக்கடி சொல்வாள்... அது போல ஆகிவிடக் கூடாதல்லவா..? கோடை விடுமுறையைக் கழிக்க அவள் வந்திருக்கிறாள்.. வந்த இடத்தில் அவனைச் சந்தித்தால் அது கல்யாணத்தில்தான் முடியுமென்ற கட்டாயம் எதுவும் இருக்கிறதா..?

“ஆசைக்கும் ஓர் அளவு இருக்க வேண்டும்...”

இதையும் அவளுடைய பாட்டிதான் சொல்லுவாள்.. இப்படியாகப்பட்ட புத்திமதிகளைக் கேட்டு வளர்ந்தவள் கதிரவனுக்கு என்ன மறுமொழியைச் சொல்லுவாள்..?

வந்தனாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அவள் முகச் சிகப்பில் கதிரவனின் மனம் மயங்கினாலும்.. அவனுக்கான மறுமொழியை அவள் தரத் தயங்கியதில் சினம் உண்டானது..

“இந்த அளவுக்கு தயங்கறியா..? எந்த வார்த்தைக்கும் பட்டுபட்டுன்னு பதில் சொல்றவ.. இதுக்குப் பதில் சொல்ல மாட்டேங்கறின்னா எனக்குக் கழுத்தை நீட்டறதைப் பத்தி நீ.. நினைக்கவே இல்லைன்னுதானே அர்த்தம்..?”

‘போடா...’ என்றிருந்தது வந்தனாவுக்கு..

அவள் நினைத்து விட்டால் மட்டும் எல்லாம் எளிதில் நடந்து முடிந்து விடுமா..? அவன் எங்கே.. அவள் எங்கே..

அவள் பதில் சொல்லாமல் நின்றதில் அவன் அவள் கையை விட்டு விட்டான்.. வலித்த மணிக்கட்டைத் தடவியபடி நின்றவளை உறுத்துப் பார்த்தான்.. வேகமாக படியிறங்கி போய் விட்டான்..

வந்தனாவுக்குள் துயரம் மண்டியது.. ஏதோ ஒன்று அவளுள் இருந்து பிரிந்து நிற்பதைப் போல அவளுக்குத் தோன்றியது..

அது எது..? அவளுடைய ஜீவனா..?

‘ச்சே..’ தன்னைத்தானே கடிந்து கொண்டாள் வந்தனா..

இதுபோன்ற உரிமை கொண்ட நினைவுகள் எதனால் வருகின்றன...?

அவ்வளவு பலவீனமான இதயமா அவளுக்கு..? எதையும் தாங்கும் இதயம் என்று அஞ்சனாவிடம் அள்ளி விடுவாளே.. அதெல்லாம் சும்மா.. வெளி வேசமா..?

யார் இவன்..? வாழ்க்கையெனும் பயணத்தில் சந்திக்கும் ஒரு வழிப்போக்கன்.. ரயில் பயணத்தின் இடையில் வரும் சிநேகிதன்.. இவனைப் பார்த்து அவள் ஏன் பயப்படுகிறாள்..? அவளை மீறியா அவன் அவள் இதயத்தைக் கொள்ளையடித்து விடப் போகிறான்..?

தொய்வான நடையுடன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள்..

"அக்கா.." என்று ஓடிவந்தான் சாய் சரத்..

அவன் தோளில் கை போட்டு அரவணைத்துக் கொண்டவளை யாரோ போல பார்த்து வைத்தான் கதிரவன்.. அவன்தான் சற்று முன்பு மொட்டை மாடியில் அவன் கை வளைவுக்குள் அவளை சிறை பிடித்தவன் என்பதை நம்ப மறுத்தது அவள் இதயம்..

"யாருக்கும் காபி.. வேணாமா..?"

சௌம்யா பின் தொடர மாடி ஹாலுக்கு வந்தாள் கருணா.. கொண்டு வந்த காபி கப்புக்களை அங்கிருந்த வட்ட வடிவமான குட்டி டைனிங் டேபிளில் பரப்பி வைத்தாள்.. சௌம்யா.. வந்தனாவையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் கதிரவன்.. அவன் பார்வையை தவிர்க்க நினைத்தவளாய் கருணாவிடம் ஏதோ சந்தேகம் கேட்பவளைப் போல அவளுடன் ஒட்டிக் கொண்டாள் வந்தனா..

"கதிர்.. காபி சாப்பிடவா.." கூப்பிட்டாள் கருணா..

கதிரவன் எழுந்து வந்தான்.. அடிக் கண்ணால் அவன் வருவதைக் கவனித்துக் கொண்டிருந்த வந்தனாவை நேர் பார்வை பார்த்தபடி அவளுக்குப் பக்கத்தில் இருந்த சேரில் உட்கார்ந்து விட்டான்..

"நீயும் உட்காரு வந்தனா.."

இயல்பாகச் சொல்லியபடி கருணா கதிரவனுக்கு எதிரில் இருந்த சேரில் உட்கார்ந்து விட்டாள்.. வேறு வழியில்லாமல் கதிரவனுக்குப் பக்கத்தில் அமர்ந்த வந்தனாவுக்கு மனது அடித்துக் கொண்டது.. என்னவோ அன்றுதான் அவனை முதன் முதலாய் பார்ப்பதைப் போல தயங்கியபடியே சேரைத் தள்ளிப் போட முனைந்தாள்.. அதில் அவன் ஓர்பார்வை பார்த்து வைத்தான்.. ஊடுறிவிப் பாய்ந்த அந்தப் பார்வையில் அவள் உடலில் மின்சாரம் பாய்வதைப் போன்ற ஓர் உணர்வு உண்டானது..

'இவன் ஏன் இப்படிப் பார்த்து வைக்கிறான்..?'

சலனப்பட்ட மனம் சுனாமிப் பேரலையாக ஓங்கி எழுந்தது.. எங்கும் தண்ணீர் காடு.. அவள் பயத்துடன் பின்வாங்கினாள்..

"பெட்ல ஜெயிச்சீங்களா மாமா..?" சாய் சரத் வினவினான்..

"உஸ்ஸ்.." ஆள்காட்டி விரலை வாயில் வைத்துச் சிறுவனை எச்சரித்தான் கதிரவன்..

'எதுக்காக இவன்.. அவனை அடக்கறான்..?'

வந்தனாவுக்குப் புரியவில்லை.. அவள் சாய் சரத்தைக் கேள்வியாக பார்த்தாள்.. அவளுக்குப் பதில் சொல்ல வாய் திறந்தவன் கதிரவனின் முகத்தைப் பார்த்ததும் பேச்சை நிறுத்திக் கொண்டதில் அவளது புருவங்கள் சுருங்கின..

'இவன் எதைச் சொல்ல வர்றான்..?'

# 20

"**தூ**ள் அக்கா.. வெல்டன்.."

சாய்சரத் கைதட்டிக் குதித்தான்.. கையிலிருந்த டென்னிஸ் மட்டையால் கதிரவனின் முதுகில் ஒரு போடு போட்டாள் கருணா..

"ஏண்டா.. நம்மளை விட அந்த டீம் பாயிண்டை அள்ளிக் குவிச்சுக்கிட்டே இருக்காங்க.. நீ என்னடான்னா சின்னப் பொண்ணுகிட்ட பாயிண்டை கோட்டை விட்டுக்கிட்டே இருக்கே.."

"ம்மா.. எங்க டீம்தான் சூப்பர் டீம்.. உங்க அக்கா.. தம்பி டீமை விட.. எங்க அக்கா தம்பி டீம் பவர் புல்.. பாத்திங்களா மாமா மண்ணைக் கவ்விக்கிட்டு இருக்கார்.."

சாய்சரத் உள்ளங்கையின் நான்கு விரல்களையும் மடித்து கட்டைவிரலை மட்டும் நீட்டி.. தரையை நோக்கிக் காட்டினான்..

"ஊத்திக்கிச்சாம்.. உன் மகன் சிம்பல் காட்டுறான்.." என்றான் கதிரவன்..

"போடா.. உன்னால.. பொடிப்பயலெல்லாம் நம்மை கேலி பண்றான்.." அலுத்துக் கொண்டாள் கருணா..

"இக்கட சூடு.."

அடுத்து வந்த பாலை அட்டகாசமாக எதிர் கொண்டு அடித்த கதிரவன் அதை அநாயசயமாக டென்னிஸ் மட்டையால் எதிர்கொண்ட வந்தனாவை பார்த்து மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக கண்சிமிட்டினான்..

மட்டையைச் சுழற்றிய வந்தனா அவனின் இமை சிமிட்டுதலில் ஸ்தம்பித்து விட்டாள்.. மட்டை அப்படியே அந்தரத்தில் நிற்க.. அதில் பட்ட பந்து சுழற்றியடிக்கப் படாமல் அப்படியே ஹாயாக தரைக்கு நழுவி விழுந்தது..

"என்னக்கா ஆச்சு உனக்கு..?" சரத் ஆத்திரப்பட்டான்..

"வந்து.. வந்து.." தடுமாறினாள் வந்தனா..

அவளின் திணறலை வேடிக்கை பார்த்த கதிரவனின் கண்களில் தெரிந்த வெற்றிக் களிப்பில் அவளுக்கு தன் மீதே கோபம்.. கோபமாக வந்தது.. விடாமல் அவனை வெற்றி கொண்டவளை ஓரே ஒரு இமை சிமிட்டுதலில் வீழ்த்தி விட்டானே..

'இவன் கூட விளையாட வந்திருக்கவே கூடாது..'

வந்தனாவுக்குள் கோபமில்லாத கோபம் பரவியது.. இரண்டு நாள்களாக கதிரவன் அவளுடன் நேரடியாகப் பேசுவதை தவிர்த்துக் கொண்டிருந்தான்.. வலியப் போய் பேச வந்தனாவாலும் முடியவில்லை.. அவனுடைய கோபம் எதனால் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு எப்படி அவள் வலியப் போய் பேசுவாள்..?

அவர்களுக்குள் எழுந்து நின்ற பனித்திரையை விலக்கி விட இருவருமே முனையவில்லை.. அதே சமயம்.. அந்த பனித்திரையை வீட்டில் இருந்த மற்றவர்கள் உணராவண்ணம் அவர்கள் பொதுவாக பேசிக் கொண்டார்கள்.. கேரம் விளையாடுவது.. அரட்டை அடிப்பது.. ஹாலில் உட்கார்ந்து டிவி பார்ப்பது என்று குடும்பத்துடன் சேர்ந்து அவர்கள் பேசிச் சிரித்தாலும்.. தனித்து விடப்பட்டால் மௌனமாக முகம் திருப்பிக் கொண்டார்கள்..

அந்தத் தருணங்களில் வந்தனாவை கதிரவனின் பார்வை துளைக்கும்.. அவள் மனம் படபடக்க எழுந்து போய் விடுவாள்..

அந்த டென்னிஸ் விளையாட்டும் அது போலத்தான் ஆரம்பித்தது.. மாலையில் தோட்டத்தில் அரட்டையடித்துக் கொண்டிருந்த போது..

"கதிர்.. டென்னிஸ் விளையாடலாமா..?" என்று கருணாதான் கேட்டாள்..

"ஆடிட்டாப் போகுது.. சரத்.. நீ எந்த டீம்டா..?" என்றான் கதிரவன்..

"நான் ஜெயிக்கிற டீம்தான் மாமா.. ஆனாலும் நீங்க டென்னிஸ்ஸில் வீக்தான்.. அக்கா போல ஆக்டிவ் இல்லை.." என்று சொல்லி விட்டான் சாய்சரத்..

வந்தனா திறமையாக டென்னிஸ் விளையாடுவாள்.. அவளை ஜெயிக்க அதுவரை சுதாகரனாலோ... கருணாவாலோ.. முடிந்ததில்லை.. கதிரவன் வந்த பின்னால் நேருக்கு நேராக அவன் வந்தனாவுடன் அதுவரை விளையாடவில்லை.. சுதாகரனுடன் விளையாடுவான்.. கருணாவும்.. வந்தனாவும் விளையாடுவதை வேடிக்கை பார்ப்பான்..

அந்த நினைவில் சாய்சரத் வந்தனாவுடன் கூட்டணி போட்டு விட.. கருணா கதிரவனுக்குக் கை கொடுத்தாள்..

"டோன்ட் வொர்ரிடா கதிர்.. இதுக அக்கா தம்பிகளா கூட்டணி போட்டா.. நாம அக்கா தம்பியா எதிர்த்து நிற்க மாட்டோமா..? வாடா.. ஒரு கை பார்க்கலாம்.."

உற்சாகமாய் அவள் எழுந்து கொள்ள.. வேறு வழியில்லாமல் கதிரவனுக்கு எதிராக வந்தனா டென்னிஸ் மட்டையை பிடிக்க வேண்டியதாகி விட்டது.. இதயத் துடிப்பு அதிகரிக்க.. அவள் களம் இறங்கினாள்.. ஆட்டம் ஆரம்பமானவுடன் அனைத்தும் அவளுக்கு மறந்து விட்டது.. அவளுடைய மட்டை வீச்சில் கதிரவன் அடிக்கும் பந்து எகிறிப்பறக்க.. வந்தனாவின் பக்கம் பாயிண்டுகள் எகிற ஆரம்பித்தன.. சரத் குதூகலிக்க.. கருணா அலுத்துக் கொண்டாள்.. கதிரவன் ஒரு கண்வீச்சில் வந்தனாவிடமிருந்து ஒரு பாயிண்டைக் கவர்ந்தான்..

"எப்புடி..?" கதிரவன் புருவங்களை உயர்த்த..

"யாருடா நீ.. சிங்கமாச்சே.." சிலாகித்தாள் கருணா..

'சிங்கம்..!' உதட்டை வளைத்து அழகு காட்டினாள் வந்தனா..

'ஆடுறது கள்ளாட்டம்.. இதில் ஐயா சிங்கமாம்..'

அதை வெளிப்படையாக சொல்ல முடியாமல் போனதில் அவள் அவனை முறைத்தாள்.. அவனோ மீண்டும் ரகசியமாக கண்ணடித்து வைத்தான்.. அவள் மீண்டும் பந்தை தவறவிட்டாள்..

"அக்கா.." சரத் தலையில் கைவைக்க..

'இது வேலைக்கு ஆகாது..' என்று தோன்றி விட்டது வந்தனாவுக்கு..

அந்த கள்ளாட்டம் ஆடுகிறவனுடன் அவளால் விளையாட முடியாது என்று மட்டையைத் தூக்கி எறிந்து விட்டுப் போய் விடலாமா என்று ஓர் கனம் யோசித்தாள்..

அப்படிச் செய்து விட்டால் அவன் என்ன செய்வான்..?

*'ஆடாமல் ஜெயிச்சோமடா..*
*தம்பே வாழாம ஜெயிச்சோமடா..*
*ஓடாம ரண் எடுத்தோம்..*
*சும்மா ஒக்காந்து வின்னேடுப்போம்..'*

அவள் மனதில் பாடல் ஒலித்தது.. இப்படித்தானே அவன் ஆடிப்பாடி வைப்பான் என்பதால் அவள் பல்லைக் கடித்தபடி அவனைப் பார்க்காமல் அடுத்து வந்த பந்தை மட்டும் கவனித்ததில் பந்து அவன்பக்கம் பாய்ந்தது..

"ஹப்பாடா.." சரத் நிம்மதியானான்..

அவள் தப்பிக்க முனைவதை புரிந்து கொண்ட கதிரவன்.. சற்றுத் தொலைவில் போய் கொண்டிருந்த செளம்யாவைப் பார்த்தான்.. ஜெட் வேகத்தில் அவன் மனதுக்குள் திட்டம் உதயமானது..

"செயம்யாக்கா.." கை தட்டி அழைத்தான்..

'இப்ப என்ன அலுவலுக்கு அவளைக் கூப்பிடறான்..' வந்தனா பல்லைக் கடித்தாள்..

அவளது முக மாறுதலைக் கவனித்தபடி செளம்யாவிடம் கிளை கொண்டாடினான் கதிரவன்..

"ஏன்க்கா.. இங்கே மேட்ச் ஒடிக்கிட்டு இருக்கு.. நீ ஆடியன்ஸா நின்னாத்தான களைகட்டும்.. அதை விட்டுட்டு கிச்சனிலயே இருந்தா எப்படி..?"

செளம்யா மகிழ்ந்து விட்டாள்.. சும்மாவே அவள் கதிரவன் எவ்விடமோ.. அவ்விடம்தான் அவள் இடம் என்பதைப் போல அங்கேயே சுற்றிக் கொண்டிருப்பாள்.. தானாகவே கதிரவன் அழைத்தாள் மாட்டேன் என்றா சொல்வாள்..

"எந்தா சாரே.. எனக்கும் டென்னிஸ்ன்னா வளர இஷ்டமாக்கும்.." என்று அங்கேயே குந்தி விட்டாள்..

கதிரவன் பந்தை அடிக்கும் போதெல்லாம் செளம்யாவைப் பார்த்து இமை சிமிட்டி சிரித்துப் பேசியபடி அடித்தான்.. அதில் மகிழ்ந்து போன செளம்யாவின் கள்ளச்சிரிப்பல் வந்தனாவின் கன்னி மனம் பற்றி எரிய.. அவள் பந்தைத் தவற விட்டாள்..

"பார்த்தியாக்கா.. நீ என் பக்கத்தில நின்னா பாயிண்டா குவியுது.." கதிரவன் வந்தனாவின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்..

வந்தனாவின் பாயிண்டுகளை ஒட்டி கதிரவனின் பாயிண்டுகள் அதிகரித்துக் கொண்டே வர.. கடைசியில் இருவரும் சம அளவில் வந்து நின்றனர்.. இருபக்கமும் தோல்வியில்லாமல் மேட்ச் முடிந்ததில் செளம்யா அவள் முதலிலேயே வந்திருக்க வேண்டும் என்று வருந்தினாள்.. அப்படி அவள் வந்திருந்தால் கதிரவன் பாயிண்டுகளை அள்ளிக் குவித்திருப்பான் என்றும்.. அவளது ராசி அதற்கு துணை செய்திருக்கும் என்றும் அவள் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனதில்.. வந்தனாவிற்கு அவளை மாய்க்கும் ஆசை வந்தது.. அவள் விழிகளில் அதை உணர்ந்த கதிரவன் வயிறு பசிப்பதாகச் சொல்லி செளம்யாவை அந்த இடத்தை விட்டு அப்புறப் படுத்திவிட்டு 'அப்பாடி..' என்று ஆசுவாச பெருமூச்சை விட்டான்.. வெற்றி தோல்வியின்றி முடிந்த 'டிரா' மேட்ச்சில் வந்தனா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கார் வரும் சப்தத்தில் திரும்பிப் பார்த்த கருணா..

"சரத்.. உங்க டாடி வந்திட்டாருடா.." என்று கண்கள் ஜ்வலிக்கச் சொன்னாள்..

அப்போதுதான் திருமணமான புதுமணப் பெண்ணைப் போல அவள் காட்டிய எதிர்பார்ப்பில்.. வந்தனாவின் மனத்தாங்கல் பறந்தோடி விட்டது.. அவள் சித்தியின் காதலை ஆச்சரியமாக பார்த்தாள்.. யதேச்சையாக கதிரவனைப் பார்த்தபோது.. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் விழிகளில் தெரிந்த அந்த ஏதோ ஒன்றில் வழக்கம் போல குழம்பிப் போனாள் வந்தனா..

‘எப்பப் பார்த்தாலும் இப்படி ஒரு பார்வையை பார்த்து வைச்சிருவான்..’

அவள் சலிப்புடன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

‘இங்கே இப்படிப் பார்க்கிறது.. மொட்டை மாடியில எனக்குக் கழுத்தை நீட்டினா என்ன சொல்வன்னு சரஸமாடறது.. அந்தப் பக்கம் சௌம்யாகிட்ட நூல் விடறது.. இவன் மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கான்..?’

கதிரவனின் மனதில் என்ன இருக்கிறது என்று ஆனானப்பட்ட வந்தனாவினால் அனுமானிக்க முடிய வில்லை என்பது தான் உண்மை..

அவளால் அவனைக் கணிக்க முடியவில்லை.. அவன் எந்த நேரம் எதைப் பேசுவான் என்றே அவளால் அனுமானிக்க முடியாத போது.. அவன் மனதில் என்ன இருக்கிறது என்பதைமட்டும் அனுமானித்து விட முடியுமா என்ன..?

# 21

"எனக்குப் பாடத் தெரியாதுங்க.." என்றார் சுதாகரன்..

"பாட்டெல்லாம் எனக்குப் பாடத்தெரியாது.." ராகம் போட்டுப் பாடிக் காட்டினான் சாய்சரத்..

"டேய்.. டாடியையா கிண்டல் பண்ற..?" கருணா அதட்டினாள்..

"அடப் போக்கா.. 'ஆ'ன்னா.. 'ஊ'ன்னா.. நீ சரத்தைத் தான் திட்டுவ.. ஏன்..? மாமாவுக்கு பாடத் தெரியலைங்கிறதை நீ ஒப்புக்கிட்டாத்தான் என்ன..?" என்றான் கதிரவன்..

"இல்லைடா.. எங்களுக்கு கல்யாணம் ஆன புதிசில இவர் என்னமா பாடுவார் தெரியுமா..?"

கருணாவின் கண்கள் கற்பனையில் மிதந்தன.. அதை ஜாடையாக பார்த்த கதிரவனும்.. சாய் சரத்தும் கண்ஜாடை காட்டி சிரித்துக் கொண்டார்கள்.. வந்தனாவுக்கு கோபம் வந்தது.. அதை அதிகப் படுத்துவதைப் போல கதிரவன் பேசி வைத்தான்..

"கல்யாணம் ஆன புதிசில மாமா பேசற வசனம்கூட உனக்குப் பாட்டாத் தெரிஞ்சிருக்கும்.. எனக்கென்னவோ.. மாமாவுக்கு மட்டுமில்ல.. இவரோட பரம்பரைக்கே பாட வராதுன்னு தோணுது.."

அவன் அடிக்கண்ணால் வந்தனாவை ஆராய்ந்தபடி சொன்னான்.. அவன் எதிர்பார்த்த தக்காளி சிகப்பு அவள் முகத்தில் வந்தது.. அது போதாதென்று அவ்வளவு நேரமாக அவனுடன் கூட்டணியில் இருந்த சாய் சரத்.. சுதாகரனின் பரம்பரைக்கே பாட்டு வராது என்று கதிரவன் சொல்லி விட்டதில் ரோசப்பட்டு கூட்டணியை முறித்துக் கொண்டு..

"மாமா.. உங்க பேச்சு காய்.." என்று அறிவித்து விட்டான்..

"பாருடா.. உண்மையைச் சொன்னா நீ காய் விடுவியா.."

"என்ன உண்மையை கண்டுட்டிங்க..?"

"டிரெயின் நடுக்காட்டில மாட்டிக்கிட்டப்ப உன்னோட அக்கா பாடினாங்களே ஒரு பாட்டு.. ஒற்றை வரிதாண்டா சரத்து.. அதில இற்றுப் போனவன்தான்.. ஓடி ஒளியலாம்ன்னா.. நடுராத்திரியில அது அத்துவான காடாயிருக்கு.. அந்தப் பாட்டக் கேட்ட பின்னால உங்க அப்பாவோட பரம்பரைக்கே பாட்டு வராதுன்னு முடிவு பண்ணாம என்னடா பண்ணுவேன்..?"

"சித்தி வேணாம்.. உங்க தம்பியை வாயை மூடச் சொல்லுங்க.."

"இதத்தான் நானும் சொல்றேன்க்கா.. மாமாவும் சரி.. அவரோட அருமை அண்ணன் பொண்ணும் சரி.. பாட்டுக் பாடறேன் பேர்வழின்னு பாட்டை சோதிக்காம வாயை மூடிக்கிட்டு இருக்கிறது பெட்டர்.. இல்லைன்னா அந்தப் பாட்டுக்கே கோபம் வந்து உங்க அருமை மகளை உதைக்க கிளம்பி வந்துரும்.. பாடாம தப்பிச்சிக்கச் சொல்லுங்க.."

"ஹ.. இவர் பெரிய எஸ்.பி.பி..! சொல்ல வந்திட்டாரு.."

"அங்கே மட்டும் என்னவாம்..? சின்னக்குயில் சித்ராவா வந்திருக்காங்க..? வாயைத் திறந்தா தகரடப்பா சத்தம் வருது.."

இதை சும்மா விட்டு விடக்கூடாது என்று தீர்மானித்தாள் வந்தனா.. அது என்ன எதற்கெடுத்தாலும் அவள் பாட்டை அவன் வம்பிழுப்பது..? ஐயா.. அவன் பெரிய பாடகன்தான்.. வாயைத் திறந்து அவன் பாடி வைத்தால் மயக்கம்.. மயக்கமாக வந்து தொலைக்கிறது தான்..

எஸ்.பி.பி யைப் போல அவன் குரல் இருக்கிறது என்பது உண்மைதான்.. அதற்காக அவன் வந்தனாவின் குரலை தகரடப்பா என்று சொல்வதா..? அதை அவள் காது கொடுத்துக் கேட்பதா..?

"வாங்க சித்தப்பா பாடலாம்.." அவள் முடிவெடுத்து விட்டாள்..

"வாடா சரத்.. நாம ஓடி விடலாம்.." கதிரவன் ஓட முனைவதைப் போல பாவனை செய்தான்..

"ஓடறதுன்னா நீங்க ஓடுங்க.. நான் வரமாட்டேன்.." கறாராக மறுத்து விட்டான் சாய்சரத்..

"என்னடா இப்படிச் சொல்லிட்ட..?"

"பின்னே..? நீங்களா என் பரம்பரை..? அக்காதான் என் பரம்பரை.."

"ஓ.. நீ அப்படி வர்றயா..?"

"யெஸ் மை டியர் அங்கிள்.."

"ஓகே மை டியர்.. உன் பரம்பரை என்னத்தைப் பாடிக் கிழிச்சிரப் போகுதுன்னுதான் நானும் பார்க்கிறேனே.."

"பாட்டை பார்க்க முடியாது மாமா.. கேட்கனும்.."

"உன் பரம்பரையோட பாட்டறிவைக் குறை சொன்னதுக்கு போட்டுத்தாக்கற.. ஊம்..? வாழ்க.. உன் பரம்பரையின் பாட்டு.."

கதிரவனின் கிண்டலில் உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு வந்தனாவுடன் ஒண்டிக் கொண்டான் சாய்சரத்.. கருணாவோ கணவரின் பாட்டறிவைச் சொன்ன தம்பியுடன் பேச்சு வார்த்தையை முறித்துக் கொள்ள ஆயத்தமானவளைப் போல கணவரின் பக்கத்தில் தள்ளி உட்கார்ந்து விட்டாள்.. தனித்து விடப்பட்ட கதிரவன் தாடையைத் தடவியபடி..

'பாருடா.. பரம்பரையே ஒன்னாச் சேருது..' என்று ஒரு தினுசாக பார்த்து வைத்தான்..

நீ எப்படி பார்த்தால் எனக்கென்ன என்று வந்தனா பாட ஆரம்பித்து விட்டாள்..

*"கூந்தலிலே நெய் தடவி..*
*குளிர் விழியில் மை தடவி..*
*காத்திருக்கும் கன்னிமகள்..*
*காதல்மனம் ஒரு தேனருவி..*
*இளம்வயது வளர்ந்துவர..*
*கனவு தொடர்ந்து வர..*
*கல்யாண ஊர்வலமோ..."*

பிசிறில்லாத அவள் குரல் இனிமையில் தோய்ந்து வந்த சுகமான ராகமாக இருந்தது.. அந்தப் பாடலை தேர்ந்தெடுத்த அவளின் சமயோசித புத்தியை 'சபாஷ்' என்று மனதுக்குள் பாராட்டிக் கொண்டான் கதிரவன்.. உணர்வு பூர்வமான அந்தப் பாடல்.. பாடுகிறவரின் ஸ்வர தடுமாற்றத்தை மறைத்து விடும் வல்லமை படைத்தது.. ராகம் தவறினாலும் பாவம் தவறாமல் பாடினால் வெற்றி பெற்று விடும் உறுதியைக் கொண்டது..

'கெட்டிக்காரி..' அவன் இதழ்களில் இளநகை படர்ந்தது..

*"மாப்பிள்ளை நெஞ்சம்.. மஞ்சம் – அதில்..*
*மல்லிகைச் செண்டு கொஞ்சம்..*
*காதலி உள்ளம் வெள்ளம் – அதில்*
*காதலின் ஓடம் செல்லும்..*

*இளம்வயது வளர்ந்து வர..*

*கனவு தொடர்ந்து வர..*

*கல்யாண ஊர்வலமோ..*

*கல்யாண ஊர்வலமோ.."*

பாடியபடி அவள் அருகிலிருந்த சுதாகரனின் தோள் சாய.. அவர் அண்ணன் மகளின் தலையை பாசத்துடன் வருடிக் கொடுத்தபடி தொடர்ந்து பாட ஆரம்பித்தார்..

*"நெஞ்சமென்னும் ஆலயத்தில்..*

*நின்றதெல்லாம் என் அண்ணன் மகள்..*

*என் மனதை.. தன்னுடனே..*

*எடுத்துச் செல்வாள் அந்த அன்பு மகள்..*

*புது மனையில் புகுந்து*

*மணவறையில் கலந்திருக்க..*

*கல்யாண நாள் வருமோ..*

*கல்யாண நாள் வருமோ.."*

அண்ணன் மகளின் மீதிருந்த பாசத்தில் அருவிபோல அவரிடம் பாடல் கொட்டியதில் கருணாவும். சரத்தும் மகிழ்ந்து போய் விட்டார்கள்.. கருணா விழிகளால் 'பார்த்தாயா..?' என்பதைப் போல கதிரவனிடம் ஜாடை செய்ய.. சாய் சரத்தோ கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தான்..

வந்தனாவின் கண்கள் கலங்கி விட்டன.. அவளுக்குத் தெரியும்.. இந்தப் பாட்டை பாட ஆரம்பித்து விட்டால் கட்டாயமாக சுதாகரன் தொடர்ந்து பாட வந்து விடுவார் என்று..

அது அவர் சிறுவயது வந்தனாவை தூக்கி வைத்துக் கொணடு அடிக்கடி பாடும் பாடல்.. அந்தப் பாடலில் அவரின் அத்தனை பாசமும் கரைந்தோடி வரும்.. அதனால்தான்.. அவரை பாட வைப்பதற்காக வந்தனா அந்தப் பாட்டைத் தேர்வு செய்து பாடினாள்..

*"ஆயிரம் காலத்தைக் கடந்து..*

*விழிநீரினை கண்கள் மறந்து...*

*அன்பென்னும் வானத்தில் பறந்து..*

*நீ வாழ்ந்திட வேண்டும் இருந்து..*

*ஒரு பருவமழையில்..*

*இரு புருவம் நனைந்துவர..*

*கல்யாண நாள்வருமோ..*

*கல்யாண நாள் வருமோ.."*

நெகிழ்ச்சியுடன் பாடிய சுதாகரனின் குரலில் தெரிந்த வாத்சல்யத்தில் உருகிப் போய் விட்டாள் வந்தனா.. அந்த பாசப் பிணைப்பை முகத்தில் எந்தவித சலனத்தையும் பிரதிபலிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கதிரவன்...

'ஜடம்..' வந்தனா மனதுக்குள் அவனைக் காய்ச்சினாள்..

"என் டாடி பாடிட்டார்.. அக்காவும் பாடியாச்சு.. இனி நான் மட்டும்தான் பாடனும்.. எப்படி மாமா.. எங்க பரம்பரையோட பாட்டு ஞானத்த புருவ் பண்ண நானும் பாடிக்காட்டனுமா..?"

"வேண்டாம்டா ராசா.. நானே மனசு திருந்திட்டேன்.. நீ என்னை பாடித் திருத்த வேணாம்.. மாமா தாங்க மாட்டேன்.. விட்டிரு.."

"பிழைச்சுப் போங்க.. எப்படி எங்க அக்காவோட பாட்டு.."

"தூள்ன்னு சொல்லத்தான் ஆசை.."

"சொல்ல வேண்டியதுதானே.."

"அப்படிச் சொன்னா.. பாட்டு பாடறவங்களெல்லாம் மாமனை வீடு கட்டி அடிக்க வந்திருவாங்கடா மருமகனே.."

"என்னது..."

"இரு.. இரு.. எதுக்கு இப்ப டென்சன் ஆகிற..? இப்ப என்ன.. உங்க அக்கா பாடின பாட்டை நான் பாராட்டி பரிசு கொடுக்கனும்.. அவ்வளவு தானே.. வேணும்னா இந்த குற்றால மலையை விலைக்கு வாங்கி பரிசு கொடுத்திரவா..?"

கதிரவனின் கிண்டலில் கையிலிருந்த செல்போனால் அவனை குறிபார்த்து எறிந்து மண்டையை உடைக்க நினைத்து ஓங்கிய வந்தனா அது ஒலிக்கவும்.. அதை எறியாமல் காதுக்கு கொடுத்து..

"ஹலோ.. அம்மா.." என்றாள்..

மறுமுனையில் பேசிய மாலதி என்ன சொன்னாளோ.. முகம் மாறாமல் 'ஊம்' கொட்டியபடி அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.. சுதாகரனையும்.. கருணாவையும் பற்றி மலாதி எதையாவது சொல்லி இருக்கக் கூடும் என்பதை யூகித்த அவர்கள் அதை பார்வையில் பரிமாறிக் கொண்டார்கள்.. வந்தனாவையே பார்த்த சுதாகரன்..

"நேத்துத்தான் இவ பிறந்து நான் கையில தூக்கிக் கொஞ்சியதைப் போல இருக்கு.. இன்னைக்கு என்னமா வளர்ந்து நிக்கிறா.. பாரேன்.. வந்தனாவுக்கு கல்யாண வயசு வந்திருச்சு கருணா.." என்றார்..

கருணா அதை ஆமோதித்து தலையை அசைத்தாள்..

# 22

"**கோ**வில்.. கோவிலாச் சுத்தனும்னு எதுவும் நேர்த்திக் கடன் வைச்சிருக்கீங்களா என்ன..?" புருவங்களை உயர்த்தினான் கதிரவன்..

"எதுக்குடா நேர்த்திக் கடன் வைக்கப் போகிறோம்..?" என்றாள் கருணா..

"யார் கண்டது..? உன் மச்சினன் மகளுக்கு சீக்கிரமா கல்யாணம் கூடிவரனும்னு நேர்த்திக் கடன் வைச்சிருக்கியோ என்னவோ.." என்றான் கதிரவன்..

"அப்படியே வைச்சிருந்தாலும்.. அது நிறைவேறின பின்னால தான நேர்த்திக் கடனுக்கு வரனும்..? இங்கேயென்ன வந்தனாவுக்கு கல்யாணம் கூடிருச்சா என்ன..?" கருணா கதிரவனின் மூக்கைப் பிடித்து செல்லமாக ஆட்டினாள்..

குற்றாலத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவிலிருந்த குமரன் கோவிலுக்கு அவர்கள் வந்திருந்தார்கள்.. அன்று அரிதாக ஒருநாளை குடும்பத்துடன் செலவிடப் போவதாக சுதாகரன் அறிவித்ததும்.. குடும்பமே ஆரவாரமாக கைதட்டி அதை வரவேற்றது.. அனைவரும் ஒன்றுகூடி அந்த நாளில் எங்கெங்கே போக வேண்டும் என்ற வரைபடத்தை தீட்ட ஆரம்பித்தார்கள்..

"இதுக்கு நான் கம்பெனியிலேயே இருந்திருக்கலாம்.. ரெஸ்ட் எடுக்கலாம்ன்னு வந்தா ரெஸ்ட் எடுக்க முடியுதா..?" கதிரவன் முணுமுணுத்தான்..

"டேய் சரத்.. உன் தூங்கு மூஞ்சி மாமாவை அவரோட ரூமுக்குப் போகச் சொல்லுடா.. சோம்பேறித்தனம் தொற்று வியாதியாம்.. இவரோட சோம்பேறித்தனம் நம்மளயும் தொத்திக்கப் போகுது.." வந்தனா கதிரவனை அடிக் கண்ணால் பார்த்தபடி சொன்னாள்..

அவனோ பதிலுக்கு அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்து வைத்தான்.. அவள் அரண்டு போனவளாக வாயை மூடிக் கொண்டாள்..

"நான் சோம்பேறி..! உன் அக்கா சுறுசுறுப்பு..? நேரம்டா.. குற்றாலத்துக்கு ரெஸ்ட் எடுக்க வந்ததுக்கு என்ன கப்சாவையெல்லாம் காதில கேட்க வேண்டியிருக்கு..?"

"அதை விடுங்க மாமா.."

"எப்படிடா விடறது..? சோம்பேறிபட்டம் உனக்கா கிடைச்சுச்சு..? எனக்கில்ல கிடைச்சிருக்கு..?"

"அதுக்கு இப்ப என்ன செய்யனும்ங்கறிங்க.. விடாலன்னா பிடிச்சு இழுத்துக்கிட்டே இருங்க.."

"எதைடா இழுக்கச் சொல்ற..? உன் அக்காவோட கையையா..?"

சுதாகரனும் கருணாவும் தள்ளியிருந்த தைரியத்தில் கதிரவன் கேட்டான்.. அவர்களின் பிரதிநிதியாக இருந்த சாய்சரத்திற்கு மூக்கிற்கு மேல் கோபம் வந்து விட்டது.. வந்தனா அதிர்ச்சியுடன் தம்பியைப் பார்க்க..

"கவலைப்படாதேக்கா.. நான் கேக்கறேன்.." என்றான்..

"உனக்கு எட்டு வயசுப் பையன் பாடி கார்டு.." கேலியாகச் சொன்னான் கதிரவன்..

"வயசுப் பத்தியெல்லாம் நீங்க பேசாதீங்க மாமா.."

"பேச மாட்டேண்டா.. அதையெல்லாம் வயசுப் பையன்ககிட்டத்தான் பேசனும்.. உன்கிட்ட எப்படிடா பேசறது..?"

"இப்ப பேச்சு அதைப் பத்தினதில்ல..."

"வேற எதைப் பத்தினதாம் ராசா..?"

"எப்படி நீங்க என் அக்கா கையை பிடிச்சு இழுக்கப் போறதா சொல்லலாம்..?"

"டேய்ய்.." வந்தனா அலறினாள்..

'அவன் ஒருவார்த்தை சொன்னா என்தம்பி ஒன்பது வார்த்தையை இழுத்து விடறானே..' அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்தது..

கதிரவன் அதை நோட்டமிட்டதில் அவளின் முகச் சிகப்பு அதிகரித்தது.. அவன் கண்கள் ரசனையுடன் அதைப் பார்த்ததில் லஜ்ஜையுடன் அவள் உதட்டைக் கடித்தாள்..

'இந்தப் பெண்களுக்கு வெட்கம் வந்தால் ஏன் உதட்டைக் கடிக்கிறார்கள்..?'

அதைப்பற்றி ஆராய வேண்டும்போல கதிரவனுக்கு இருந்தது..

'அதில தீஸிஸ் பண்ணினா பி.எச்.டி பட்டமா கொடுக்கப் போறாங்க..?' அவன் மனம் அதட்டியதில் அந்த யோசனையை கை விட்டான்..

"உன் அக்காவுக்கு இருக்கிற வாய்க்கு அவ கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு ஓடனும்னு எந்த மடையனாவது நினைப்பானா..?"

சாய்சரத்திடம் கதிரவன் கேட்டதில் கையிலிருந்த தடிமனான புத்தகத்தை அவன்மீது விட்டெறிந்தாள் வந்தனா.. அவனோ..

"கேட்ச்.." என்று அதைப் பிடித்து விட்டு.. சாய் சரத்தைப் பார்த்து..

"எப்புடி..? சூப்பர் கேட்ச்சில்ல..?" என்று அபிப்ராயம் கேட்டான்..

"இல்லை.." பட்டென்று அதை மறுத்துவிட்டுக் கோபமாக எழுந்து போய் விட்டான் சாய்சரத்..

"பாசக்காரத் தம்பி.." வந்தனாவிடம் சொன்னான் கதிரவன்..

அவள் அவனை முறைத்தாள்.. கதிரவன் தழைந்த குரலில் அவள் முன்னால் குனிந்து..

"உன் கையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு ஓடனும்னு எந்த மடையனும் நினைக்க மாட்டான்தான்.. ஆனா.. இந்த மடையன் அதை நினைப்பான்.." என்று கண்சிமிட்டினான்..

"என்னது..?..!"

வந்தனா விழி விரிய உட்கார்ந்திருக்கும் போதே ரகசியப்புன்னகையுடன் கருணாவிடம் போய் விட்டான் கதிரவன்..

வந்தனாவின் நடுக்கம் குறைய வெகு நேரமானது.. அவளால் கதிரவன் பேசிய வார்த்தைகளை மறக்க முடியவில்லை.. மிக இலகுவாக அவன் பேசிவிட்டுப் போய்விட.. அவளது கன்னி மனதில் தீப்பற்றிக் கொண்டது..

'ஏன் அப்படிச் சொன்னான்..?' வந்தனாவின் மனம் அலைபாய்ந்தது...

"வந்திட்டியாடா..?" கருணா உற்சாகமாக கதிரவனிடம் திரும்பினாள்..

"சொல்லு.. என்ன பிளான் பண்ணியிருக்க..? முதலில் அருவி.. அப்புறமா போட் ஹவுஸ்.. அதுக்கப்புறம் பார்க்.. முடிஞ்சா தெற்குமலை எஸ்டேட்.. இது என்னோட பிளான்.. ஓகேவா..?"

"போடா.. நீயும் உன் பிளானும்.. இதையெல்லாம் மாமா வராத நாளில பார்த்துக்கலாம்.. அவர் கூட இருக்கிறப்ப கோவில்களுக்குப் போயிட்டு வரனும்டா.." பக்திப் பழம்பானாள் கருணா..

"கோவில்களுக்கா..?" கதிரவன் அலறினான்..

அவன் கோவில் என்றாலே மிரளுவான்.. இதில் 'கோவில்கள்..' என்று பன்மையில் கருணா சொன்னால் அலற மாட்டானா..?

"எதுக்கு இப்படி சவுண்டு விடற..? இன்னைக்குப் பூராவும் கோவில்கள்தான்.. வாயை மூடிக்கிட்டு கூடவா.. முதலில் பக்கத்தில் மூணு கிலோ மீட்டர் தூரத்தில இருக்கிற குமரன் கோவில்.."

"அதுக்கப்புறம்.."

"ஆறே கிலோ மீட்டரில தென்காசியில குடியிருக்கிற காசி விஸ்வநாதர் கோவில்டா.. அவர் சக்தி வாய்ந்த சிவன்.."

"ஓகே.. தென்..?"

"எட்டே கிலோ மீட்டரில திருமலை கோவில்டா.."

"ஒருநாள் ஒன்னுக்கு ரெண்டு கோவில் போதாதா..?"

"போதாது.. அதுக்கு இப்ப என்னாங்கிற..? உன்னை வந்து பாக்கிறவங்க.. உன் மாமாகிட்டயும் ஹலோ சொல்லிட்டு வரனுமா வேணாமா..?"

"இப்ப எதுக்கு மாமா-மச்சினன் உறவை இழுக்கிற..?"

"பெருமாள் யாருடா..? சிவனுக்கு மச்சினான்.. பெருமாளோட மாமாவைப் பார்க்கிறவங்க மச்சினனையும் பார்க்கனும்டா கதிர்.. அதுதான் நியாயம்.."

என்னவோ உறவு முறையை பார்த்து விட்டு வரும் போது ஒரு உறவைப் பார்த்துவிட்டு இன்னொரு உறவை பார்க்காமல் வந்தால் அது நியாயமல்ல என்று வாதிடுபவளைப் போல வாதிட்ட தமக்கையை எதிர்த்து வாதிட முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டான் கதிரவன்..

"எங்கிருந்துக்கு இம்புட்டுக் கதைகளையும் பிடிக்கிற..?"

"எல்லாம் என் அம்மாவும்.. உன் அம்மாவும் சொல்லிக் கொடுத்ததுதான்.. கிளம்பு.. கிளம்பு.. எட்டு கிலோ மீட்டர் போயிட்டு வாரதுக்கு இம்புட்டுக் கதை சொல்லனுமா..?"

"எட்டு கிலோ மீட்டரா..? முதல்ல குமரன் கோவில் மூணு கிலோமீட்டர்.. அதுக்கப்புறம் விஸ்வநாதர் கோவில் ஆறுகிலோமீட்டர்.. அதுக்கும் அப்புறமா திருமலை கோவில் எட்டுகிலோ மீட்டர்ன்னா கூட்டிக் கழிச்சு.. வகுத்துப் பெருக்கிப் பார்த்தா.."

"பார்த்தா..?"

"மொத்தம் பதினேழு கிலோ மீட்டர் வருதேக்கா.."

"அறிவுக் களஞ்சியம்டா நீ.."

கருணாவின் சிரிப்பில் வந்தனா அருகில் வந்தாள்.. சாய்சரத் திரும்பிப் பார்த்தான்.. சுதாகரன் என்னவென்று கேட்டார்.. கருணா விவரம் சொன்னதும்.. அவர்கள் நால்வரும் கூட்டணி போட்டுக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்..

'கிடைச்சச்சு சான்ஸ்ன்னு குடும்பமே வந்து கும்மியடிக்குதுடா கதிரவா..'

கதிரவன் தாடையைத் தடவியபடி வந்தனாவை ஒரு தினுசாக ஆழ்ந்து பார்த்தான்.. சுவிட்ச் போட்டதைப் போல அவள் சிரிப்பு நின்று விட்டது.. அவசரமாக பார்வையை திருப்பிக் கொண்டாள் அவள்..

தப்பிக்க முனையும் அவள் செய்கையில் இப்போது அவனுக்குச் சிரிப்பு வந்தது.. லேசான சிரிப்புடன்..

"இப்ப எதுக்காகடா இப்படி சிரிச்சு மகிழ்கிறிங்க..?" என்று சாய்சரத்திடம் கேட்டான்..

"சும்மா காமெடி பண்ணாதீங்க மாமா..?" என்றான் அவன்..

"நான்..? காமெடி பண்றேன்..? ஏண்டா சொல்ல மாட்ட.. தெரியாத்தனமா இந்த சம்மர் வெகேசன்ல ரெஸ்ட் எடுக்கிறேன் பேர்வழின்னு குற்றாலத்தில வந்து மாட்டியிருக்கேனில்ல.. நீ இதுவும் சொல்லுவ.. இதுக்கு மேலேயும் சொல்லுவ.."

'மாட்டியிருக்கிறானா..?'

வந்தனாவின் விழிகள் உயர்ந்து அவனைப் பார்த்தன.. அவள் வரும் கோடை விடுமுறையில் அவனும் வந்து விட்டதைத்தான் மாட்டிக் கொண்டதாக அவன் சொல்கிறானா..?

அவள் பார்வையில் கதிரவனின் விழிகளில் மின்னல் வந்தது.. அவன் இமை சிமிட்டினான்.. வழக்கம் போல அவள் அரண்டு போனவளாக முகம் திருப்பிக் கொண்டாள்..

"ஏன் மாமா.. குற்றாலத்தில இருந்து திருமலை கோவில் எட்டு கிலோ மீட்டர்.. காசி விஸ்வநாதர் கோவில் ஆறு கிலோ மீட்டர்.. குமரன் கோவில் மூணு கிலோ மீட்டர்.."

"நீ ஏண்டா இதை ரிவைஸ் பண்ற..?"

"என் புத்திசாலி மாமாவே.. திருமலை கோவிலுக்கு போகிற வழியில மத்த ரெண்டு கோவிலையும் பாத்துட்டுப் போனா.. எட்டுகிலோ மீட்டர்தான வரும்..? இதை ஒரே நேர்கோட்டால பார்க்காம எதுக்காக வேலை மெனக்கெட்டு ப்ளஸ் பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?"

சாய்சரத்தின் கேள்வியில் வந்தனா பொங்கிச் சிரித்தாள்..

"என்னை வாரிவிட்டா உன் அக்காவுக்கு எத்தனை சந்தோசம் பாரு.. வாழ்க உறவு..! இருந்தாலும்டா சரத்.. எட்டு வயசுப் பையனுக்கு இத்தனை அறிவு இருக்கக் கூடாது.."

"அதில உங்களுக்கு எதுக்கு மாமா இம்புட்டு வருத்தம்..?"

"நீ வாரி விடறது என்னைத்தானடா..?"

கதிரவன் சாய்சரத்திடம் கேட்டபடி வந்தனாவை பார்த்து வைத்தான்..

# 23

'உன்னை நான் வாரிட்டாலும்..'

வந்தனாவின் நயன பாஷையை உணர்ந்தவனைப் போல நமட்டுச் சிரிப்புடன் அவளைப் பார்த்து மற்றவர்கள் அறியாத வண்ணம் லேசாக இமை சிமிட்டி வைத்தான் கதிரவன்..

'ஆரம்பிச்சுட்டானா..?'

குப்பென்று வியர்த்த முகத்தை வேறுபக்கமாக திருப்பிக் கொண்டு அவன் பாராதபோது அவனைக் கள்ளப் பார்வை பார்த்து வைத்தாள் வந்தனா..

'எதுக்கெடுத்தாலும் கண்ணடிச்சே கவிழ்க்கிறான்.. இந்த லட்சணத்தில இவன் காலை நான் வாரிக்கிட்டு இருக்கேணாம்.. நான் காலைவார இவன் காலைக் கொடுத்திட்டுத்தான் வேற வேலை பார்ப்பான்...'

அவன் பண்ணிய அழும்பை மனதுக்குள் வெகுவாக ரசித்தாள் வந்தனா.. குடும்பத்துடன் கோவில்களுக்கு அவர்கள் கிளம்பினார்கள்..

"லன்ச்சுக்கு வீட்டுக்கு வந்திருவோம்.. சமைச்சு வைச்சிரு.."

உடன் வர விரும்பிய சௌம்யாவை சமையலறைக்கு திருப்பிவிட்டது இந்தக் கட்டளை.. கடமை தலையானதில் அவள் பெருமூச்சுடன் கதிரவனைப் பார்த்தபடி தலையை ஆட்டி வைத்தாள்..

அவளின் வருத்தம் கோவில்களுக்கு வர முடியாத தினாலா.. அல்லது.. கதிரவன்கூட வர முடியாததினாலா என்ற ஆராய்ச்சியில் வந்தனா ஈடுபட்டாள்..

முன்னது காரணமாக இருக்க முடியாது.. பின்னது தான் காரணம் என்று அவள் மனம் அடித்துக் கூறியது..

குமரன் கோவிலில் அவர்கள் சாமி கும்பிட்டுவிட்டு சற்றுப் பொழுது கோவிலுக்குள் உட்கார்ந்திருந்தார்கள்.. கதிரவன் நேர்த்திக்கடனைப் பற்றிய சந்தேகத்தை எழுப்ப.. வந்தனாவின் திருமணம் முடிவாகி விட்டதா என்ன என்று பதில் கேள்வியை எழுப்பினாள் கருணா..

"யார் கண்டது..? கல்யாணம் கூடி வந்துருச்சோ என்னவோ.."

கதிரவன் மர்மமான குரலில் சொல்ல.. சட்டென்று அவன் முகத்தை ஊன்றிப் பார்த்தாள் கருணா.. அவள் வாழ்ந்து பார்த்தவள்.. கதிரவனின் குரலில் தொனித்த மர்மத்தின் முடிச்சை வெகு எளிதில் கண்டு பிடித்து விட்டாள்.. அவள் முகத்தில் பிரகாசம் வந்தது..

"கதிர்..?" என்றாள் ஆச்சரியமாக..

"இன்னும் தெளிவாகத் தெரியலைக்கா.. ஒன்னை மட்டும் உறுதியாச் சொல்லுவேன்.. இதுவரைக்கும் என் மனசை.. உன் மச்சினர் மக அசைச்சப் பார்த்ததைப் போல வேற பெண் அசைச்சதில்லை.."

"ஆனா கதிர்.. கரிஷ்மா..?"

கருணாவின் கேள்வியல் தமக்கையை ஆழமாகப் பார்த்து விட்டுத் தோளைக் குலுக்கினான் கதிரவன்..

"சித்தப்பாவுக்கு இதில விருப்பம் இருக்குமோ என்னவோ.." கவலையுடன் சொன்னாள் கருணா..

சாணக்யனின் நினைவில் அவர் அப்படி எதுவும் ஆட்சேபிக்க மாட்டார் என்று கதிரவனால் சொல்ல முடியவில்லை.. அதற்குள் சுதாகரன் குரல் கொடுத்து விட்டார்..

"இங்கேயே லேட் பண்ணினா எப்படி கருணா..? இன்னும் ரெண்டு கோவில் பாக்கனுமே.. அதையும் நடை சாத்தறதுக்குள்ள பார்த்தாகனும்.."

அவர் முடுக்கி விட்டதில் அப்போதைய பேச்சை அந்தரத்தில் விட்டுவிட்டு கருணாவும்.. கதிரவனும் எழுந்து கொண்டார்கள்.. சாய்சரத்துடன் பேசியபடி இமைகள் படபடக்க வந்தனா கதிரவன் இருக்கும் திசையில் பார்த்து வைத்தாள்.. கதிரவன் இமை சிமிட்ட அரண்டு போனவளாக வேறுபக்கம் பார்த்தாள்.. அவளின் கைவிரல்கள் நடுங்கியதில் கதிரவனுக்கு சிரிப்பு வந்தது..

குற்றாலத்திற்கு வரும்போது இருந்த டென்சன் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டதைப் போல அவன் உணர்ந்தான்.. அதற்கு முன்பும் அவன் ஓய்வெடுக்க குற்றாலத்திற்கு வந்திருக்கிறான்.. இதுபோன்ற புத்துணர்வு அப்போது ஏற்பட்டதில்லை..

இப்போது மட்டும் ஏன் இப்படி..?

அவன் மனதின் கேள்விக்கு விடைபோல சாய்சரத்துடன் போய் கொண்டிருந்த வந்தனா.. அவன் பார்க்கவில்லை என்ற நினைவில் அவனைக் கள்ளப் பார்வை பார்த்து வைத்தாள்.. சட்டென்று அவள் பார்வையை இவன் பார்வை கவ்வியது.. அகப்பட்டுக் கொண்டவளாய் அவள் பார்வை ஸ்தம்பித்து திருதிருத்தது..

"அங்கே பாருடா சரத்.. மலை முகட்டில மேகம் நிற்கிறதை.."

சரத்திடம் பேசுவதைப் போல அவள் திரும்பி நின்று கொள்ள கதிரவனின் சிரிப்பு அதிகரித்தது..

'இவ.. இவ.. இவ மட்டும்தான் என்னோட புத்துணர்வுக்கு காரணம்..' அவன் பார்வை அவளை மேய்ந்தது..

மேய்ச்சல் நிலமாக தான் மாறிக் கொண்டிருப்பதை வந்தனாவும் உணர்ந்திருந்தாள்.. அவன் பக்கம் பார்க்க முடியாமல் குற்றால மலையின் இயற்கையழகை பருகுவதைப் போல வெளியே பார்த்தபடி வந்தாள்.. ஊடும் பாடும் கதிரவனின் பக்கம் அவள் பார்வை பாய்ந்து வைத்தது.. ஊடுறுவும் அவன் பார்வையில்..

'ஆத்தாடி..' என்று அரண்டு போய் இயற்கையழகின் மீது பாய்ந்தது..

தென் காசியில் இருந்தது காசி விஸ்வநாதன் கோவில்..

"சிவகாசியிலேயும் இதைப் போல காசி விஸ்வநாதர் கோவில் இருக்குக்கா.." என்றான் கதிரவன்..

"என்ன ஒரு கண்டுபிடிப்பு.." கேலியாக சொன்னாள் வந்தனா..

"நாங்க இதுக்கு மேலேயும் சொல்லுவோமில்ல.." என்றான் கதிரவன்..

வந்தனாவின் ஒளிர்ந்த முகத்தை பாராததைப் போல பார்த்து வைத்துக் கொண்டாள் கருணா.. கன்னி வயதைத் தாண்டி வந்தவளுக்கு கன்னி சலனங்களைப் பற்றிப் புரியாதா என்ன..?

'சித்தப்பா இதுக்குச் சம்மதிக்கனுமே..' அவளுக்குக் கவலையாக இருந்தது..

கதிரவனின் மனக் கிடக்கையை அறிந்த பின்பு அவளால் சும்மாயிருக்க முடியவில்லை.. விலகிப் போய் கொண்டிருக்கும் மாலதியை இழுத்துப் பிடித்துச் சொந்தத்தில் நிறுத்திக் கொள்ள இதை விட சிறந்த வழி வேறெதுவும் இருப்பதாக அவள் மனதுக்குப் புலப்பட வில்லை...

'அதிலும் வந்தனா..'

கருணாவின் மனம் கனிந்தது... அண்ணன் குடும்பத்தைவிட்டப் பிரிந்து விட்ட மன வருத்தத்தில் இருக்கும் சுதாகரனின் மன ரணத்தை மாற்றி விடும் அருமருந்து அவள்... ஒவ்வொரு கோடை விடுமுறையிலும்.. குடும்பத்துடன் பல்வேறு ஊர்களுக்கு உல்லாசப் பயணம் போகாமல்.. குற்றாலத்தில் இருக்கும் சுதாகரனைத் தேடி வந்து நிற்பவள்..

அவள் ஒருத்தான்.. பாஸ்கரனுக்கும்.. சுதாகரனுக்கும் இடையே இருந்த சகோதர உறவிற்கு இணைப்புப் பாலமாக இருப்பவள்..

அவளை தன் சொந்தத்தில் மண முடித்துக் கொள்வதை விட பெரிய சந்தோசம் கருணாவிற்கு உண்டா என்ன..?

'இருந்தாலும்..'

அவளால் முழுமனதாக சந்தோசப் பட முடிய வில்லை.. சாணக்யனின் குணத்தையும்.. மனத்தையும் அவள் நன்கு அறிந்தவள்.. கதிரவனின் திருமணத்தைப் பற்றிய அவரின் முடிவு எது என்பதை கருணாவிடம் அவர் சொல்லியிருந்தார்..

அப்படி இருக்கும் போது கதிரவனின் வார்த்தைகளை வைத்து மட்டும் மனக்கோட்டையை கட்டிவிட கருணாவினால் முடியவில்லை..

அவளின் மனப் போராட்டத்தைப் பற்றி அறியாதவர்களாக கதிரவனும் வந்தனாவும்.. கேலியும் கிண்டலுமாக பேசிக் கொண்டிருந்தார்கள்..

"கோவிலைப் பத்தி இவர் பேசுவாராம்.. நாம கேட்டுக்கனுமாம்.. காது இருந்தா தோடு போடனும்.. பூச் சுத்தக் கூடாது.."

வந்தனாவின் தலை ஆட்டுதலில் அவள் காதுகளில் இருந்த ஜிமிக்கிகளும் சேர்ந்து ஆடின.. அவற்றின் அழகில் மனம் மயங்கிய கதிரவன்..

"தோடு வாங்கிக் கொடுக்க நான் ரெடிதாண்டா சரத்.. அதைப் போட்டுக்கிறதுக்கு உன் அக்கா ரெடியான்னு கேட்டுச் சொல்லு.." என்று சொன்னான்..

வந்தனாவின் கண்களில் தெரிந்த மின்னலில் கருணாவின் மனம் வலித்தது.. இது போன்ற கேலிப் பேச்சை வந்தனா வேறு யாரிடமும் பேசியதில்லை என்ற நினைவு வந்ததில் கருணாவின் மனவலி அதிகரித்தது..

"தோடுடைய செவியனைப் பத்திச் சொல்ல வந்தவரு தோட்டைப் பத்திப் பேசி.. பேச்சைத் திசை திருப்பப் பாக்கிறாரா.. சார் சொல்ல வந்ததைச் சொல்லச் சொல்லுடா சரத்.."

"சாரா..? அக்கா முதலில் இந்தப் பஞ்சாயத்துக்கு ஒரு முடிவு சொல்லு... மாமா.. அதென்ன உங்க அண்ணன் மக எதுக்கெடுத்தாலும் என்னைப் பார்த்து 'சார்.. மோர்'ன்னு சொல்றாங்க.."

"என்ன வந்தனா.. என் தம்பியைப் பாத்து வேத்து மனுசரைப் போல சார்ன்னு சொல்லி வைக்கிற..?"

"அது சித்தி.. வந்து சித்தி.."

"ஆமாண்டா செல்லம்.. இவர் என் மச்சினன்.. இவரைப் பாத்து நீ 'சார்'ன்னு சொன்னா கேட்கிறவங்க இவரை யாரோ எவரோன்னு நினைச்சிர மாட்டாங்களா..?"

"அப்படி நினைக்கனும்ங்கிறதுதான் உங்க மகளின் திட்டமோ என்னவோ.. யாருக்குத் தெரியும்..?"

"நிச்சயமா இவருக்குத் தெரியாதுன்னு சொல்லுங்க சித்தப்பா.. கூப்பிடு.. கூப்பிடுன்னா எப்படிக் கூப்பிடறது..?"

"ஏன்..? அத்தான்னு கூப்பிறது.."

"ஹலோ.. உறவு முறையில நீங்க எனக்கு அத்தான் இல்லை.. உங்க மகன்தான் எனக்கு அத்தான்.."

வந்தனாவின் கோபத்தில் "ஹா.. ஹா.." என்று சிரித்தார் சுதாகரன்.. கருணாவும்.. சாய்சரத்தும் அவருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள்..

"டேய் கதிர்.. எங்க பொண்ணுக்கு உன் மகன்தான் அத்தான் முறையாகனும்.." கருணா சிரித்தபடி சொன்னாள்..

"ஊம்..?" கதிரவன் இமைக்காமல் வந்தனாவை பார்த்து வைத்தான்..

'போடா..' அவள் இப்போது பார்வையைத் திருப்பிக் கொள்ளவில்லை.. இமைக்காமல் பார்த்த அவன் பார்வையை சற்றும் சளைக்காமல் அவள் பார்த்து வைத்தாள்..

"என் மகன்தான் இவங்களுக்கு அத்தான் முறையாகனுமா..? அப்ப நான் இவங்களுக்கு என்ன முறையாகனுமாம் அக்கா..?"

கதிரவனின் கேள்விக்கு கருணா பதில் சொல்ல வில்லை.. இளம் வயதினரின் விளையாட்டுப் பேச்சாக அதை அவளால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.. கதிரவன் காட்டும் ஈடுபாடு சுபத்தில் முடிய வேண்டுமே என்று அவள் மனம் சங்கடம் கொண்டது..

# 24

"என் தம்பிக்கு யார் மாமாவோ.. அவரே எனக்கும் மாமா ஆகிறார்.." சொல்லி விட்டாள் வந்தனா..

"மாமாவா..?" கதிரவனின் முகம் எட்டிக் காயைக் கடித்ததைப் போல ஆனது..

அவனால் 'மாமா' என்ற வந்தனாவின் விளிப்பை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. அந்த நேரம் பார்த்து யாரோ ஒருவரின் செல்போன் "மாமா.. நீ எங்கேயிருக்க.." என்று அலறிவைக்க.. அவன் முகம் அஷ்ட கோணலாக ஆனது..

வந்தனா சிரிப்பை அடக்கிக் கொள்ள முயன்றபடி..

"வேண்டாம்ன்னா விட்டுறச் சொல்லுங்க சித்தி.. நான் உங்க தம்பியை எப்பவும் போல சார்ன்னு கூப்பிட்டுட்டுப் போறேன்.. அதுக்கு நீங்களும் சித்தப்பாவும் அப்ஜெக்ட் பண்ணக்கூடாது.." என்றாள்..

"நோ.. நோ.. பாருங்க கதிர்.. எங்க பொண்ணு சொல்கிறதும் சரிதானே.. சரத்துக்கு 'மாமா'ன்னா வந்தனாவுக்கும் நீங்க .. 'மாமா' முறைதானே ஆகனும்.. ஸோ.. அவ உங்களை மாமான்னுதான் கூப்பிடனும்.." சுதாகரன் தீர்ப்புச் சொல்லி விட்டார்..

கதிரவன் கருணாவைப் பார்த்தான்.. அவள் ஏதும் செய்ய முடியாது என்ற பாவனையில் கைகளை விரித்து தோள்களைக் குலுக்கினாள்.. கதிரவன் பல்லைக் கடித்தபடி வந்தனாவை முறைத்தான்..

'நீ பாட்டுக்கு முறைத்துக் கொண்டேயிருடா மச்சான்..'

வந்தனாவின் மனம் சிறகடித்தது.. எல்லாவற்றிலும் அவள் காலை வாரியவனை இதில் வார முடிந்ததில் அவள் மனம் திருப்தி கொண்டது.. காசி விஸ்வநாதரின் சன்னதியில் தீபாதரனையைப் பார்த்து கன்னத்தில் போட்டு.. ஈஸ்வரனை அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.. அம்பிகையையும் வணங்கி விட்டு அவர்கள் ஆலயத்தைச் சுற்றி வந்தபோது.. மௌன குருவாக கூட வந்த கதிரவனை வந்தனா வம்புக்க இழுத்தாள்..

"என்னை மாமான்னு கூப்பிடறவங்களுக்கெல்லாம் நான் கதை சொல்கிறதா இல்லை.." என்றான் கதிரவன்..

அவன் மௌனத்தைக் கலைத்து விட்டதில் வந்தனாவுக்கு சந்தோசமாக இருந்தது.. அவள் விடாமல் பேச்சை வளர்த்தாள்..

"என்னடா சரத் இது அநியாயமா இருக்கு..?"

"ஆமாக்கா.."

"என்னவோ வந்தனான்னு பெயர் இருக்கிறவங்களுக்கு கதை சொல்ல முடியாதுங்கிறதைப் போல இல்ல உன் மாமா பேசி வைக்கிறாரு.."

"அதானே.. மாமா.. நீங்க சொல்ல வந்ததை சொல்லியாகனும்.. ஆமாம்.. சொல்லிட்டேன்.."

"இல்லேன்னா.. அக்காவும் தம்பியும் என்னடா பண்ணுவீங்க..?"

கோவிலின் முன் பிரகாரத்தில் உட்கார்ந்தபடி கதிரவன் கேட்டான்..

"என்னக்கா செய்யலாம்.."

கதிரவனுக்குப் பக்கத்தில் வந்தனாவையும் இழுத்துக் கொண்ட உட்கார்ந்த சாய்சரத் கேட்டான்.. கருணா வழக்கம் போல சற்றுத்தள்ளி சுதாகரனுடன் உட்கார்ந்து தாழ்ந்த குரலில் பேச ஆரம்பித்து விட.. கதிரவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வந்தனாவை ஊன்றிப் பார்த்தான்..

'பார்வை பலமா இருக்கு..'

வந்தனா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. கதிரவனின் பார்வை நகரவில்லை.. அவன் வந்தனாவையே பார்த்தபடி..

"உன் அக்கா இருக்கிற தைரியத்தில வாயடிக்கிறயா..?" என்று கேட்டான்..

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?"

"ஒன்னும் சொல்லலை.. கதை சொல்ற அளவுக்கு எனக்குப் புராணம் தெரியாதுடா சரத்.. அதெல்லாம் உன் அக்காவுக்குத்தான் அத்துபடி.."

"அப்படிச் சொல்கிறவரு எதுக்காகடா சரத் வாயைத் திறக்கனும்..?"

"கரெக்ட் அக்கா.."

"என்னத்தடா கரெக்டைக் கண்டுட்ட..? டேய் சரத்.. சிவகாசியிலயும் காசி விஸ்வநாதர் கோவில் இருக்கு.. அதனாலதான் அதுக்கு சிவகாசின்னு பெயர் வந்தது.. தென் காசியிலேயும் காசி விஸ்வநாதர் கோவில் இருக்கு.. அதனாலதான் இதுக்கு தென்காசின்னு பெயர் வந்தது.. இதைத்தான் சொல்லவந்தேன்.. கதை எப்படி..?"

"அட.. அட.. அட.. உன் மாமா பின்னிப் பெடலெடுத்திட்டாருடா சரத்.."

"உனக்குத்தான் நான் மாமா.. உன் அக்காவுக்கு நான் யாரு..?"

கதிரவனின் நிதானமான கேள்வியில் உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் வந்தனா.. அந்த உதட்டுச் சுழிப்பில் அடித்துச் செல்லப்பட்டான் கதிரவன்..

மங்கையின் முக அசைவைப் போன்றதொரு போதை தரும் வஸ்து இந்த உலகில் ஏதும் இல்லை என்று அவனுக்குத் தோன்றியது..

"யாரோ.." வந்தனா சொன்னாள்..

"யாரோன்னு மொட்டையாச் சொன்னா எப்படி..? யாருன்னு சொல்லச் சொல்லுடா.." கதிரவன் வற்புறுத்தினான்..

"நிச்சயமா உன் மாமா எனக்கு அத்தானில்லைடா சரத்.."

வந்தனாவின் குறும்புச் சிரிப்பில் அவளையே குறுகுறுவென பார்த்து வைத்தான் கதிரவன்..

திருமலை கோவிலுக்குப் போய் பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு அவர்கள் வெளியே வந்த போது நேரம் நண்பகலைத் தொட்டிருந்தது..

"நடை சாத்தறதுக்குள்ள மூனு கோவிலையும் தரிசனம் பண்ணியாச்சு.." திருப்தியாகச் சொன்னாள் கருணா..

"சாதனைதான் போ.." கிண்டலாகச் சொன்னான் கதிரவன்..

"எங்களுக்கு இதுதான் சாதனைடா.." என்றாள் கருணா..

அவர்கள் வீட்டுக்குத் திரும்பிய போது களைத்திருந்தார்கள்.. தயாராக இருந்த மதிய உணவை ஒருபிடி பிடித்து விட்டு.. மாடிப் படிகளில் ஏறிய வந்தனாவுக்கு தூக்கம் கண்களைச் சுழற்றியது..

"ஹாவ்.." என்று கொட்டாவி விடப் போனவள் நிதானித்தாள்..

'இவன் எங்கேயாச்சும் நின்னுக்கிட்டிருப்பானே..'

கதிரவன் இருக்கும் நினைவில் பார்வையைச் சுழற்றினாள்.. அவளது கணிப்பு சரியாக இருந்தது.. கதிரவன் அங்கேதான் இருந்தான்.. அவன் அறைவாசலில் கைகளை மடித்துக் கட்டியபடி அவளையே பார்த்த வண்ணம் சுவரில் சாய்ந்து நின்றிருந்தான்..

'நல்லவேளை.. வந்த கொட்டாவியை வாய்க்குள்ளேயே நிறுத்திட்டேன்..' வந்தனா தன்னைத் தானே மெச்சிக் கொண்டாள்..

அவனை கண்டு கொள்ளாமல் கடந்து போக முனைந்தவளை..

"மருமகளே.." என்று அவன் நிறுத்தினான்..

"மருமகளா..?" இப்போது வந்தனாவின் முகம் விளக்கெண்ணையை குடித்ததைப் போல ஆனது..

"பின்னே..? சரத் எனக்கு மருமகன் ஆகனும்னா.. அவனோட அக்கா மட்டும் எனக்கு யாரா ஆவா..? மருமகளாத்தானே ஆவா..?"

"கெட்டிக்காரர்தான்.. இப்ப என்னதான் செய்யனும்ங்கறிங்க.."

வந்தனாவின் எரிச்சலான கேள்வியில் அவளருகில் வந்த கதிரவன் அவள் காதருகே குனிந்து..

"நீ என்னை 'அத்தான்' அப்படின்னு கூப்பிடனும்ங்கறேன்.." என்று சொன்னான்..

"அத்தானா..?" வந்தனாவின் முகம் ரம்யமானது..

"அத்தான்தான்.." கதிரவன் கண் சிமிட்டினான்..

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க.."

வந்தனா ஓடி அவளுடைய அறைக்குள் புகுந்து கொண்டாள்.. கதவை அடைக்கும் முன்னால் அவளுடைய பார்வை கதிரவனைத் தேடியது.. அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. சட்டென்று கதவை அடைத்துத் தாழிட்ட வந்தனா அதன் மேல் சாய்ந்து நின்று கண்களை மூடினாள்..

அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.. தேனை விட இனிப்பான மகிழ்வு மனதில் பரவியிருந்தது.. சுகமான நினைவுகள் தந்த இதமான இம்சையுடன் அவள் கட்டிலை அணுகி கண்களை மூடினாள்.. மூடிய இமைகளுக்குள் கதிரவன் வந்து நின்றான் கண்களைச் சிமிட்டினான்..

'அத்தான்தான்..' என்றான்..

"அத்தான்.." வந்தனா வாய்விட்டுச் சொன்னாள்..

என்னவோ.. எதிரே அவன் நின்று.. இவள் அவனை 'அத்தான்' என்று அழைப்பதைப் போல வெட்கம் வந்து சேர.. அவள் லஜ்ஜையுடன் தலையணையைக் கட்டிக் கொண்டு அதில் முகம் பதித்தாள்.. அப்படியே தூங்கி விட்டாள்..

மாலையில் கண் விழித்தவள்.. பல் தேய்த்து.. முகம் கழுவி.. தலையைப் பின்னலிட்டு.. லேசான ஒப்பனையுடன் வெளியே வந்தாள்.. மாடி ஹாலில் பேச்சுக் குரல்கள் கேட்டன.. அங்கே போனாள்..

"வந்தனா வந்திட்டா.." காபி குடித்துக் கொண்டிருந்த சுதாகரன் சொன்னார்..

"வா வந்தனா.. காபி டிபன் சாப்பிடு.." கருணா அழைத்தாள்..

வந்தனா கருணாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் நீட்டிய தட்டை வாங்கிக் கொண்டாள்.. எதிரே இருந்த கதிரவனின் பார்வை ஆர்வத்துடன் அவள்மீது படிந்தது.. அதை உணர்ந்த வந்தனாவின் உடலில் மின்சாரம் பரவியது.. சுதாகரன் இருக்கும் நினைவில் அவள் அவன் இருக்கும் திசைப்பக்கமே திரும்பாமல் காபி டிபனை காலி செய்தாள்..

காலிப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போகும் சாக்கில் மாடிக்கு வந்த சௌம்யாவின் பார்வை கதிரவனின் மீது ஆலவட்டம் போட்டது.. அதில் சௌம்யாவை விட்டு விட்டு கதிரவனை ரகசியமாக முறைத்தாள் வந்தனா.. அவனும் அவளைப் போலவே ரகசியமாக தோளைக் குலுக்கி கைகளை விரித்து.. சௌம்யாவின் ஆலவட்டப் பார்வைக்கு அவன் எப்படிப் பொறுப்பேற்க முடியும் என்று பார்வையினால் வினவி வைத்தான்..

'இவன் இடம் கொடுக்காமத்தான் அவ இந்தப் பார்வை பார்க்கிறாளாக்கும்..'

வந்தனா கடுப்புடன் ரிமோட் கண்ட்ரோலைக் கைப்பற்றி டிவியை உயிர்ப்பித்தாள்.. குடும்பத்தினரின் பார்வை டிவியின் பக்கம் திரும்பியது.. வந்தனா ஒரு சேனலை வைக்க.. சரத் ரிமோட்டைப் பிடுங்கி வேறொரு சேனலை வைக்க.. கதிரவன் அதைக் கைப்பற்றி பிபிசி செய்திகளை வைக்க.. கருணா ரிமோட்டை உறுவி சீரியலை வைக்க.. சுதாகரன் காதல் பார்வையில் அதே ரிமோட்டை யுத்தமின்றி கையில் வாங்கி டிஸ்கவரி சேனலை வைக்க என்று.. சின்னத்திரையில் எந்த சேனலும் ஒரு நொடிக்கு மேல் நிற்காமல் விட்டலாச்சார்யார் படத்தின் மாயாஜாலக் காட்சியைப் போல மாறி மாறி வந்து கொண்டிருந்தது..

"இது வேலைக்கு ஆகாது.." வந்தனா ஒட்டு மொத்தமாக டிவியை அணைத்து விட்டாள்..

அதை ஏக மனதாக மற்றவர்கள் ஏற்றுக் கொண்டது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.. டென்னிஸ் விளையாடப் போகலாமா என்று கதிரவன் கேட்டான்.. இருட்ட ஆரம்பித்து விட்டது என்று சொல்லி சுதாகரன் அதை நிராகரித்தார்.. சற்று நேரம் சீட்டைக் கலைத்துப் போட்டு விளையாடியவர்களுக்கு அதிலும் சுவராயம் போய் விட்டது..

# 25

"சுத்த போர்..."

சரத் உதட்டைப் பிதுக்கினான்.. கதிரவன் அவன் கழுத்தில் கை போட்டுத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான்..

"போரடிக்காம இருக்க நிறைய 'வே' இருக்குடா சரத்.."

இதைச் சொன்னவன் வந்தனாவைப் பார்த்துக் கண்சிமிட்டியதுதான் அவளைத் தூக்கிவாரிப் போட வைத்தது..

'அடப்பாவி..! இந்த கண்சிமிட்டலை சித்தப்பாவும்.. சித்தியும் பார்த்துட்டா என்னை என்னன்ன நினைப்பாங்க.. இவன் ஒரு முடிவோடதான் இருக்கான்..'

அவன் சொன்ன 'வே' என்னவாக இருக்கக்கூடும் என்பதில் அவளது சிந்தனை போனது.. எக்குத்தப்பாக எதையாவது சொல்லி வைத்து விடுவானோ என்று அவள் அஞ்சினாள்.. அவன் சொல்லிய விதமும்.. கண்சிமிட்டலும் அதைத்தான் அவளுக்குச் சொல்லியது..

மனம் திக்.. திக்கென்று அடித்துக் கொள்ள.. அவள் அவனை நடுக்கத்துடன் பார்த்தாள்..

'சித்தப்பாவையும்.. சித்தியையும் பக்கதில வைத்துக்கிட்டு சரத்கிட்ட இப்படி பேசி வைக்கிறானே.. கடவுளே..! நான் என்ன செய்வேன்..'

பயந்து நோக்கியவளைப் பார்த்தவனின் இமை மீண்டும் சிமிட்டி வைக்க.. அவள் அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

'ராஸ்கல்..' அவள் விரல் நடுங்கியது..

"எத்தனை 'வே' இருந்தா என்ன மாமா.. அதில ஒரு 'வே'வைச் சொல்லுங்க பார்க்கலாம்.."

'சரத் பாவம்.. அப்பாவி.. மாமன் என்னவோ விளையாட்டைப் பற்றிக் கூறுகிறான் என்று நினைத்து விட்டான்.. அவனுக்கு என்ன தெரியும்.. மாமன்காரனின் தெய்வீக விளையாட்டைப் பற்றி..'

வந்தனா மனதுக்குள் புலம்பினாள்.. எழுந்து போய் விடலாம் என்று பார்த்தால்.. சுதாகரனும்.. கருணாவும் அங்கேதான் இருந்தார்கள்.. அவர்களெல்லாம் அங்கே இருக்க.. வந்தனா மட்டும் எழுந்து போனால் என்னவோ.. ஏதோ என்று நினைத்து விடுவார்கள்..

அவனைப் பார்த்தால்தானே வம்பு என்று அவள் கவனமாக அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்... போரடிக்காமல் இருப்பதற்கு அவன் என்ன 'வே' யைச் சொன்னாலும்... அதை சுதாகரன் கருணாவின் முன்னால்தானே சொல்கிறான் என்ற தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்..

என்னதான் கிளிப் பிள்ளை போல சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி மனதுக்குள் தைரியத்தை வரவழைத்துக் கொள்ள படாத பாடு பட்டாலும்.. அது வருவேனா என்று அடம் பிடித்து வைத்தது..

வந்தனா தலையைப் பிடித்துக் கொண்டு..

'குற்றாலீஸ்வரா..' என்று உட்கார்ந்து விட்டாள்..

"வந்தனா.. என்னம்மா ஆச்சு..?" கருணாவின் கவனம் மைத்துனரின் மகள்மீது திரும்பினது..

"அது ஒன்னுமில்லைக்கா.. அக்காவுக்கும்.. தம்பிக்கும் போரடிக்குதாம்.." வந்தனாவிற்குப் பதில் கதிரவன் பதில் சொன்னான்..

'அப்படி நான் வந்து உன்கிட்டச் சொன்னேனாடா..?' வந்தனா பல்லைக் கடித்தாள்..

"ஊம்.. என்ன செய்யலாம் கதிர்..?" அவனிடமே அபிப்ராயம் கேட்டார் சுதாகரன்..

'போச்சுடா..' திரும்பவும் தலையில் கை வைத்தாள் வந்தனா..

'இவன் வழி சொல்லிட்டாலும்.. விளங்கிரும்..'

அவள் கீழ்பார்வை பார்ப்பதை நேர் பார்வையில் பார்த்த கதிரவன்..

"பாட்டுப் போட்டி வைக்கலாம் மாமா.." என்று வழி சொன்னான்..

'அப்பாடி.. நல்லவேளை.. தப்பிச்சேண்டா சாமி.. இவன் வேற எதையும் சொல்லிடலை..' நிம்மதியாக உணர்ந்த போதும்..

'அது என்ன.. இவன் பாட்டுப் போட்டின்னு ஆரம்பிக்கிறான்.. இவன் அதிலே எக்ஸ்பர்ட்.. நானும் சித்தப்பாவும் அதில வீக்.. அதனாலதானே..?' என்ற சீற்றத்தோடு நிமிர்ந்தாள் வந்தனா..

"சித்தி.. இது கொஞ்சம் கூட நல்லாவே இல்லை.."

"இன்னும் போட்டியே ஆரம்பிக்கலை.. அதுக்குள்ள உன்மக தீர்ப்புச் சொல்ல வந்தாச்சுக்கா.."

"சும்மாயிருடா கதிர்.. நீ சொல்லு வந்தனா.."

"உங்க எஸ்.பி.பி தம்பிக்கு தலைக்கனம் சித்தி.."

"அப்படி நான் சொன்னேனாக்கா..?"

"மனசில அப்படித்தான் நினைப்பிருக்கு சித்தி..?"

"என் மனசில என்னென்ன நினைப்பிருக்குன்னு இவங்க நுழைஞ்சு பார்த்தாங்களாக்கா..?"

கதிரவனின் விழிகள் ஏதோ ஒரு புரியாத கதையைப் பேசின.. வந்தனா திகைத்துப் போனவளாக ஓர் நொடி பேச்சை நிறுத்தினாள்.. மறுநொடியில்..

'இவன் மனசில் எது இருந்தா எனக்கென்ன..' என்று பேச்சைத் தொடர்ந்தாள்.. இருந்தாலும்.. எதற்கும் இருக்கட்டுமென்று அவன் முகம் பார்க்காமல் ஜாக்கிரதையாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"எனக்கென்ன வேற வேலை வெட்டி இல்லையா சித்தி.. உங்க தம்பி மனசுக்குள்ள நுழைஞ்சு பார்க்கிறது தான் எனக்கு வேலையா..?"

"ஓஹோ.. வேலை வெட்டி இருக்கிறவங்க இந்த நினைப்பை மட்டும் எப்படிக் கண்டு பிடிச்சாங்களாம்க்கா..?"

"அதான் முகத்தில பெருமை பொங்கி வழியுதே.."

"ஓ.. அந்த அளவுக்கு என் முகத்தைக் கூர்மையா பார்த்திருக்காங்க.."

கதிரவனின் கேலியில் ஆமாண்டா.. அப்படித்தாண்டா.. என்று சொல்ல முடியாமல் திண்டாடிப் போனாள் வந்தனா..

"டேய்ய்.." என்று அதட்டிய கருணாதான் வந்தனாவைத் தப்புவித்தாள்..

"இவளைப் பேச விடு.."

"நானென்ன உன் மகளின் வாயைப் பொத்தியிருக்கேனா..?"

'நீ செய்தாலும் செய்வேடா..' என்ற வந்தனாவின் பார்வையின் மொழியில் கதிரவனின் உதட்டில் கேலிச் சிரிப்பு தவழ்ந்தது..

"சும்மாயிரு கதிர்.." கருணா கண்டிப்புடன் சொன்னாள்..

"ஓகே.. நான் பேசலை.. உன் மகளையே பேசச் சொல்லு.." வாயின் மீது ஒற்றை விரலை வைத்துக் கொண்டான் கதிரவன்..

அதை வேடிக்கை பார்த்த வந்தனாவை நோக்கி அவனுடைய ரகசியக் கண்சிமிட்டல் பறந்து வந்தது..

'இவன் இருக்கானே..' வந்தனா முகம் வியர்த்தாள்..

'அடங்கவே மாட்டேங்கிறானே..' தவிப்புடன் நிலம் பார்த்தாள்..

"நீ சொல்லு வந்தனா.." என்றாள் கருணா..

"ஹப்பா.. ஒரு கருத்தைச் சொல்லக்கூட இந்த அளவுக்கு போராட வேண்டியிருக்கு சித்தி.."

"ஆமாமாம்.. இவனுக்கு வால் வளர்ந்துருச்சு.."

"அதுக்காக என் சித்தப்பாவையும்.. என்னையும் பாட வைச்சு தோற்கடிக்கனும்னு ஆடிப் பார்க்கலாமா சித்தி..?"

"அதானே..? ஏண்டா கதிர்.. வந்தனா சொன்னதைப் போல உனக்கு எஸ்.பி.பி வாய்ஸ் இருக்குங்கிறதை நான் ஒப்புக்கிறேன்.."

"சித்தி.. நான் எப்ப அப்படிச் சொன்னேன்..?"

"இப்பச் சொன்னயேம்மா.."

"உங்க தம்பி மனசில அப்படியொரு நினைப்பிருக்குன்னுதான் சொன்னேன் சித்தி.."

"ரெண்டும் ஒன்னுதான்க்கா.."

"இப்பத்தான் இவர் பேச மாட்டேன்னு வாயில விரலை வைச்சுக்கிட்டு மௌன விரதம் இருந்தார் சித்தி.."

"அது அப்ப.."

"எப்ப..? 'ஒன்ஸ் அபோன் எ டைம்' ஆ..?"

"யா.. யா..."

"கிழிஞ்சுச்சு.."

"போட்டியே ஆரம்பிக்கலை.... அதுக்குள்ளே முடிவைப் பத்திச் சொல்லிட்டயே.. கிளவர்தான் போ.."

"நான் கிளவர்தான் சித்தி.. அதை உங்க தம்பி ஒன்னும் கண்டுபிடிச்சு சொல்ல வேண்டாம்.. நானும் சித்தப்பாவும் இந்தப் பாட்டுப் போட்டியில கலந்துக்க மாட்டோம்.."

"'எஸ்' ஆகிரப் போறிங்கன்னு சொல்லு.."

"எஸ்ஸா..?"

"அக்கா.. நீயும் டாடியும் எஸ்கேப் ஆகப் போறிங்களாம்.. அதைத்தான் மாமா இப்படிச் சொல்கிறார்.. ஹலோ மாமா.. நாங்க ஒன்னும் 'எஸ்' ஆகிற பரம்பரையில்லை.. வாங்க.. மோதிப் பார்க்கலாமா.. என்ன டாடி..?"

சாய்சரத் வீரவசனம் பேசிவிட்டு சுதாகரனைப் பார்த்தான்.. அவரோ அவன் முதுகில் தட்டிக் கொடுத்து.. கட்டைவிரலை உயர்த்தி..

'வெற்றி நம் பக்கம்டா மகனே..' என்று சொல்லாமல்..

"அவசரப்பட்டு வார்த்தையை விட்டுட்டியேடா சரத்.." என்று சொல்லி வைத்தார்..

"ஹா.. ஹா.."

கதிரவனின் சிரிப்பில் கருணாவுக்கு ரோசம் வந்து விட்டது.. அவள் சுதாகரனின் முதுகில் ஒரு போடு போட்டாள்..

"என்னக்கா இது.. உங்க ரூமில போடுகிற போட்டை எங்க முன்னாடி போடறயே.." என்றான் கதிரவன்..

"போடா..! உன்கூட இவர் போட்டி போட்டுத்தான் ஆகனும்.. என்னங்க.."

"சொல்லு கருணா.."

"நீங்க பாடறிங்க.."

"எதுக்கு கருணா விபரீத விளையாட்டு..?"

"இப்ப நீங்க இவன்கூட மோதலை.. நான் உங்ககூட பேசமே மாட்டேன்.. சொல்லிட்டேன்.."

"போச்சுடா.. மாப்பிள்ளை.. ஆரம்பிங்க.."

"அதைத்தான் சார் எப்பவோ ஆரம்பிச்சு வைச்சுட்டாரே சித்தப்பா.."

வந்தனாவின் கடுப்பில் அவளை ஒரு மௌனப் பார்வை பார்த்து வைத்தான் கதிரவன்.. அந்தப் பார்வை அவளுடைய 'சார்' என்ற அழைப்பிற்கானது என்பதில் படு உற்சாகமாகிப் போனாள் வந்தனா..

ஏதோ அவளால் ஆனது.. அவளுடைய சித்தப்பாவுடன் மோதுகிறவனின் கடுப்பை முடிந்த அளவுக்கு கிளறி விடுவது..

"பாடுங்க சார்.. அதான் எங்க சித்தப்பா போட்டிக்கு தயாராகிட்டாரில்ல.." வந்தனா வேண்டுமென்றே 'சார்' என்ற அழைப்பில் அதிக அழுத்தத்தைக் கொடுத்தாள்..

கதிரவன் கடுப்பாகிப் போனான்.. பல்லைக் கடித்தபடி..

"மாமா.." என்று ஆரம்பித்தான்..

"மாப்பிள்ள.." அவர் பதிலுக்கு குரல் கொடுத்தார்..

*"நீயே உனக்கு என்றும்..*
*நிகரானவன்..."*

'பலே பாண்டியா' என்ற திரைப் படத்தில் வரும்.. 'மாமா.. மாப்பிள்ளை' பாடலை அவர்கள் இருவரும் பின்னிப் பெடலெடுத்தார்கள்..

கதிரவனின் ஆலாபனை வரும் போதெல்லாம்.. வந்தனா வேண்டுமென்றே.. அவன் காதுபட உரக்க..

"பாடுங்க சார்.." என்று சொல்லி வைத்தாள்..

அவன் பல்லைக்கடிப்பதில் ராகம் குளறுபடியாக.. அதிசயத்திலும் பேரதிசியமாய் சுதாகரன் கதிரவனை பாட்டில் வென்று வைத்தார்..

"இது நீங்கதானா..?" கருணா மகிழ்ந்து போக..

# 26

"இது என்ன உங்க குடும்பப் பாட்டா..?" புருவங்களை உயர்த்தினான் கதிரவன்..

ரயிலில் அவள் பாடிய அதே பாடல் வரிகளை சுதாகரனும் பாடுகிறாராம்.. அதை அவன் சொல்கிறானாம்..

வந்தனா உதட்டை வளைத்து அவனுக்கு அழகு காட்டினாள்.. கதிரவனின் ஆழ்ந்த பார்வை அடுத்து அவன் ஒரு வெடிகுண்டைப் போய் போகிறான் என்று வந்தனாவிற்கு அறிவுறுத்தியது.. அவனும் வெடிகுண்டைத் தூக்கி வீசினான்..

"சித்தப்பா ஜெயிச்சுட்டார்.. அவரோட பொண்ணு எப்படி..? ஜெயிப்பாங்களா.. தோற்பாங்களா..?"

கதிரவனின் போட்டிகான அறை கூவலில்.. 'ஆத்தாடி' என்று அரண்டு விட்டாள் வந்தனா.. அவனுடன் போட்டி போட்டு சுதாகரன் ஜெயித்தார் என்றால்.. அவனை எங்கே தட்டினால் வீழ்த்த முடியுமென்ற கணிப்போடு.. 'சார்..' என்று குரல் கொடுத்து கடுப்பேற்றி விட வந்தனா அவர் பக்கம் இருந்தாள்..

அவள் பக்கம் யார் இருக்கப் போகிறார்கள்..?

*'எல்லோரும் நலம் வாழ..*
*நான் பாடுவேன்..*
*நான் வாழ யார் பாடுவார்..?'*

அவள் மனம் சோககீதம் இசைத்தது.. அதனை உணர்ந்து கொண்ட நமட்டுச் சிரிப்பு கதிரவனின் இதழ்களில் தவழ்ந்தது..

"டாடியே வின் பண்ணியிருக்கார்.. உனக்கென்னக்கா.. களத்தில் குதி.." உற்சாகமாக அவளை ஊக்கப் படுத்தினான் சாய்சரத்..

'பயபுள்ள.. களத்தில பிடிச்சுத் தள்ளி விடறதிலேயே இருக்கானே..' வந்தனா நகத்தைக் கடித்துத் துப்ப ஆசை கொண்டாள்..

"ரெடி.. ஸ்டார்ட்.."

கருணா குரல் கொடுத்ததில் அவள் வேறு வழியின்றி பாட்டுக் களம் புக வேண்டியதாகி விட்டது.. எப்படி அவனை வீழ்த்தலாம் என்ற எண்ணம் வந்த போது அவன் 'சார்' என்ற அழைப்பில் கடுப்பாகிப் போவது நினைவுக்கு வந்து.. அவளுக்குள் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தது..

'சார்ன்னு கூப்பிடக் கூடாதுன்னா.. இவனை வேற எப்படிக் கூப்பிடறதாம்..? 'அத்தான்..' அப்படின்னா..? அதுக்கு இவன் வேற ஆளைப் பார்க்கனும்..'

வந்தனா விழி மின்னலுடன் பாட ஆரம்பித்து விட்டாள்..

*"மாமா.. மாமா.. மாமா..."*

அவளின் பாடலில் கருணாவும் சாய்சரத்தும் கைதட்டினார்கள்..

"பலே வந்தனா.. சரியாப் பாடற.. டேய் கதிர்.. இவ உன்னைச் சார்ன்னு கூப்பிடக் கூடாதுன்னு சண்டைக்கு வந்தேல்ல.. இப்பக் கரெக்டாக் கூப்பிடறா.. கேட்டுக்க.." கருணா உற்சாகத்துடன் சொன்னாள்..

சுதாகரனும் அந்த உற்சாகத்தில் பங்கு பெற்றதில் வந்தனாவையும் அது தொற்றிக் கொண்டது.. கதிரவனைக் கடுப்பேற்ற அவள் அழைத்த 'மாமா..' என்ற அழைப்பில் அவன் முறைப்பதற்குப் பதிலாக.. விழிகள் மின்ன அவளை ஒரு மார்க்கமாக பார்த்தது எதனால் என்பது மட்டும் அவளுக்கு விளங்கவே இல்லை..

"*மாமா.. மாமா.. மாமா..*" வந்தனாவின் அழைப்பில் ஒரு போதையிருப்பதை பாவம் அந்தப் பேதை உணரவேயில்லை..

கதிரவன் அதை உணர்ந்தான்.. விழிகள் மின்ன..

"*ஏம்மா.. ஏம்மா.. ஏம்மா..*" என்று பதிலுக்குப் பாடினான்..

அவன் கடுப்பாகாமல் கள்ளுண்ட சிங்கமாக மாறிப் போனதன் மர்மம் புரியாமல் திருதிருத்தாள் வந்தனா..

*"சிட்டுப் போல பொண்ணிருந்தா..*
*வட்டமிட்டுச் சுத்திச் சுத்தி..*
*கிட்டக்கிட்ட ஓடிவந்து தொடலாமா..?*
*தாலி கட்டு முன்னே..*
*கைகள் மேலே படலாமா..?*
*மாமா.. மாமா.. மாமா..."*

வந்தனா பாடலுக்குள் ஆழ்ந்து போனாள்.. அந்தப் பாடல் அவளை ஆகர்ஷித்து இழுத்து வளைத்து சிறை பிடிப்பதை உணராமலே அதனுள் அவள் புதையுண்டு போனாள்.. கதிரவனிடம் இருந்த போட்டி மனப்பான்மை அமிழ்ந்து போய்.. அவன் மீதிருந்த மயக்கம் எழுந்து நின்றதை அறியாமல் அவள் விழி செருகப் பாடினாள்..

கதிரவன் அதை உணர்ந்தான்.... அவனைக் கட்டியிழுக்கும் அந்த சுட்டிப் பெண்ணின் பாடல் வரிகள் அவனை இழுத்துப் பிடித்தன.. அவன் விருப்பத்துடன் அதில் சிக்கிக் கொண்டான்.. அவனுக்கும்.. அவளுக்குமான பிரத்யேக ஆடுகளமான அந்த பாடல் போட்டியில்.. அவர்கள் இருவரும் ஒருவர்மீது.. ஒருவருக்கிருந்த உரிமையுணர்வையும்.. ஆழ்ந்த மயக்கத்தையும் வெளிப் படுத்திக் கொண்டிருந்தார்கள்..

*"வெட்டும் விழிப் பார்வையினால்..*
*ஒட்டுறவாய் பேசிவிட்டு..*
*எட்டி எட்டி இப்படியும் நீ ஓடலாமா..?*
*கையைத் தொட்டுப் பேச மட்டும்*
*தடை போடலாமா..?*
*ஏம்மா.. ஏம்மா.. ஏம்மா..?"*

அந்த மாடிஹாலில் நடந்த பாட்டுக் கச்சேரி.. சமையலறையில் இருந்த சௌம்யாவையும் இழுத்துக் கொண்டு வந்ததில்.. அவள் ஓடி வந்து மாடிப் படிகளின் முடிவில் இருந்த படியில் அமர்ந்து கொண்டாள்..

எப்போதும் அவளைக் கண்டால் கடுப்பாகி விடும் வந்தனா.. அப்போது அவளைக் கூடக் கவனிக்காமல் பாட்டுக்குள் மூழ்கி விட்டாள்.. அந்தப் பாடலில் இருந்த ஏதோ ஒன்று அவளையும் கதிரவனையும் பிணைத்துச் செல்வதைப் போல அவளுக்கு இருந்தது..

*"ஊரறிய நாடறிய பந்தலிலே - நமக்கு*
*உத்தவங்க.. பெத்தவங்க மத்தியிலே*
*ஒன்னாகி உறவுமுறை கொண்டாடும் முன்னாலே*
*ஒருவர் கையை மற்றொருவர் பிடிக்கலாமா..?*
*இதை உணராமல்*
*ஆம்பளைகள் துடிக்கலாமா..?*
*மாமா.. மாமா.. மாமா..."*

வந்தனாவின் குரலில் சிருங்காரம் சுழன்றாடியது.. அவள் 'மாமா' என்ற வார்த்தையில் ஏற்ற இறக்க அழுத்தத்தைக் கொடுத்து உச்சரிக்கும் போது சுழித்த அவளின் உதட்டுச் சுழிப்பில் கதிரவனின் மனம் சிக்கிச் சின்னாப் பின்னப்பட்டது.. அவனை நேரடியாகப் பார்த்து அவள் பாடிய அந்தப் பாடலில் தெரிந்த சொல்வீச்சில்.. அதை அவனுக்காக அவள் பாடிய கண்வீச்சில் அவன் தடுக்கி விழுந்தான்.. அவள் விழிகளின் தூண்டிலில் அவனது வாலிப மனம் சிக்கிக் கொண்டது..

*"நாடறிய ஒன்னாகும் முன்னாலே..*
*தூண்டில் போடுகின்ற உங்களது கண்ணாலே..*
*ஜாடைகாட்டி ஆசைமூட்டி..*
*சல்லாப பாட்டுப்பாடி*
*நீங்க மட்டும் எங்க நெஞ்சை தாக்கலாமா..?*
*உள்ள நிலை தெரிஞ்சும்*
*நீங்க கேள்வி கேட்கலாமா..?*
*ஏம்மா.. ஏம்மா.. ஏம்மா.."*

இப்போது கதிரவன் கொடுத்த "ஓஹோ.." என்ற ஒலியில் சௌம்யாவாயில் விரலை வைத்து விசில் அடித்து உற்சாகக் குரல் எழுப்பி கதிரவனின் கவனத்தை கவர முயன்றாள்..

அவனோ அவள் பக்கமாக திரும்பாமல் வந்தனாவைப் பார்த்து 'ஏம்மா..' என்ற கேள்வியை கேட்டுக் கொண்டிருந்தான்..

சில பாடங்களில் தெறிக்கும் உற்சாக மழைச் சாரங்கள் சொற்களில் இனம் பிரித்து விளக்கம் சொல்ல முடியாதவை..

அவர்கள் பாடிய அந்தப் பாடலும் அந்த வகையைச் சேர்ந்ததுதான்.. அதில் தெறித்து விழுந்த உற்சாக மழையில் கதிரவனும் வந்தனாவும் ஆடிக் கொண்டிருந்த கண்ணாமூச்சி விளையாட்டு ஒரு முடிவுக்கு வந்தது..

அந்த பாடலின் வரிகளை இருவருமே உண்மையாகப் பாடினார்கள்.. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதைப் போல உணர்ந்து பாடினார்கள்.. அதில் தொனித்த உரிமையையும்.. சந்தோச சங்கமிப்பையும் அவர்கள் மட்டுமே அறிவார்கள்..

*"கட்டுப்பாட்டை மீறாம..*
*சட்டதிட்டம் மாறாம..*
*காத்திருக்க வேணும் கொஞ்சம்..*
*காலம் வரைக்கும்..*
*பின்பு கல்யாணம் ஆகிவிட்டா..*
*ஏதுதடை..? ஏதுதடை..?*
*மாமா.. மாமா.. மாமா..?"*

வந்தனாவின் பாடலின் முடிவில்..

"போடு.." என்று குரல் கொடுத்த கதிரவன்..

"ஆமா.. ஆமா.. ஆமா.." என்று சேர்ந்து கொண்டான்..

பாட்டு முடிந்தது.. வந்தனாவின் பாடலை விட கதிரவன் பாடியதுதான் நன்றாக இருந்தது என்று சௌம்யா அபிப்ராயம் தெரிவித்தாள்.. அதை அவன் பாடாமல் வாய்மூடி அமர்ந்திருந்தாலும் அவள் செய்திருப்பாள் என்ற நினைவில் வந்தனா பல்லைக்கடித்தாள்.. வந்தனா பாடியதுதான் பாடல்.. மற்றவர்கள் பாடியது வெறும் கூவல் என்று சாய்சரத் அபிப்ராயம் தெரிவித்தான்.. அந்த மற்றவர்கள் என்பது யார்யார் என்று அறிய விரும்புவதாக கதிரவன் குரல் எழுப்பினான்.. அது யாரோ என்று சாய்சரத் பதில் சொல்லிவிட்டான்..

கருணாவும் சுதாகரனும் ஏகமனதாக வந்தனா.. கதிரவன் இருவருமே நன்றாகப் பாடினார்கள் என்று அறிவித்தார்கள்..

"இந்தப் பாட்டிலே வெற்றி தோல்வியைச் சொல்ல முடியாதுடா கதிர்.. நீயும் வந்தனாவும் சேர்ந்து பாடினதிலே பாட்டுக்கே அழகு வந்ததைப் போல இருந்துச்சுடா.." என்றாள் கருணா..

"ஐ ஆக்ரி வித் திஸ் வெர்டுஸ் மாப்பிள்ளை.." சுதாகரன் அறிவித்தார்..

"இது அழகான பாட்டு.. அதை நீங்க பாடினப்ப இதோட அழகு கூடினதைப் போலத்தான் இருந்துச்சு.."

சுதாகரனின் வார்த்தைகளுக்கு "போங்கப்பா" என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டான் சாய்சரத்.. "அதுதானே.." என்று தனது ஆட்சேபத்தையும் தெரிவித்துக கொண்டாள் சௌம்யா..

அவர்கள் இரவு உணவுக்காக எழுந்து.. கலைந்தார்கள்.. அன்றைய மாலைப்பொழுது இனிமையாக கடந்ததாக சுதாகரன் டைனிங்ஹாலில் சொன்னபோது கதிரவன் வந்தனாவை நிமிர்ந்து பார்த்தான்..

# 27

'அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்..?'

தூக்கமில்லாமல் புரண்டு படுத்த வந்தனா தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.. அந்தக் கேள்வி அவள் மனதைக் குடைந்தது.. தலையணையில் முகம் புதைத்துக் கண்களை மூடினாள்.. மூடிய இமைகளுக்குள் அவன் முகம் வந்து நின்றதில்..

'இவனுக்கு வேற வேலையே இல்லை..' என்று சலித்துக் கொண்டாள்..

மறுநாள் காலையில் எழுந்தவுடன்.. தோட்டத்தைப் பார்த்தவளுக்கு.. அங்கே உலவிக் கொண்டிருந்த கதிரவன் கையாட்டி காலை வணக்கம் சொன்னான்.. பதில் வணக்கம் சொல்லாமல் குளியலறைக்குள் புகுந்தவள்.. பல்தேய்த்து.. முகம் கழுவி.. புத்துணர்வுடன் அறையை விட்டு வெளியே வர கதவைத் திறந்தாள்.. திறந்த கதவின் அருகே.. அறைவாசலில் பூங்கொத்துடன் அந்த பேப்பர் இருந்தது..

'என்ன இது..?'

விழிகளில் கேள்வியுடன் குனிந்து பேப்பரை எடுத்துப் படித்துப் பார்த்தாள்.. அவள் இதயத்தில் யாரோ மத்தளம் வாசித்தார்கள்..

*மாமாவென்று அழைத்தாய்..*
*மாமன்தான் நான் உனக்கு..*
*தேன் கனிதான் நீயென்கு..*
*காதலன்தான் நான் உனக்கு..*
*காதலிதான் நீயெனக்கு..*
*தாலிகட்டக் காத்திருக்கும்..*
*- உன் 'மாமா'*

தடதடத்த இதயத்துடன் அறைக்குள் பின் வாங்கினாள் வந்தனா.. கையிலிருந்த பேப்பரை திரும்பத் திரும்ப வாசித்தாள்.. தெளிவான கையெழுத்துடன் அது இருந்தது..

'கதிரவன்தான் எழுதியிருக்கானா..?'

அவள் முகத்தில் முத்து.. முத்தாக.. வியர்வைத் துளிகள் அரும்பின.. அதைத் துடைக்க முடியாமல்.. அவள் அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.. அறைவாசலில் நிழலாடியது..

"வந்தனா.."

காபிக் கோப்பையுடன் உள்ளே வந்தாள் கருணா.. கையிலிருந்த பேப்பரை தலையணைக்கு அடியில் மறைத்து வைத்தாள் வந்தனா..

முதன் முதலாக.. மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைத்து வைக்க நேர்ந்ததில் அவள் மனதில் குற்றஉணர்வு எழுந்தது..

"ஏண்டா.. என்னவோ போல இருக்கே..? உடம்பு சரியில்லையா..?"

அவள் நெற்றியில் கைவைத்துப் பார்த்த கருணாவின் கனிவில் வந்தனாவின் கண்கள் கலங்கி விட்டன..

'சித்தியிடம் இதைச் சொல்லாமல் மறைக்கிறேனே..'

இருந்தும் அவள் அதை வாய் விடவில்லை.. அவளால் தலையணைக்கு அடியில் இருக்கும் அந்த பேப்பரை எடுத்து கருணாவிடம் நீட்ட முடியவில்லை.. அது ஏனென்றும் அவளுக்குத் தெரியவில்லை..

சில உணர்வுகள் வெகு அந்தரங்கமானவை.. பெற்று வளர்த்த தாயிடம்கூட அதைப் பகிர்ந்து கொள்ள முடியாது..

வந்தனாவினால் தாயினும் சாலப் பரியும் சித்தியிடம் அந்த உணர்வை பகிர்ந்து கொள்ள முடியாமல் போனது..

"தோட்டத்தில கொஞ்ச நேரம் காத்தாட நடந்துட்டு வா.. டல்லாத் தெரியற.." கருணா சொல்லி விட்டுப் போனாள்..

'தோட்டத்தில் அவன் இருப்பானே..' தயக்கம் வந்த போதும் அவனிடமே அதைப் பற்றிக் கேட்டு விடுவது என்ற முடிவுடன் தோட்டத்துக்குப் போனாள் வந்தனா..

அங்கே அவளை எதிர் பார்த்தவனைப் போல நடை பழகிக் கொண்டிருந்தான் கதிரவன்..

"குட் மார்னிங்குன்னு கையாட்டினா.. பதிலுக்கு குட்மார்னிங் சொல்லனும்.. அதுதான் மேனர்ஸ்.." என்றும் சொன்னான்..

"எனக்கு மேனர்ஸ் தெரியாது.. சுட்டுப் போட்டாலும் எனக்கு அது வரவே வராது.." என்றாள் வந்தனா..

"உண்மையை உரக்கச் சொன்னதற்கு மெத்த நன்றி.. ஆமாம்.. என்ன.. ஆள் அரண்டு போய் தெரியற..?"

அறியாதவனைப் போல அவன் விசாரித்தான்.. அவள் பல்லைக் கடித்தாள்..

ஒரு பேப்பரில் அவள் மனதைக் கலக்கி விட்டு.. ஒன்றும் தெரியாத சின்னப் பப்பாவைப் போல கேள்வி கேட்பவனை என்ன செய்தால் தகும்..?

"ஊம்.. பேயைப் பார்த்தேன்.. அதான்.." அவள் நொடித்தாள்..

"கண்ணாடியிலே உன்னை நீயே பார்த்திருப்ப.. விடிஞ்சதும் கண்ணாடி பார்க்கிற வழக்கத்தை விட்டிரு.. எல்லாம் சரியாப் போகும்.." அவன் ஆலோசனை சொன்னான்..

'இவனுக்கு என்னைப் பாத்தா.. பேயைப் பாத்ததைப் போல இருக்கா..'

ஒரு பேயறையை விட்டால் என்ன என்ற ஆவேசம் அவளுக்குள் வந்தது..

"எதுக்காக என் ரூம் வாசலிலே பொக்கேயையும்.. கூட அந்த லெட்டரையும் வைச்சீங்க..?" நேரடியாக அவள் கேட்டுவிட்டாள்..

கதிரவனின் முகத்தில் இருந்த விளையாட்டுத்தனம் மறைந்து விட்டது.. அவன் முகத்தில் தீவிரம் வந்தது.. அவளை ஆழ்ந்த பார்வை பார்த்தான்..

"எதுக்காகன்னு அந்த லெட்டரில மென்சன் பண்ணியிருந்தேனே.." என்றான் அவன்..

"பண்ணியிருந்தீங்க.. பண்ணியிருந்தீங்க.. உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?"

"உன்னைத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.."

"நினைச்சேன்.. இந்தப் பதிலைத்தான் சொல்லுவீங்கன்னு.."

"நீ என்னைப் பத்தியே நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு எனக்கும் தெரியும்.."

"டாமிட்.. உங்களைப் பத்தி யார் நினைச்சது..?"

"நீதான்.. வேற யாரு நினைச்சாங்கன்னு நினைக்கற..?"

"சௌம்யா நினைச்சிருக்கலாம்.. யார் கண்டது..? இன்னும் கூட லிஸ்ட் நீளலாம்.."

"வாயைக் கழுவு.."

அவன் சீறினான்.. அந்த சீற்றத்தில் இனம் புரியாத வகையில் வந்தனாவின் மனம் இதத்தைக் கண்டது..

"அறிவிருக்கா உனக்கு..? தேவையில்லாம அதோட பெயரை ஏன் இழுக்கற..?" கண்டிப்புடன் கேட்டான் கதிரவன்..

வந்தனா மௌனம் சாதித்தாள்.. அவளுக்கே தெரியும்.. அவள் பேசியது சரியில்லை என்று..

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலை குனிந்தால் கதிரவனின் சீற்றம் கொஞ்சமாகத் தணிந்தது..

"தேவையில்லாம பேச்சை டைவர்ட் பண்ணாதே வந்தனா.. நான் உன்னைக் காதலிக்கிறேன்.. கல்யாணம் செய்துக்கனும்னு ஆசைப்படறேன்.." நிறுத்தி.. நிதானமாக அவன் சொன்னான்..

அந்த நிதானம் ஏன் அவளுக்கு வரவில்லை..? அவன் வார்த்தைகளில் இருந்த தெளிவும்.. தீர்மானமும்.. ஏன் அவளிடம் இல்லாமல் போய் விட்டது..? எதை நினைத்து அவள் அஞ்சுகிறாள்..? அவள் மனதில் கதிரவன் இல்லையா..?

இருந்தானே.. அவள் இமை மூடினால்.. அதற்குள் வந்து நின்று சிரித்தானே..

இருந்தும் ஏன் அவள் தவிக்கிறாள்..?

"இதில் எந்த அளவுக்கு உண்மையிருக்கு..?" மனக்குமுறலோடு அவள் கேட்டாள்..

"வந்தனா..?"

"யெஸ்.. நாம ரயிலில் மீட் பண்ணின அந்த செகண்டில இருந்து.. இப்ப வரைக்கும்.. என்னை மட்டம் தட்டறதை மட்டும் நீங்க குறிக்கோளா வைத்திருக்கீங்க.. இதையும்.. மட்டம் தட்ட நீங்க செய்த செயலாய் ஏன் நான் நினைக்கக் கூடாது..?"

"ஏய்ய்.."

"ஒவ்வொரு தடவையும் நான் உங்ககிட்ட இயல்பாத்தான் பேசிப் பழகுவேன்.. நான் எதிர்பார்க்காத நேரத்திலே நீங்க என் மூக்கை உடைப்பீங்க.. இதையும்.. அதைப் போல நீங்க செய்திருக்க மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்..?"

"ச்சை.. எதில் நான் விளையாடுவேன்.. எதில் சீரியஸா இருப்பேன்னு உன்னால புரிஞ்சுக்க முடியலையா..?"

"முடியலையே.. நானும் உங்களை மீட் பண்ணின செகண்டில இருந்து இப்ப வரைக்கும் உங்களைப் புரிஞ்சுக்கனும்னுதானே டிரை பண்றேன்..? என்னால அது முடியலையே.."

"என் கண்களைப் பார் வந்தனா.. அதில் காதல் இருக்கிறது உனக்குத் தெரியலையா..?"

கதிரவன் துடிப்புடன் கேட்டான்.. வந்தனா நிமிர்ந்து அவன் பார்வையை சந்தித்தாள்.. அவளை ஊடுருவும் அந்தப் பார்வையில் பதறிப் போனவளாக அவள் பார்வை தழைந்தது..

"வந்தனா.." கதிரவன் ஆயாசத்துடன் அழைத்தான்..

“வேண்டாம்.. என் உணர்வுகளோடு விளையாடா தீங்க.. இது வரைக்கும் நான் உங்களிடம் தோற்றதெல்லாம் விளையாட்டுத்தனமான தோல்விதான்.. அதையே என்னால தாங்கிக்க முடியலை.. இப்ப அப்படியில்ல.. இது என் உணர்வுகளோடு விளையாடும் செயல்.. இதில் தோல்வி வந்தால் என்னால தாங்கிக்க முடியாது..” அவள் விம்மினாள்..

“முட்டாள்..”

கதிரவன் எப்படித் தன்னை அவளுக்கு உணர்த்துவது என்று தெரியாமல் திகைத்தான்.. அவள் மனதில் இருந்ததை வெளியில் சொல்லியதில் அவன் விளையாட்டாய் செய்த அத்தனை செயல்களும் எந்த அளவுக்கு அவள் மனதை பாதித்திருக்கின்றன என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..

# 28

வந்தனா சாய்ந்து நின்ற மரத்திலிருந்து உதிர்ந்து விழுந்த பூக்கள்.. அவளைச் சுற்றிப் பரந்து கிடந்தன.. அவள் தன் மனதில் உள்ளதைக் கொட்டி விடும் முனைப்போடும்.. துயரத்தோடும் இருந்தாள்.. அவளால் அவ்வளவு எளிதாக அதிலிருந்து வெளிவர முடியாது என்பதை கதிரவனால் புரிந்து கொள்ள முடிந்தது..

அவன் அவளை நிதானமாக அடிகளுடன் நெருங்கினான்.. அவன் முகத்திலிருந்து எதையும் வந்தனாவால் யூகிக்க முடியவில்லை.. அவள் தன் போக்கில் பேசிக் கொண்டே இருந்தாள்.. அவளை நெருங்கி விட்ட கதிரவனின் உணர்ச்சிகள் துடைக்கப்பட்ட முகத்தை உற்று நோக்கிய வந்தனாவுக்கு..

'இவன் கல்..' என்று தோன்றியது..

அந்தக் கல் அவளின் முகத்தை நோக்கி ஆவேசத்துடன் குனிந்தது.. பேசிக் கொண்டிருந்த அவள் வாயில் இதழ்களைப் பொருத்தியது.. அவளது பின்னந் தலைமுடியை இறுக்கிப் பிடித்து தன்னுடன் இறுக்கிக் கொண்டது..

வந்தனா பேச்சிழந்தாள்.. அவள் மேல் குற்றால மலையின் அருவி பேரிரைச்சலுடன் கொட்டியதைப் போல இருந்தது.. அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. கதிரவனிடமிருந்து விடுபட போராடினாள்.. அவன் அவளை விடுவிக்கவில்லை..

ஆழ்ந்த பதிந்த அவனது நீண்ட முகத்தில் அவள் அசைவற்று நின்று விட்டாள்.. மெல்ல.. மெல்ல.. அவளின் எதிர்ப்புக் குறைந்து.. படிப்படியாக தேய்ந்து மறைந்து காணாமல் போனது.. அவளின் தொய்ந்த உடல் அவன்மீது சரிந்ததில் அவளை தாங்கிக் கொண்ட கதிரவன் வெற்றிப் பெருமிதம் தன் முகத்தில் படிந்து விடாமல் கவனமாக அதைத் தவிர்த்தான்..

'இல்லைன்னா.. இந்தப் புத்திசாலி இதையும்.. இவளைத் தோற்கடிக்கச் செய்ததாகச் சொல்லி விடுவாளே..'

நீண்ட முத்தத்திற்குப் பின் அவளை அவன் விடுவித்த போது அவளால் அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை..

"ஐ ஆம் சாரி.." என்றான் கதிரவன்..

வந்தனா உதட்டைக் கடித்தாள்.. பேசவில்லை..

"உன் பேச்சை நிறுத்த எனக்கு வேற வழி தெரியலைடி.. ஐ லவ் யு.. இதை ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்கிற..? நான் குற்றாலத்துக்கு ரெஸ்ட் எடுக்கத்தான் வந்தேன்.. உன்னைப் பார்ப்பேன்னோ.. உன்னிடம் காதல் சொல்வேன்னோ.. எனக்குத் தெரியாது.."

'எனக்கு மட்டும் தெரியுமா..?'

"ஏன் நான் உன்னை அந்த டிரெயினில் மீட் பண்ணனும்..? என் சீட்டுக்கு எதிர் சீட்டிலேயே ஏன் நீ உட்காரனும்..? ஏன் டிரெயின் நடுக்காட்டில் நிற்கனும்..? உனக்கும்.. எனக்கும் இடையே.. பெயர் சொல்ல முடியாத ஒரு சொந்தம் ஏன் உருவாகனும்..?"

'இதைத்தாண்டா எனக்குள்ளேயும் நான் கேட்டுக்கிட்டு இருக்கேன்.. நீ 'ஏன்' போட்டதில சரியாப் போச்சு.. இதையே நான் இத்தனை 'ஏன்'களைக் கேட்டிருந்தா.. நீ என்னைக் கே.பி. சுந்தாரம்பான்னு காலை வாரியிருப்ப.. யாரு நீ..!'

"இத்தனைக்கும் மேலா ஒன்னு இருக்கு.."

'எனக்குள்ளே ஓராயிரம் இருக்குடா..'

"உன்னைக் கூப்பிட வந்த உன் சித்தப்பா ஏன் என் அக்காவின் கணவரா இருக்கனும்..?"

கதிரவனின் கேள்வியில் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள் வந்தனா.. அவள் மனதில் இருந்ததை அவன் சொல்லிக் கொண்டிருந்ததில் அவளுக்குள் ஓர்விதமான ஒட்டுறவு ஏற்பட்டது..

"நீயும் நானும் குற்றாலத்திலே ஒரே வீட்டுக்குப் போகிற உறவுக்காரங்களா ஏன் இருக்கனும்..? இதில இருந்தே உனக்குத் தெரியலையா வந்தனா..?"

'எதைத் தெரியலையான்னு இவன் கேட்கிறான்..'

"நீயும் நானும் மீட் பண்ணனும்ங்கிறதுதான் கடவுள் விதிச்ச விதி.. அவர் நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில் முடிச்சப் போட்டுட்டார்.. நீ அதை ஒப்புக்க மறுக்கிற.."

'நீ கண்ட.. போடா.. டேய்.. எல்லாம் நீ பண்ணின வில்லங்க விளையாட்டுக்களால வந்ததுடா..'

"இந்த அளவுக்கு உன் மனசு காயமாகியிருந்தா.. நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கறேன்.. என்னை மன்னிச்சிரு.. அதுக்காக என் காதல் பொய்ன்னு மட்டும் சொல்லிராதே..."

வந்தனாவால் தன் செவிகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப இயலவில்லை.. கதிரவன் அவளிடம் மன்னிப்புக் கேட்கிறானா..?

'கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச்சிருச்சா..?'

அவள் இமை கொட்டி விழித்து வைத்தாள்.. கதிரவன் அவள் காதைப் பிடித்துத் திருகினான்..

"எதுக்காக இந்த ஷாக்..? ஏண்டி.. நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க மாட்டேனா..?"

வந்தனா லேசான தலையசைவுடன் பின்னே நகர முயன்றாள்.. கதிரவனின் கரம் அவளைப் பிடித்து நிறுத்தியது.. அவள் தோள் பற்றி விழிகளுக்குள் அவன் உற்றுப் பார்த்தான்.. பேச வார்த்தைகள் அற்றுப் போய் விட்டதை வந்தனா உணர்ந்தாள்..

சிறு விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்து விட்டவளின் பரிபூரண சரணாகதியில் கதிரவனின் முகம் மென்மையானது.. அவள் தோள் தடவி அணைத்துக் கொண்டான்..

இணைந்து நின்ற அந்த இருவரின் உள்ளங்களும் அந்த நொடியில் கொண்ட ஆனந்தமான பேரமைதியினை அவர்களே அறிவார்கள்..

"அக்கா.."

எங்கேயோ கேட்பதைப் போல ஒலித்த சாய்சரத்தின் குரலில் வந்தனா கதிரவனிடமிருந்து அவசரமாக விலகி நின்றாள்..

"சரத் கூப்பிடறான்.. நான் போகனும்.."

"ம்ம்ம்.. நீ முன்னாலே போ.. நான் பின்னாலே வாரேன்.."

அவன் கண்சிமிட்டியதில் அவளுக்குள் உற்சாக அலை பரவியது..

'இவன் இதை விடவே மாட்டான்..' துள்ளலுடன் அவள் நகர்ந்தாள்.

"வந்தனா.." கதிரவனின் அழைப்பில் நின்றாள்..

"அக்காகிட்டயும்.. மாமாகிட்டயும் இதைப் பத்தி இன்னைக்கு பேசப் போறேன்.."

மொட்டையாக அவன் சொன்னதில் அவள் திருதிருத்தாள்..

"எதைப்பத்தி..?"

"ஊம்..? நீயும் நானும் மரத்தடியில முத்தம் கொடுத்துக்கிட்டோமே.. அதைப் பத்தித்தான் பேசப் போறேன்.. போதுமா..?"

"என்னது..?" வந்தனா அலறிவிட்டாள்..

"பின்னே என்னடி..? காலையில காதல் கடிதம் கொடுக்கிறேன்.. அதுக்கப்புறம் நேரடியாவே 'ஐ லவ் யு' சொல்றேன்.. இத்தனைக்கும் மேலே உன் உதட்டில் 'இச்'சும் கொடுக்கிறேன்.."

"எனோஃப்.."

வந்தனா லஜ்ஜையுடன் அவன் பேச்சைத் தடுத்தாள்.. அவன் விழிகளில் குறும்பு கூத்தாடியது..

"உனக்கு போதும்.. எனக்குப் போதாதே.. ஒரு முத்தத்தில அடங்கற தாகமா.. என் தாகம்..?"

"ப்ளீஸ்.."

வந்தனா கெஞ்சவும்தான் அந்தப் பேச்சை அவன் நிறுத்தினான்..

'ஹப்பா..! இவன் இருக்கானே..' வந்தனாவின் சுவாசம் ஒருவழியாக சீரானது..

"ஆளைப் பாரு.. நம்ம காதலைப் பத்தியும்.. கல்யாணத்தைப் பத்தியும் அக்கா.. மாமாகிட்டப் பேச வேணாமா..?"

"இப்பவேவா..?" வந்தனா தயங்கினாள்..

"வேற எப்பப் பேசலாம்..? நீயும்.. நானும்.. தடியூண்டி நடக்கிறப்ப வேணா பேசலாமா..?" கதிரவனுக்கு கோபம் வந்து விட்டது..

"ஓ..நோ.. என் படிப்பு முடிய இன்னும் ஒரு வருசம் இருக்கு மச்சான்.. அதோட என் வயசு இப்ப இருபதுதான்.."

"இருபதாகிருச்சில்ல..? என்னவோ பதினாறு வயசு மயிலைப் போல பில்ட்-அப் கொடுக்கிற..? ஆமாம்.. அத்தான்னு கூப்பிடுடின்னா அடம் பிடிச்ச.. இப்ப என்ன.. மாமா போய் மச்சான் வந்திருக்கான்..?" அவன் கண்சிமிட்டினாள்..

"அது அப்படித்தான்.." பக்கத்திலிருந்த செடியிலிருந்த பூவைப் பிடுங்கி கதிரவனின் மேல் அவள் வீசினாள்..

தன்மீது மோதிய பூவைக் 'கேட்ச்' பிடித்த கதிரவனின் மனம் மயங்கியது.. எதிரில் நிற்கும் அவனது காதலியை அவன் ஆசையுடன் பார்த்தான்..

"ஒரு வருசம்ங்கிறது ரொம்பத் தொலைவில் இல்லை வந்தனா.."

"ஸோ..?"

"அக்காவிடம் சொல்லனும்.. அது மாமா காதுக்குப் போய்.. உன் அப்பாம்மா காதுக்குப் போகனும்.. எங்க வீட்டில பேசனும்.. அதுக்கப்புறம் முறையாய் உன்னைப் பெண் கேட்டு வரனும்.. இரண்டு குடும்பமும் பார்த்துக்கனும்.. பேசிப் பழகனும்.. கல்யாணத்துக்கு நாள் குறிக்கனும்.. அப்புறம் மண்டபம் பார்க்கனும்.. இன்விடேசன் அடிக்கனும்.. கல்யாண

வேலைகளில் இறங்கனும்.. எத்தனை இருக்குன்னு தெரியுமா..? சொல்லும் போதே கண்ணைக் கட்டுதுல்ல..? இதுக்கெல்லாம் ஒரு வருசம் போதும்ன்னா நினைக்கிற..?"

கதிரவன் எடுத்துச் சொல்லிய விதத்தில் 'ஆமாமில்ல..' என்றுதான் வந்தனாவுக்குத் தோன்றியது.. இருந்தாலும்.. அவளை இன்னமும் சின்னக் குழந்தையாக நினைத்துக் கொண்டிருக்கும் அவளுடைய சித்தியிடமும்.. சித்தப்பாவிடமும் அவள் காதல் வயப் பட்டிருக்கிறாள் என்பதை எப்படி அவள் ஒப்புக் கொள்வாள்..?

# 29

"நம்ம வந்தனாவா..?"

சுதாகரனின் கேள்வியில் வந்தனா சங்கடப்பட்டாள்.. இதற்காகத்தான் சொன்னேன் என்ற ரீதியில் கதிரவனை அவள் பார்க்க.. அவன் இமை மூடித் திறந்து அவளை அமைதிப் படுத்தினான்..

"உங்க வந்தனா என்னைக் காதலிக்கலை மாமா.. நான் தான் அவளைக் காதலிக்கிறேன்.. அவ என் காதலை அக்செப்ட் பண்ணியிருக்கிறா.. அவ்வளவுதான்.."

என்னவோ.. வந்தனாவுக்கும்.. அந்த காதலுக்கும் சம்பந்தம் இல்லாததைப் போல வெகு இலகுவாகச் சொன்னான் கதிரவன்.. அவன் சொல்லிய விதத்தில் அவருக்குச் சிரிப்புத்தான் வந்தது..

"ஓ.. அப்படியா மாப்பிள்ளை..?" சுதாகரனும் அதே கிண்டலுடன்தான் சொன்னார்..

ஆனாலும் அவர் முகத்தில் கவலை அப்பியிருப்பதை வந்தனாவால் உணர முடிந்தது.. அவளும் அதையேதான் நினைத்தாள்... சுதாகரனின் மனதில் என்ன ஓடிக் கொண்டிருந்ததோ.. அதுவேதான்.. வந்தனாவின் மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது..

மாலதிக்கு அந்த திருமணத்தில் விருப்பம் இருக்காது.. அவள் கருணாவின் ஒன்றுவிட்ட சித்தப்பாவின் மகனுக்கு.. தன் மகளைத் திருமணம் செய்துதர ஒருநாளும் விரும்ப மாட்டாள்..

அந்தக் கவலைதான் சுதாகரனின் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.. கருணாவையே முழு மனதாக சொந்தமென்று ஏற்றுக் கொள்ளாத மாலதி எப்படி கருணாவின் தம்பிக்கு வந்தனாவை மணம் முடித்துத் தருவாள்..?

'இருந்தாலும்..'

சுதாகரனின் பார்வை வந்தனாவின் மீது ஓடியது.. அவள் முகத்தில் இருந்த ஜொலிப்பையும்.. ஆர்வத்துடன் கதிரவனின்மீது படிந்து விலகும் அவள் பார்வையையும்.. கதிரவனுக்கான அவளின் பிரத்யேக கள்ளச் சிரிப்பையும் கண்டவருக்கு.. அவர் மனதில் பட்டதைச் சொல்லி அவரின் அன்பான அண்ணன் மகளின் கனவுகளைக் கலைக்க முடியவில்லை..

"பார்த்துக்கலாம் கருணா.. இன்னும் ஒரு வருசம் ஊடே இருக்கில்ல.. பேசி சரிபண்ணலாம்.."

அன்றைய இரவில் மனைவியிடம் சொன்னார் அவர்.. அவளும் அதையே திருப்பிச் சொன்னாள்..

"நானும் அதைத்தாங்க நினைச்சேன்.. சித்தப்பா இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டார்.. சித்தியிடம் பேசியாகனும்.. அதோட கதிரவன் சித்தப்பா பேச்சுக்கு கட்டுப்பட மாட்டான்.."

"அதுக்காக.. பெத்தவரோட சம்மதமில்லாம பெண்ணைக் கட்டிக் கொடுக்க முடியுமா கருணா..? சும்மாவே எங்கண்ணி சம்மதிக்க மாட்டாங்க.. இப்ப இந்த விசயம் தெரிஞ்சிருச்சுண்ணா.. அவ்வளவுதான்.. இவங்க கல்யாணத்தைப் பத்தி அண்ணியிடம் நான் வாயைத் திறக்கவே முடியாது கருணா.."

சுதாகரனின் கண்டிப்பில் கருணா தவித்தாள்.. இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையாக அவள் நிலைமை ஆகிவிட்டது..

பெரியவர்களின் மனப் போராட்டங்களைப் பற்றி அறிந்தும் அறியாதவர்களாய்.. அந்த வார இறுதியில் குற்றாலத்திலிருந்து பனிரெண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த தட்சிணாமூர்த்தி கோவிலுக்கு கதிரவனும் வந்தனாவும் தனியாகப் போனார்கள்.. சுதாகரனின் நண்பர் மகளுக்குத் திருமணம் என்று.. கருணாவும்.. சாய்சரத்தும் சுதாகரனுடன் சேர்ந்து அந்தத் திருமணத்திற்குக் கிளம்பிப் போய் விட்டார்கள்.. தனித்திருந்த கதிரவனிடமும்.. வந்தனாவிடமும்.

"காலற வெளியே சுத்திட்டு வாங்களேன்.." என்று யோசனை சொல்லி விட்டுத்தான் கருணா திருமணத்திற்கு கிளம்பினாள்..

அரிதாக கிடைத்த தனிமையில் அந்த இளஞ்ஜோடிகள் வெகு உற்சாமாக புலிப்பாறையைப் பார்க்கக் காரில் கிளம்பினார்கள்.. வழியில் இருந்த தட்சிணாமூர்த்தி கோவிலில் வந்தனாவுக்காக காரை நிறுத்தினான் கதிரவன்..

"நீ போன பிறவியில் சாமியாராய் பிறந்திருந்தாயோ.."

அவனது சந்தேகத்திற்கு தோள் குலுக்கி விட்டு குருபகவானை வணங்கினாள் வந்தனா.. மூடிய அவளின் இமைகளையும்.. குவித்த அவளின் கைகளையும்.. வேண்டுதல்களை முணுமுணுத்த அவளின் இதழ்களையும் ஊன்றிப் பார்த்தவனுக்கு அவள்மீது வாஞ்சை வந்தது..

"என்ன வேண்டிக்கிட்ட..?" காரில் போகும் போது கேட்டான்..

"நம்ம காதல் நிறைவேறனும்னு வேண்டிக் கிட்டேன்.." வந்தனாவின் விழிகளில் தவிப்பிருந்தது..

"அது நிறைவேறாதுன்னு ஏன் நினைக்கிற..?" அதட்டினான் கதிரவன்..

"தெரியலை.." குழந்தையாகச் சொன்ன வந்தனாவின் விழிகளில் கலக்கம் இருந்தது..

புலிப்பாறையின் அருகே கார் நின்றது.. வந்தனாவின் கைவிரல்களுடன் விரல் கோர்த்துக் கொண்டான் கதிரவன்.. வந்தனாவின் கலக்கம் மறைந்தது.. அவள் மனதில் திடம் வந்தது.. அவனுடன் சேர்ந்து வந்திருக்கும் சந்தோசம் அவள் மனதில் குமிழிட்டது..

"ஆக்சுவலா நீங்க எங்கே வேலை பார்க்கறிங்க..?" வந்தனா கேட்டாள்..

"என்ன சொன்ன..?" ஆச்சரியத்துடன் அவள் முகம் பார்த்தான் கதிரவன்..

"நீங்க எங்கே வேலை பாக்கறிங்கன்னு கேட்டேன்.."

வந்தனா அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற எதிர்பார்ப்போடு அவன் முகம் பார்த்தாள்.. அதில் தெரிந்த அறியாமையில்.. அவளின் அந்தக் குழந்தைத் தனத்தில் அவன் கவரப்பட்டான்.. வழக்கம் போல அவளுடன் விளையாடும் விருப்பம் அவனுக்குள் உண்டானது..

"கே யார் குருப் ஆப் கம்பெனிஸில வேலை பார்க்கிறேன்.."

கதிர் குருப் கம்பெனியை அவன் மாற்றிச் சொன்னான்.. கதிர் என்ற பெயரின் ஆங்கில முதல் எழுத்தையும்.. கடைசி எழுத்தையும் சேர்த்து உச்சரித்தவனுக்கு சிரிப்பு வந்தது..

வந்தனா அதையும் நம்பினாள்..

"ஓ.. என்ன வேலை..?" அடுத்த கேள்வி அவளிடமிருந்து வந்தது.. கதிரவன் விளையாட்டைத் தொடர்ந்தான்..

"சொல்லிக்கிறதைப் போல பெரிய வேலையில்லை வந்தனா.. அக்கவுண்ட்சில் இருக்கேன்.. பட்.. எம்.டிக்கு நான்தான் ரைட்..அண்ட்.. லெப்ட் ஹேண்ட்ஸ்.."

இப்படிப்பட்ட விளக்கத்தையும் அவள் நம்பினாள்.. ஒரு சாதாரண அக்கவுண்டண்ட் எப்படி மேனேஜிங் டைரக்டருக்கு.. வலது கரமாகவும்.. இடதுகரமாகவும் இருக்க முடியும் என்ற வினாவை அவள் எழுப்பவில்லை..

"சேலரி கம்மிதான்.. ஓவர் டைம் பார்ப்பேன்.. அதனால லைபை ஓட்ட முடியுது.. அதிக வேலையிலே தலை வலிக்க ஆரம்பிக்கும்.. அப்போத்தான் லீவ் போடுவேன்.. குற்றாலத்துக்கு அக்கா வீட்டுக்கு வந்து ரெஸ்ட் எடுத்துட்டுப் போவேன்.."

"ஏன் ஸ்ட்ரெயின் பண்ணிக்கறிங்க..?"

"வேற வழி.. தங்கை படிச்சுக்கிட்டு இருக்கா.. உன் வயசுதான்.. அவளுக்கு கல்யாணம் கண்ணியாகனும்.. அப்பாவும் வேலைக்குப் போறார்.. அம்மா ஹவுஸ் வொய்ப்.. உனக்கும் எனக்கும் கல்யாணமான பின்னாலே நீயும் வேலைக்குப் போயாகனும் வந்தனா.."

"நிச்சயமாப் போறேங்க.. உங்க குடும்ப பாரத்தை ஷேர் பண்ணிக்கறேங்க.. நாம ரெண்டு பேரும் சம்பாதிச்சா.. நீங்க ஓவர் டைம் பண்ண வேண்டிய அவசியமிருக்காது.."

"ஆமால்ல.. நினைக்கிறப்பவே சந்தோசமா இருக்கு.. ஏன் வந்தனா.. இவன் கம்மியா சம்பளம் வாங்கறான்.. குடும்ப பொறுப்பை நம்ம தலையில கட்டிவிடப் பாக்கிறான்னு உனக்கு ஏதும் வருத்தமிருக்கா..?"

"சேச்சே.. உங்க கஷ்டத்தை என்கூட ஷேர் பண்ணிக்கிட்டிங்க பாருங்க.. அது போதும் எனக்கு.."

வந்தனா நெகிழ்வுடன் அவன் தோள் சாய்ந்தாள்.. கதிரவனுக்கு அவள் மீதிருந்த பிரியம் அதிகமானது அந்த நொடியில்தான்..

அவனைப் பற்றி எதையும் அறியாமல்.. சம்பளப் பற்றாக்குறை என்ற பொய்யையும் நம்பி.. அப்படியே ஏற்றுக் கொண்டு.. அவனுடைய குடும்பச் சுமையை ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருந்த அந்தப் பெண்ணின் அழமான.. உண்மையான காதலில் அவன் அமிழ்ந்து போனான்..

குற்றால மலையின் பசுமையான செடி கொடிகளும்.. பாறைகளும்.. அதன் ஊடே ஓடி வந்த அருவி நீரும்.. வந்தனாவுக்குள் உல்லாசத்தை உற்பத்தி செய்தது..

*"அந்த மாப்பிள்ளை காதலிச்சான்..*
*கையைப் பிடிச்சான் - எந்தன்*
*கையைப் பிடிச்சான் - அங்கே*
*முன்னால் நின்றேன் பின்னால் சென்றேன்..*
*வாவா என்றானே - கூடவே*
*வாவா என்றானே.."*

அவளின் கையைப் பிடித்திருந்த கதிரவனின் கையைப் பிடித்து ஆட்டியபடி அவள் பாட.. கதிரவன் மயங்கிப் போனான்..

*"ஊர் அடங்கக் காத்திருந்தான்..*
*ஓய்வில்லாம பார்த்திருந்தான்..*
*பால்பழத்தை வாங்கி வந்தான்..*

*பள்ளியறையின் வாசல் வந்தான்..*
*வெட்கத்திலே நானிருந்தேன்..*
*பக்கத்திலே தானிருந்தான்..”*

கதிரவன் பாறையிலே உட்கார்ந்து கொண்டு.. வந்தனாவின் கையைப் பிடித்து சுண்டியிழுத்தான்.. அவன் மடிமீது அவள் விழுந்து வைக்க.. அவளின் உச்சந்தலையில் முகத்தைப் பதித்து பாட ஆரம்பித்தான்..

*“அந்தப் பூங்கொடி பூத்திருந்தா..*
*காத்திருந்தா.. என்னைப் பார்த்திருந்தா..*
*அங்கே கண்ணால் கண்டேன்..*
*பின்னால் சென்றேன்..*
*நீதான் என்றேனே - வாழ்வே*
*நீதான் என்றேனே..”*

கதிரவனின் மார்பினில் தலை சாய்ந்திருந்த வந்தனாவின் மனம் பூராவும் காதல் தளும்பி வழிந்தது.. அதை பாட்டாலே அதிகப் படுத்திக் கொண்டிருந்தான் கதிரவன்.. அவன் பாடல் அவளை மயங்க வைத்தது..

*“மண்ணளந்த பார்வை என்ன..?*
*மயங்க வைத்த வார்த்தை என்ன..?*
*முத்து நகையின் ஓசை என்ன..?*
*முடிவைத்த ஆசை என்ன..?*
*என்னருகே பெண்ணிருந்தாள்..*
*பெண்ணருகே நானிருந்தேன்..”*

கதிரவனின் தோள்மீது தலைசாய்த்து தொலைவினில் தெரிந்த நீலவானத்தை வந்தனா பார்த்தாள்.. அங்கே அவளுக்கும்.. கதிரவனுக்குமான பள்ளியறை தெரிந்தது.. அவள் தோள் தொட்ட அவன் கரத்தின் ஸ்பரிசத்தில் அவளுக்குள் பிரளயம் வெடித்தது..

அவர்கள் வீட்டுக்குத் திரும்பியபோது வாசலிலேயே கருணா கவலையுடன் காத்திருந்தாள்..

# 30

"கதிர்.. கரிஷ்மா வந்திருக்கா.."

கருணாவின் குரலில் பதட்டம் இருந்தது.. கதிரவனின் முகம் இறுகுவதை புரியாத பார்வை பார்த்தாள் வந்தனா..

"கரிஷ்மான்னா யாரு..? உங்களுக்குத் தெரிஞ்சவங்களா..?"

வந்தனாவின் கேள்வியில் இறுகியிருந்த கதிரவனின் முகம் இயல்பு நிலைக்கு மாறியது.. அவன் மென்மையான சிரிப்புடன்..

"ம்ம்ம்.. தெரிஞ்சவங்கதான்.." என்றான்..

அதற்குமேல் வந்தனா எதுவும் கேட்கவில்லை.. காரிலிருந்து இறங்கியவள் சாய்சரத்தின் தோளில் கை போட்டு பேசியபடி வீட்டக்குள் போனாள்.. ஹாலில் அவங்களுக்கு முதுகு காட்டி நின்றிருந்தாள் ஒருபெண்..

'இவதான் கரிஷ்மாவா..?'

வந்தனாவுக்கு முதுகு காட்டி நின்றிருந்த கரிஷ்மாவின் இறுக்கமான ஜீன்ஸும்... கையில்லாத டாப்ஸும் வந்தனாவை முகத்தைச் சுளிக்க வைத்தன.. வெட்டி விடப் பட்டிருந்த முடி... தோளைத் தொட்டு பரவியிருந்தது.. செழுமையான அவள் தோளின் வழவழப்பு அவள் அழகு நிலையங்களிலேயே குடி கொண்டிருப்பவள் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.. கதிரவனிடன் காலடிச் சப்தத்தில் அந்த கரிஷ்மா திரும்பினாள்.. அவள் பார்வை கதிரவனை விட்டுவிட்டு வந்தனாவை அளந்தது..

"ஹூ இஸ் ஷி..?"

அவள் கேள்வியில் முகம் சுளித்தான் கதிரவன்.. அவனுக்கு கரிஷ்மாவிடம் முகம் கொடுத்துப் பேச பிரியமில்லை என்பதில் ஏனோ வந்தனாவின் மனதில் ஒரு பாதுகாப்பு உணர்வு பரவியது..

"இவள் வந்தனா.. என் அக்கா மகள்.."

"ஹெற நைஸ்..! உங்களுக்கு அக்காவே இல்லையே கதிர்.. இதில் அக்காவின் மகள் எங்கேயிருந்து வந்தாள்..?"

போலியான வியப்புடன் கேட்ட கரிஷ்மாவின் கேள்வியில் கருணாவின் மனம் காயப்பட்டது.. அவள் முகம் வாடியது.. கதிரவன் கூர்மையான பார்வையுடன் கரிஷ்மாவை ஏறிட்டான்..

"இது யார் வீடுன்னு இங்கே என்னைத் தேடி வந்த கரிஷ்மா..?"

இப்போது கரிஷ்மாவின் முகம் கருத்தது.. அவள் பல்லைக் கடித்தாள்.. கருணாவின் முகத்தில் பழைய களை திரும்பியது..

"இவள் என் அக்காவின் மச்சினர் மகள்.."

"ஓ.. உங்களின் ஒன்றுவிட்ட அக்காவின் மச்சினர் மகள்ன்னு சொல்லுங்க.. எவ்வளவு குளோஸ் ரிலேடிவ்.."

கரிஷ்மாவிற்கு எதற்காக இத்தனை வெறுப்பு என்று வந்தனாவுக்குப் புரியவில்லை.. அவள் அப்போதுதான் வந்தனாவைப் பார்க்கிறாள் அறிமுகம் ஆகாத ஒரு பெண்ணிடம் இந்த அளவுக்கு ஏன் அவள் விரோதம் பாராட்ட வேண்டும்..?

"வந்தனா.. நீ மாடிக்கு போம்மா.." என்றாள் கருணா..

அங்கே நின்று கரிஷ்மாவின் வெறுப்பு நிறைந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட மாடிக்குப் போய் விடுவது சாலச்சிறந்தது என்று வந்தனாவுக்கும் தோன்றி விட்டதால் அவள் மாடிக்குப் போய்விட்டாள்.. ஹாலில் அந்த கரிஷ்மா கோபமாக கத்திக் கொண்டிருப்பது அவள் காதுகளில் விழுந்தது.. சற்றுப் பொறுத்த நிசப்தமாக இருந்தது..

'அந்த கரிஷ்மா போய்த தொலைஞ்சிட்டா போல..' வந்தனா நினைத்துக் கொண்டாள்.. அதில் அவள் மனதுக்கு ஏன் சந்தோசமாக இருக்கிறது என்று அவளுக்கே தெரியவில்லை.. சற்றுப் பொறுத்து மாடிக்கு வந்த கருணாவிடம்..

"அந்தக் கரிஷ்மா யார் சித்தி..?" என்று கேட்டாள்..

"நல்லவேளையா நீ அவ முன்னால இதைக் கேட்கலை.." என்றாள் கருணா..

"கேட்டா என்ன சித்தி...?" வந்தனாவுக்கு புரியவில்லை..

"அவ என் வீட்டில் நின்றுக்கிட்டு என்னையே யார்ன்னு கேட்கிற ரகம்.. அப்படிப்பட்டவளை யார்ன்னு நீ கேட்டிருந்தா வீடு இரண்டாகியிருக்கும்.." கருணா நிம்மதி பெருமூச்சை விட்டாள்..

"அதென்ன சித்தி.. நம்ம வீட்டுக்கே வந்து நம்மளை யாருன்னு கேட்கிறது..? அவளுக்கு அவ்வளவு ராங்கியா..?"

"சரியாச் சொன்ன.. அவ ராணி ரங்கம்மாதான்.. சரிசரி.. இப்ப அவளைப் பத்தின பேச்சு எதுக்கு.. நீ சாப்பிடவா.."

மொத்ததித்தில் அந்தக் கரிஷ்மா யாரென்று கருணா சொல்லவே இல்லை.. கதிரவனிடம் கேட்டபோது தெரிந்த பெண் என்றான்.. 'யாருக்கு' என்ற வந்தனாவின் கேள்விக்கு இமைக்காமல் அவளைப் பார்த்தான்.. அவனும் தெளிவாக கரிஷ்மா யார் என்று சொல்லவில்லை..

கடந்து போன நாள்களில் அந்த கோடை விடுமுறையும் முடிந்து விட்டது.. வந்தனா ஊர் திரும்பும் நாள் வந்தது.. சுதாகரன் அவருக்கும்.. வந்தனாவுக்கும் ரயிலில் முதல் வகுப்பு டிக்கெட்டை எடுத்திருந்தார்.. கதிரவன் அதை ஆட்சேபித்தான்..

"ஒரே ஊருக்கு இரண்டு வழி எதுக்கு மாமா..? நானும் சென்னைக்குத்தானே போகிறேன்.. வந்தனாவை என்கூட அனுப்பி வைத்தால் நான் அவளை அவ வீட்டில் சேர்த்து விட மாட்டேனா..?"

சுதாகரன் மறுப்பாக தலையை அசைத்தார்..

"இல்லை மாப்பிள்ளை.. நான் வந்தனாவை விட்டு விட்டு வர இரண்டு நாளாகும்.. நீங்க அதுவரைக்கும் குற்றாலத்தில் என் குடும்பத்துக்கு துணையா இருங்க.."

"இது தேவைதானா..?"

"எனக்கு இதுதான் தேவை கதிர்.. உங்களுக்கு என் அண்ணியைப் பற்றித் தெரியாது.. உங்ககூட வந்தனாவை நான் அனுப்பி வைச்சா.. என் முகத்திலேயே விழிக்க மாட்டாங்க.. இதுதான் சாக்குன்னு என்னைத் தள்ளி வைச்சிருவாங்க.."

வருங்கால மாமியாருடன் எதற்கு வம்பு என்று கதிரவன் அரை மனதுடன் குற்றாலத்திலேயே தங்கி விட்டான்.. சுதாகரனுடன் ரயிலேறிய வந்தனாவுக்கு உலகமே கருப்பு

வெள்ளை திரைப்படமாகி விட்டதைப் போல தோன்றியது.. சென்னையில் அவளின் குடும்பத்திடம் அவளை ஒப்படைத்து விட்டு குற்றாலத்திற்குத் திரும்பி விட்டார் சுதாகரன்..

வந்தனாவின் மனம் குற்றாலத்தில் கதிரவனுடன் கழித்த நாள்களிலேயே நிலை கொண்டிருந்தது.. அவள் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்தது..

'என்னை நினைப்பானா..?' அவள் விழியோரம் நீர் கசிந்தது..

அவன் நினைத்தான்.. அவளைத் தேடிவந்தான்..

"எப்படி..?" என்று விழி விரித்தவளிடம்..

"இது பெரிய பிரம்ம சூத்திரம் பாரு.." என்று சிரித்தான்..

அவர்கள் சென்னையில் சந்தித்துக் கொண்டார்கள்.. ஒவ்வொரு வார இறுதிநாளிலும்.. அவளுக்காக மெரினா கடற்கரையில் கதிரவன் காத்திருப்பான்.. சாதாண பேண்ட்.. சர்ட் என்று.. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவனைப் போல வந்தனாவிடம் காண்பித்துக் கொள்வான்..

அவனுக்கு அது பிடித்திருந்தது.. அவனுடைய பணம்.. உயரம்.. இது எதையும் அறியாமல்.. சாதாரண மானவனாக.. அவள் முன்னால் நிற்பதையே அவன் விரும்பினான்.. அவனை அவனுக்காகவே அவள் காதலிப்பதில் அவனுக்குள் ஓர் சுகம் பரவியது.. அவனுக்காக வந்தனா கொண்டு வரும் திண்பண்டங்களை விரும்பிச் சாப்பிடுவான்.. அவள் என்னவோ.. அதனால் அவளுக்கு அவன் பட்டாணி சுண்டல் வாங்கிக் கொடுக்க வேண்டிய செலவு மிச்சமானதே என்று மனதுக்குள் சந்தோசப் பட்டுக்கொள்வாள்..

கதிரவனும் சளைக்க மாட்டான்.. தினமும் வந்தனாவுக்கு பரிசு கொண்டு வருவான்.. அவையெல்லாம் அவன் வீட்டுப் பூற்தொட்டியில் பூத்த புதுரோஜாப் பூ.. சாலையோர கடையில் வாங்கிய கைக்குட்டை.. அவன் விடிய விடிய கண் விழித்து எழுதிய காதல் கவிதை.. என்று.. பைசா செலவில்லாத பரிசுப் பொருள்களாகவே இருக்கும்.. அவன் அதிகப் படியாக செலவிளத்து அவளுக்காக வாங்கிய மிக உயர்ந்த பரிசுப் பொருள் 'கைக்குட்டை' மட்டும்தான்.. அதற்கே அவள் மகிழ்ந்து போவாள்..

இப்படியாகத்தான் அவர்கள் காதல் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தார்கள்.. வந்தனாவின் கடைசி செமஸ்டருக்கான தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது.. பாடத்தில் அவளுக்கு வரும் சந்தேகங்களை அவன் நிவர்த்தி செய்த விதத்தில்..

"நீங்க என்ன படிச்சிருக்கீங்க..?" என்று கேட்டாள் வந்தனா..

"ஜஸ்ட் எ டிகிரி..." சோகமாக முகத்தை வைத்துக் கொண்டான் கதிரவன்..

அதற்குமேல் படிக்க அவனுக்கு வசதியில்லையாம்.. பொருளாதாரப் பற்றாக்குறையால் உடனடியாக குடும்ப சுமையை ஏற்க வேலைக்குப் போக வேண்டிய நிர்பந்தம் வந்து விட்டதாம்.

அவன் சோகக் கதையைக் கேட்டு வந்தனாவின் விழிகளில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் துளிகள் கொட்டி விட்டன.. அவன் வாங்கிக் கொடுத்திருந்த விலையுயர்ந்த பொருளான கைக்குட்டையில் அதைத் துடைத்தபடி அவள் அவனுக்கு ஆறுதல் சொன்னாள்..

"ப்ளீஸ்.. கொஞ்சநாள்தானே.. நானும் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டா உங்க வீட்டு நிலைமை சரியாகிரும்.."

"நீ வேலைக்குப் போனா உன் வீட்டு நிலைமை சரியாகும்.. என் வீட்டு நிலைமை எப்படிச் சரியாகும்..?" அவன் எதிர் கேள்வி கேட்டான்..

"என்னங்க இப்படிச் சொல்லிட்டிங்க.. நீங்க வேறு.. நான்வேறா..?"

அவள் உருக்கமாக கேட்டபோது.. சுண்டல் விற்றுக் கொண்டிருந்த பையனின் ரேடியோவில் எப்.எம்..

*"நேற்று வரை நீ யாரோ.. நான் யாரோ..*
*இன்று முதல் நீவேறா.. நான் வேறா..?"*

என்று பாடி வைத்தது.. கதிரவனுக்குள் காதல் வந்தது.. அவன் சொல்வதையெல்லாம் நம்பும் காதலியின் நம்பிக்கையில் அவன் வசீகரிக்கப்பட்டான்.. எதுவும் இல்லாதவனின் மீது அளவு கடந்த காதலை வைத்திருப்பவளின் காதல் அவனை ஈர்த்தது..

கதிரவன் வந்தனாவை மிக அழமாக நேசித்தான்..

"மக்கு..! இதெல்லாம் பாட்டுப் பாடத்தான் சரியா இருக்கும்.. நிஜத்தில நீயும்.. நானும் ஒன்னாகனும்னா உன் கழுத்தில் நான் தாலி கட்டியாகனும்.." அவள் தலையில் குட்டினான்..

"ஆமாமில்ல.." தலையைத் தடவியபடி அவள் தலையை ஆட்டிக் கேட்டதில் ஆடிய ஜிமிக்களில் அவள் அழகு கூடியது..

"உன்னோட எக்ஸாம் முடிந்ததும் நான் என் குடும்பத்தோட பெண் கேட்டு வர்றேண்டி.... நம்ம கல்யாணத்தை பிக்ஸ் பண்ணிரலாம்.."

கதிரவன் இலகுவாக சொன்னபோது.. அது என்ன அவ்வளவு எளிதாக நடந்து விடும் நிகழ்வா என்று வந்தனா பயந்தாள்.. அவள் பயந்ததைப் போல இல்லாமல் எல்லாமே இனிதாக முடிந்ததில் அவளுக்குள் பிரமிப்பு வந்தது..

கதிரவனைப் போன்ற வசதி குறைந்த.. குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய நிர்பந்தமுள்ள பின்புலம் கொண்டவனுக்கு பெண் கொடுக்க மாலதி எப்படி சம்மதித்தாள்..?

அது புரியாத பெரும் புதிராக அவளுக்கு இருந்தது..

வந்தனாவுக்குத் தெரியாது.. குற்றாலத்திலிருந்து வந்தனாவை விட்டுப் போக கூடவந்த சுதாகரன்.. அன்றே பாஸ்கரனிடம் கதிரவனைப் பற்றிப் பேசிவிட்டுத்தான் சென்றார் என்பது..

"பட்.. அவங்க கோடிஸ்வர குடும்பமாச்சேடா.. உன் மாமனார் வீட்டைவிட அவங்க ரொம்பவும் உயரத்தில இருக்கிறவாங்களாச்சே.." பாஸ்கரன் பயந்தார்..

"நாம மாப்பிள்ளை கேட்கலைண்ணா.. அவங்க வீட்டுப் பையன்தான் நம்ம பெண்ணைக் கேட்கிறான்.. அவங்க எவ்வளவு உயரத்தில் இருந்தால் நமக்கென்ன..? பையன் குணமானவனா இருக்கனும்.. அதுதானே முக்கியம்.. கருணாவோட சித்தப்பா பையன்.. இத்தனை வருசமா நான் பேசிப் பழகின சொந்தக்காரன்.. அவன் குணத்தில் ஒருகுறை சொல்ல முடியாது.. அதோட அண்ணா.. அண்ணியும்.. கருணாவும் ஒன்னுக்குள்ள ஒன்னா ஆகிறதுக்கு இந்தக் கல்யாணம் ஒரு சான்ஸா அமையுமில்லையா..? கருணாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாலே.. நான் என்னவோ நம்ம குடும்பத்தை விட்டுத் தனிச்சு நிற்கிறதைப் போல எனக்கு ஒரு ஃபீலிங்.. இந்தக் கல்யாணம் என்னைத் திரும்பவும் நம்ம குடும்பத்தோட ஒன்னாச் சேர்க்கு மில்லையா அண்ணா..?"

சுதாகரனின் இந்த வார்த்தைகள்தான் பாஸ்கரனை தீர்மானமாக இருக்க வைத்தது.. கருணாவின் உறவினன் என்ற ஒரே காரணத்துக்காகவே மாலதி அதை மறுத்தாள்.. சுதாகரனின் மைத்துனன் என்பதற்காகவே பாஸ்கரன் அந்தத் திருமணத்தை முடிவு செய்வதில் பிடிவாதமாக இருந்தார்.. தாய்.. தந்தையின் இந்தப் போராட்டத்தையும்.. வாக்குவாதத்தையும் பற்றி வந்தனாவுக்குத் தெரியாது..

"இங்கே பாரு மாலதி.. வந்தனாவோட அதிர்ஷ்டம்.. அவளுக்கு கோடிஸ்வரக் குடும்பத்தில வாழ்க்கைப் படனும்னு இருக்கு.. உன் பிடிவாதத்தினால அதைத் தட்டிக் கழிச்சுராதே.. வாழப் போறது வந்தனா.. அவ வாழ்க்கையில உயர்ந்த இடத்தில இருக்கிறதுக்கான வாய்ப்புத் தானா வந்து கதவைத் தட்டுது.. அதை வேணாம்ன்னு சொல்லி உன் மகளோட வாழ்க்கையில விளையாடிராதே.."

பாஸ்கரன் திரும்பத்திரும்ப இதையே சொன்னார்.. மறந்தும் கதிரவன் கருணாவின் ஒன்று விட்ட தம்பி.. அதற்காகத்தான் இந்தத் திருமணத்தை அவர் வலியுறுத்துகிறார் என்று சொல்லவில்லை..

அவரின் அணுகுமுறை பலனைத் தந்தது.. மாலதி யோசிக்க ஆரம்பித்தாள்.. பாஸ்கரன் சொல்வதைப் போல.. கதிரவனின் வீட்டில் வாழப்போவது வந்தனாதான்.. அவளுக்கான கோடிஸ்வர வாழ்க்கையை மாலதி ஏன் மறுக்க வேண்டும்..?

அவள் அரைமனதாக சம்மதம் சொல்லி விட்டாள்..

வந்தனாவின் தேர்வு முடிந்த மறுநாளில் கதிரவன் குடும்பத்தோடு பெண் கேட்டு வந்தான்.. அதற்கு முதல் நாளிலேயே சுதாகரன் குடும்பத்தோடு சென்னைக்கு வந்து விட்டார்.. ஒரு வாரத்துக்கு முன்னாலேயே பாஸ்கரனைப் பெற்றவர்கள் வந்திருந்தார்கள்..

பெண் பார்க்க வருபவர்கள் திருமணத்தையும் நிச்சயம் செய்து தாம்பூழத் தட்டை மாற்றுவதாக இருக்கிறார்கள் என்று வந்தனாவின் பாட்டி சொன்னாள்.. சென்னையில் இருந்த நெருங்கிய உறவினர்களின் வருகையில் வீடே நிரம்பியிருந்தது..

'கதிரோட குடும்பம் வசதியில்லாததுன்னு இவங்க எதையாது சொல்லிருவாங்களோ..' வந்தனாவின் மனம் அடித்துக் கொண்டது..

எந்தத் தடையுமில்லாமல் நிச்சயதார்த்தம் இனிதே நடந்து முடிய வேண்டுமென்று அவள் இறைவனை பிரார்த்தித்தாள்..

"சரியான ஆளுடி நீ.. அமுக்குனி போல இருந்துக்கிட்டு படிச்சுக்கிட்டு இருக்கறப்பவே உனக்குன்னு ஒரு ஆளை கரெக்ட் பண்ணிட்டயே.. இதுக்குத்தான் குற்றாலத்துக்குப் போறேன்னு குதிச்சுக்கிட்டு ஓடினயா..?" அஞ்சனா கேலி செய்தாள்..

மாலையில் கதிரவனின் குடும்பம் கார்களில் வந்து இறங்கியபோது வந்தனா திகைத்தாள்.. சாணக்யனின் பரம்பரைப் பணக்காரத் தோற்றமும்.. வாணியின் வைர நகைகளும்.. கார்த்திகாவின் விலையுயர்ந்த உடைகளும்.. நடையுடைபாவனைகளும் அந்தக் குடும்பத்தின் மேல் தட்டு வர்க்கத்துக்கான அடையாங்களை பறை சாற்றியதில் அவள் குழம்பிப் போனாள்..

'காரில இருந்து.. நகைகள்.. டிரெஸ்ன்னு அத்தனையையுமா இவன் இரவல் வாங்கியிருக்க முடியும்..?'

என்னடா இது.. என்று ஒரே யோசனையாகிப் போனது வந்தனாவிற்கு.. அவள் காதலித்த கதிரவன் எங்கே..? இன்று கோட்டும் சூட்டுமாக வந்திருக்கும் இந்தக் கதிரவன் எங்கே..?

அவளுடைய காதலனால் ஒரு கைக்குட்டையைத் தான் அவளுக்கு வாங்கிக் கொடுக்க முடிந்திருக்கிறது.. இன்று அதே காதலனின் குடும்பத்தார் அவளுக்கு நிச்சயதார்த்த பரிசாக வைர அட்டிகையைக் கழுத்தில் போட்டுத் திருமணத்தை உறுதி செய்கிறார்களே.. இது எப்படி சாத்தியமானது..?

அந்தச் சூழலில் அவள் யாரிடம் போய் இதையெல்லாம் கேட்பாள்..? பதுமை போல குடும்பத்தார் சொன்னதைச் செய்தாள்.. ஹாலில் அவளை அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தார்கள்.. கதிரவனை பார்க்க முயன்றாள்.. அவன் வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.. அவளைக் கவனிக்கவில்லை..

'கவனிக்கவில்லையா.. இல்லை.. கவனிக்காததைப் போல பாவனை செய்கிறானா..?' வந்தனாவுக்குள் சந்தேகம் வந்தது..

அதை அவள் தெளிவு படுத்திக் கொள்வதற்குள் நிச்சயதார்த்தப் பத்திரிக்கையை வாசித்து முடித்து.. தாம்பூழத் தட்டை மாற்றி விட்டார்கள்..

"கல்யாணத்துகு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு.." மாலதி தயங்கினாள்..

"மண்டபத்தை ஒரு வருசத்துக்கு முன்னாலேயே புக் பண்ணி வைச்சுட்டேன்.." கதிரவன் பசிறில்லாத குரலில் பதில் சொன்னான்..

அவனுக்கும்.. அவளுக்கும் திருமணம் நடக்கப் போகும் மண்டபத்தின் பெயரை மற்றவர்கள் உச்சரித்த போது வந்தனாவுக்கு மயக்கம் வந்தது..

கோடிஸ்வரர்கள் மட்டுமே கால் பதிக்க முடியும் மண்டபத்தை ஒரு வருடத்திற்கு முன்பே அவன் முடிவு செய்து முன்பணத்தையும் கொடுத்திருக்கிறான் என்றால் அவன் யார்..?

உயிருக்குயிராய் காதலிக்கும் காதலிக்கு சாலையோர கடையில் வாங்கிய கைக்குட்டையை பரிசாக அளிக்கும் அளவிற்கே வசதி படைத்த அவளுடைய காதலனா இவன்..?

திகைத்த வந்தனாவின் விழிகளை காரில் ஏறப் போன கடைசி நொடியில் திரும்பிப் பார்த்த கதிரவனின் விழிகளில் இருந்த கேலிச்சிரிப்பில் அவள் உறைந்து போனாள்..

இந்த ஒரு வருடமாக அவன் அவளை ஏமாற்றிக் கொண்டிருந்தானா..?

# 31

"அவன் அப்படியா சொன்னான்..?"

கருணா விழுந்து விழுந்து சிரித்தாள்.. அவள் சிரிப்பைக் கண்டு எட்டிப் பார்த்த மாலதிக்கும் விவரம் போனது.. அவளும் சிரித்தாள்..

வந்தனாவின் திருமணம் உறுதியானதிலிருந்து.. கருணாவுக்கும்.. மாலதிக்கும் இடையிலிருந்த மாயவலை அறுந்து போயிருந்தது.. அதுவரை மாலதியின் புகுந்த வீட்டில் அவளைப் போலவே வாழவந்தவள் என்ற நிலையிலிருந்த கருணா.. வந்தனா வாழப் போகும் வீட்டின் உறவினறாக மாறிப் போயிருந்ததில் அவள்மீது மாலதி கொண்டிருந்த அர்த்தமற்ற துவேசம் அழிந்து போனது..

மாலதி மகள்களை நேசிப்பவள்.. அந்த மகள் வாழப் போகும் வீட்டில் சந்தோசமாக வாழ்வதற்கு கருணாவின் உதவி தேவைப்படும் என்றிருக்கும் போது.. அவள் எத்தனை பகையாக இருந்தாலும் அதை உதறிவிட்டு உறவு பாராட்டவே அவள் விரும்பினாள்.. மகளுக்காக தன் ஆழ்மனதின் மனத்தாங்கலை மறந்து விட்டாள் மாலதி..

கருணா அதற்காகத்தானே காத்திருந்தாள்..?

அவள் மாலதி நீட்டிய உறவுக்கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. திருமணமான தினத்திலிருந்து அன்றுவரை யாருடைய பாசத்திற்காக அவள் ஏங்கினாளோ.. அந்த மாலதியின் பாசம் கிடைத்து விட்டதில் அவள் நெகிழ்ந்து போனாள்..

"அக்கா.."

"போனதை மறந்திரு கருணா.. இனி நடக்கிறதெல்லாம் நன்மையாவே நடக்கனும்.. வந்தனா எனக்கு மட்டும் மகளில்ல.. உனக்கும் மக.."

"இதை நீங்க சொல்லனுமாக்கா.."

கருணா கண்கலங்க மாலதியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.. திருமணத்திற்கு எண்ணி ஆறே நாள்கள் ஊடே இருக்கும் நிலையில் குற்றாலத்திற்குப் போய் திரும்பி வருவது சாத்தியப்படாது என்று சுதாகரன் சொல்லியபோது அதை ஆமோதித்தாள்..

"நம்ம வீட்டில நடக்கிற முதல் கல்யாணம்.. நாம தான் முன்னால நின்னு எல்லா வேலைகளையும் செய்யனும்.. நீங்க மேனேஜருக்குப் போன் போட்டு எல்லாத்தையும் கவனிச்சுக்கச் சொல்லுங்க.. நாம வந்தனாவோட கல்யாணத்தை முடிச்சுட்டு.. அவளை கதிரோட வீட்டில விட்ட பின்னாலதான் கிளம்பிப் போக முடியும்..."

பொறுப்புடன் அவள் பேசிய விதத்தில் மாலதி கருணாவை கட்டிக் கொண்டாள்.. ஒன்றான ஓரகத்திகள் இருவரும் பின்னிப் பிணைந்ததில்.. அண்ணன் தம்பிகளின் பாசம்கூட ஓரம் கட்டப் பட்டுவிட்டது..

"கூடப் பிறந்தது நாமளா.. இல்ல.. இவங்களாடா..?"

பாஸ்கரன் ஆச்சரியப்பட்டார்.. மந்தைக்குத் திரும்பி விட்ட ஆடாகத்தனை உணர்ந்த சுதாகரன் பனித்த விழிகளைத் துடைத்துக் கொண்டார்.. தம்பியின் முதுகில் தட்டிக் கொடுத்து அந்த அண்ணன் ஆறுதல் படுத்தினார்..

திருமண வேலைகளில் முனைப்பாக இருந்த கருணாவிடம் வந்தனா கதிரவனின் பொருளாதார நிலையைப் பற்றிக் கேட்டபோது அவள் சிரித்து விட்டாள்.. அதில் மாலதியும் கூட்டுச் சேர்ந்து கொண்டதில் வந்தனாவின் முகம் சிவந்து போனது..

"கேயார் கம்பெனியில கிளார்க்கா வேலை பார்க்கிறானா..? மக்கு.. மக்கு.. அவன் கதிர் குருப் ஆப் கம்பெனியோட எம்.டி. சித்தப்பாவோட பணத்தை எதிர்பார்க்காம சொந்தமா கம்பெனி ஆரம்பிச்சு ஜெயிச்சுக் காட்டினவன்.. பிஸினெஸ் உலகத்தில அவன் மிகப்பெரிய ஹீரோ.. அவன் குற்றாலத்துக்கு எதுக்கு வந்தான்னு நினைக்கிற..?"

"ஓவர் டைம் வேலை பார்த்ததிலே தலைவலி வந்துச்சாம்.."

"ஓவர் டைமா வேலை பார்த்தான்தான்.. அதனால தலைவலி வந்ததும் உண்மைதான்.. அந்த ஓவர் டைம் வொர்க்கை சம்பளத்துக்காக அவன் பார்க்கலை.. எக்கச்சக்க பிஸினெஸ்.. இவன் ஒற்றை ஆள்.. அத்தனையையும் நிர்வாகம் பண்ணணும்னா சும்மாவா..? அதான்.. மூளை சூடேறினா.. ரிலாக்ஸ் பண்ண குற்றாலத்துக்கு வந்து போவான்.. அதில பாருங்க அக்கா.. கதிர்ங்கிற பெயரில இருக்கிற இங்கிலிஷ் முதலெழுத்தையும்.. கடைசி எழுத்தையும் சேர்த்து வைச்சு.. கேயார் கம்பெனின்னு இவகிட்ட கப்சா விட்டிருக்கான் பாருங்க.. ஹா.. ஹா.. வந்தனா.. நீ இந்த அளவுக்கு ஏமாளியா..?"

"இத்தனை நாளா இவ.. நம்ம மாப்பிள்ளையை கேஆர் கம்பெனியில வேலை செய்கிறவர்ன்னுதான் நினைச்சுக்கிட்டு இருந்திருக்கிறா கருணா.. குட் ஜோக்.."

மருமகள்கள் கூட்டுச் சேர்ந்து சிரித்ததைக் கேட்டு எட்டிப் பார்த்த அவர்களின் மாமியாருக்கும் விவரம் போனது.. அவள்..

"என்னவோ.. மன்னார் அன்ட் கம்பெனியில டனார் தங்கவேலு வேலை பார்த்ததைப் போலவே இருக்கில்ல.." என்று கருப்பு வெள்ளை திரைப்படத்தை நினைவு கூர்ந்தாள்..

"சரியான மக்குடி நீ.. இப்படியா ஏமாறுவ.. கதை சொல்லி கதை சொல்லி உனக்கு ஒரு சுண்டல் பொட்டலம் கூட வாங்கித்தராம தப்பிச்சிருக்கார் உன் அருமை காதலன்.. போதாக்குறைக்கு நீ கொண்டு போகிற தீனியையும் மொக்கியிருக்கான்.. இப்படியா ஏமாளியா இருப்ப..?" அஞ்சனா தலையில் அடித்துக் கொண்டாள்..

வீடு பூராவும் விவரம் பரவியது.. அனைவரும் ஒரு மனதாக வந்தனாவை 'ஏமாளி' 'மக்கு..' என்ற பொருத்தமான காரணப்பெயர்களால் அழைத்து மகிழ்ந்தார்கள்..

'கடைசியா இதிலயும் அவன் என்னை தோற்கடிச்சுட்டானே..'

வந்தனாவுக்குள் விசனம் வந்தது.. அந்தத் திருமணத்திலிருந்து தப்பிக்க முடியாமல் ஊடே வெறும் ஆறுநாள்கள் மட்டும் இருந்ததில் அவள் மனம் உடைந்தாள்.. வீட்டில் மூச்சு முட்டுவதைப் போல உணர்ந்தவள்.. அந்தத் தெரு முனையிலிருந்து பூங்காவுக்குப் போனாள்.. தனிமையைத் தேடி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தவளை..

"குட் ஜாப்.." என்ற குரல் நிமிர வைத்தது..

எதிரே இகழ்ச்சியான பார்வையுடன் குற்றாலத்தில் ஓர்முறை அவள் சந்தித்த கரிஷ்மா நின்று கொண்டிருந்தாள்.. அவளின் துச்சப் பார்வையில் வந்தனாவின் புருவங்கள் சுருங்கின..

'இவ எதுக்காக இப்படிப் பார்க்கிறா..?'

"என்னோட கதிரை மயக்கி பறிச்சுக்கிட்ட இல்ல.. கோடிஸ்வரி நான்.. நீயோ மிடில் கிளாஸ்.. ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டுத்தானே கதிரவன்கிட்டக் காதல் நாடகம் போட்ட..? பணத்துக்காக அடுத்தவளின் காதலனை பறிச்சுக்கிறவளுக்கு என்ன பெயர்ன்னு தெரியுமா..?"

கரிஷ்மாவின் விழிகளில் அந்தப் பெயர் இருந்ததில் வந்தனா துடித்துப் போய் விட்டாள்.. கடைசியில் இப்படியும் ஒரு குற்றச்சாட்டை அவளைக் கேட்க வைத்து விட்டானே..

"சின்ன வயதில இருந்து கதிரோட பழகறேன்.. கதிருக்கு நான்.. எனக்கு கதிர்ன்னு இரண்டு குடும்பத்திலயும் கலந்து பேசி முடிவு பண்ணியிருந்தாங்க.."

இது வந்தனாவுக்குத் தெரியாதே.. குற்றாலத்தில் கரிஷ்மாவை சந்தித்த அன்று அவள் யார் என்று கருணாவிடம் வந்தனா கேட்டபோது அவள் முகம் மாறி தெரிந்த பெண் என்ற ஒற்றை வரியில் பேச்சை முடித்துக் கொண்டது வந்தனாவின் நினைவுக்கு வந்தது..

எந்த வகையில் தெரிந்த பெண் என்று ஏன் கருணா வந்தனாவிடம் சொல்லவில்லை..?

"நானும் குற்றாலம்தான்.. கதிரவன் வந்தா எனக்கு தகவல் தெரிஞ்சிரும்.. போன தடவை அவர் வந்தப்ப எனக்குத் தகவல் கிடைக்கலை.. யதேச்சையா.. உன்னையும் அவரையும் சேர்த்து வைத்து நான் பார்த்த போதுதான் கதிர் குற்றாலம் வந்திருந்ததே எனக்குத் தெரிய வந்துச்சு.."

அதனால்தான் அவள் வீடு தேடி வந்து அன்று கத்தினாளா..?

"கதிர் உன்னைக் காதலிக்கிறதாச் சொல்லிட்டார்.. என்னை மேரேஜ் பண்ணிக்கிறதைப் பத்தி அவர் நினைத்துக்கூடப் பார்த்ததில்லையாம்.. பெரியவங்களோட பேச்சுக்கு அவர் பொறுப்பாக முடியாதாம்.. எப்போதாவது என்னிடம் அவர் காதல் சொல்லியிருக்காரான்னு கேட்டார்.. இல்லைதான்.. அதை எப்போதாவது நிச்சயமாய் அவர் சொல்வார்ன்னு நான் நம்பினேன்.. ஏன்னா அவருக்கு ஈக்குவலான ஸ்டேட்டஸில் நான் இருந்தேன்.. அவரோட ஸ்டேட்டஸீக்கு என்னைவிட இணையான வேறு பெண் கிடைக்க மாட்டாள்ன்னு நம்பினேன்.. என் நம்பிக்கையை நீ நாசம் பண்ணிட்ட.."

இல்லையே.. வந்தனாவின் நம்பிக்கையைத்தானே கதிரவன் தகர்த்து விட்டான்..? வந்தனாவுக்கு துக்கமாக இருந்தது..

"பெரியவங்கதான் பேசினாங்க.. கதிருக்கு அதில விருப்பமில்லைன்னு சொல்லிட்டாரு.. ஆனாலும் அவரோட மனசை மாத்த முடியும்ங்கிற கான்பிடென்ஸ் எனக்குள்ளே இருந்தது.. நீ.. நீ.. நீ எப்படி அவரை மயக்கின..? உன்னைப் போல ஒருத்தியை மேரேஜ் பண்ணிக்கிற டிசிசனை எப்படி அவர் எடுத்தார்..? அந்த அளவுக்கு நீ விட்டுக் கொடுத்து அவரிடம் பழகினயா..? நான் டிரை பண்ணினப்ப முகத்தைச் சுளிச்சாரே..."

கரிஷ்மாவின் பொருமலில் பூமி பிளந்து தன்னை விழுங்கிவிடாதா என்ற ஏக்கம் கொண்டாள் வந்தனா.. அதற்கு மேலும் அங்கிருந்தால் பைத்தியம் பிடித்து விடும் என்று வீட்டுக்கு ஓடிவந்து விட்டாள்..

அவளுக்கான நகைகளை வாங்க கடைக்குப் போன போது.. அங்கே கதிரவனின் குடும்பமும் வந்திருந்தது.. மருமகளுக்கான வைர நகைகளை வாங்கிக் கொடுக்க வந்திருந்தாள் வாணி..

நகைகளை இரு குடும்பமும் தேர்வு செய்து கொண்டிருந்தார்கள்.. அது யாருக்கோ தேர்வு செய்யப் படுகிற நகைகள் என்ற ஒட்டாத மனப்பான்மையுடன் விலகி வாசல்பக்கமாக போனாள் வந்தனா..

அங்கே அவளைப் போலவே பற்றில்லாமல் விலகி நின்றிருந்த சாணக்யன் வந்தனாவைக் கண்டும் காணாதவரைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டு போனை கையில் எடுத்தார்..

"ம்ம்ம்.. என்ன செய்கிறது அரவிந்தன்..? என் ஒன்றுவிட்ட அண்ணன் மகளுக்கு வீட்டோட மாப்பிள்ளை வேண்டும்ன்னு ஒரு மிடில்கிளாஸ் குடும்பத்தில சம்பந்தம் வைச்சிட்டாரு.. அது என்னைப் பிடித்து துரத்துது.. அக்கா வீட்டுக்குப் போறேன்னு என் மகன் குற்றாலத்துக்குப் போனா அங்கே சித்தப்பா வீட்டுக்கு ஹாலிடேஸை ஸ்பெண்ட் பண்ண வருகிறதா பேர் பண்ணிக்கிட்டு அந்த மிடில் கிளாஸ் குடும்பத்தில பிறந்த பெண்ணும் வந்திருக்கு.. என் மகன்கிட்ட ரிலேடிவ் போல பழகி கோடிஸ்வரக் குடும்பம்ன்னு கைக்குள்ள போட்டிருச்சு.. இப்ப என்னடான்னா என் மகன் கட்டிக்கிட்டா அந்த மிடில் கிளாஸ் பெண்ணைத்தான் கட்டிக்குவேன்னு அடம் பிடிக்கிறான்.. ம்ம்ம்.. வேற வழி..? மேரேஜ் நடக்கப் போகுது.. ம்ம்ம்.. கரிஷ்மா பாவம்.. எல்லாவகையிலயும் எங்க குடும்பத்துக்கு மருமகளா வர தகுதியான பொண்ணு

அது மட்டும்தான்.. எங்கே..? என் மகன் எங்க ஸ்டேட்டஸிக்கு இணையில்லாத இடத்தில தடுக்கி விழுந்துட்டானே.. காதலாம்.. இந்தக் காதல்ங்கிறதெல்லாம் சும்மா அரவிந்தன்.. ஏதோ ஒரு மயக்கத்திலே பேசறபேச்சு.. காதல்ங்கிறது எது வரைக்கும்ன்னு நினைக்கறிங்க..? கடைசி வரைக்கும் இந்த காதல் நிலைச்சிருக்குமா..? என்னைக்காவது ஒருநாள் என் மகன் மயக்கத்தில இருந்து வெளியே வருகிறப்ப அவசரப் பட்டுட்டோமேன்னு நினைப்பான்.. அதுதான் நடக்கப் போகுது பாருங்க.. அப்ப அவன் இழந்துட்ட கோடிஸ்வரக் குடும்பத்தோட வாரிசு.. அவன் நினைத்தாலும் திரும்பக் கிடைத்து விடுமா..? ம்ஹீம்.. என்னவோ போங்க அரவிந்தன்.. எனக்கு மனசே சரியில்லை.."

அவள் காதில் விழுக வேண்டும் என்பதற்காகவே உரக்கப் பேசிய சாணக்யனின் சாணக்யத்தனத்தில் வந்தனா இற்றுப் போனாள்..

"எனக்கு இந்தக் கல்யாணம் வேணாம் சித்தி.."

வீடு திரும்பியதும் கருணாவைத் தனியாக அழைத்து அவள் துடித்த போது கருணா பதறிவிட்டாள்.. வந்தனாவின் வாயைப் பொத்தி அவள் பேசுவதை நிறுத்தி விட்டு அவசரமாக கதவைத் தாழிட்டாள்..

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..? கல்யாணத்துக்கு இன்னும் இரண்டே நாள்தான் ஊடே இருக்கு.. இப்பப் போய் இப்படிப் பேசி வைக்கிறயே.. இது அக்கா மாமா காதில விழுந்தா என்ன ஆகிறது..?"

"விழுகட்டும் சித்தி.. எனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்லைன்னு அவங்களுக்கும் தெரியட்டும் சித்தி.."

கருணா போராடிப் பார்த்தாள்.. வந்தனா சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளையாக பேசியதையே திரும்பத் திரும்பப் பேசி வைத்ததில் கதிரவனுக்கு போனைப் போட்டாள்.. அவன் நேரில் வந்து விட்டான்..

"வந்தனாவுக்கு ஒரு நகைவாங்கி பிரசெண்ட் பண்ணனும்.. வித்யுவர் பெர்மிசன்.."

மறுநாளில் திருமணத்தை வைத்துக் கொண்டு.. முதல் நாளில் மாப்பிள்ளை இப்படிக் கேட்டால் பெண்ணைப் பெற்றவர்கள் எப்படி மறுப்பார்கள்..?

"சீக்கிரமா வந்திருங்க.. ஈவினிங்கே கல்யாண மண்டபத்துக்கு போயாகனும்.. காலையில் உங்க அம்மா நகை வாங்கிக் கொடுத்தாங்களே.. அப்பவே நீங்களும் வந்திருக்கலாமே..?"

தர்ம சங்கடத்துடன் மறுப்புக் கலந்த ஒப்புதலைக் கொடுத்தார் பாஸ்கரன்..

"அர்ஜண்டா ஒரு மீட்டிங்கை அட்டெண்ட் பண்ண வேண்டியிருந்தது.. அதான்.. வர முடியலை.."

பாஸ்கரனின் முன்னால் மறுக்க முடியாத வந்தனா வெறுப்புடன் காரில் ஏறினாள்.. கார் வீட்டைக் கடந்து அடுத்த தெருவில் நுழைந்ததும்.. சாலையோர மரத்தடியில் காரை நிறுத்திய கதிரவன் அவள் பக்கமாக கோபத்துடன் திரும்பி..

"இஷ்டமில்லையா..? என்மேல் உனக்கு இஷ்டமில்லையா..?" என்று சீறினான்..

"ஆமாம்.. இஷ்டமில்லை.." வறண்ட குரலில் அவன் முகம் பார்க்காமல் பதில் சொன்னாள் வந்தனா..

"ஏய்ய்.. என் முகத்தைப் பார்த்துப் பேசடி.. இந்த முகத்தைப் பார்த்துத்தானே மயங்கின..?"

"இல்லையாமே.. நான்தான் உங்களை மயக்கினேனாமே.."

"யார் சொன்னது..?"

"கரிஷ்மா.. அப்புறம் உங்க அப்பா.."

"லுக் வந்தனா.. காதல் கல்யாணத்தில ஆயிரம் எதிர்ப்பிருக்கும்.. நம்ம மனசு புண்படனும்னு நாலுபேரு நாலுவிதமா பேசுவாங்க.. அதையெல்லாம் காதில் போட்டுக்கக் கூடாது.."

"வேற எதை காதில் போட்டுக்கனும் சார்..? இத்தனை பெரிய கோடிஸ்வரனா கதிர் குருப் ஆப் கம்பெனியோட எம்.டியா இருந்துக்கிட்டு கேயார் குருப் ஆப் கம்பெனியில வேலை பார்க்கிற கிளர்க்குன்னு பெயர் சொன்னீங்களே.. அதை என் காதில போட்டிருக்கனுமா..?"

"அது விளையாட்டுடி.. இன்னொரு வகையில எனக்கு அது பிடிச்சிருந்தது.. யு நோ.. அந்த கரிஷ்மா எதுக்காக என்னை கல்யாணம் பண்ணிக்கனும்னு விரும்பினா..? என்னோட ஸ்டேட்டஸ்.. பிஸினெஸ் வெர்ல்டுல எனக்கிருக்கிற ஹீரோ இமேஜ்.. இது இல்லைன்னா அவ என்னைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டா.. நீ அப்படியில்லைடி.. உன் வசதியை விட.. குறைவா.. ஏழ்மை நிலையில இருக்கிற ஒருத்தனா என்னைப் பத்திச் சொன்னபோதும் உன் காதல் குறையாம என்னை நீ காதலிச்சயே.. அந்தக் காதலுக்கு இணை ஏதுமில்லைடி.."

"ஹ..! எல்லாத்தையும் என்னைத் தோற்கடிச்சதைப் போல இதிலயும் கதை சொல்லி என்னைத் தோற்கடிச் சுட்டிங்கள்ல.. இப்ப என்ன ஆச்சு..? மக்கு.. ஏமாளிங்கிற பட்டத்தோடு சேர்ந்து.. 'ஆள் மயக்கி'ங்கிற பட்டமும் சேர்ந்து வந்திருச்சு.. இதுக்காகவா என்னைக் காதலிச்சீங்க..?"

"சின்ன விசயத்தை நீ பெரிசு பண்றடி.."

"இல்லை.. மிகப்பெரிய பழியை என்னை சுமக்க வைச்சுட்டிங்க.."

"முடிவா என்னதான் சொல்ற..?"

"எனக்கு உங்களைப் பிடிக்கலை.. மனதார உங்களை நான் வெறுக்கிறேன்.. இந்தக் கல்யாணம் வேணாம்.. நிறுத்திருங்க.."

"அறைஞ்சேன்னா அத்தனை பல்லையும் உதிர்த்துருவேன்.. விடிந்தா நமக்குக் கல்யாணம்.. இன்னும் இரண்டு மணி நேரத்தில நாம மண்டபத்துக்கு போயாகனும்.. இப்பப் போயி என்ன பேச்சுப் பேசற..? இந்தக் கல்யாணம் நடக்கும்.."

நடந்தது.. அவனுக்கும்.. அவளுக்குமான திருமணம் மறுநாள் காலையில் பிரம்மாண்டமாக நடந்து முடிந்தது.. பெற்றவர்களிடம் திருமணம் வேண்டாம் என்று சொல்ல தைரியமில்லாதவளாக மணமேடை ஏறினாள் வந்தனா.. அவள் மனமறிந்து திருமணத்தை நிறுத்த வேண்டிய கருணா அதைச் செய்யவில்லை.. கதிரவனும் அதை மறுத்து விட்டான்.. உணர்வற்ற பதுமை போல அவன் கட்டிய தாலியை வாங்கிக் கொண்டவள் அன்று மாலையில் நடந்த திருமண வரவேற்பிலும் பதுமை போலவே கதிரவனுக்குப் பக்கத்தில் நின்றாள்..

அன்றைய இரவு அவர்களுக்கான முதலிரவு..!

மற்றதைப் போலவே இதையும் மறுக்க முடியாமல் ஒரு வழிப் பாதையில் நுழைந்தாள் வந்தனா.. அவளுக்காகவே காத்திருந்த கதிரவன் ஆர்வத்துடன் அவளை அணுகினான்.. அவளது மறுப்பை அவன் லட்சியம் செய்யவில்லை..

"எனக்குப் பிடிக்கலை.."

அவள் சொல்லில் அவனது வெறி அதிகமானது.. சீறினான்..

"ஏன் பிடிக்கலை..? குற்றாலத்தில கொஞ்சிக் குழாவ பிடிச்சிருந்தது.. இப்ப பிடிக்கலையா..?"

அவன் வேட்கையுடன் அவளை அணுகி இழுத்தான்..

# 32

ஆவேசத்துடன் அவள்மேல் வீழ்ந்தான் கதிரவன்.. வேட்டையாடப்படும் போகப் பொருளாக அவளது உடல் மாறப் போவதில் அவளுக்குள் துக்கம் உண்டானது.. அவன் கண்களில் தெரிந்த மிருகவெறி அதை ஊர்ஜிதப் படுத்தியது.. அவளுக்கென்று ஒரு மனமில்லையா..? அதைப் பற்றிய நினைவு அவனுக்கில்லையா..?

அந்த நினைவை மறந்தவனைப் போல இச்சையுடன் அவள் இதழ்களைக் கவ்விக் கொண்டான் அவன்.. வேட்டை ஆரம்பமானது.. அவள் வேட்டைப் பொருளானாள்.. அதுபோன்ற கூடுதலில் அவளுக்கு விருப்பமில்லை.. அவளது விருப்பத்தைப் பற்றிய கவலை அவனுக்கில்லை..

இதழோடு இதழ் சேர்ந்த அந்த ஆக்ரமிப்பில் அவளது உடல் சுடர் பட்ட மெழுகு போல உருகத் தொடங்கியதைத் தான் அவளால் நம்ப முடியவில்லை.. அவனது இம்சைக்கு இரையாக அவள்உடல் துடிப்பதை அதிர்வுடன் அவள் உணர்ந்தாள்...

அவனது வேக மூச்சுக்களில் வெளிப்பட்ட வேட்கைத் தீயில் அவளின் மோகம் பற்றிக் கொண்டதில் அவளால் அவளை மன்னிக்க முடியவில்லை.. தன்னைத்தானே வெறுத்தாள் வந்தனா..

அவள்மீது பரவிய முரட்டுக் கைகளின் அத்து மீறல்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுத்த அவளின் தளிருடலை அவன் தழுவிக் கொண்டபோது மீண்டும் அவனிடம் அவள் தோற்றுப் போய் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.. அவள் உடல் தீண்டிய அவன் விரல்களின் ஸ்பரிசத்தில் அவள் பனிக்கட்டியாக உருகிக் கொண்டிருந்தாள்..

அவன் வெறி பிடித்த போராளியாக இருந்தான்.. வேட்டைப் பொருளை வேட்டையாடும் கை தேர்ந்த வேட்டைக்காரனாக இருந்தான்.. வென்றுவிட்ட அவளது உடலென்னும் சாம்ராஜ்யத்தை சூறையாடும் சர்வாதிகாரியாக இருந்தான்..

அவள் முகமெங்கும் படிந்த அவனது ஆவேச முத்தங்களில் அலைக்கழிக்கப்பட்டவளாய் கலைந்து கிடந்தாள் வந்தனா.. மேலும் கலைத்து முன்னேறினான் கதிரவன்.. அவளுக்குள் புதைந்து அவன் தேடுதலை ஆரம்பித்தபோது எதையும் ஒளித்து வைக்க அவளால் முடியவில்லை..

பனியாக இருந்தவளால் கதிரவனின் கதிர் வீச்சைத் தாங்க முடியவில்லை.. அவன் புசிக்க ஆரம்பித்தான்.. அவள் இரையாக மாறிப் போனாள்.. புசித்து முடித்தும் திருப்தியில்லாமல் மீண்டும் மீண்டும் புசித்த அவனின் அகோரப் பசியில் அவள் அமிழ்ந்து போனாள்.. விடிந்த போது அவள் கதிரவனின் மனைவியாக மாறியிருந்தாள்.. அவள்மீது படிந்திருந்த அவன் கையை விலக்கி விட்டு எழுந்தவள் சோர்வுடன் குளிக்கப் போனாள்..

ஈரத்தலையை துவாலையால் இறுக்கிக் கட்டி.. நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டபோது கண்ணாடியில் தெரிந்த அவளின் பிம்பம் அவளைப் பார்த்து நகைப்பதைப் போல இருந்தது..

'தோற்று விட்டேன்..' கண்ணீருடன் அவள் சொல்லிக் கொண்டாள்..

'பணக்காரன் என்பதை மறைத்து என்னை ஏமாற்றியவனின் தாலிக்கு கழுத்தை நீட்டினேன்.. இப்போது அவன் ஆசைக்கு இணங்கி அவனுடன் வாழ்ந்தும் விட்டேன்.. இனி தோற்பதற்கு என்ன இருக்கிறது..?'

வெறுமையான மனதுடன் இறங்கி வந்தவளை கனிவுடன் அணைத்துக் கொண்டாள் வாணி.. பூஜையறைக்கு அழைத்துச் சென்றாள்..

"குத்து விளக்கை ஏத்தும்மா.. இன்னையில இருந்து இது உன்வீடு.."

ஏற்றுக்கொள்ள மனமில்லாவிட்டாலும் மனதில் வஞ்சனையில்லாத மாமியாரின் மனதை புண்படுத்த விருப்பமில்லாமல் குத்துவிளக்கை ஏற்றினாள் வந்தனா.. சுடர் விட்டுப் பிரகாசித்த சுடரின் ஒளியில் அவள் மனம் கசிந்தது.. அந்தச் சுடரொளியில் தெரிந்த தெய்வத் திருவுருவங்களிடம் கை கூப்பினாள்..

'நீங்கள் எல்லாம் இருந்தும் எனக்கு இந்த நிலைமையா..?'

விழியோரம் அரும்பிய கண்ணீரை வாணிக்குத் தெரியவிடாமல் மறைத்துக் கொண்டாள்..

"காபி குடிம்மா.." வாணி அவள் கையில் காபிக் கப்பைத் திணித்தாள்..

சூடாக தொண்டையில் இறங்கிய காபி குளிருக்கு இதமாக இருந்தது... குடித்து முடித்தவள் காலி காபி கப்பை சமையலறையின் சிங்கில் போட்டுவிட்டுத் திரும்பியபோது அவள் கையில் மீண்டும் காபிக் கப்பைத் திணித்தாள் வாணி..

'இப்பத்தானே குடிச்சேன்..?' வந்தனாவுக்குப் புரியவில்லை..

"ஹாலில் டீப்பா மேல இன்னைக்குப் பேப்பர் இருக்கும்மா.. எடுத்துக்கிட்டுப் போ.. கதிருக்கு கண் முழிச்சதும்.. காபியும் பேப்பரும் கண்முன்னாலே இருக்கனும்.."

'அதுக்கு..?' வந்தனாவுக்குள் சினம் துளிர்ந்தது..

'இதுவேறயா..?'

அவளென்ன கதிரவனின் பிரத்யேக வேலைக்காரியா..?

அதை வாணியிடம் கேட்க முடியாமல் பொருமியபடி மாடிக்குப் போனாள் வந்தனா.. அறைக் கதவை திறந்து உள்ளே போக முடியாமல் அவள்உடல் நடுங்கியது.. முந்தய நாளின் இரவில் நடந்த நிகழ்வின் நினைவில் அவள் அப்படியே நின்று விட்டாள்..

'பேசாம திரும்பிப் போயிரலாமா..?'

யோசனையை செயல்படுத்த அவள் திரும்ப முனைந்த போது அங்கே வந்த கார்த்திகா வியப்புடன்..

"என்னங்கண்ணி..?" என்றாள்..

"என்ன கார்த்திகா..?" வந்தனா சமாளித்துக் கொண்டு கேள்வி கேட்டாள்..

"ரூம் வாசலிலியே நிக்கறிங்களே.. என்னாச்சு..?"

கார்த்திகாவின் அறை கதிரவனின் அறைக்குப் பக்கத்தில்தான் இருந்தது.. கால நேர ஜாகிங்கிற்காக வெளியே போய் திரும்பியவளுக்கு அண்ணனின் புது மனைவி காபிக் கோப்பையுடன் அறைவாசலில் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் வியப்பாக இருந்தது..

"சும்மா.. மாடி ஹால் அழகாயிருக்கேன்னு பார்த்தேன்.." வந்தனா காரணத்தை கண்டு பிடித்து விட்டாள்..

"ஏன் அண்ணி.. அண்ணன் அழகாய் இல்லையா..?"

கார்த்திகா கண் சிமிட்டியதில் வந்தனாவின் முகம் சிவந்து விட்டது.. அப்படியே அண்ணனைப் போலத் தங்கையும் இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டாள்..

"நீ எங்கே போயிட்டு வர்ற..?" பேச்சை மாற்றினாள்..

"ஜாகிங்.. அண்ணனும் சிலசமயம் வருவான்.. மத்த நாள்களில வேலை.. வேலைன்னு ஓடிருவான்.. இன்னைக்குத்தான் அவனுக்கு ஜாகிங்கும் இல்லாம.. கம்பெனி வேலைன்னும் இல்லாம... வேறவேலை வந்திருச்சே.. இப்ப ஜாகிங் போக கூப்பிட்டா வருவானா..?"

மீண்டும் அவள் கண்சிமிட்டியதில் வந்தனாவின் லஜ்ஜை அதிகரித்தது.. கார்த்திகாவும்.. வந்தனாவும் ஒரேவயதினர்கள் என்பதினால் இயல்பாக கேலி பேசிய கார்த்திகாவிடம் அவளால் விலகி நின்று பதில் சொல்ல முடியவில்லை..

சமவயது தந்த தோழமை உணர்வுடன்..

"நாளைக்கு உனக்கும் இதேதான்.." என்று சொல்லி விட்டாள்..

"அட.. அண்ணிக்கு வாய் பேசகூட வருமா..?" கார்த்திகா ஆச்சரியப்பட்டாள்..

"நல்லாவே வரும்.. அதனால.. பேசா மடந்தை அண்ணி வந்து வாய்ச்சிருக்கா.. அவ தலையில மிளகாயை அரைச்சிடலாம்ன்னு தப்புக் கணக்குப் போடாம.. மாத்தி யோசி.."

"யோசிச்சுட்டாப் போச்சு.. இன்னும் வேற என்னென்ன செய்யனும்னு சொல்லிருங்க அண்ணி.. அதையும் செய்துடறேன்.."

"இந்த.. வாங்க.. போங்கங்கிற மரியாதையை மூட்டை கட்டிப் பரணில் தூக்கிப் போட்டுட்டு.. வா.. போன்னு கூப்பிட்டாத் தேவலை.."

"அண்ணன் அடிக்க வருவானே.."

"இது அண்ணிக்கும் எனக்குமான டீல்.. ஊடே வேற யாரும் வரக்கூடாதுன்னு சொல்லிரு.."

"அப்படிங்கறிங்க..?"

"திரும்பவும் 'ங்க..' வந்தாச்சா..?"

"ஓகே.. ஓகே.. வா.. போன்னு பேசறேன்.. ஆனா பெயர் சொல்ல மாட்டேன்.."

"ஏன்..?"

"அண்ணின்னு கூப்பிடறப்ப இருக்கிற நிறைவு பெயர் சொல்லிக் கூப்பிறப்ப வராது அண்ணி.. ஸோ.. நான் உன்னை அண்ணின்னுதான் கூப்பிடுவேன்.."

கார்த்திகா தலையை ஆட்டிச் சிரித்துவிட்டு அவளுடைய அறைக்குள் நுழைந்து விட்டாள்.. வந்தனாவின் மனதிலிருந்த சோக மேகம் லேசாக கரைந்தது.. லேசான மனமாக மாறாவிட்டாலும்.. மனதின் கணம் சிறிதளவு குறைந்ததில் இளக்கமான முகத்தோடு உள்ளே போனாள்.. கதிரவன் கட்டிலில் சம்மணம் கட்டி அமர்ந்து மடியில் ஒரு தலையணையை வைத்திருந்தான்.. அவன் பார்வை குறுகுறுவென அவள்மீது படிந்ததில் அவளுடலில் சிலிர்ப்பு கோடாக ஓடியது..

'இவன் எப்ப எழுந்திருச்சான்..?'

உதட்டைக் கடித்தபடி அவன் முகத்தைப் பார்க்காமல் காபிகப்பையும் பேப்பரையும் நீட்டினாள்.. அவன் வாங்கிக் கொள்ளவில்லை.. கூர்மையான அவனது பார்வை வெகு நிதானமாக அவளை அளப்பதை அவளால் உணர முடிந்தது.. அவனது பார்வை செய்த இம்சையைத் தாங்க மாட்டாமல் நகரப் போனாள்..

"எங்கே போற..?" அவன் அதிகாரமாக வினவினான்..

'இவனுக்கு நான் என்ன வேலைக்காரியா..?' வந்தனா வெகுண்டாள்..

"நானா நீட்டலை.. உங்க அம்மா கொடுத்து விட்டாங்க.. கொண்டு வந்தேன்.. அவ்வளவுதான்.."

"அவ்வளவுதானா..?"

அவன் எழுந்தான்.. அவளருகே வந்தான்.. அவள் கழுத்தில் கிடந்த கனமான புது மஞ்சள் கயிறை தூக்கிக் காட்டினான்..

"இதைப் பார்த்துட்டு சொல்லு.. அவ்வளவேதானா..?"

வந்தனா பதில் சொல்லவில்லை.. அவளால் பதில் சொல்ல முடியவில்லை.. இதைக் காட்டித்தானே முதல் நாள் இரவில் அவளை அவன் ஆக்ரமித்தான் என்ற துக்கம் அவளுக்குள் பொங்கியது..

"இதைக் காட்டியே வாழ்க்கை பூராவும் பிளாக் மெயில் பண்ணி வாழ்ந்து விடலாம்ன்னு திட்டம் போட்டிருக்கீங்களா..?"

உதடுகள் துடிக்கக் கேட்டவளை உற்றுப் பார்த்தான் கதிரவன்..

"உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நேத்து நைட் நடந்தது பிளாக் மெயிலா..?"

ஆழ்ந்த அவனது குரலில் அவளது முகம் சிவந்தது.. பதில் சொல்லாமல் திரும்பப் போனவளின் கையை முரட்டுத்தனமாக இறுக்கிப் பிடித்து அவன் நிறுத்தினான்..

"என் முகத்தைப் பார்த்துச் சொல்லுடி.. நேத்து நைட் நடந்ததில உனக்குக் கொஞ்சம் கூட சந்தோசமே இல்லையா..?"

அவனின் அந்தக் கேள்வியில் அவளுக்கு அந்த இடத்தைவிட்டு ஓடிப் போய் விட வேண்டும் போல இருந்தது..

சமையலறையில் எதையோ செய்து கொண்டிருந்தாள் வந்தனா.. அங்கே வந்த வாணி வியப்புடன் மருமகளைப் பார்த்தாள்..

"உனக்கு ஏம்மா இந்த வேலை..? சமையலுக்கு ஆள் இருக்கில்ல.."

"இருக்கட்டும் அத்தை.. அம்மா கத்துக் கொடுத்ததை செய்து பார்க்கனுமில்ல.. இல்லேன்னா கத்துக்கிட்டது மறந்து போயிடும்.."

"நல்ல பொண்ணும்மா நீ.."

வாணி சிலாகித்தாள்.. அன்றைய மதிய உணவு நேரத்தின் போது சாணக்கியன் வழக்கத்தை விட அதிகமாக கேட்டு வாங்கிச் சாப்பட்டார்..

"இத்தனை வருசத்தில இப்பத்தான் நம்ம சமையல் காரம்மா உருப்படியா சமைச்சிருக்கு.." பாராட்டினார்..

"உருப்படியா சமைச்சது நம்ம சமையல் காரம்மா இல்லை.. வந்தனா.." என்றாள் வாணி..

சாணக்யனுக்கு என்ன பேசுவதென்றே தெரிய வில்லை.. பேசாமல் எழுந்து போய் விட்டார்..

**தோ**ட்டத்தில் பாத்திகளை மாற்றி அமைக்கச் சொல்லிக் கொண்டிருந்தாள் வந்தனா.. ஜாகிங் முடித்து வீட்டுக்கு வந்த கார்த்திகா..

"ஹௌ நைஸ்..!" என்றாள்..

"நல்லாயிருக்குல்ல..?" தோழமையுடன் சிரித்தாள் வந்தனா..

"நீ கை வைச்சா குறைச்சலா இருக்குமா அண்ணி.. நேத்து சமையல் இன்னைக்குத் தோட்டமா..? கலக்கு.." கார்த்திகா போய்விட்டாள்..

வந்தனா செடிமறைவில் இருந்ததைக் கவனிக்காமல் வந்த சாணக்யன் தோட்டத்தைப் பார்த்ததும் நின்று விட்டார்..

"அட..! உனக்கு எப்படி இப்படியாப்பட்ட ஐடியா வெல்லாம் தோணிச்சு.. ஒரே நாளில தோட்டத்தையே மாத்திட்டயே.. அழகாயிருக்குப்பா.." என்று தோட்டக்காரனிடம் சொன்னார்..

"இல்லேங்கய்யா.. இதை நான் செய்யல.. நம்ம சின்னம்மாதான் செஞ்சாங்க.."

தோட்டக்காரன் கைகாட்டிய திசையில் சாணக்யன் பார்த்தார்.. செடி மறைவிலிருந்து வந்தனா வெளியில் வந்தாள்.. என்ன சொல்வது என்று தடுமாறிய சாணக்யன் பின்னந்தலையைத் தடவியபடி வேகமாக வீட்டுக்குள் போய் விட்டார்..

ஹாலின் சோபாக்களை இடம் மாற்றிப் போட்டு.. பூங்கொத்துக்களை பிளவர் வாஷில் வைத்து அழகு படுத்தினாள் வந்தனா..

"வாணி.." என்றபடி பரபரப்பாக அங்கே வந்தார் சாணக்யன்..

"என்னங்க.." வாணி வந்தாள்..

"என் பிரண்ட் நாராயணன்னு பெயர்.... ஆஸ்திரேலியாவில செட்டிலாகியிருக்கான்.. அவன் குடும்பத்தோட டின்னர் சாப்பிட வரப் போறான்.."

"இதுக்காக இவ்வளவு பதட்டப்படறிங்க..? அசத்தலா டின்னரை ரெடி பண்ணிரலாம்.. என்ன வந்தனா..?"

"சரியாச் சொன்னீங்கத்தை.."

வந்தனாவின் இணக்கமான பதிலில் வாணி முகம் மலர்ந்தாள்.. சாணக்யன் எதையோ சொல்லப் போனவர்.. மௌனமாகி.. அங்கிருந்து நகர்ந்து விட்டார்..

அன்றைய இரவில் விருந்து அபாரமாக நடைபெற்று முடிந்தது..

"டின்னர் பிரமாதம்.." நாராயணன் சொன்னார்..

"ஹால் அழகாயிருக்கு.. இன்டிரியர் டெகரேசன் பிரமாதம்.. எந்த இன்டிரியர் டெகரேடர்ன்னு சொல்லுங்க.. என் சிஸ்டர் வீட்டில சரியான டெகரேசன் இல்லாம ஏதோ போல இருக்கு.. அவ வீட்டுக்கும் இதே டெகரேட்டரை வரச் சொல்லலாம்.." நாராயணனின் மனைவி அனிதா சொன்னாள்..

"எங்க வீட்டு இன்டிரியர் டெக்கரேசன் எங்க அண்ணிதான்.." கார்த்திகா பெருமையுடன் வந்தனாவை அணைத்துக் கொண்டாள்..

"சும்மா சொல்கிறாங்க.. இது அத்தனையையும் செய்தது எங்க கார்த்திகாதான்.." மனதார பொய் சொன்னாள் வந்தனா..

"பரவாயில்லையே.."

அனிதா வியந்தாள்.. நாராயணின் மகன் பிரதீப்பின் பார்வை கார்த்திகாவையே சுற்றிச் சுற்றி வந்தது.. அதற்கான பதில் பார்வையை கார்த்திகாவும் கொடுத்தாள்.. அவர்கள் கிளம்பிப் போன பின்பு..

"ஏன் வந்தனா அப்படிச் சொன்ன..? நீ பொய் சொல்ல மாட்டியே.." என்று கேட்டாள் வாணி..

"அவங்க என்னவோ சாதாரணமா டின்னருக்கு வரலைன்னு எனக்குத் தோணுச்சு அத்தை.. அவங்க கார்த்திகாவை பெண் பார்க்க வந்திருக்கிறதைப் போல என் மனசுக்கு பட்டுச்சு.. நம்ம கார்த்திகாவுக்கும் அவங்க மகனைப் பிடிச்சிருக்கிறதைப் போலத் தெரியுது.." என்றாள் வந்தனா..

சாணக்யனின் முகத்தில் வந்த ஆச்சரியத்தைக் கண்டதும்..

"ஏங்க.. அப்படியா..?" என்று கேட்டாள் வாணி..

"யெஸ் வாணி.. நாராயணன் அவன் மகன் பிரதீப்புக்கு நம்ம கார்த்திகாவைப் பெண் கேட்டான்.. ஜஸ்ட் எ விசிட்டா.. டின்னருக்கு வரச்சொல்லி நான் சொன்னேன்.. பொண்ணும்..

மாப்பிள்ளையும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்குவாங்க.. அதுக்கப்புறம் அவங்களோட ஒப்பினியன் என்னன்னு கேட்டுட்டு மேற்கொண்டு ஸ்டெப் எடுக்கலாம்ன்னு எண்ணம்.."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பேசியவரின் முகம் ஒளிர்ந்தது..

"அவங்களுக்கு நம்ம கார்த்திகாவை பிடிச்சிருக்காம் வாணி.. ஆஸ்திரேலியாவில பிரதீப் பிக்மேன்.. நம்ம கார்த்திகாவுக்கு அவன் கிடைச்சிருக்கிறது நம்மளோட லக்.." என்று பரபரத்தார்..

கதிரவன் வந்ததும் விவரம் அவனுக்குச் சென்றது..

"பிரதீப்பா..? குட் செலக்சன் டாட்.. கங்கிராஜீலேசன்ஸ் கார்த்திகா.."

தங்கைக்கு கை கொடுத்து விட்டு டைனிங் ஹாலுக்குப் போனான்.. அவனுக்குப் பரிமாற பின் தொடர்ந்தாள் வந்தனா.. அவளைப் பார்த்தபடி மனைவியிடம் சொன்னார் சாணக்யன்..

"மருமகள் அமைகிறது கூட இறைவன் கொடுத்த வரம்தான் வாணி.. இன்னைக்கு உன் மருமகள் அருமையா வேலை செய்திருக்கா.. நாராயணனோட வொய்ப் நம்ம கார்த்திகாவை ரொம்பவும் பாராட்டினாங்களாம்.. அந்த கிரெடிட்டெல்லாம் வந்தனாவுக்குத்தான் சேரனும்.."

கதிரவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்த வந்தனாவின் கை அப்படியே நின்று விட்டது.. கதிரவன் மனைவியை ஆழமாக பார்த்தான்.. அவள் விழிகளில் கலங்கிய இருதுளி நீர் அவன் கைகளில் விழுந்து தெறித்தது.. எந்த மாமனாருக்கு அவள் மருமகளாக வருவது பிடிக்கவில்லையோ.. அந்த மாமனாரின் வாயால் அவள் மருமகளாக வந்தது மிகப்பெரிய வரம் என்ற பாராட்டை வாங்கி விட்டாள் வந்தனா..

# 33

"பேபி நல்ல ஃபார்மில் இருக்கு.. நீங்க நெக்ஸ்ட் வீக்கில வந்து அட்மிட் ஆகிக்கலாம்.."

டாக்டர் கமலினி புன்னகையுடன் சொன்னாள்.. கனிவான.. தைரியம் சொல்லும் புன்னகை.. வந்தனாவின் மனதில் தாய்மை கொண்ட பெண்களுக்கு வரும் இயல்பான பயம் வந்திருந்தது..

அந்த பயத்தை போக்கும் வகையில் கமலினியின் புன்னகை இருந்ததில் அவள் தைரியம் வரப் பெற்றவளாக எழுந்து கொள்ள முயன்றாள்..

மேடிட்டிருந்த வயிறுடன் எழுந்து கொள்ள சிரமப் பட்டவளை கை கொடுத்து தூக்கி விட்டான் கதிரவன்.. தாய்மைப் பொழிவுடன் மூச்சு வாங்க நின்றிருந்தவளின் மீது அவனுக்குள் காதல் பெருக்கெடுத்தது.. அவள் அவனுடைய குழந்தையை சுமந்து கொண்டிருக்கிறாள் என்ற நினைவில் அவன் மனம் கனிந்தது..

"வா.." அவள் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டான்..

அவன் காட்டிய அக்கறையை கவனித்துக் கொண்டிருந்த டாக்டர்

"யு ஆர் வெரி லக்கி.." என்று வந்தனாவிடம் சொன்னாள்..

"டாக்டர் சொன்னதைக் கேட்டியில்ல.. நீ லக்கியாம்.."

நீண்ட காரிடாரில் நடந்தபடி சொன்னான் கதிரவன்.. வந்தனா உம்மென்று வந்தாள்.. கதிரவன் அவள் முகம் பார்த்தான்..

"நீ ஒப்புக்கொள்ள மாட்டேன்னு எனக்குத் தெரியும்.. ஏன்னா.. என்னை இஷ்டமில்லாம கல்யாணம் பண்ணிக் கிட்டவளாச்சே நீ.."

அவன் வார்த்தைகளில் குத்தல் இல்லை.. கேலியும் கிண்டலும்தான் இருந்தது..

'இவன் என்னைப் பார்த்து எள்ளி நகையாடறானா..?'

வந்தனாவுக்குள் கோபம் வந்தது.. கதிரவனின் கையை விலக்கி விட்டாள்..

"உடனே கோபம் வந்திருச்சா..? மூக்கு நுனியிலே கோபத்தை வைச்சிருக்கேடி.. இப்படி உட்காரு.. காரை எடுத்துட்டு வந்து கூப்பிடறேன்.." கதிரவன் அவளை வரவேற்பு பகுதியில் உட்கார வைத்துவிட்டு காரை எடுத்துக் கொண்ட வர போய் விட்டான்..

வந்தனா சுற்றிலும் அமர்ந்திருந்தவர்களை வேடிக்கை பார்த்தாள்.. கார்த்திகாவின் திருமணம் முடிந்து அவளும் கணவனுடன் குடும்பம் நடத்த ஆஸ்திரேலியாவுக்குப் போய் விட்டதில் அவளைத் தனிமை சூழ்ந்திருந்தது.. என்னதான் வாணியும் பேசிப் பழகினாலும்.. மாமியார் என்ற மரியாதை அவளைவிட்டு வந்தனாவை தள்ளியே நிற்க வைத்தது.. அஞ்சனாவிடம் பேச வேண்டுமென்றால்.. அவளின் பிறந்த வீட்டிற்குப் போய்வர கதிரவன் அவ்வளவு எளிதாக அனுமதி வழங்க மாட்டான்..

"நானும் வரேன்.. போகலாம்.." என்பான்..

பெரும்பாலும் அவன் வாக்களிக்கும் நாள்களில் அவனால் வரமுடியாமல் போய் விடும்.. ஏமாற்றத்துடன் வந்தனா படுத்து விடுவாள்.. அதற்குப் பின்னால் தாய் வீட்டிற்குப் போக வேண்டும் என்று அவளாக கேட்டதில்லை.. மாலதியும்.. பாஸ்கரனும் அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போனாலும் வந்தனாவின் மனம் தாய் வீட்டில் கழித்த பழைய நாள்களுக்காக மிகவும் ஏங்கியது..

கருணாவிடம் அவள் இதைச் சொன்னபோது அவள் கதிரவனை போனில் அழைத்துச் சப்தம் போட்டாள்.. அன்று இரவில் அவன் முகம் இறுக வந்தனாவிடம் வினவினான்..

"அக்காகிட்ட என்னைப் பத்திக் கம்ப்ளெயின்ட் பண்ணினியா..?"

"சும்மா பேசினேன்.. கம்ப்ளெயின்ட்ன்னு எதுவும் இல்லை.."

"மறைக்காதேடி.. இது எனக்குப் பிடிக்காது.. புருசன் பெண்டாட்டிக்குள்ள இருக்கிற விவரங்கள் பெட்ரூம் வாசலைத் தாண்டக் கூடாது.."

அவன் பேசிய பேச்சில் வந்தனாவுக்கு தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

'அப்படி என்னத்தைப் பேசித் தொலைச்சிட்டேன்.. அம்மாவீட்டுக்குப் போக முடியலைன்னு சொன்னா அது ஒரு குத்தமா..?'

"இங்கே என்னடான்னா.. குற்றாலம் வரைக்கும் பேச்சு போயிருக்கு.."

'என்ன பேச்சு..?'

"இதுவே கடைசித் தடவையாய் இருக்கனும்டி.. இனி நமக்குள்ளே நடக்கிற எதையும் வெளியே மூச்சு விட்ட.. நான் பொல்லாதவனா மாறிருவேன்.."

'இப்ப மட்டும் நீ நல்லவனாவா இருக்கிற..?'

என்னதான் மனதுக்குள் கேட்டுக் கொண்டாலும்.. கதிரவனின் மிரட்டலை மீறி கருணாவிடம் மனதிலிருப்பதை பகிர்ந்து கொள்ள வந்தனாவால் முடியவில்லை..

"அதென்ன.. எதுக்கெடுத்தாலும்.. சித்தி.. சித்தின்னு குற்றாலத்துக்கு போன் போடறது..? உன் மனசில இருக்கிறதை என்கிட்ட ஷேர் பண்ணிக்கனும்னு ஏண்டி உனக்குத் தோணலை..?"

'உன்கிட்டச் சொல்லிட்டாலும்..'

வந்தனா பேச்சைச் சுருக்கிக் கொண்டாள்.. தாய் வீட்டை மறந்தாள்.. கருணாவின் அன்பை மறந்தாள்.. கதிரவனின் வீடே உலகமென்று வாழக் கற்றுக் கொண்டாள்..

"என்னாச்சு..? அதுக்குள்ள குழந்தையா..?"

ஏளனமான தொனியில் காதுகளில் விழுந்த வார்த்தைகளில் சிந்தனை கலைந்தவளாய் ஏறிட்டுப் பார்த்தாள் வந்தனா..

அங்கே இகழ்ச்சிப் பார்வையுடன் கரிஷ்மா நின்றிருந்தாள்..

'இவ வேறயா..?' அலுப்புடன் வாசலைப் பார்த்தாள் வந்தனா..

காரை எடுக்கப் போன கதிரவன் சீக்கிரம் வந்து விட்டால் தேவலை என்று தோன்றியது அவளுக்கு..

'இருக்கிற தொல்லையில இவ தொல்லை வேற.. இதில நீயெல்லாம் எனக்கு இணையான்னு பார்த்து வைச்சிருவா.. இவளுக்கு இணையாகனும்னு யாரும் இங்கே தாவிக்கிட்டு இல்லைன்னு இவ மரமண்டைக்கு உறைக்குமா.. உறைக்காதா..?'

கரிஷ்மாவின் இகழ்ச்சிப் பார்வையை விட ஆயிரம் மடங்கு அதிகமான இகழ்ச்சிப் பார்வையுடன் அவள் முகத்தைக் கூடப் பார்க்காமல் வந்தனா வாசலையே பார்த்ததில் கரிஷ்மாவின் தற்பெருமையும்.. கர்வமும் அடி வாங்கியது..

'திமிர்..' அவள் கொதித்துப் போனாள்..

'கதிரை கைக்குள்ள வைத்திருக்கிற திமிர்..'

அந்தத் திமிரை ஆட்டம் காண வைக்கும் வெறி அவளுக்குள் வந்தது..

"என்ன வாசலையே பார்க்கிற..? கதிரைத் தேடறியா..? அவர் வர லேட்டாகும்.. எனக்கு எப்படித் தெரியும்ன்னு கேட்கறியா..? இந்நேரம் வரைக்கும் அவர் என் கூடத்தான் டைமை ஸ்பெண்ட் பண்ணிக்கிட்டு இருந்தார்.. இப்பத்தான் காரை எடுக்கப் போனார்.."

உரிமையுடன் அவள் பேசிய விதத்தில் வந்தனாவிற்கு 'கெதுக்' என்று இருந்தது.. என்னதான் அவளுக்கும்.. கதிரவனுக்கும் இடையில் ஒருகோடி மனத்தாங்கல்கள் இருந்தாலும்.. கதிரவன் வந்தனாவின் கணவனில்லையா..? அவனுடன் நேரத்தைக் கழித்ததாக.. அவளிடமே வந்து ஒருத்தி சொல்வதாக இருந்தால் அவளுக்கு எத்தனை நெஞ்சுரம் இருக்க வேண்டும்..?

"என்ன முழிக்கற..? காதல்ன்னு மேரேஜ் பண்ணிக்கிட்டவன் நாம வயிற்றைத் தள்ளிக்கிட்டு நின்னதும் முன்னாள் காதலியைத் தேடிக்கிட்டு போயிட்டானேன்னு இருக்கா..? இதுதான் காதல்..! தெரிஞ்சுக்க.. காதல்ங்கிறது உடல் அழகைச் சார்ந்த விசயம்.. காதல்ங்கிறது எதுவரைக்கும் தெரியுமா..? நீ வயிற்றைத் தள்ளிக்கிட்டு நிற்கிற வரைக்கும்தான்.."

அப்படியா..? வந்தனா பயந்த போனாள்.. ஏனோ கதிரவன் அவளைக் காதலிக்க மாட்டான் என்பதில் அவளின் அடிவயிறு கலங்கியது.. அவள்மீதான அவனின் காதல் குறைந்து விட்டது என்று கரிஷ்மா சொன்னதில் அவளின் உயிர் துடித்தது..

சிலதினங்களாக அவளைத் தேடாமல் கதிரவன் இரவுகளில் விலகியிருந்ததை அவள் எண்ணிப் பார்த்தாள்.. முன்பு போல சீக்கிரமாக அவன் வீடு திரும்புவதில்லை.. இரவில் வெகு நேரமான பின்பே.. அர்த்த ஜாம வேளையில் தான் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.. அவனிடம் இருந்த கோபம் மறையாத காரணத்தினால் வந்தனாவும் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை..

இப்போது அதை நினைத்து அவள் கலங்கினாள்..

'அவன் விலகிட்டானா..? என்மேல அவனுக்கிருந்த காதல் இதுவரைக்கும் தானா..?'

அவளின் கரம் அனிச்சையாக அவளின் வயிறைத் தடவிப் பார்த்தது..

"இந்த வீக் எண்டில நானும் கதிரும் அவுட்டிங் போகலாம்ன்னு இருக்கோம்.. எங்கே போகலாம்..? நீயே சொல்லு.."

கரிஷ்மாவின் குரூரத்தில் வந்தனா ஊமையாகிப் போனாள்.. எதிர்த்து வாயாடும் அவளின் வாய் பேதலித்து வார்த்தைகள் வற்றிப் போய்.. மௌனித்தது..

"போகலாமா..?" என்றபடி வந்த கதிரவன்.. கரிஷ்மாவைக் கண்டதும்..

"ஹேய்.. நீ இங்கே என்ன பண்ற..?" என்று வினவினான்..

"அப்பவே கிளம்பியிருக்கனும்தான் கதிர்.. பட்.. நீங்க வருகிறவரைக்கும் வந்தனாவுக்கு கம்பெனி கொடுக்கலாம்ன்னு வந்தேன்.."

கரிஷ்மாவின் வார்த்தைகளைக் கேட்ட கதிரவன்..

'எப்பவே..?' என்ற கேள்வியை எழுப்பவில்லை..

அதில் கதிரவனுடன் நேரத்தை செலவளித்தாக கரிஷ்மா சொன்னது உண்மையென்று நிருபணமாகி விட்டதில் வந்தனாவுக்குள் நிராசை குடி கொண்டது..

"ஏண்டி.. என்னவோ போல இருக்கே..?" காரில் போகும்போது கதிரவன் கேட்டான்..

வழக்கமான மௌனத்தை பதிலாக தந்தாள் வந்தனா.. அன்றைய இரவில் அவள் இயல்பாக புரண்டு படுப்பதைப் போல கதிரவனை நெருங்கிப் படுத்த போது.. அவன் மிக மெதுவாக.. அவள் உணராத வகையில் அவளிமிருந்து விலகிப் படுத்தான்..

வந்தனாவுக்கு ஒருநொடி மூச்சு நின்று வந்தது..

அவள் மீதான கதிரவனின் ஈர்ப்பு மறைந்து விட்டது என்றே அவள் நினைத்தாள்.. அவள் கண்களில் நீர் வழிந்தது..

'உனக்குப் பிடிக்காத புருசன்னு சொல்லிக்குவியே.. இப்பச் சந்தோசமா இருக்க வேண்டியதுதானே..' அவளது மனச்சாட்சி அதட்டியது..

வந்தனாவின் மனது சுருண்டது.. அந்த வார இறுதியில் வெளியில் அழைத்துக் கொண்டு போகச் சொல்லி கதிரவனிடம் அவள் கேட்டாள்.. அதற்கு முன்னால் அதுபோல அவள் ஆசைப்பட்டுக் கதிரவனிடம் கேட்டதில்லை..

"இந்த வீக் எண்டிலேயா..?" யோசித்தான்.. ஏதோ நினைவுக்கு வந்தவனாக..

"எனக்கு வேற எங்கேஜ்மெண்ட் இருக்குடி.." என்று சொல்லி விட்டான்..

'என்ன எங்கேஜ்மெண்ட்..? அந்த கரிஷ்மாகூட ஊர் சுத்தற எங்கேஜ் மெண்ட்டா..?' வந்தனா மனதுக்குள் கருவினாள்..

அவளுடைய உடமையை பாதுகாத்துக் கொள்ளும் போராட்ட குணம் அவளுக்குள் உதயமானது.. அந்த வார இறுதியில் கதிரவனின் கார் கிளம்பியது.. இவள் அவசரமாக பக்கத்திலிருக்கும் கோவிலுக்குப் போய் விட்டு வருவதாக வாணியிடம் சொல்லி விடும்படி தோட்டக்காரனிடம் சொல்லி விட்டு.. அவளுக்கென்று கதிரவன் வாங்கிக் கொடுத்திருந்த காரில் ஏறி.. கதிரவனின் காரைப் பின் தொடர்ந்தாள்..

மகாபலிபுரம் செல்லும் சாலையில் கதிரவனின் கார் திரும்பியது.. தூரத்தில் கரிஷ்மா நின்று கையாட்டுவது போல இருந்ததில் வந்தனாவின் மனம் அதிர்ந்தது..

'அப்படின்னா.. அவ சொன்னது உண்மைதானா..?'

வந்தனாவின் மனம் வலித்த போதுதான் அவள் அதை உணர்ந்தாள்.. அவளது இடுப்பில் ஊசி முனைகள் குத்துவதைப் போல சுருக்.. சுருக்கென்ற வலி உண்டாகியிருந்தது..

அது அவளுக்கு பத்தாவது மாதம்.. ஒன்பதாவது மாதத்தில் வளைகாப்பை முடித்தவுடன் அவளை பிறந்த வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று பாஸ்கரனும்.. வாணியும் சொன்னார்கள்.. கதிரவனோ சாஸ்திரத்திற்கு அங்கே ஒருநாள் இருந்து விட்டு வந்தனாவை கையோடு அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்..

"டெலிவரிக்கு இன்னும் ரெண்டு மாசம் இருக்கே மாமா.. அந்த டயத்தில கொண்டு வந்து விடறேன்.." என்று சொல்லிவிட்டான்..

அவனிடம் வாதாட முடியாமல் வாணியிடம் மகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி வேண்டு கோளை வைத்திருந்தாள் மாலதி..

வாணியிடம் வெளியே போகப் போவதாக வந்தனா சொல்லியிருந்தால் நிச்சயமாக அவளைக் காரை எடுக்க விட்டிருக்கமாட்டாள்.. அதனால்தான் தோட்டக்காரனிடம் சொல்லிவிட்டு வந்தனா நழுவி விட்டாள்..

கரிஷ்மாவின் அருகே போன கதிரவனின் கார் நின்றது.. அவள் கதிரவனின் காரில் ஏறிக் கொண்டாள்.. கதிரவனின் கார் கிழக்குக் கடற்கரைச் சாலையிலிருந்து பிரிந்து மகாபலிபுரத்தை நோக்கி விரைந்தது..

'இதுக்கு மேலேயும் அவங்களை ஃபாலோ பண்ணித்தான் ஆகனுமா..?' வந்தனா வெறுத்துப் போனாள்..

ஆனாலும் அவளின் கார் கதிரவனின் காரைத் தொடரத்தான் செய்தது.. அங்கிருந்த ஆடம்பரமான ரிஸார்ட்டுகளில் ஒன்றின் அருகே கதிரவனின் கார் நின்றது.. அவனும் கரிஷ்மாவும் இறங்கி ரிஸார்ட்டை நோக்கி நடந்தார்கள்..

வந்தனா ஸ்டிரிங்கில் முகம் புதைத்து கேவி அழுத்தாள்.. அவள் கண்ணுக்கு முன்னால் அவளுடைய கணவன் கை நழுவிப் போய் கொண்டிருந்தான்.. இன்னொரு பக்கம் அவளுடைய இடுப்பு வலி அதிகரித்துக் கொண்டிருந்தது..

ஒரு கட்டத்தில் வலி தாங்க முடியாமல் போனதில்..

"அம்மா.." என்று கண்ணீருடன் வாய்விட்டுப் புலம்பினாள் வந்தனா..

அந்த நிலைமையில் அவளால் காரைக் கிளப்ப முடியவில்லை.. வலியின் தாக்கத்தில் கண்மூடி அரை மயக்க நிலைக்குப் போனவளின் மனதில்..

'காதல்ங்கிறது இதுவரைக்கும்தான்..' என்ற கரிஷ்மாவின் குரல் கேட்டது..

இதற்கு மேல் அவனின் காதல் இல்லையென்பதில் அவள்மனதில் இந்த அளவுக்கு துக்கம் பெருகக்கூடும் என்பதை அன்றுதான் அவள் உணர்ந்தாள்..

"வந்தனா.." கதிரவனின் குரல் கேட்டது..

கார் கதவைப் பதட்டத்துடன் திறந்தவன்.. அரை மயக்க நிலையில் அரற்றிக் கொண்டிருந்தவளை பதட்டத்துடன் அள்ளிக் கொண்டான்.. அவனுடைய காரின் பின்சீட்டில் வந்தனாவை பத்திரமாக அமர வைத்து விட்டு வந்தனாவின் காரைப் பூட்டிச் சாவியை கையில் எடுத்துக் கொண்டான்.. அவனுடைய காரில் ஏறி அசுரவேகத்தில் காரை ஓட்டினான்..

"முடியலையே.." வந்தனா பின்சீட்டில் புரண்டு தவித்தாள்..

அதற்குள் கமலினியின் மருத்துவமனையின் வளாகத்துக்குள் கார் நுழைந்து விட்டது.. காரை நிறுத்திய கதிரவன் மனைவியை கையில் ஏந்திக் கொண்டு வேகமாக படிகளில் ஏறி ஓடினான்.. அவன் வந்த வேகத்தைப் பார்த்த கமலினி..

"நர்ஸ்.." என்று கூவினாள்..

அடுத்த சில நொடிகளில் வந்தனா டெலிவரி அறைக்குள் அனுமதிக்கப்பட்டாள்.. கதிரவன் கண்கள் சிவக்க.. அறைக்கு வெளியே குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி இரண்டு பக்க வீடுகளுக்கும் போனைப் போட்டான்..

"மாப்பிள்ளை.. என்னாச்சு..?"

"வந்தனா எப்படியிருக்கா..?"

பதறியபடி பாஸ்கரனும்.. மாலதியும் ஓடி வந்தார்கள்..

"வீட்டிலதானே இருந்தா கதிர்.. கோவிலுக்குப் போகிறேன்னு தோட்டக்காரனிடம் சொன்னாளாம்.. இப்ப என்னடான்னா டெலிவரிக்கு அட்மிட் ஆகியிருக்கா.. என்னடா கதிர் இதெல்லாம்.." வாணி வந்தவுடன் இதைத்தான் கேட்டாள்..

சாணக்யன் அவசர மீட்டிங்கை கேன்சல் செய்து விட்டு அங்கே பிரசன்னமாகியிருந்தார்..

'வந்தனா எதுக்காக மகாபலிபுரத்துக்கு வந்தா..?'

கதிரவனின் மனதில் அந்தக் கேள்விதான் உறுத்திக் கொண்டிருந்தது.. ஆனாலும் அவன் மனைவியை விட்டுக் கொடுக்காமல்..

"நான்தான்ம்மா அவளை கோவிலுக்கு வரச் சொன்னேன்.. வந்தவளுக்கு டெலிவரி பெயின் வந்திருச்சு.." என்று மாற்ற யோசித்துப் பதில் சொன்னான்..

"குவா.. குவா.."

குழந்தையின் அழு குரலில் அனைவரின் மனதிலும் நிம்மதி வந்தது.. நர்ஸ் அழகான ஆண் குழந்தையுடன் வெளியே வந்தாள்..

"கங்கிராஜுலேசன்ஸ்.." களைத்துப் போன முகத்துடன் சொன்னாள் டாக்டர் கமலினி..

"தேங்க்ஸ் டாக்டர்.." கதிரவனின் குரல் தழதழத்தது..

"இட்ஸ் ஆல்ரைட்.."

முறுவலித்தபடி டாக்டர் கமலிலி போய் விட்டாள்.. நர்ஸ் குழந்தையைக் குளிக்க வைத்து வந்தனாவின் அருகிலிருந்த தொட்டிலில் படுக்க வைத்தாள்.. குடும்பத்தினர் வந்தனாவை சூழ்ந்து கொண்டார்கள்.. கண்மூடி மயக்க நிலையிலிருந்து விழிக்காமல் இருந்தாள் வந்தனா..

குழந்தையின் கைவிரல்களைப் பிடித்து முத்தம் கொடுத்து விட்டு.. வந்தனாவின் கை விரல்களைப் பற்றியபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான் கதிரவன்..

வந்தனா கண்விழித்தவுடன் ஆளுக்கொரு குரலில் அனைவரும் நலம் விசாரித்தார்கள்.. குழந்தையை அவளிடம் காட்டினார்கள்.. வந்தனாவின் முகத்தில் சோகம் கலந்த வெளிச்சம் பரவுவதை யோசனையுடன் கவனித்தான் கதிரவன்..

விட்டுவிட்டு வந்த மீட்டிங்கை தொடர வேண்டிய நிர்பந்தத்துடன் சாணக்யன் கிளம்பிப் போனார்.. போட்டது போட்டபடி போட்டு விட்டு வந்ததால்.. அஞ்சனாவுக்கு விவரம் சொல்லி அவளையும் அழைத்துக் கொண்டு வீட்டையும் பூட்டி விட்டு வரவேண்டும் என்ற காரணத்துடன் பாஸ்கரனும்.. மாலதியும் கிளம்பிப் போனார்கள்.. அதே காரணத்தைச் சொல்லி.. வீடு வரைக்கும் போய் விட்டு வந்து விடுவதாகச் சொல்லி விட்டு வாணியும் கிளம்பிப் போனாள்..

தனிமையில் விடப்பட்ட கதிரவனும்.. வந்தனாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. வந்தனாவின் முகத்தில் கைப்பொருளை இழந்து விட்ட துக்கம் குமுறிக் கொண்டிருந்தது.. அது கதிரவனை உறுத்தியது..

"என்னடி..?" புருவங்களை முடிச்சிட அவன் கேட்டான்..

"வீட்டில அம்மாகிட்டயும் சொல்லாம.. தோட்டக்காரக் கிட்ட கோவிலுக்குப் போகிறதாச் சொல்லிட்டு காரை எடுத்துக்கிட்டு வந்திருக்க.. கோவில் என்ன மகாபலிபுரத்திலேயே இருக்கு..?"

கதிரவனின் கோபத்தில் வந்தனா அவனையே இமைக்காமல் பார்த்தாள்.. அவள் பார்வையில் அவன் திகைத்தான்..

"என்ன வந்தனா..?"

"கடைசியில் அவ சொன்னது உண்மையாகிருச்சில்ல.. உங்க காதல்ங்கிறது இது வரைக்கும் தானே..?"

"எதுவரைக்கும்டி..?"

"நான் கன்சீவ் ஆகிற வரைக்கும்.."

"அடிச்சேன்னா பாரு.. பச்சை உடம்பாச்சேன்னு பாக்கறேன்.. அறிவோடதான் பேசறியா..?"

"இதை நான் சொல்லலை.. கரிஷ்மா சொன்னா.. அவகூட ஹாஸ்பிடல் வாசலில நீங்க டைம் ஸ்பெண்ட் பண்ணினதா சொன்னா.. நீங்களும் அதை மறுக்கலை.."

"உன்தலை.. அறிவு கெட்டவளே..! ஹாஸ்பிடல் வாசலிலே எவனாவது ரொமான்ஸ் பண்ணுவானாடி..?"

"அதுக்காகத்தான் மகாபலிபுரம் ரிசார்ட் வரைக்கும் போனிங்களா..?"

"ஓ.." கதிரவனின் குரல் ஆழ்ந்து ஒலித்தது..

"நீ அதுக்காகத்தான் என்னை ஃபாலோ பண்ணினியா வந்தனா..? எப்படிடீ உன்னால அப்படி நினைக்க முடிஞ்சுச்சு..?"

"பேசாதீங்க.."

"பேசுவேன்.. என்மேல குற்றமில்லைங்கிறப்ப நான் பேசித்தான் ஆகனும் வந்தனா.. ஹாஸ்பிடல் வாசலில நான் காரை எடுக்கப் போனேன்.. எதிரே கரிஷ்மா வந்தா.. என்ன இந்தப் பக்கம்ன்னு கேட்டேன்.. யாரோ ஒரு ரிலேடிவ்வை இங்கே அட்மிட் பண்ணியிருக்கிறதாச் சொன்னா.. அது அவளோட நான் டைமை ஸ்பெண்ட் பண்ணினதா ஆகுமா..?"

"ஆனா மகாபலிபுரம்..? அவ சொன்னாளே.. இந்த வீக் எண்டை நீங்க அவகூட ஸ்பெண்ட் பண்ணப் போறதாச் சொன்னாளே.."

"எனக்கே அதுபுரியலை.. ஈஸி ஆர் ரோட்டில எனக்கு வேலை இருந்தது.. அதனால அந்தப் பக்கமா காரை விட்டேன்.. வழியில இவ நின்னுக்கிட்டு இருந்தா.. என்னன்னு கேக்க காரை

நிறுத்தினேன்.. அவ கார் ரிப்பேராம்.. பிரண்ட்ஸோட மகாபலிபுர ரிஸார்ட்டுக்கு வந்தாளாம்.. அங்கே டிராப் பண்ணினா அவ பிரண்ட்ஸோட காரில் ரிடர்ன் ஆகிருவேன்னு சொன்னா.. ஓகேன்னு டிராப் பண்ணப் போனேன்.. அந்த ரிஸார்ட்டுக்குப் பக்கத்து ரிஸார்ட்டோட வாசலில என் பிஸினெஸ் சம்பந்தப்பட்ட ஒருதர் நின்றிருந்தார்.. இறங்கி அவர்கிட்டப் பேசப் போனேன்.. திரும்பி வந்து பார்த்தா.. உன் கார் நிக்குது.. என்னடான்னு உள்ளே பாத்தா நீ இருக்கிற.. இந்த நிலைமையில அப்படியொரு ரிஸ்க்கை எடுக்கலாமாடி..?"

"அவ சொன்னாளே.. நீங்க என் காதலை மறந்துருவீங்கன்னு சொன்னாளே.. அதுக்கேற்றார் போல நீங்களும் விலகி இருந்தீங்களே.." வந்தனா திணறினாள்..

"முட்டாள்.. நிறை மாத கர்ப்பிணியா இருக்கிற பெண்டாட்டியை எவனாவது டிஸ்டர்ப் பண்ணுவானாடி..? இதையெல்லாம் விடு.. நான் உன்னைவிட்டு விலகிப் போனா நீ இந்த அளவுக்கு துடிப்பியா..? இதில இருந்தே உன் மனசில என்மேல இருக்கிற அளவு கடந்த காதலை நீபுரிஞ்சுக்கலையாடி வந்தனா..?"

கதிரவனின் கேள்வியில் வந்தனா திகைத்து விழித்தாள்.. அவள் சொல்வது உண்மைதானே.. அப்படி யென்றால்.. அவன்மீது வெறுப்பும்.. கோபமும் இருப்பதைப் போல அவளது அடி மனது வேசம் போடுகின்றதா..?

"ஆமாண்டி என் செல்லப் பெண்டாட்டி.." கதிரவன் சிரித்தான்..

"காதல் என்கிறது கடைசி வரைக்கும் நிலைத்து நிற்பது வந்தனா.. அது உடல் சார்ந்ததில்லை.. மனம் சார்ந்தது.. குழந்தை உண்டானவுடன் காதல் குறைஞ்சிரும்ன்னா.. உன் தாத்தா பாட்டியும்.. என் தாத்தா பாட்டியும்.. இன்னைக்கும் கொஞ்சிக் குழாவிக்கிறாங்களே.. அதுக்கு அர்த்தம் என்ன..? உன் அப்பா அம்மாவும்.. என் டாடி அம்மாவும்.. ஒருத்தர்மேலே ஒருத்தர் காட்டற பிரியத்துக்கு அடிப்படை என்ன..? குற்றாலத்தில உன் சித்தப்பா கூட இருந்தா உன் சித்தியோட முகம் மலர்ந்து போகுதே அவங்க என்ன டீன் ஏஜில இருக்கிறவங்களா..?"

வந்தனாவுக்குப் புரிந்தது.. காதல் என்பது எதுவரைக்கும் என்ற கேள்விக்கான பதில் அவளுக்கு கிடைத்து விட்டது.. அவள் மனதில் கதிரவனின் மேலிருக்கும் அளவுகடந்த காதலை உணர்ந்தவளுக்கு அவன் மீதான வெறுப்பு பொய்யானது என்பது புரிந்து விட்டது.. அவள் மீதான அவனது காதல் இறுதி வரைக்கும் நிலைத்து நிற்கும் என்ற உண்மையில் ஆயிரம் கர்ஷ்மாக்களை எதிர்த்து நிற்கும் வல்லமை அவளுக்குள் வந்தது..

"அத்தான்.." அவள் கதிரவனிடம் கரம் பற்றினாள்..

"என் மகனையா கூப்பிட்ட..?"

தொட்டிலில் கிடந்த குழந்தையைக் காட்டினான் கதிரவன்.. பழைய நினைவில் குறும்பு மலர அவன் கையைக் கிள்ளினாள் வந்தனா..

- முற்றும் -



லட்சுமி பாலாஜி பதிப்பக